# இலங்கை மின்சார சபை

*ஆண்டறிக்கை 2012*





# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 2012ஆம் ஆண்டின் முக்கிய விடயங்கள் | 5 |
| கூட்டாண்மைத் தகவல் | 8 |
| நிறுவனக் கட்டமைப்பு | 10 |
| தலைவரின் மீளாய்வு | 14 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 16 |
| கடத்துகை வலையமைப்பு | 21 |
| மின் பிறப்பாக்கல் பிரிவு | 23 |
| கடத்துகைப் பிரிவு | 29 |
| விநியோகப் பிரிவு 1 | 42 |
| விநியோகப் பிரிவு 2 | 52 |
| விநியோகப் பிரிவு 3 | 63 |
| விநியோகப் பிரிவு 4 | 70 |
| கருத்திட்டப் பிரிவு | 77 |
| சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு | 88 |
| கூட்டாண்மை உபாயப் பிரிவு | 97 |
| நிதிப் பிரிவு | 106 |
| நிதி மீளாய்வு | 107 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 108 |
| ஒன்றித்த வருமானக் கூற்று | 109 |
| ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்று | 110 |
| நிதி நிலைக் கூற்று | 111 |
| உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (குழுமம்) | 112 |
| சபையின் மூலதன உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று | 114 |
| ஒன்றித்த காசுப் பாய்வுக் கூற்று | 115 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 116 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 164 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதில்கள் | 179 |



# தொலை நோக்கு

மின்சக்தியின் ஊடாக சுபீட்சம் மிகுந்த வாழ்க்கை

# செயற்பணி

எமது முக்கியமான பெறுமதிகளை அனுசரிக்கின்ற அதேவேளை, இலங்கையின் முழுவதற்கும் செயற்றிறனானதும், ஒருங்கிணைக்கப்பட்டதும் அத்துடன் சிக்கனமானதுமான மின்சார விநியோகமொன்றை விருத்திசெய்தலும், பராமதித்தலும்

# எமது பெறுமதிகள்

- தரம்
- தேசத்திற்கான சேவை
- வினைத்திறனும், பயனுறுதித்தன்மையும்
- அர்ப்பணிப்பு
- பாதுகாப்பு
- வாழ்க்கைத் தொழில் தன்மை
- நிலைத்திருக்கும் தன்மை

2010ஆம் ஆண்டு யூன் மாதத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் மின்சார சபையின் பணிகளை எட்டுவதற்கான பதினைந்து அம்ச நிகழ்ச்சி நிரல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நிரலுக்கு அமைவான உரிய வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1 நண்வமு லண்வீம

மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட இச்செயற்பாடுகளின் மூலம் இலங்கை மின்சாரசபை எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்குள் நிதியடிப்படையில் நிலையான மற்றும் சிறந்த தொழினுட்ப இயலுமை கொண்ட நிறுவனமாக மாற்றம் பெறும். புதிய வருமான வழிகளை ஈட்டுவதற்கும் செலவினத்தைக் குறைப்பதற்கும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் ஊழல்மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் செயற்பாட்டு செலவினங்களை சிக்கனமாகச் செயற்படுத்துவதற்கும் கடன்படுனர் அளவினைக் குறைப்பதற்கும் திட்டமிட்டுள்ளது. இலங்கை மின்சார சபை தேசிய பொருளாதாரத்திற்கு சுமையின்றி தமது வெற்றிகள் தொடர்பாக பெருமிதத்துடன் மக்களின் கௌரவத்தையும் வரவேற்பினையும் பெற்று இயலுமைமிக்க நிறுவனமாக மாற்றியமைப்பதே இதன் பிரதான எதிர்பார்ப்பாகும்.

### 2 விதுலமு லங்கா

இவ்வேலைத்திட்டத்தின் இலக்காக அமைவது 2012ஆம் ஆண்டளவில் இலங்கை மக்கள் யாவருக்கும் மின்சாரத்தை வழங்குவதனை உறுதிசெய்வதாகும். தேசிய மின்சக்தி வலையமைப்புக்கு அல்லது இலங்கையின் சகல குடும்பங்களுக்கு மின்சார இணைப்பினை வழங்குவதற்கான இயலுமையை ஏற்படுத்தும் வகையில் மின்னுற்பத்திக்கு மாற்று வழிமுறைகளை இனங்காண்பதுடன் தூரப்பிரதேசங்களுக்கான மின்சார உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் ஏனைய வசதிகளையும் அபிவிருத்தி செய்வதற்காக இவ்வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்திதிறன் மேம்படுவதுடன் இலங்கை சனத்தொகையில் 12% மக்களின் வாழ்க்கைத் தரமும் அதிகரிக்கும். இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டிற்கு முன்னர் மின்சார வசதியைப் பெற்றிராத குறிப்பாக கிராமப்புறங்களில் பெரும்பான்மையான இடங்களுக்கு தேசிய வலையமைப்புடன் ஊடாக மின் இணைப்புக்கள் வழங்கப்படும். எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கிராமிய மின்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக 4,953 செயற்றிட்டங்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் இவ்விலக்கினை நிறைவு செய்வதே பிரதான நோக்கமாகும். இவை நிறைவு செய்யப்படும் பட்சத்தில் அவற்றின் செயற்பாட்டு பணிகள் மூலம் எஞ்சியுள்ள கிராமங்களுக்கு கிராமிய மின் சக்தி வழங்கப்படும்.

### 3 விதுலி அத்வெல

இவ்வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கை மின்சார சபையினால் தேசிய மின் வலையமப்பில் தொடர்பினை பெற்றுக்கொள்வதற்காக நுணுக்கமான நிதியாக்கம் ஊடாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மின் தேவைக்காக கூடுதலான செலவினத்தை செலவிட முடியாதவர்களுக்காக மின் சக்தியின் பயனை அனுபவிக்க வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் நிதி உதவிகளை வழங்குதவதற்காக இம்மக்களுக்காக சலுகை அடிப்படையிலான நிதி வழங்கல் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக கடன் வழங்கும் யோசனைத் திட்டம் இ.மி.ச. இனால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களையும் மற்றும் சமுர்த்தி உதவிக்கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களையும் இலக்காகக் கொண்டு இவ்வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மின் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான செலவினத்திற்காக அறுபது தவணைகளின் அடிப்படையில் மாதாந்த மின் கட்டணசிட்டை ஊடாக அறவிடக்கூடிய வகையில் 30,000 ரூபா வரையான கடன்களை வழங்க இ.மி.ச நடவடிக்கை எடுத்துள்ளது.

### 4 கிராம சக்தி

பொருளாதாரரீதியில் சிக்கன அடிப்படையில் தேசிய மின் வலையமைப்பினை நீடிக்க முடியாத கிராமிய மற்றும் ஏனைய இடங்களில் மாற்று சக்தி மின் உற்பத்தித் தொழினுட்பம் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய மின்சார வலையமைப்புக்கு புறம்பாக சகல குடும்பங்களுக்கும் 2012ஆம் ஆண்டளவில் மின்சக்தியின் பயனைப் பெற்றுக்கொள்வதற்காக மாற்று சக்தியினூடாக மின்சாரம் வழங்கப்படும்.

இத்திட்டம் மின்சக்தியின் உறுதித்தன்மையைப் பேணுவதுடன், இ.மி.ச கடத்துகைப் பிரிவு மற்றும் விநியோகப் பிரிவு என்பன இத்திட்டத்திற்கான தேவைப்பாட்டுத் தகவல்களை வழங்கும். இதன் மூலம் மின்சக்தியின் உறுதித்தன்மையைப் பேண முடியும்.

### 5 விதுலி சரய

பொதுமக்கள் முறைப்பாடுகள், உதவிச் சேவைகள், வாடிக்கையாளர் உதவிச் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், மின் துண்டிப்பு தொடர்பாக அறிக்கையிடுவதற்கும், வாடிக்கையாளர்கள் நம்பகத்தன்மையை பேணுவதற்கும் தேசிய வாடிக்கையாளர் அழைப்பு நிலையம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த நம்பிக்கை மற்றும் செயற்றிறன்மிக்க சேவையை வழங்கும் வகையில் இவ்வழைப்பு நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. குரல் ஒலிப்பதிவு வசதிகளையும் மற்றும் அலுவலக உதவிச் சேவைகளையும் வழங்குவதும் இவ்வழைப்பு நிலையங்களின் செயற்பாடுகள் ஆகும். இதற்கு மேலதிகமாக, பிரதேச மின் விநியோகக் கட்டுப்பாட்டு நிலையம் சேவை வழங்கல் மேற்பார்வை, மின் துண்டிக்கப்பட்டிருப்பதைப் புனரமைப்பதற்காக வளங்கள் மற்றும் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையம் தாபிக்கப்படல் போன்ற சேவைகளையும் மேற்கொண்டு வருகின்றது. “விதுலி சரய” வேலைத்திட்டத்தின் ஊடாக புதிய இணையத்தளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு அவர்களது மின் விநியோகம் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக 1987 எனும் குறுந்தொலைபேசி இலக்கம் இ.மி.ச.இனால் உருவாக்கப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட அழைப்பு நிலையத்தின் ஊடாக இலங்கையின் சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்களை இணைப்பு செய்வதன் மூலம் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை மிகுந்த செயற்றிறனுடன் மேற்கொள்ள முடியும்.

### 6 ஜனபலய

வாடிக்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வாடிக்கையாளர் குழுக்களிடையே ஐக்கியத்தைப் பேணுவதற்காகவும் 2012ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் சேவை சங்க வலையமைப்பு தாபிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் இ.மி.ச இற்கும் மிக முக்கியமான உறவினையும் தொடர்பினையும் பேணும் நோக்குடன் சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்களுக்காக பிரதேச மட்டங்களில் பெருமளவு வாடிக்கையாளர் சேவை சங்கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

### 7 ஜன ஹித்த

இவ்வேலைத்திட்டத்தின் கீழ், நியாயமாக ஏற்கக்கூடிய மற்றும் பாதுகாக்கக்கூடியவாறான மக்கள் நலன் பொருந்திய வாடிக்கையாளர் அறவீட்டினை மேற்கொள்ள இ.மி.ச நடவடிக்கை எடுத்துள்ளது. பல்வேறு வாடிக்கையாளர் குழுக்களின் அறவீட்டு முறைக் கட்டமைப்புக்கள் தொடர்பாக இ.மி.ச மற்றும் இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சபைக்கு (வரிவிதிப்பினை நிர்ணயிப்பதற்காக) ஆலோசனைகளை பரிமாற்றிக்கொள்வதாகும். அரச ஆலோசனைகளுக்கமைய மேற்கூறப்பட்ட மேற்பார்வையின் கீழ் ஆணைக்குழுச் சபையினால் அறவீட்டு முறை மறுசீரமைப்புக்காக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

2010ஆம் ஆண்டு யூலை மாதத்தில் இலங்கை மின்சார சபையினால் 2011–2015 காலப்பகுதிக்கான வரிவிதிப்பு எல்லையை நிர்ணயிக்கும் வகையில் சபையின் வருமானத் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழு சபைக்கு தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஒருதலைப்பட்ச தேசிய மின் வரிக் கொள்கை காரணமாக அனுமதிப்பத்திரதாரர்களின் வருமானத் தேவை மற்றும் சட்டத்தின் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளவாறு செலவினத்தைப் பிரதிபலிக்கும் முறையின் அடிப்படையில் வரி அறவீட்டினை நிர்ணயிப்பதே ஆணைக்குழுச் சபையின் எதிர்பார்ப்பாகும்.

### 8 மானவ ஜவய

எமது சேவைகள் மற்றும் சேவையின் தரத்தினை மேம்படுத்தும் பிரதான வழிமுறைகளாக அமைவது ஊழிய அணியின் பிரயத்தனங்களாகும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தில் பாரிய மாற்றங்களை உறுதி செய்யும் வகையில் அர்ப்பணிப்புடனும் வினைத்திறன் மற்றும் ஊழல் இன்றியும் ஊழிய அணியாக செயற்பட இலங்கை மின்சார சபை எதிர்பார்த்துள்ளது. இச்செயற்றிறன் மற்றும் இலாபகரமான செயற்பாட்டினை எட்டுவதற்காக இ.மி.ச. இன் செயற்பாடுகளில் செயற்சாதனைகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

### 9 சம்பத் சேவா

இலங்கை மின்சார சபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புதிய பிரிவு உருவாக்கப்பட்டதுடன், இதற்கமைய சொத்துக்களில் உயர்ந்தபட்ச பயன் பெறப்படுகின்றது. இப்பிரிவினால் பொதுமக்களுக்கு மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குவதுடன் இ.மி.சக்காக மேலதிக வருமானத்தையும் ஈட்டிக்கொடுப்பதனால் இவ்வருமானத்தின் அளவினை அதிகரித்துக் கொள்ளமுடிகிறது.

### 10 லங்கா ஜனனி

அரசுக்குச் சொந்தமான உப-கம்பனிகளைத் தாபிப்பதன் மூலம் கடத்துகை வலையமைப்பை அபிவிருத்தி செய்தல், விரிவுபடுத்தல், காற்று சக்தி, உயிரியல் வாயு, சூரியசக்தி உள்ளிட்ட மாற்று மின்சக்தி வகைகள் ஊடாக மின் விநியோகத்தினை விருத்தி செய்வதையும் உள்நாட்டுப் பொறியியலாளர்களின் திறமையைப் பயன்படுத்துவதையும் இ.மி.ச எதிர்பார்த்துள்ளது. இதன் மூலம் புதிய வாய்ப்புக்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் நீடித்த, நிரந்தர அபிவிருத்திக்காக மாற்று உற்பத்தி வளங்களை பயன்படுத்துவதற்கும் செலவினத்தைக் குறைப்பதற்கும் புதிய கருத்துக்கள் யோசனைகள் அமுல்படுத்துவதற்கும், அரச ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் உள்நாட்டுப் பொறியியலாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

மாற்று மின்சக்தி வகையினை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையின் பொறியியல் சார்ந்த திறமைகளைப் பயன்படுத்துவதற்காக இ.மி.சபைக்குச் சொந்தமான கம்பனியைத் தாபிக்க ஏற்கனவே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 11 சுப்பிரி விதுலி ஜல

காற்று, சூரிய வெளிச்சம், உயிரியல் வாயு, தொழினுட்பத்தை பயன்படுத்தி தமது மின்சக்தித் தேவையினை பெற்றுக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட மேலதிக மின் சக்தியினை மீள விற்பனை செய்வதற்காகவும், தனியார் மற்றும் அரச துறையின் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டு தேறிய மின் வாசிப்பு (Automatic Meter Reading) இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற் கொடுப்பனவு மானியினை அறிமுகப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் மின் கட்டணத்தைக் கட்டுப்படுத்த உதவும். தன்னியக்க மின்மானி வாசிப்பினைப் பயன்படுத்தும் போது அறவீட்டின் நேரப் பயன்பாடு, தொடர்பாடல்கள், வாடிக்கையாளர்களின் பொறுப்பில் நிர்வகித்தல் போன்ற ஏனைய கவர்ச்சிகரமான சிறிய வலையமைப்பு யோசனைத் திட்டம் கிரமமாக அறிமுகப்படுத்தப்படும்.

# இ.மி.ச. சுற்றாடற் கொள்கைகள்



**மின் சக்தியின் சுதந்திரமான பாய்வு**

இயற்கையானதும், மனிதனால் ஆக்கப்பட்டதுமான தன்மையொன்றில் அதன் சகல வியாபாரச் செயற்பாடுகளை இ.மி.ச. சமாளிப்பதுடன், நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கும் பங்களிக்கும். சுற்றாடல் பிரச்சனைகளைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையின் வழிவகைகள் மூலம், பொது மக்களினதும், வாடிக்கையாளர்களினதும், அதிகாரசபைகளினதும், ஊழியர்களினதும் மற்றும் அரசாங்கத்தினதும் சார்பாக எமது செயற்பாடுகளில் தன்னம்பிக்கையை உருவாக்க நாம் உத்தேசித்துள்ளோம். எமது செயற்பாடுகளினுள் சுற்றாடல் கரிசனைகளின் ஒன்றிணைக்கின்றதும், ஒன்றுதிரட்டுவதுமான கொள்கையொன்றை நாம் தீவிரமான பின்துரந்து செல்கின்றோம்

# 2012ஆம் ஆண்டின் முக்கிய விடயங்கள்



- **மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டம்**

மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டத்தின் வேலைகள் 2012ஆம் ஆண்டு யூலை மாதம் 14ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இம்மின் உற்பத்தி நிலையம் மூலம் ஏறத்தாழ 150 MW மின்சாரம் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுவாக ஆண்டிற்கு 409 GWh மின்சாரம் பெறப்பட முடியும்.

- **கிளிநொச்சி நெய்யரி உபநிலையம்**

2012 செப்ரெம்பர் 13 அன்று 1014 மணித்தியாலங்களுக்கு கிளிநொச்சி நெய்யரி உப-நிலையம் உயிர்ப்பூட்டப்பட்டது. இது இலங்கையின் வட பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொண்டு வருவதில் இன்னொரு முக்கிய சம்பவத்தைக் குறித்துக்கொள்கின்றது.

## 2012ஆம் ஆண்டின் முக்கிய விடயங்கள் தொடர்ச்சி

### குடித்தனங்களில் மின்னொளியேற்றல்

2012ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் 94%ஆன மக்கள் மின்சார வசதியினைப் பெற்றுள்ளார்கள். மின்சார நுகர்வானது 480 அலகுகளில் (kWh) இருந்து 515 அலகுகளாக (kWh)அதிகரித்துள்ளது. இத்தகைய தன்மையான குறித்த ஆண்டில் தலைக்குரிய மின்சாரப் பாவனை முன்னைய ஆண்டைவிட 35 அலகுகளால் (kWh) அதிகரித்துள்ளது.

### சக்தி இழப்பீட்டு முறைமை

2000ஆம் ஆண்டிலிருந்து இச் சக்தி முறைமை தொடர்பான நட்டங்கள் படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த நட்டமானது 10.67%ஆகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் வரைபிலிருந்து அறிய முடிகின்றது.




**சக்தி இழப்பீட்டு முறைமை**

### வாடிக்கையாளர்களின் அதிகரிப்பு

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சார நுகர்வு சம்பந்தமான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 4,979,862 ஆகும். இது ஆண்டு நுகர்வு வளர்ச்சி வீதத்தில் 5.6% ஆகக் காணப்படுகின்றது.

| வாடிக்கையாளர் வகை | வாடிக்கையாளரின் எண்ணிக்கை |
|---|---|
| வீட்டுப்பாவனை | 4,391,445 |
| மதத் தலங்கள் | 30,009 |
| பொது நோக்கம் | 507,247 |
| கைத்தொழிற்சாலை | 50,760 |
| ஹொட்டேல் | 399 |
| மொத்தம் | 4,979,862 |

2012ஆம் ஆண்டு காலத்தில் இலங்கை மின்சார சபையால் ஏறத்தாழ 262,414 பேர் புதிய மின்சார இணைப்பினைப் பெற்றிருந்தார்கள். இதன் மூலம் மாதமொன்றுக்கு சராசரியாக 218,868 பேர் புதிய வாடிக்கையாளர்களாகக் காணப்பட்டனர்.




**மின் விற்பனை**

2011ஆம் ஆண்டில் மின் விற்பனையானது 10,023 கி.வா.ம (GWh) இருந்து 2012 ஆம் ஆண்டு 10,474 கி.வா.ம (GWh) ஆக அதிகரித்துள்ளது. இது குறித்த ஆண்டில் 4.5 வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. நாளுக்கான சராசரி மின் நுகர்வானது 2011ஆம் ஆண்டில் 27 கி.வா.ம (GWh) ஆக இருந்தது. 2012ஆம் ஆண்டில் 29 கி.வா.ம (GWh) ஆக அதிகரித்துள்ளது.




**மின் விற்பனை வகையீடு ரீதியாக - 2012**

மின்சார நுகர்வில் ஒப்பீட்டுரீதியில் வீட்டு மின் பாவனை மதத்தலங்கள் என்பன முதலாம் இடத்தில் காணப்படுகின்றன. இது மொத்த மின் நுகர்வில் ஏறத்தாழ 34.2% ஆகக் காணப்படுகின்றது. அடுத்து மின் நுகர்வில் கைத்தொழிற்றையானது 31.4% ஆகவும் பொது நோக்கங்களிற்கான நுகர்வு 19.5% ஆகவும் காணப்படுகின்றது. இது ஆண்டு வளர்ச்சியின் 6% ஆகக் காணப்படுகின்றது.

### வருமானம்

2012ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மின்சார அறவீடு காரணமாக மின்சாரம் மூலம் அறவிடப்பட்ட வருமானமானது 23.1%ஆல் அதிகரித்தது. 2011ஆம் ஆண்டு மின்சார அறவீடு மூலம் பெறப்பட்ட வருமானமானது 132,373 மில்லியன் ரூபாவானது 2012ஆம் ஆண்டில் 162,956 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 2012ஆம் ஆண்டில் எரிபொருள் தொடர்பான கட்டண முறையும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.




**மின் வருமானம் வகையீடுரீதியாக - 2012**

## 2012ஆம் ஆண்டின் முக்கிய விடயங்கள் தொடர்ச்சி




**மின்சார விற்பனை வருமானம்**

மின்சார வருமானத்தில் அதிகளவான வருமானம் பொது நோக்க நடவடிக்கைகளிலும், அடுத்து கைத்தொழிற்சாலைகளிலிருந்தும், மூன்றாவதாக வீட்டுப்பாவனை, மத தலங்களிலிருந்தும் பெறப்படுகின்றது. வீட்டுப் பாவனையானது 2012ஆம் ஆண்டில் 26.5% ஆகக் காணப்பட்டது.

### மொத்த சக்தி சேமிப்பு

2011ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதி வரையும் வறட்சி நிலை காணப்பட்டது. ஆனால், 2012ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் நீர்மின் உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டதன் விளைவாக 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி 1072.7 கி.வா.ம மின்சாரமானது அதிகளவு சேமிப்பளவாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### மின்சார தோற்றுவிப்பு மூலங்கள்

2012 ஆம் ஆண்டு மரபு ரீதியிலான புதுப்பிக்கத்தக்க சக்திப் பொறி உள்ளடங்கலாக நீர்மின் உற்பத்தியானது 29%ஆகக் காணப்பட்டது. இது கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது ஏறத்தாழ 27% குறைவாகக் காணப்பட்டது.




**மின்சாத் தோற்றுவிப்பின் மூலங்கள் - 2011**




**மின்சாரத் தோற்றுவிப்பின் மூலங்கள் - 2012**

2012ஆம் ஆண்டின் மொத்த மின் உற்பத்தியில் அனல் மின்சார உற்பத்தி 71%ஆகவும், நீர்மின் உற்பத்தி குறைவாகவும் காணப்பட்டது. இது கடந்த காலத்தை விட ஏறத்தாழ 23% அதிகரிப்பைக் காட்டியது

### மொத்த மின்சார உற்பத்திகள்




2011ஆம் ஆண்டு மொத்த மின் உற்பத்தியானது 11,528 GWh ஆகும். இது 2012ஆம் ஆண்டில் 11,801 Gwhஆக அதிகரித்தது. இது கடந்த காலத்தைவிட 2.4% அதிகரிப்பாக உள்ளது.

### உயர்ந்தபட்சக் கேள்வி




2012ஆம் ஆண்டில் உயர்ந்தபட்சக் கேள்வியானது முன்னைய ஆண்டைவிட 16.7 MWஆல் குறைவடைந்து காணப்பட்டது. இக்குறைவானது 0.77% ஆகக் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு உயர்ந்தபட்சக் கேள்வி 2,146.4 MW ஆகக் காணப்பட்ட போது 2011ஆம் ஆண்டு இது 2,163.1 MW ஆகக் காணப்பட்டது.

# கூட்டாண்மைத் தகவல்

**சட்ட அமைப்பு**

இது 1969ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றச் சட்டம் இல. 17இன் கீழ் ஓர் சட்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டிருந்ததுடன், 1969ஆம் ஆண்டு சட்ட இல. 31, 1979 சட்ட இல. 29, 1988 சட்ட இல. 32, 2009ஆம் ஆண்டு சட்ட இல. 20இன் கீழும் திருத்தியமைக்கப்பட்டது.

**2012ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை**

| | |
|---|---|
| கலாநிதி. விமலதர்ம அபேவிக்கிரம | (தலைவர்) |
| திரு. டபிள்யு.டி. அனுர சேனக விஜயபால | (உப தலைவர்) |
| திரு. பி.பி. குணசேன | (அங்கத்தவர்) |
| வைத்தியர். பீ.எம்.எஸ். பட்டகொட | (அங்கத்தவர்) |
| திரு. டபிள்யு.டி. ஜயசிங்க | (அங்கத்தவர்) |
| டாக்டர். வை.டி. நிஹால் ஜயதிலக | (அங்கத்தவர்) (2012.07.16 வரை) |
| திரு. ஆர.ஏ.ஏ.கே. ரணவக்க | (அங்கத்தவர்) (2012.07.16இலிருந்து) |
| திரு. கே.டி. ரணசிங்க | (அங்கத்தவர்) (2012.07.23 வரை) |
| திரு. சி.பி.ஜே. சிறிவர்த்தன | (அங்கத்தவர்) (2012.08.13இலிருந்து) |

**சபையின் செயலாளர்**

| | |
|---|---|
| திரு. எஸ்.சி. ரொபேட்சன் | (2012.04.30 வரை) |
| திருமதி. மிஹிரி சேனாரத்ன | (2012.05.02இலிருந்து) |

**பொது முகாமையாளர்**

திரு. பீ.என்.ஐ.எவ்.ஏ. விக்கிரமசூரிய

**தலைமை அலுவலகம்**
இல. 50, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்
மாவத்தை, கொழும்பு 2.
தொலைபேசி: (011) 232 4471
(8 இணைப்புகள்)
தொலைநகல்: (011) 244 9572
வலைத்தளம்: www.ceb.lk

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் நாயகம்
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 7

**வங்கி**
மக்கள் வங்கி
இல.75, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்
மாவத்தை, கொழும்பு 2.

# கூட்டாண்மைத் தகவல் தொடர்ச்சி

**கூட்டாண்மை முகாமைத்துவம்**

**மேலதிக பொது முகாமையாளர்**
**மின் பிறப்பாக்கல்**
திரு. எம்.சி. விக்கிரமசேகர

**மேலதிக பொது முகாமையாளர்**
**கடத்துகை**
திரு. ஆர்.எச்.ஆர். லொக்குபாலசூரிய (2012.04.10 வரை)
திருமதி. வை.எம்.சமரசிங்க (2012.04.11இலிருந்து)

**மேலதிக பொது முகாமையாளர்**
**விநியோகப் பிரிவு 1**
திரு. இ.ஜி. அபேசேகர (2012.01.26 வரை)
திரு. எல்.ஏ.எஸ். பெர்னாண்டோ (2012.04.11இலிருந்து)

**மேலதிக பொது முகாமையாளர்**
விநியோகப் பிரிவு 2
திரு. ஆர்.ஜே. குணவர்த்தன (2012.07.16 வரை)
திரு. ஏ.டி. டந்தராராயன (2012.09.15 – 2012.11.29 வரை)
திரு. ரி.டி. ஹந்தகம (2012.11.30இலிருந்து)

**மேலதிக பொது முகாமையாளர்**
விநியோகப் பிரிவு 3
திரு. எவ்.கே. மொஹிதீன்

**மேலதிக பொது முகாமையாளர்**
விநியோகப் பிரிவு 4
திரு. டி.ஜி.சி. ரத்னபால (2012.02.01 வரை)
திரு. எம்.ஜி. திலகரத்ன (2012.03.01இலிருந்து)

**மேலதிக பொது முகாமையாளர்**
**சொத்து முகாமையும், மையப்படுத்தப்பட்ட சேவைகளும்**
திரு. எம்.ஜி. லியனகே (2012.04.03 வரை)
திரு. கே.டபிள்யு.எல். விஜேவர்த்தன (2012.04.04இலிருந்து)

**மேலதிக பொது முகாமையாளர்**
**கூட்டாண்மை உபாயங்கள்**
திரு. டி.கே.பீ.எஸ். திலகசேன

**மேலதிக பொது முகாமையாளர்**
**கருத்திட்டம்**
திரு. டபிள்யு. ஜே.எல்.எஸ். பெர்னாண்டோ

**நிதி முகாமையாளர்**
செல்வி. என்.ஆர். மஹ்முத் (2012.10.13 வரை)
திரு. ஆர்.எம்.எஸ். திலகவர்த்தன (2012.10.30இலிருந்து பதில் சேவை)

# இலங்கை மின்சார சபை

## நிறுவனக் கட்டமைப்பு - 2012

- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
  - பொது முகாமையாளர்
  - பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்
  - பிரதம சட்ட உத்தியோகத்தர்
  - சபைச் செயலாளர்

- **மேலதிக பொது முகாமையாளர் கூட்டாண்மை உபாயம்**
  - பி.பொ.மு. (கூட்டாண்மை உபாயங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள்
  - பி.பொ.மு. (வியாபாரம் மற்றும் செயற்பாட்டு உபாயங்கள்)
  - பி.பொ.மு. (தொழிற்பாட்டு உபாயங்கள் மற்றும் செயல்முறை அபிவிருத்தி)
  - பி.பொ.மு (தகவல் தொழிநுட்பம்)
- **மேலதிக பொது முகாமையாளர் மின் பிறப்பாக்கம்**
  - பி.பொ.மு (மின்சக்தி விற்பனை)
  - பி.பொ.மு (தாபனப் பணிகள்)
  - பி.பொ.மு (அனல் மின்சார கட்டிடத் தொகுதி)
  - பி.பொ.மு (மகாவலி கட்டிடத் தொகுதி)
  - பி.பொ.மு (லக்ஷபான கட்டிடத் தொகுதி)
  - பி.பொ.மு (இயந்திர நுட்பம்)
  - பி.பொ.மு (பிறப்பாக்கல் கருத்திட்டம்)
  - பி.பொ.மு (ஏனைய நீர் மின்சாரம்)
  - பி.பொ.மு (மின்சார பராமரிப்பு)
  - பி.பொ.மு (சுற்றாடல், கட்டிட பராமரிப்பு மற்றும் நீர்த்தேக்க பாதுகாப்பு)
  - மே.நி.மு. (பிறப்பாக்கி)
- **மேலதிக பொது முகாமையாளர் கடத்துகை**
  - பி.பொ.மு. (மின்சக்தி கொள்வனவு)
  - பி.பொ.மு. (கடத்துகை மற்றும் பிறப்பாக்கல் திட்டமிடல்)
  - பி.பொ.மு. (கடத்துகை திட்டமிடல் மற்றும் சூழல்)
  - பி.பொ.மு. (தாபன மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள்)
  - பி.பொ.மு. (கடத்துகை செயற்பாடு மற்றும் பராமரிப்பு)
  - பி.பொ.மு. (சொத்துக்கள் முகாமைத்துவம்)
  - பி.பொ.மு. (கடத்துகை கருத்திட்டம்)
  - பி.பொ.மு. (முறைமை கட்டுப்பாடு)
  - பி.பொ.மு. (தொடர்பாடல்)
  - பி.பொ.மு. (மின்சார சந்தைப்படுத்தல்)
  - மே.நி.மு. (கடத்துகை)
- **மேலதிக பொது முகாமையாளர் விநியோகம் - பிரிவு 1**
  - பி.பொ.மு. (வர்த்தகம் மற்றும் தாபனம்)
  - பி.பொ.மு. (கருத்திட்டம், கனரகப் பேணல்)
  - பி.பொ.மு. (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
  - பி.பொ.மு. (கொழும்பு நகர்)
  - பி.பொ.மு. (வடமேல் மாகாணம்)
  - பி.பொ.மு. (வடமத்திய மாகாணம்)
  - பி.பொ.மு. (வடமாகாணம்)
  - மே.நி.மு. (விநியோகம் - வலயம் 1)
- **மேலதிக பொது முகாமையாளர் விநியோகம் - பிரிவு 2**
  - பி.பொ.மு. (வர்த்தகம் மற்றும் தாபனம்)
  - பி.பொ.மு. (கருத்திட்டம், கனரகப் பேணல்)
  - பி.பொ.மு. (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
  - பி.பொ.மு. (மத்திய மாகாணம்)
  - பி.பொ.மு. (மேல் மாகாணம் வடக்கு)
  - பி.பொ.மு. (கிழக்கு மாகாணம்
  - பி.பொ.மு. (நடுத்தர வோல்டேஜ் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு
  - மே.நி.மு. (விநியோகம் - வலயம் 2)
- **மேலதிக பொது முகாமையாளர் விநியோகம் - பிரிவு 3**
  - பி.பொ.மு. (வர்த்தகம் மற்றும் தாபனம்)
  - பி.பொ.மு. (கருத்திட்டம், கனரகப் பேணல்)
  - பி.பொ.மு. (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
  - பி.பொ.மு. (மேல் மாகாணம் தெற்கு II)
  - பி.பொ.மு. (சப்ரகமுவ மாகாணம்)
  - பி.பொ.மு. (ஊவா)
  - மே.நி.மு. (விநியோகம் - வலயம் 3)
- **மேலதிக பொது முகாமையாளர் விநியோகம் - பிரிவு 4**
  - பி.பொ.மு. (வர்த்தகம் மற்றும் தாபனம்)
  - பி.பொ.மு. (கருத்திட்டம், கனரகப் பேணல்)
  - பி.பொ.மு. (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
  - பி.பொ.மு. (மேல் மாகாணம் தெற்கு 1)
  - பி.பொ.மு. (தென் மாகாணம்)
  - மே.நி.மு. (விநியோகம் - வலயம் 4)
- **மேலதிக பொது முகாமையாளர் சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் மையப்படுத்தப்பட்ட சேவைகள்**
  - பி.பொ.மு. (சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் தாபனம்)
  - பி.பொ.மு. (பயிற்சி)
  - பி.பொ.மு. (சிவில் பணிகள் மற்றும் கட்டிடம்)
  - பி.பொ.மு. (வேலைத்தளம் மற்றும் உபகாரச் சேவைகள்)
  - பாதுகாப்பு முகாமையாளர்
  - பிரதி நீதி முகாமையாளர்
- **மேலதிக பொது முகாமையாளர் கருத்திட்டங்கள்**
  - சிரேஷ்ட கருத்திட்டப் பணிப்பாளர் (புத்தளம் நிலக்கரி மின்சக்தி கருத்திட்டம்)
  - கருத்திட்டப் பணிப்பாளர் (மேல் கொத்மலை மின் வழங்கல் கருத்திட்டம்)
  - கருத்திட்டப் பணிப்பாளர் (கொழும்பு நகர் மின்சார வி.அ. கருத்திட்டம்)
  - கருத்திட்டப் பணிப்பாளர் (திருகோணமலை நிலக்கரி மின் கருத்திட்டம்)
  - கருத்திட்டப் பணிப்பாளர் (புரோட்லேண்ட்ஸ் மின் பிறப்பாக்கி கருத்திட்டம்)
  - கருத்திட்டப் பணிப்பாளர் (உமா ஓயா நீர் மின் பிறப்பாக்கி கருத்திட்டம்)
  - பி.பொ.மு. (கடத்துகை கருத்திட்டம்)
  - மேலதிக நிதி முகாமையாளர் (கருத்திட்டம்)
- **நிதி முகாமையாளர்**
  - மேலதிக நிதி முகாமையாளர் (பிரதான அலுவலகம்)
  - மேலதிக நிதி முகாமையாளர் (தாபனம்)
  - செயலாளர் - ஓய்வூதியச் சம்பள நிதியம்
  - செயலாளர் - ஊழியர் சேமலாப நிதியம்
- பி.பொ.மு. (ஆளணி)
- முகாமையாளர் - விசேட விசாரணை



# முகாமையின் மீளாய்வு


தலைவரின் மீளாய்வு 14 - 15

பொது முகாமையாளரின் மீளாய்வு 16 - 20

இ.மி.ச. கடத்துகை வலையமைப்பு 21

# தலைவரின் மீளாய்வு



2012ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கௌரவ பாட்டாலி சம்பிக்க ரணவக்க அவர்கள் தொடர்ச்சியாக 3 வருடங்கள் மின் சக்தி, அமைச்சராகக் காணப்பட்டார். மகிந்த சிந்தனை எனும் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கொள்கைக்கிணங்க இலங்கையை பிராந்திய சக்தி மையமாக உருவாக்குவதே இவரது பிரதான நோக்கமாகும்.

> “உலகம்பூராவும் அனுபவிக்கப்பட்ட காலநிலை மாற்றத்தின் காரணமாக விளைந்த வரட்சியின் தாக்கத்தைத் தணிப்பதே 2012ஆம் ஆண்டின் போது இ.மி.சபையினால் முகங்கொடுக்கப்பட்ட பாரிய சவால்களில் ஒன்றாகும்.”

2012ஆம் ஆண்டில் இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களாக மிகக்குறைந்த மழைவீழ்ச்சியையும், நீர்மின் உற்பத்தியையும் பதிவுசெய்திருந்தது. அதிமேன்மைதகு கௌரவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் “நாட்டை இருளில் வைத்திருக்க முடியாது” எனும் மகிந்த சிந்தனை கொள்கைக்கிணங்க, நாட்டின் வட கிழக்குப் பிராந்தியங்களில் சுற்றுலாக் கைத்தொழிற்றுறை மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக கடந்த காலங்களைப் போலல்லாது இடைவிடாத மின்சாரத்தை சீராக வினியோகிப்பதற்கு இ.மி.ச திடசங்கற்பம் பூண்டிருந்தது. தென் ஆசிய பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மின்சார விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் விநியோகிக்கப்படுகின்ற போதிலும், எமது நாட்டில் சீரான தொடர்ச்சியான மின்சார விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும், 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சாரத்தின் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

இருந்தும் கௌரவ மின் சக்தி, அமைச்சர் தகைமைபெற்ற ஒரு பொறியியலாளர் ஆவார். எனவே, அவர்களின் சக்தி சேமிப்பு தொடர்பான திடகாத்திரமான திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன. அந்த வகையில் மின் நுகர்வு உயர்வாகக் காணப்படும் நேரமான பிற்பகல் 6.30 மணியிலிருந்து இரவு 9.30 மணி வரையான காலப்பகுதியில் மின்நுகர்வை இயன்றவரை குறைக்குமாறு வாடிக்கையாளர்களைக் கேட்டுக்கொண்டதுடன், அச்செயற்திட்டத்தில் வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்கப்படுத்தப்பட்டார்கள். “நாளைக்காக இன்றே சேமியுங்கள்” என்னும் சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்தல் என்ற

## தலைவரின் மீளாய்வு தொடர்ச்சி

செய்தியைப் பரப்புவதற்கு கல்வி அமைச்சின் இணக்கப்பாட்டுடன், நாட்டின் எதிர்காலச் சமூகத்தவர்களாக உள்ள பாடசாலை மாணவர்கள் சக்தியைப் பாதுகாப்பது என உறுதி பூண்டார்கள். அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் துறைகளில் உள்ளவர்களைக் கொண்டு சக்தியைப் பாதுகாத்தல் நுகர்வோராகிய அவர்களுடைய பொறுப்பு என்பதனை எடுத்துக் கூறுவதற்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டனர்.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மின் சக்தி அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட “சக்தியைப் பாதுகாக்க ஒன்றிணைந்து அணி திரளுவோம்” என்னும் தொனிப் பொருளிலான நடைபவனியில் கல்விமான்கள், மதகுருமார், மருத்துவக் குழுக்கள், விவசாயிகள், மற்றும் ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த விழிப்புணர்வில் தனது பொறுப்புக் கூறலை வெளிப்படுத்திய 1ஆவது நபராக அதிமிகு மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் திகழ்கின்றார். மேலும் சக்தியைப் பாதுகாப்பதற்கு, வாடிக்கையாளர்களது மின்சாரக் கட்டண நிலுவையில் இருந்து 20% அல்லது 10% குறைத்தல் என்னும் விசேட அதிர்ஸ்ட லாப சலுகை முறை ஒன்று வெளியிடப்பட்டு, வாடிக்கையாளர் செயலூக்கப்படுத்தப்பட்டனர். தமது மின் கட்டண வீதத்தினைக் குறைக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இவர்கள் காட்டிய ஆர்வம் இத்திட்டத்தினை வெற்றியளிக்கச் செய்ததுடன், இது வாடிக்கையாளர்களிற்கு நன்மையளிப்பதுடன் மட்டுமல்லாது இ.மி.ச.க்கு பயனளிக்கக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டது.

தேசிய சக்தியைப் பாதுகாத்தல் எழுச்சியை அறிமுகப்படுத்தும் வரை அனேகமான வாடிக்கையாளர்கள் சக்தியைச் சேமிப்பதற்கான மின்குமிழ்களான CFL மின்குமிழ்களை பயன்படுத்தும் முறையையே நோக்காகக் கொண்டிருந்தனர். மேலே குறிப்பிடப்பட்ட சகல அத்தகைய பிரயத்தனங்களும் சக்தியைப் பாதுகாப்பதனை வெற்றிபெறச் செய்வதனை நிரூபிக்கும் வகையிலும், இ.மி.ச. சக்திக்கான கேள்வியைக் குறைக்கும் வகையிலும் வெப்ப சக்தியை உருவாக்கும் ஜெனரேட்டர்களிற்காக தேவைப்படும் மேலதிக எரிபொருட் செலவைக் குறைப்பதனை பெறுபேறாகக் கொண்டனவையாகவும் இருந்தன.

சக்திப் பிரச்சனைகளுடன் இ.மி.ச. அபிவிருத்தி கருத்திட்டங்களும் எந்தவித தடையீடுகளும் இன்றித் தொடரப்பட்டன. தேசிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் “வடக்கின் வசந்தம்” நிகழ்ச்சித்திட்டத்திற்கு இ.மி.ச. ஆனது சிறந்த பங்களிப்பையும், அனுசரணையையும் வழங்கியுள்ளது. இதன் பிரகாரம், 25 வருடங்களின் பின் யாழ் குடா நாடு கிளிநொச்சி உப நிலையத்தின் ஊடாக தேசிய சக்தி இரும்புச் சட்டத்துடன் இணைக்கும் பொருட்டு வவுனியா – கிளிநொச்சி மின் சக்தி பரிமாற்று இணைப்புப் பாதை கட்டியெழுப்பப்பட்டு, 238 மின் சக்தி பரிமாற்றுக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு கருத்திட்டத்தின் 1ஆவது கட்டம் முழுதாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் அடுத்த கட்டம் 132 kW மின்சக்தி பரிமாற்று இணைப்பானது கிளிநொச்சி – சுன்னாகத்திலும் மற்றும் இன்னுமொரு உபநிலையம் சுன்னாகத்திலும் நிறுவப்படவுமுள்ளது.

இலங்கை மின்சார சபையின் கடந்த கால அடைவுகளில் இன்னுமொரு சாதனையானது யாழ்ப்பாணத்தில் 24 MW எரிபொருள் வெப்ப சக்தி இயந்திரசாலையை நிறுவுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமாகும். இதன் மூலமாக, இலங்கை மின்சார சபையினால் சார்ந்திருப்பதில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக யாழ் குடாநாட்டிற்கான மின் உற்பத்தியை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்பதுடன், பெரிய செலவினங்களை அதே வகையில் சரிசெய்யக்கூடியதாகவும் இருக்கும். இயந்திரசாலையின் நிர்மானப் பணிகள் 2012 ஏப்பிறல், அனுபவம் மிக்க உள்ளூர் பொறியியலாளர்களையும் மற்றும் 3,500 மில்லியன் பெறுமதியான உள்ளூர் முதலீடுகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இயந்திரசாலைக்கு “வடக்கின் ஜனனம்” என பெயர் சூட்டப்பட்டு, வருடத்திற்கு 176 மில்லியன் அலகுகள் மின்சார உற்பத்தியையும், கிட்டத்தட்ட இ.மி. சபையினால் ரூபா 1,350 மில்லியன்களை சேமிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திரமானது சிநேக சுற்றுச் சூழல் தன்மையிலானதாகும்.

மின் சக்தி அமைச்சானது எதிர்காலத்தில் மேலும் மேலும் வழங்க முடியாதுள்ள வளங்களான இயற்கை வாயு, புதுப்பிக்கப்படத்தக்க வலு, அணுசக்தி, வெப்பசக்தி உற்பத்தி மற்றும் உலகில் அருகிவரும் எண்ணெய்வளங்களிற்கு மாற்றீடான சக்தி வளங்கள் பற்றிய ஆய்வுப்பயணத்தினை தொடர்ச்சியாக செய்துவருகின்றது. இதன்பிரகாரம் தனியார் துறை வியாபார நிறுவனங்களைப் புதுப்பிக்கப்படத்தக்க சக்தி வளங்களான காற்று வலு, சூரியசக்தி, மூலிகைச் சக்தி உற்பத்திக்கான கருத்திட்டங்களை துணிந்து முன்னெடுப்பதற்கான ஊக்கப்படுத்தல்களையும், வசதிகளையும் வழங்கிவருகின்றது.

இலங்கையானது, ஏற்கனவே அனல் மின் உற்பத்தியை சீன அரசாங்கத்தின் உதவியோடு புத்தளம் மாவட்டத்தில் உள்ள நுரைச்சோலையில் லக்விஜய அனல் மின் நிலையத்தை துணிந்து ஆரம்பித்துள்ளது. இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தை, இந்தியாவின் எம்/எஸ் என்ரிபிசி நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பூரில் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இதன் பிரகாரம், இலங்கை மின்சார சபைக்கும் என்ரிபிசி இந்தியக் கம்பனிக்கும் இடையேயான கூட்டுமுயற்சியின்படி சிறிய அளவிலான உத்தியோகத்தர்களும் 2012ஆம் ஆண்டில் இதனை மேலும் முன்னெடுப் பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2012 யூலையில் அதி மேன்மை தங்கிய ஜனாதிபதியினால் மிக நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த 150 மெ.வா. மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையம் 150 MW தேசிய கம்பிச் சட்டத்துடன் இணைக்கப்பட்டது. இத்திட்டமானது 1960களில் திட்டமிடப்பட்டு 2006 மார்ச் 3ஆம் திகதி அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற சில மாதங்களில் அவரால் சிபாரிசு செய்யப்பட்டதாகும். இக்கருத்திட்டத்தினால், இந்நிலப்பரப்பில் ஏற்படும் சுற்றுச்சூழல் தீங்குகளின் மேல் விசேட கவனம் செலுத்தப்பட்டு, சினேகபூர்வ சூழல் காரணிகளுடன் நிலத்தின் இயற்கைக்கும், இயற்கைக் காட்சி சார்ந்த தன்மைக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளப்பட்டது.

2012ஆம் ஆண்டின் அரசின் குறிக்கோள்களை அடையும் நோக்குடன், அரசினால் நிறைவேற்றப்படும் கொள்கைகளிற்கமைய சபையுடனும், அதன் தலைவருடனும் இணைந்து செயலாற்றிய இ.மி.ச. உத்தியோகத்தர்களதும் மற்றும் முகாமையினதும் அர்ப்பணிப்புப் பற்றி இங்கு குறிப்பிடுவது பயனுடையதாகும். நடப்பாண்டில் சபையினால் பெறுமதிமிக்க தீர்மானங்களையும், பயனுள்ள அடைவுகளையும் அடைவதற்கு அவரவரது துறைகளில் இருந்து உரிய துறைபோனவர்களிற்கும், தொழில்வாண்மையானவர்களினால் வழங்கப்பட்ட பெறுமதிமிக்க அனுசரணைக்கும், அவர்களினால் இ.மி.ச. சீரான ஒழுங்கு முறையில் கொண்டு நடாத்துவதற்கும் உதவிய இவர்கள் அடையாளம் காணப்பட்டு பாராட்டப்படத்தக்கவர்கள்.

**பேராசிரியர் விமலதர்ம அபயவிக்கிரம**
தலைவர். இ.மி.ச.

# பொது முகாமையாளரின் மீளாய்வு



மாயன் என்னும் நீண்ட கால கருத்துக்கூறும் நாள்காட்டியின் முடிவின் மூலம் சூசகமாக தெரிவிக்கப்பட்ட அச்சமூட்டும் கொடும் நிகழ்வுகளின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் எப்போதும் குறைந்து செல்லும் நீர் சேமிப்பின் மூலம் பாவனை செய்யப்பட்ட மின் வெட்டுகளின் அச்சுறுத்தல் என்பவற்றிற்கு இடையே 2012 ஜனவரி 1ஆம் திகதியன்று இலங்கையர்கள் இன்னுமொரு புதிய ஆண்டைப் பற்றி கவனம் செலுத்தியுள்ளனர். எவ்வாறாயினும் மற்றொரு சவாலின் முடிவைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டு, இரு சவால்களாலும் எவ்வித பாதிப்பும் இன்றி ஒரு வெற்றிகரமான ஆண்டான 2012இல் இலங்கை பிரவேசித்துள்ளது.

> நாட்டின் சகல வாடிக்கையாளர்களும் வீட்டில் இருந்தவாறே ஒரே நாளில் மின் இணைப்பைப் பெறக்கூடியதாக இருப்பதே எமது நோக்கமாகும். ஏனைய நிறுவனங்கள் “சிநேகபூர்வமான வாடிக்கையாள்களை” உருவாக்க எத்தனிக்கும் அதேவேளை, இ.மி.சபையானது “வாடிக்கையாளர்களிற்கு சுதந்திரத்தை” வழங்கிவருவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### நிகரான பயணத்தின் ஆரம்பம் - இ.மி.சபைக்கான புதிய கூட்டாண்மை வலைத்தளம்

இ.மி.ச. ஆனது 2012 ஜனவரி 2ம் திகதி புதிய இணைய வலைத்தளமான www.ceb.lkஐ ஆரம்பித்தது. புதிய வலைத்தளமானது முன்னையதை விட வாடிக்கையாளர்களை மையப்படுத்தக்கூடிய பல விடயங்களைக் கொண்டதாக உள்ளது. இ.மி.ச. ஆனது இன்றைய மற்றும் நாளைய வாடிக்கையாளர்களது தேவைகளை அடையாளம் கண்டு வலைத்தளம் மற்றும் நடமாடல் சேவைகளை அடிப்படையாகக் கொண்ட அதனுடைய தொழில்நுட்ப வசதிகளை மேலும் மேலும் வழங்க வேண்டும் என்பதனைத் தெரிந்து கொண்டது. நவீன சமூக மக்கள் இரண்டு உலகங்களில் வாழுகின்றனர். ஒன்று பௌதீகத் தோற்றப்பாடு மற்றையது மெய்மைத் தோற்றப்பாடாகும். இதில் அதிகளவானவர்கள் இரண்டாவதாகக் கூறப்பட்ட விடயத்தை நோக்கியே புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். இலங்கை மின்சார சபையானது “இரண்டு உலகங்களையும்” பாதுகாக்க வேண்டிய தேவையைக் கண்டிருப்பதுடன், அதனால் இது நிகரற்ற உலகத்திற்கான திறவுகோலாக உள்ள எமது வலைத்தளத்தை மீள்புதுபிப்பது எனவும் தீர்மானித்துள்ளது. நாங்கள் நடப்பாண்டில் இ.மி.ச. வலைத்தளத்தில் தனிப்பட்டவரின் கணக்குகளை தொடரறா சேவை மூலமாகப்

பெற்றுக்கொள்ளும் வசதிகளையும், கடந்த கால பற்றுச்சீட்டுக் கொடுப்பனவு விபரங்கள், கடந்த கால மின் பாவனைப் பதிவுகள், தொடரறா சேவை மூலமான மின் பற்றுசீட்டு கொடுப்பனவுகள் போன்ற புதிய விடயங்களின் பரப்பெல்லைகளையும் இணைத்து விரிவுபடுத்தியுள்ளோம். எவரொருவர் நாளாந்த மின் உற்பத்தி, முதல் நாள் உச்ச கால மின்சக்திப் பாவனை, நாளாந்த நீர்மின் தேக்கம், நாட்டின் எந்தப் பகுதிக்குமாக திட்டமிடப்பட்ட மின்சார வெளியேற்றம் மற்றும் இ.மி.ச. ஆன பொருட்கள் சேவைப் பெறுகைகளிற்காக வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல்களின் விபரங்களையும் பார்த்துக் கொள்ளவும் முடியும்.

### "சுயாதீன வாடிக்கையாளர்" அலுவலகத்திற்கு "வாடிக்கையாளர் சிநேகபூர்வமான" அலுவலகம்

இ.மி.சபையானது புதிய ஒரு மின்சார இணைப்பை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது பற்றிய நடைமுறை பற்றிய விளக்கங்களை வலைத்தளத்தில் இணைத்துள்ளது.

தற்பொழுது கொழும்பு எல்லைக்குட்பட்ட சகல வாடிக்கையாளர்களும் விண்ணப்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஒரு புதிய இணைப்பைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை வலைத்தளத்தில் இருந்து பதிவிறக்கத்தைச் செய்வதன் மூலம் இ.மி.சபைக்கு வருகைதருவதைத் தவிர்த்துப் பெற்றுக்கொள்ள முடியும். நாட்டின் சகல வாடிக்கையாளர்களும் வீட்டில் இருந்தவாறே ஒரே நாளில் மின் இணைப்பைக் பெறக்கூடியதாக இருப்பதே எமது நோக்கமாகும். ஏனைய நிறுவனங்கள் "சிநேகபூர்வமான வாடிக்கையாளர்களை" உருவாக்க எத்தனிக்கும் அதே வேளை, இ.மி.சபையானது "வாடிக்கையாளர்களிற்கு சுதந்திரத்தை" வழங்கி வருவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இ.மி.சபை வாடிக்கையாளர்களிற்கு கண்காணிப்பு வேலைகளைத் தவிர தனது சகல சேவைகளையும் இ.மி.ச. வளாகத்திற்குள் வராமலேயே வலைப்பின்னல் சேவைகள் மூலம் வழங்குவதனை நோக்காகவும் கொண்டுள்ளது. இது ஒரு தூர நோக்காக இருப்பினும் இதன் படி 2012ஆம் ஆண்டு அவ்விலக்கை நோக்கி காலடி எடுத்துவைக்கப்பட்டுள்ளது.

### இ.மி.சபையால் மக்களிற்கு வழங்கப்படும் வசதிகள்

நாட்டின் பயங்கரவாத யுத்தத்தின் போது நாட்டின் மின் சக்தி வசதிகள் உயர் பாதுகாப்பு வலையங்களாக வகைப்படுத்தப்பட்டன. இருந்தபோதிலும், இலங்கையில் எவ்வாறு மின் உற்பத்தி நடைபெறுகின்றது என்பது பற்றி மின்சாரத்தை இழந்த இலங்கையர் எமது மின் சக்தி நிலையத்திற்கு வருகை தந்து பார்த்தறிந்து வியந்திருந்தார்கள். யுத்த முடிவின் பின் நாங்கள் பொதுமக்களிற்காக எமது கதவுகளைத் திறந்து வைத்துள்ளோம். இ.மி.ச. இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட மின் நிலையங்களான விக்டோரிய மின் நிலையம், சமனலவேவா, லக்சபானா, களனிதிஸ்ஸ போன்ற நிலையங்களை தமது "வழிகாட்டற் குறிப்புக்களில்" உள்ளடக்கியுள்ளது. தற்பொழுது பொதுமக்கள் எவ்வாறு விண்ணப்பங்களை விண்ணப்பித்தல், மற்றும் வருகை தருவதற்கான தினங்கள் பற்றிய விபரங்களை வலைத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

### சமபுள்ளியட்டையைச் சமப்படுத்தல்:

இலங்கை மின்சார சபை 2012ஆம் ஆண்டளவில் நிறுவன மட்ட சம புள்ளி அட்டையை முடிவுறுத்துவதற்கு முக்கிய நடவடிக்கையை எடுத்திருந்தது. நிறுவன சம புள்ளி அட்டையை நடப்பு வருடத்திற்குள் முடிவுறுத்தல் என்பது இ.மி. சபைக்கு உண்மையிலேயே ஒரு புதிய பயணமாக இருந்தது. சம புள்ளி அட்டையானது மிகவும் அவதானமாக தெரிவு செய்யப்பட்ட மின்கடத்தாத ஈயக்கடதாசிகள் நான்கு முனைகளிற்கும் குறுக்காக இணைக்கப்படுவதன் ஊடாக ஒரு நிறுவனத்தின் தற்போதைய எதிர்கால "ஆரோக்கிய" நிலையினை முனைப்பாகப் புலப்படுத்தும் சக்திவாய்ந்த கருவியாகும்.

கலவான பயிற்சி வசதியின் 2012 ஏப்ரலில் வெளியக சிந்தனை அலசல் செயற்பாடொன்றில் இ.மி.ச. கூட்டாண்மை உபாயப் பிரிவு விருந்தோம்பியது. இதேவேளை, இ.மி.ச. பெறுமான அட்டையின் நான்கு கண்ணோட்டங்கள் விரிவடைந்துள்ள KPIகளுக்கு இறுதியான சம்மதம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக, இ.மி. சபைக்கு முதலாவது தொழிற்பாட்டினை BSCஇன் உத்தியோகபூர்வ தோற்றத்தைக் குறித்துக்கொண்டுள்ளது. நாளாந்த தீயணைப்புக்கு அப்பால் பார்ப்பதற்கு முகாமைத்துவத்திற்கு உதவுகின்றதும் தாபனத்தின் முழுமையான ஆரோக்கியத்தை பார்க்கின்றதுமான BSCஇன் முதலாவது "தொழிற்பாட்டிலான மதிப்பாய்வு கூட்டம்" 2012 டிசம்பர் 11 அன்று நடைபெற்றது.

### இல. 50 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையிலிருந்து "விதுலக்பய" எனும் இடத்திற்கு இடம் மாறுதல்

இ.மி.சபை தலைமை அலுவலகம் "விதுலக்பய" எனும் புதிய கட்டட கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி நாராஹேன்பிட்டியில் உள்ள எவர்கிறீன் பார்க் எனுமிடத்தில் இடம்பெற்றது. பல்வேறு வசதிகளைக் கொண்டமையும் இம் மாடிக்கட்டடத்தின் பணிகள் நிறைவுற்றதும் கொழும்பு – 2 இல் அமைந்துள்ள இ.மி.சபையின் தலைமை அலுவலகம் அங்கு இடமாற்றம் செய்யப்படும். பத்தாண்டுகளாக கொழும்பு எமது பிரதான வர்த்தக மையமாக இருக்கின்றபொழுதும், தற்போது அமைய இருக்கின்ற அலுவலகம் நவீன தொழினுட்பவசதிகள், மாநாட்டு மண்டபம், வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் இ.மி.சபையின் எதிர்கால தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்யும் கட்டடமாக அமையும்.

### நனவாகும் மேல்கொத்மலை நீர்மின்வலு கருத்திட்டம்

இலங்கை மின்சார சபையின் கனவாகிய மேல்கொத்மலை நீர்மின் கருத்திட்டம் வெற்றிகரமாக 150 மெ.வா. நீர்மின்வலு மின்சாரத்தை உற்பத்திசெய்து அது தேசிய மின்நெய்யரியுடன் 2012 யூலை மாதம் 14ஆம் திகதி இணைக்கப்பட்டது. இக்கட்டுமானப் பணிகளுக்கான நிதியீட்டம் ஜப்பான் நாட்டு இன்டர்நஷனல் கோர்ப்பிரேஷன் ஏஜென்சியினால் வழங்கப்பட்டது. இக் கருத்திட்டமானது இலங்கை மின்சார சபையினால் அண்மையில் அமைக்கப்பட்ட அதிகளவு நீர்மின்சக்தியை உற்பத்தி செய்யும் நீர்மின்வலு உற்பத்தி நிலையங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் ஆண்டுக்கு 409 மில்லியன் அலகுகளை தேசிய மின்சாரத்திற்கு வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வடக்கின் கனவு – 22 வருடங்களுக்கு பின்னர் மின்சாரத்தை வினியோகித்த கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையம்

2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13ஆம் திகதி கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையம் 1,014 மணித்தியாலங்கள் மின்சக்தியை வழங்கியிருக்கிறது. வடக்கு பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவது என்பது இன்னுமோர் சாதனையாகக் காணப்பட்டது. பழைய கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையம் 1990ஆம் ஆண்டளவில் பயங்கரவாதிகளினால் முற்றாக நாசம்செய்யப்பட்டிருந்தது. அதன் பின் அதன் மின்னிணைப்பானது இலங்கையின் தேசிய மின்னிணைப்புடன் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. அதன் பின் கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையம் 73 கி.மீ. தூரங்கொண்ட வவுனியா நெய்யரி உபமின் நிலையத்திலிருந்து 132 கி.வா. இரட்டை சுற்று மின்சக்தியை பெற்று அது சுன்னாகம் நெய்யரி உபமின் நிலையத்துடன் விரிவுபடுத்தப்படவுள்ளது. இவற்றுக்கான கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றுக்கான வேலைத்திட்டங்கள் வினியோகப் பிராந்தியம் 1இனால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையத்திலிருந்து யாழ். குடாநாட்டின் பருத்தித்துறை, சாவகச்சேரி நெய்யரி உபமின் நிலையங்களுக்கான 29 கி.மீ. நீளமான 33 கி.வா. அதிவிரைவு மின்சார வினியோக கட்டுமானப்பணிகள் இடம்பெற்றதோடு ஆனையிறவு, புதுக்காடு போன்ற பகுதிகளுக்கும் மின்னிணைப்பு இடம்பெற்று வருகின்றது.

### மின்சார உற்பத்தியில் புதியதொரு அத்தியாயத்தை "உத்துறு ஜனனி" (Uthuru Janani) திறக்கின்றது

மூன்று 8 மெகாவற்ஸ் (MW) அலகுகளைக் கொண்ட புதிய 24 மெகாவற்ஸ் (MW) "உத்துறு ஜனனி" மின் நிலையத்தினை தாபித்தலானது, 2011 ஆகஸ்ட் மாதம் சுன்னாகத்தில் தொடங்கப்பட்டு 2012 டிசம்பர் மாதம் விரைவுச் செல்வழி அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டது.

## பொது முகாமையாளரின் மீளாய்வு தொடர்ச்சி

இந்த மின் உற்பத்தி நிலையமானது வருடாந்தம் அண்ணளவாக 176 மில்லியன் மின்சார அலகுகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் இது சுன்னாகத்தில் செலவுமிக்க அவசர மின்சார பொறித்தொகுதியை இயக்குவதற்குப் பதிலாக யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு நம்பகமானதும் குறைந்த செலவைக் கொண்டதுமான மின் விநியோகத்தை வழங்குவதாக உள்ளது. இதன் மூலம் வருடாந்தம் 1,350 மில்லியன் ரூபாவை சேமிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கருத்திட்டத்திற்கான ஈ.பி.சி. (EPC) ஒப்பந்தக்காரர் ஒரு சர்வதேச போட்டி விலைகூறல் செயல்முறை ஊடாக தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் இலங்கை மின்சார சபையானது இக் கருத்திட்டத்திற்கான கருத்திட்ட நிருவாகியாகவும், அறிவுரையாளராகவும் பணியாற்றியது. இக்கருத்திட்ட நிருமாண வேலையானது 2012 மே மாதம் தொடங்கப்பட்டதோடு 3.5 பில்லியன் ரூபா பெறுமதியுடைய இக்கருத்திட்டத்திற்கான நிதியளிப்பானது எல்.ஈ.சீ.ஓ. (LECO) மற்றும் இ.மி.ச. நிதி என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டது. இக்கருத்திட்டம் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு எட்டு மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட்டது. இலங்கை மின்சார சபையினால் அதன் வரலாற்றில் எப்பொழுதும் செய்யப்பட்ட விரைவான மின் உற்பத்தி நிலைய நிருமாண கருத்திட்டமானது மின் நிலைய ஒப்படைப்பிற்காக 2012 டிசம்பர் மாதம் யாழ்ப்பாண வழங்கல் முறைமையுடன் இணைக்கப்பட்டது.

### உற்பத்தி கலவை

2011 ஆம் ஆண்டில் தென் மேற்கு மற்றும் வட கீழ் பருவக்காற்றுக்களின் தவறுகையானது 2012 ஆம் ஆண்டு முடிவுற்று 658.4 GWh மொத்த நீர் சேமிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இது 2011இல் காணப்பட்ட 88.1% உடன் ஒப்பிடும் போது மொத்த சேமிப்பு 52.3%ஆக இருந்தது. ஆகஸ்ட் மாதத்திற்காக (மொத்த சேமிப்பு 18.8%) பதிவுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த 236.6 GWh சேமிப்பில் முடிவடையும் 2012ஆம் ஆண்டில் தென் மேற் பருவக் காற்றின் தவறுகை மற்றும் வட கீழ் பருவக்காற்று ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பவற்றின் காரணமாக நிலைமை மேலும் மோசமடைந்தது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான உட்பாய்வானது 700 GWhஆக மட்டும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது முதல் ஆறு மாதங்களுக்கான ஆகக் குறைந்த பதிவாக இருப்பதோடு ஏற்கனவே குறைவாகப் பதிவுசெய்யப்பட்டதில் கிட்டத்தட்ட 64%ஆக உள்ளது. முதல் ஒன்பது மாதங்களின்போது மொத்த நீர் உற்பத்தியானது மொத்த உற்பத்தியில் ஏறத்தாள 18%ஆக குறைவடைந்துள்ளது.

இலங்கை மின்சார சபையானது முறைமையில் போதிய ஒதுக்கு இடங்களைக் கொண்டிருந்த போதிலும் சில அனல் மின் உற்பத்தி நிலையங்கள், இ.மி.ச. மற்றும் ஐ.பி.பி. (IPP) ஆகிய இரண்டும் திட்டமிட்டபடி அல்லது பிரகடனம் செய்யப்பட்டபடி இயக்குவதற்கு கிடைக்கக்கூடியதாக இருக்காதபடியினால் முறைமை ஸ்திரநிலையைப் பராமரிப்பது ஒரு பெரிய சவாலாக இருந்தது. இருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் வலைப்பின்னலில் சுமை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், மின்சார சபையின் முறைமை கட்டுப்பாட்டு நிலையம் என்பவற்றின் கவனமான திட்டமிடல் மற்றும் இயக்கம் ஆகியவை சிக்கலான காலப்பகுதி முழுவதும் மின் அமைப்பின் ஸ்திரநிலையைப் பேணக்கூடியதாக இருந்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி பொறித்தொகுதிகளுக்கு தேவையான எரிபொருளை வழங்கி அதன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வட கீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றின் ஆரம்பத்துடன், நீர்த்தேக்கங்களுக் குரிய உட்பாய்ச்சலானது 2012ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் அதிகரித்தது. பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய சேமிப்பாக 2012 டிசம்பர் 29ஆம் திகதியன்று 1072.7 GWh (மொத்த சேமிப்பில் 85.1%) ஆக இருந்தது. இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நீர் உற்பத்தியானது 2,726.7 GWh ஆக காணப்பட்டதோடு, இது முன்னேய வருடத்தின் 4,017.7 GWh என்பதுடன் ஒப்பிடும்போது மொத்த உற்பத்தியில் 23.1%ஆக உள்ளது.

### இலங்கை மின்சார சபையானது, மின்சக்தியை சேமிக்கும் ஆற்றலை ஆரம்பிக்கின்றது

2012 ஏப்ரல் மாத ஆரம்பத்தில், இலங்கை மின்சார சபையின் நீர் சேமிப்பானது சாத்தியமானதொரு நெருக்கடிநிலைமையினைக் குறிப்பிட்டு அதன் மொத்தக் கொள்ளளவில் 33.9%ஆக குறைவடைந்து காணப்பட்டது. வானிலைப் பாதுகாப்பிற்கு முகம்கொடுப்பதற்காக, இலங்கை மின்சார சபையானது மின்சக்தியைச் சேமிப்பதற்காக பொதுமக்களின் உதவியை நாடுவதற்கு தீர்மானித்துள்ளது. இந்த முயற்சிகளின் பகுதியாக, இலங்கை மின்சார சபையினால் வீட்டு மின் பாவனையாளர்களிடையே போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. தங்களது மின்சக்தி பாவனையை குறைந்தது 10%ஆல் குறைத்துள்ள வீட்டு மின் பாவனையாளர்களுக்கு அவர்களது மாதாந்த மின் பட்டியலுக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் வெகுமதியளிக்கப்பட்டது. இச்செயற்பாடானது பொதுமக்களிடமிருந்து மிகுந்த ஊக்குவிப்பு பிரதிபலிப்பை பெற்றுக்கொண்டதோடு, மின்சார நெருக்கடி நிலையை தடுப்பதற்கும் பங்களிப்புச் செய்தது.

இலங்கை மின்சார சபை முகாமைத்துவமானது மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட மின்சக்தி சேமிப்புப் போட்டியில் இணைந்துகொள்வதற்கு பொதுமக்களை அழைப்பதற்காக கொழும்பு மாநகரில் உள்ள வீதிகளைச் சென்றடைந்து முக்கிய இடங்களில் அவர்களை சந்தித்ததன் மூலம் 2012 ஜுன் மாதத்தில் இன்னுமொரு புதுமையான பூர்வாங்க வேலையையும் எடுத்துக்கொண்டது.

### பயிற்றப்படாத அனுபவமற்றவர்களின் இடத்திற்குப் பதிலாக நன்கு பயிற்றப்பட்ட புதியவர்களைச் சேர்த்தல்

திறன்மிக்க வேலைப்படையினரின் படிப்படியான ஓய்வு பெறுதலினாலும் திடகாத்திரமான வேலைப்படையினரின் வயது முதிர்ச்சியினாலும் இலங்கை மின்சார சபையானது திறன்மிக்க தொழிநுட்ப ஆளணியினரின் முக்கியமான களத்தில் மற்றும் இயந்திர தரை வேலையில் ஈடுபடுத்துவதற்கு திறன்மிக்க தொழிநுட்ப ஆளணியினரின் பற்றாக்குறையை உணர ஆரம்பித்தது. வெளியில் இருந்து வரும் சிறு வீழ்ச்சியை ஈடுசெய்வதற்கு வருடக்கணக்கில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அனுபவமற்ற புதியவர்கள் மின்சார பாவனையிலுள்ள வேலைகளைப் புரிவதற்கு தேவையான திறன்களைக் கொண்டிருந்ததில்லை. சில தொழிநுட்ப கல்வி முறையின் பின்னர் வருகின்றவர்கள்கூட, தொழில் பயிற்சி நிறுவகங்களில் அவர்கள் கற்றறிந்த விடயங்கள் இலங்கை மின்சார சபையில் உள்ள திறன் தேவைப்பாடுகளுக்கு ஏற்றதாக இல்லை. இவ்வாறு இலங்கை மின்சார சபையானது விரிவாக்கலைச் சமாளிப்பதற்கு தேவையான தரமிக்கவர்களின் பற்றாக்குறையை உணர்ந்து கொண்டது.

தொழில் பயிற்சி அமைச்சினுடனான கவனமிக்க ஆய்வு மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர், தொழிநுட்ப மற்றும் தொழில் கல்வியிலும் மற்றும் இலங்கை மின்சார சபையின் தேவைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களிலும் (TVET) பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு உடன்பட்டது. இத்திட்டத்தின்கீழ் NVQ மட்டம் 4 கற்கை நெறியானது தொழிநுட்ப மற்றும் தொழில் கல்விப் பயிற்சியில் ஒரு வருட காலத்திற்கு அளிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சிக் காலத்தில் கோட்பாட்டுரீதியான மற்றும் அனுபவரீதியான அறிவும் கற்பிக்கப்படுகிறது. முதலாவது ஆண்டு பூர்த்தியினையடுத்து, இலங்கை மின்சார சபையானது பயிலுநர்களுக்கு மூன்று வருடங்களுக்கு உள்ளக தொழிற் பயிற்சியினை அளிக்கவுள்ளது. இப்பயிற்சிக் காலத்தில் மின்சார சபையானது பயிலுநர்களுக்கு படியொன்றையும் செலுத்தவுள்ளது. இத்திட்டத்தின் முக்கியமான குறிக்கோள், நாட்டில் தனியார் துறையால் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு முடிந்த மின்சார வேலைத்திறன் கொண்ட இளம் வேலைப் படையணியையும், மின்சார உபயோகங்களையும் உருவாக்குவதாக உள்ளது. 2012ஆம் ஆண்டில் இந்த உத்தேச திட்டத்திற்காக மின்வலு சக்தி அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, இலங்கை மின்சார சபை ஆகியவற்றினால் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டது.

## பொது முகாமையாளரின் மீளாய்வு தொடர்ச்சி

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இலங்கை மின்சார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் என்பவற்றை திருத்தம் செய்வதன் மூலம் இலங்கை மின்சார சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்கின்ற இந்த பயிலுநர்களுக்கு பயிற்சி வழங்கி உள்ளீர்ப்பு செய்வதற்கான பொறுப்பை இலங்கை மின்சார சபை வகித்தது.

இக்கற்கைநெறிக்காக இலங்கையிலுள்ள இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரி வரலாற்று ரீதியான விளம்பரமொன்று 2012 மே மாதம் 13ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர் பத்திரிகையிலும் மற்றும் இலங்கையின் ஏனைய பத்திரிகைகளிலும் காணப்பட்டது. 500 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 50 மாணவர்கள் தமிழ் மொழி மூலமான கற்கைநெறியைத் தொடர்வதற்கு இருந்தனர். சில வருடங்கள் சென்றதன் பின்னர், இலங்கை மின்சார சபையானது இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுச் சாதனையின் நன்மைகளை அடைய ஆரம்பிக்கும். இலங்கை மின்சார சபையின் திறன், தரம் மற்றும் வேலைத்திறன் என்பவற்றை கணிசமான அளவு மேம்படுத்துவது நிச்சயமானதாகும்.

### மனித சக்தி பணியாட்டொகுதியினரின் சிறிதளவு நம்பிக்கை

2012ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற இன்னொரு முக்கியமான சாதனை என்னவெனில் எந்தப் பணியாட்டொகுதினரின் சேவையானது மனித சக்தி அமைப்புக்களின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த பணியாட்டொகுதியினரின் அங்கீகாரமாகும். இலங்கை மின்சார சபையானது, மனித சக்தி அமைப்புக்களினூடாக பணியாற்றும் சுமார் 4,500 ஆளணியினரைக் கொண்டுள்ளது என்பதோடு, அவர்களில் சிலர் ஏழு வருடங்களுக்கு மேலாக இலங்கை மின்சார சபைக்கு சேவைகளை வழங்கி வருகின்றனர். அவர்களது தொழிலின் ஸ்திரமற்ற நிலையின் காரணமாக, இலங்கை மின்சார சபையின் நிரந்தரப் பதவியணிக்கு தம்மை உள்ளீர்ப்புச் செய்யுமாறு பல்வேறு அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக மேன்முறையீட்டை செய்துகொண்டிருக்கின்றனர். இறுதியாக, அவர்களது நீண்ட கால சேவையினைக் கருத்திற்கொண்டு இலங்கை மின்சார சபையானது ஏனைய வெளிவாரியான புதியவர்களுடன் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு ஒவ்வொரு வருடத்திலும் அவர்களுக்கு வாய்ப்பை வழங்குவதற்கான தீர்மானமொன்றை எடுத்துள்ளது. இலங்கை மின்சார சபையில் மற்றவர்கள் மீது அனுகூலுத்தையும் ஆனால் மேம்படுத்தப்பட்ட தொழில் பாதுகாப்பு மற்றும் அங்கீகார மட்டம் என்பவற்றுடன் அவர்களது சேவையை தொடர்வதற்கானதொரு வாய்ப்பையும் அவர்களுக்கு கொடுக்கும்.

### இலங்கை மின்சார சபையின் பணியாட்டொகுதியினர்

ஆளணி தேவைப்பாட்டைத் திட்டமிடுவதும் மற்றும் நாடு பூராகவும் இலங்கை மின்சார சபையின் தொழில் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மின்சார சபையிலுள்ள அவசர வெற்றிடங்களை நிரப்புவதும் மிகவும் முக்கியமானதாகவுள்ளது. ஆளணிப் பதவியணியினரை அதிகரிப்பதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, 1,059 ஆளணியினர் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். இவர்களில் 96 பொறியியலாளர்கள், 133 நடுத்தர மட்ட தொழிநுட்ப தர உத்தியோகத்தர்கள், 75 அலுவலக ஊழியர்கள், 88 சாரதிகள் மற்றும் 658 களப் பணியாட்டொகுதியினர் ஆகியோர் தங்களது தொழிலைப் பெற்றிருந்தனர்.

### இருளை வெற்றிகொண்ட போர்வீரர்களுக்கு கவனிப்பு

இலங்கை சக்தி சமநிலை பற்றிய பிந்திய பதிப்பானது அதன் முற்பக்கத்தில் இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு பின்வரும் சொற்கள் மூலம் பிரகாசமான புகழ்மாலையைச் சூட்டுகின்றது. “தேசிய மின்சார ஏற்பாட்டின் துரித விரிவாக்கலானது, கிராமிய மின் சக்தியளிப்பு திட்டங்கள் என பிரபல்யமாக தெரிவிக்கப்பட்ட தொடர் கிராமிய மின் சக்தியளிப்புத் திட்டங்களினூடாக நிறைவேற்றப்பட்டது. இத்திட்டங்களின் வெற்றிக்கு இலங்கை மின்சார சபை ஊழியர்களின் இணையற்ற அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பு என்பவையே முழுமையான காரணங்களாக அமைந்திருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்ட சில சம்பவங்களில் அவர்களது உயிரையும், அங்கத்தையும் இழந்து அவ்வாறு செய்வதற்காக நாட்டின் நன்கு பரிசோதிக்கப்படாத மூலைமுடுக்கெல்லாம் சென்று தைரியமாக சேவையாற்றினர்.”

இலங்கை மின்சார சபை பணியாளர்கள் முழுமையான மின்சார விநியோகத்தை நிறைவேற்றுவதற்காக சாத்தியமற்ற நிலைமை காணப்படுகின்ற போதிலும், இலங்கை அடைந்துகொள்வதற்காக அவர்களது முக்கியமான காலப்பகுதியில் வெயிலிலும், மழையிலும் கஷ்டப்பட்டு வேலை செய்கின்றனர். எவ்வாறாயினும், அவர்களது ஓய்வு பெறுதலையடுத்து, உடல் இழைத்த நிலையில் அடிக்கடி அதற்கு வைத்தியம் செய்வதற்காக தங்களது சேமலாப நிதியத்தில் உள்ள சிறு சேமிப்பையும் எடுத்துக்கொண்டு ஒரு வேலையை நன்றாக செய்தோம் என்ற முழு திருப்தியுடன் தங்களது வாழ்க்கையின் எஞ்சியுள்ள காலப்பகுதியை கழிப்பதற்காக தங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்கின்றனர்.

அவர்களைப் பற்றி கவனம் எடுப்பதற்காக, ஓய்வூதியத் திட்டம் ஒன்று 1994ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாக பெற்ற வேதனத்தின் நிலையான சதவீதங்களும் வழங்கப்பட்டன. இலங்கை மின்சார சபையில் அவர்களது செயலுக்க சேவையைப் பொறுத்து தொகையானது அவர்கள் கடைசியாகப் பெற்ற வேதனத்தின் 30%, 32% மற்றும் 34%ஆக இருந்தது. வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதற்கு சில நிலையான படியைத் தவிர எவ்வித மாற்றமும் இல்லாமல் அவர்கள் ஓய்வுபெறும் வாழ்க்கை பூராவும் இத்தொகையானது நிலையானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, அண்மையில் ஓய்வுபெறுபவர்களுடன் ஒப்பிடும்போது சேவையிலிருந்து நேரகாலத்துடன் ஓய்வுபெற்றவர்கள் ஓய்வுபெறும் அந்த நேரத்தில் குறைந்த வேதனத்தைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக இவ்வாறு ஒரு வேறுபாட்டை உருவாக்கிக்கொண்டு மிகவும் குறைந்த ஓய்வூதியத் தொகையையே பெறுகின்றனர்.

ஓய்வூதியம் பெறுவோரினதும் மற்றும் இலங்கை மின்சார சபை ஓய்வூதியம் பெறுவோர் நலனுதவிச் சங்கத்தினதும் தொடர்ச்சியான வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு, ஓய்வூதிய நிதியத்தின் சேமநலனுக்கு பாதிப்பில்லாமல் ஆய்வுசெய்து பரிந்துரைகளைச் செய்வதற்காக செயல்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்தகைய பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை மின்சார சபையானது ஓய்வுபெறும் அந்த நேரத்தில் உள்ள வேதன அளவுத்திட்டத்தின் அடிப்படையில் 1994ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியம் பெறுவர் ஒவ்வொருவரினதும் ஒவ்வொரு வேதன அதிகரிப்பின் 50% எடுத்து ஓய்வூதியப் படியினை மீளாய்வு செய்வதற்கான தீர்மானமொன்றை செய்தது. மேலும், மாதாந்தம் ஆகக்குறைந்த ஓய்வூதியக் கொடுப்பனவை 5,000/- ரூபாவாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதிய நன்மையானது 2012 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோருக்கு அதிகரித்த ஓய்வூதியத் தொகையை உத்தியோகபூர்வமாக அறிவித்து, கையளிப்பதற்காக கௌரவ மின்வலு சக்தி அமைச்சரின் பங்குபற்றுதலுடன் வைபமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இலங்கை மின்சார சபையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு மருத்துவ உதவித் திட்டமும் போடப்பட்டது. இந்த முக்கிய நிகழ்வுச் சாதனையானது முன்னாள் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் பலருக்கு ஆனந்தக்கண்ணீரை வரவழைப்பதோடு தற்போதுள்ளவைகளை வலுப்படுத்துவதும் நிச்சயமானமாகும்.

### 2012 – வேதன அதிகரிப்பு

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் வேதனங்கள் மூன்று வருடங்களுக்கொரு தடவை மீளாய்வு செய்யப்படுகின்றன என்பதோடு, இது 2012ஆம் ஆண்டில் செய்யப்படவேண்டி இருந்தது. சகல ஊழியர்களினதும் வேதனங்கள் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 25%ஆல் அதிகரிக்கப்பட்டு, 2012 ஜனவரி தொடக்கம் செலுத்தப்பட்டது.

## பொது முகாமையாளரின் மீளாய்வு தொடர்ச்சி

பெரும்பாலான தொழிற்சங்கங்கள் 25%இற்கு மேல் ஒரே மாதிரியான வேதன அதிகரிப்பை கோரியிருந்தபோதிலும், இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கமானது N5 தர ஊழியர்களிலிருந்து பொது முகாமையாளர் வரை ஆரம்பிக்கும் விகித அடிப்படையிலான வேதன கட்டமைப்பொன்றைக் கேட்டுக்கொண்டிருந்தது. ஒரே மாதிரியான வேதன அதிகரிப்பானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும்கூட அவர்கள் அரசாங்கத்தின் உரிய அதிகாரிகளுக்கு தங்களது கோரிக்கை பற்றி தொடர்ந்து எடுத்துக் கூறிவந்தனர். 2012 ஏப்ரல் மாதம் அரசாங்கம் ஆகக்குறைந்த வேதனத்தின் இருந்த வேதன விகிதத்தை 1.3இல் இருந்து 1.6 வரை உயர்ந்த வேதனமாக அதிகரிப்பதற்கும் மற்றும் நிறைவேற்றுத்தர ஊழியர்களின் (K5 மற்றும் அதற்கு மேல்) வேதனங்களை மட்டும் மீளாய்வு செய்வதற்கும் இணங்கியது.

இந்த வேதன மீளாய்வானது 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட போது நிறைவேற்றுத் தரம் சாராத தொழிற்சங்கங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு K5இன் கீழான வேதன அளவுத்திட்டங்களுக்கு அதிகரிக்கப்பட வேண்டிய மீளாய்வையும் கோரியிருந்தன. அவர்கள் தங்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இறுதியாக, அவர்கள் அந்தக் காலப்பகுதியில் நடத்தப்படுகின்ற உயர்தரப் பரீட்சைக்குக்கூட உரிய கவனம் செலுத்தாமல் 2012 ஆகஸ்ட் 10ஆம் திகதியிலிருந்து முறைமாற்று வேலை கடமைகள் உட்பட வேலை நிறுத்தத்தின் மூலம் ஒரு "தொடர்சியான வேலை நிறுத்தத்தை" பிரகடனம் செய்தனர். நிறைவேற்றுப் பணியாட்டொகுதியினரைத் தவிர ஏனைய 14,500 ஊழியர்கள் அனைவரும் இலங்கை மின்சார சபை முகாமைத்துவம் மற்றும் அரசாங்கம் என்பவற்றிற்கு அச்சுறுத்தல் விடுத்துக்கொண்டு இந்த நாளன்று தங்களது வேலையை நிறுத்தியிருந்தனர்.

இலங்கை மின்சார சபையின் கடந்த 16 வருட காலத்தில் முதற் தடவையாக பெருமளவிலான பணியாட்டொகுதியினர் விட்டுச்செல்ல நேரிட்டபோதிலும் இச்சவாலானது நிறைவேற்று பணியாட்டொகுதியினரால் நல்ல முறையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் பொறியியலாளர்களும் முகாமைத்துவம் மற்றும் மின்சார மற்றும் சக்தி அமைச்சு என்பவையும் ஆகும். மின்சார சபையானது இக்காலப்பகுதியில் நிறைவேற்றுப் பணியாட்டொகுதியினர் மற்றும் முக்கியமாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தினால் வழிநடத்திச் செல்லப்பட்ட பொறியியலாளர்கள் ஆகியோரின் உதவியுடன் முழு நாட்டிற்கும் தடங்கலற்ற மின் விநியோகத்தைப் பேணக்கூடியதாக இருந்தது. வேலை நிறுத்தமானது 6.5 நாட்களாக நீடித்தது. அதன் பின்னர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் அனைவரும் தொழில் அமைச்சிற்கு முன்னால் இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்றை செய்ததன் பின்னர் தங்களது கோரிக்கைகள் எவற்றிலும் வெற்றிபெறாமல் வேலைக்கு சமுகமளித்தனர்.

### நிதிகள்

2012ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு நிதிரீதியாக மிகவும் கஷ்டமானதொரு ஆண்டாக இருந்தது. எதிர்பாராத காலநிலை மாற்றம் இந்த ஆண்டின் உற்பத்திக் கலவையை மோசமாக பாதித்தது. 2012ஆம் ஆண்டின் மூல வரவு-செலவுத் திட்டமானது நீர் உட்பாய்ச்சல்களின் 63% எதிர்பார்ப்புடன் தயாரிக்கப்பட்டபோதிலும், நாட்டில் நேரிட்ட வரட்சியான வானிலை நிலைமையினால் உண்டாக்கப்பட்ட உற்பத்திக் கலவையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றம் காரணமாக மின்சார சபையானது அதன் செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டத்தை மீளாய்வு செய்யவேண்டியிருந்தது. ஆகஸ்ட் மாத நடுப்பகுதியளவில் நீர் உற்பத்தியானது மொத்தச் சேமிப்பு 18.8%ஆக குறைவடைந்தது. 24/7 தடங்கலற்ற மின் விநியோகத்தைப் பேணுவதற்காக, இலங்கை மின்சார சபையானது அதிக செலவுமிக்க அனல் மின் உற்பத்தி நிலையங்களினூடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டில் மொத்த அனல் மின் உற்பத்தி, நிலக்கரி உட்பட 6,785 GWh (மொத்தம் 58%). 2012ஆம் ஆண்டில் இதே உற்பத்தியானது 8.338 GWh (மொத்த உற்பத்தியில் 71%) விற்பனைச் செலவுகள் முன்னைய ஆண்டுகளில் 1.51 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது 222 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டன. எரிபொருள் விலையின் அதிகரிப்பு மற்றும் குறைவான நீர் உற்பத்தி மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் குறைவான கிடைப்பனவு என்பவற்றை ஈடுசெய்வதற்காக நிலக்கரியல்லாத அனல் மின் உற்பத்தியின் அதிகரிப்பு என்பவையே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணிகளாக இருந்தன. இலங்கை மின்சார சபையின் அனல் மின் உற்பத்தி (நிலக்கரியல்லாத) செலவானது 2011ஆம் ஆண்டில் ரூபா 20.39/kWhஇல் இருந்து 2012ஆம் ஆண்டில் ரூபா 23.92/kWh வரை அதிகரித்தது. அத்துடன் சுதந்திரமான மின் உற்பத்தியாளர்களிடம் (IPP) இருந்து உற்பத்திச் செலவானது 2011இல் ரூபா 17.75/kWhஇல் இருந்து 2012இல் ரூபா 22.76/kWh வரை அதிகரித்தது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவானது (PUCSL) 2012 பெப்ரவரி 16ஆம் திகதியன்று மின்சார இறுப்பனவு மீளாய்வை அங்கீகரித்தது. அது 2.5%இல் எரிபொருள் சரிப்படுத்தல் கட்டணத்தின் அறிமுகப்படுத்தலுக்கு வரையறுக்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட இறுப்பனவு அதிகரிப்பானது நேரிடவில்லை. அத்துடன் எரிபொருள் சரிப்படுத்தல் கட்டண அதிகரிப்பின் சதவீதமானது நிதிப் பயன்பாட்டு நம்பகத்தன்மையை அடைந்து கொள்வதற்கான இறுப்பனவு அமைப்பு கோட்பாட்டில் "செலவு அனுபவி" அணுகுதலை ஈடுசெய்வதற்கு போதுமானதாக்கப்படவில்லை. 2012ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய நிதிக் கஷ்டங்களை நீக்குவதற்காக உதவிப்படி எதுவும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. அத்துடன் இலங்கை மின்சார சபையானது செயற்பாட்டுரீதியான காசுப்பாய்ச்சல்களுக்கு நிதியளிப்பதற்காக கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இலங்கை மின்சார சபையானது வருட முடிவுத் தொகையில் 78 பில்லியன் ரூபாவை நிதி இழப்பாக பதிவுசெய்தபடியால் செயற்பாட்டு விளைவானது எதிர்மறையாக காணப்பட்டது. இது முந்திய வருட இழப்பான 19 பில்லியன் ரூபாவின் 310% அதிகரிப்பாகவுள்ளது. இந்த நிலைமையானது 2012ஆம் ஆண்டில் விற்கப்பட்ட அலகு ஒன்றிற்கு ரூபா 7.41 என்னும் ஒரு எதிர்மறையான உதவுதொகையை உருவாக்கியதோடு இலங்கை மின்சார சபையின் நிதி நிலைப்புத்தன்மை மற்றும் பணப்புழக்கம் என்பவற்றில் எதிரிடையாக தாக்கம் செலுத்தியுள்ளது. இதன் விளைவாக இலங்கை மின்சார சபையானது மேலதிக உற்பத்திச் செலவை ஈடுசெய்வதற்காக செய்யப்பட்ட 40 பில்லியன் ரூபா வங்கிக் கடன்களுக்கு மேலதிகமாக எரிபொருள் வழங்குநர்களுக்கும் மற்றும் சுதந்திரமான மின் உற்பத்தியாளர்களுக்கும் 51.5 பில்லியன் ரூபா குறுகிய கால பொறுப்பிற்கும் உட்பட்டது. 2011ஆம் ஆண்டிற்கான பிந்திய தொகை 12 பில்லியன் ரூபாவாக இருந்தது.

ஐந்தொகைத் திகதியில் உள்ளபடி மொத்த நிலையான சொத்துக்கள் 622 பில்லியன் ரூபாவாக இருந்தது. இது இலங்கை மின்சார சபையின் மொத்தச் சொத்துக்களில் 84% பிரதிபலிக்கின்றது. எனவே, 21 பில்லியன் ரூபாவாக இருக்கும் வருடாந்த மதிப்பிறக்கத்தின் கணிசமானதொரு தொகை 2012ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்ட 78 பில்லியன் ரூபா கணக்கீட்டு இழப்பில் உள்ளடக்கப்படவில்லை.

மின்சார விற்பனையானது 10,023 GWh என்னும் கடந்த வருட தொகை மீது 4.45% வளர்ச்சியொன்றை காட்டி 10,474 GWhஇற்கு அதிகரித்துள்ளது. இந்த விற்பனைக்கான நேரொத்த ரூபா பெறுமதி 2012ஆம் ஆண்டிற்கு 163 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டது. அத்துடன் இது 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 24% அதிகரிப்பான 31 பில்லியன் ரூபாவாக இருந்தது. இந்த விற்பனை வருமான அதிகரிப்பிற்கு முக்கியமாக 2012 பெப்ரவரி மாதத்திலிருந்து 25% எரிபொருள் சரிப்படுத்தல் கட்டணத்தை நடைமுறைப்படுத்தியமையே காரணமாக அமைந்தது.



**பி. என். ஐ. எவ். ஏ. விக்ரமசூரிய**
பொது முகாமையாளர் இ.மி.ச.

# இலங்கை மின்சார சபையின் கடத்துகை வலயமைப்பு

2012ஆம் ஆண்டில் இலங்கை கடத்துகை முறைமையின் தேசப்படம்





## நீர் மின்வலு

**1,584 மெ.வா.**

பொருத்தப்பட்ட மொத்த கொள்வனவு

**3,292 GWh**

**நீர்மின் மூலங்கள் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட மொத்த சக்தி**

## அனல் மின்வலு

**1,638 மெ.வா.**

பொருத்தப்பட்ட மொத்த கொள்வனவு

**8,339 GWh**

**அனல் மூலங்களின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட மொத்த சக்தி**

## சூரியசக்தி, உயிரகத்திறள் மற்றும் காற்று மின்வலு

**90 MW**

பொருத்தப்பட்ட மொத்த கொள்வனவு

**171 GWh**

**சூரிய சக்தி, உயிரகத்திரள் மற்றும் காற்று ஆகியவற்றின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட மொத்த சக்தி**

# மின் பிறப்பாக்கல் பிரிவு



# மின் பிறப்பாக்கல் பிரிவு

இலங்கை மின்சார சபையின் பிறப்பாக்கல் பிரிவானது இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான அனல் மற்றும் நீர்மின் உற்பத்திப் பொறி இயந்திரத்தின் தொழிற்பாட்டிற்கும், பேணலுக்கும் பொறுப்பான பிரிவாகும். இலங்கை மின்சார சபையின் பிறப்பாக்கல் பிரிவானது 1,357MW மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய 17 நீர்மின் உற்பத்தி இயந்திர நிலையங்களையும் 554 MW மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய 6 எரிபொருள் பயன்படுத்தும் பாரிய அனல் மின்சார நிலையங்களையும் மற்றும் 300 MW மின் உற்பத்திக் கொள்வனவைக் கொண்ட 01 நிலக்கரியால் இயங்கும் மின் உற்பத்தி நிலையச் சொத்துகள் அனைத்தையும் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் இலங்கைத் தீவின் சில பிரதேசங்கள் என்பன இலங்கை மின்சார வலைய அமைப்புடன் தனிமைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. இலங்கை மின்சார சபை 2012ஆம் ஆண்டில் 2,214 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கொண்டிருந்தது.

பிறப்பாக்கல் பிரிவின் தொழிற்பாடுகளும், பொறுப்புகளும் மேலதிக பொது முகாமையாளரினாலும் மற்றும் பதினொரு பதில் பொது முகாமையாளர்களினாலும் முகாமை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிறப்பாக்கல் பிரிவானது ஐந்து பிறப்பாக்கல் நிலையத் தொகுதிகளுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவையாவன: மகாவலி, லக்சபான, அனல் மற்றும் ஏனைய நீர்மின் உற்பத்தி, எரிபொருள் மூலம் மின் உற்பத்தி நிலையம் போன்றன. பிறப்பாக்கல் கருத்திட்டத்தின் கீழ் இயங்கும் பிறப்பாக்கல் செயற்றிட்டக் கிளையானது பிறப்பாக்கச் சொத்துகளுக்கான புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்றது. இது மின்சார சேவையை திறம்பட வழங்குவதாக அமையும்.

இலங்கை மின்சார சபையின் பிரதான பழுதுபார்த்தல் பணிகள் யாவும் பிறப்பாக்கல் பிரிவின் நீர்மின் மற்றும் அனல்மின் சொத்து முகாமைப் பிரிவினால் வழங்கப்பட்டுவருகின்றன. இப்பிரிவானது மின்பிறப்பாக்கிச் சொத்துகளின் தன்மைகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதுடன், பிறப்பாக்கல் கருவிகளின் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பிறப்பாக்கல் பிரிவின் சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்புக் கிளையானது நீர்த்தேக்கங்கள், அதன் அணைக்கட்டுகள், நீர்மின் உற்பத்தி நிலையச் சுரங்கம் மற்றும் அது சார்ந்த ஏனைய நிர்மாணப் பணிகள், பராமரிப்பு மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பிறப்பாக்கல் பிரிவின் சக்தி விற்பனைக் கிளையானது ஆண்டு தொழிற்பாட்டுக் காலத்தில் இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி இயந்திரங்களின் கிரயக் கணக்குகளை மேற்கொள்வதுடன் அவை தொடர்பான பாதீட்டு நடவடிக்கைகளையும் பேணிவருகின்றது. அத்துடன் மின்சாரம் கடத்துகைப் பிரிவிற்கு மின்சாரத்தையும் வழங்கிவருகின்றது.

பிறப்பாக்கல் பிரிவின் கூட்டுறவு அலுவல்கள் கிளையானது மனித வளங்களைச் சிறப்பாக முகாமை செய்துவருகின்றது. அத்தோடு பிறப்பாக்கல் பிரிவின் ஊழியர்கள் தொடர்பான திட்டமிடல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு ஊழியர்களின் திறமையை மேம்படுத்துவதற்காக பயிற்சிகள், நிகழ்ச்சித்திட்டங்கள், வேலைப் பட்டறை போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது. குறித்த காலப்பகுதியில் 604 ஊழியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

மின் உற்பத்தி நிலையங்களின் அனைத்து மேற்பார்வை நடவடிக்கைகளும் 5 பிறப்பாக்கல் நிலையத் தொகுதிகளினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மின் உற்பத்தி, விநியோக நிர்வாகப் பணிகள் கடத்துகைப் பிரிவின் கீழ் இயங்கும் கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான சகல பிரதான நீர்மின் மற்றும் அனல் மின்சார நிலையங்கள் தங்களால் வழங்கப்படக்கூடிய உச்சப் பயன்பாட்டை குறித்த 2012 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளன என்பது வெளிப்படையாகும்.

#### லக்சபான மின் உற்பத்தித் தொகுதி

மின்சக்தி அளவில் 345 MW மின்சாரத்தை உற்பத்திசெய்கின்றது. இது ஐந்து நீர்மின் உற்பத்தி நிலையங்களை உள்ளடக்கிய நான்கு அமைவிடங்களை உள்ளடக்கியுள்ளது. காலஞ்சென்ற பொறியியலாளர் டி. ஜே. விமலசுரேந்திர அவர்களின் யோசனைக்கு அமைவாக பழைய லக்சபான மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. இதுவே இலங்கையில் முதன்முதல் உருவாக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையமாகும். இம்மின் உற்பத்தி நிலையமானது களனி கங்கையின் பிரதான இரு கிளை நதிகளின் நீர்வீழ்ச்சியில் அமைந்துள்ளது. விமலசுரேந்திர பழைய லக்சபான மின் உற்பத்தி நிலையம் கெகல்கமுவ ஓயாவை அடிப்படையாகக் கொண்டும், புதிய லக்சபான மின் உற்பத்தி நிலையம் மஸ்கெலிய ஓயாவை அடிப்படையாகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கிளை ஆறுகளின் நீர் இறுதியில் சமனல நீர்மின் உற்பத்தி நிலையம் அமைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி தொடர்பான விடயங்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது. 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் லக்சபான மின் உற்பத்தி நிலையம் மூலம் 884.9 GWh மின்சாரம் உற்பத்திசெய்யப்பட்டது. இது மொத்த மின் உற்பத்தியில் 7.5% ஆகும்.



லக்சபான மின் பிறப்பாக்கி

| மின் உற்பத்தி நிலையங்கள் | மொத்த மின் உற்பத்தி (GWh) | பெறப்படும் அளவு (%) |
|---|---|---|
| பழைய லக்சபான | 177.3 | 88.6 |
| புதிய லக்சபான | 300.3 | 51.8 |
| கன்யோன்ங் | 86.0 | 91.6 |
| சமனல | 247.0 | 92.5 |
| விமலசுரேந்திர | 74.3 | 49.2 |
| **கூட்டி மொத்தம்** | **884.9** | |

## மின் பிறப்பாக்கல் பிரிவு தொடர்ச்சி

### மகாவலி மின் உற்பத்தி நிலையத் தொகுதி

இந்த மின் உற்பத்தி நிலையத் தொகுதியில் கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, ரந்தம்பே, உக்குவெல, போவத்தென்ன, நில்லம்பை மின் உற்பத்தி நிலையங்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் மகாவலி மின் உற்பத்தி நிலையத் தொகுதியானது 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1,342.8 GWh மின்சாரமானது உற்பத்திசெய்யப்பட்டது. இது மொத்த மின் உற்பத்தியில் 10.75% ஆகும். இம்மின் உற்பத்தி நிலையத் தொகுதியின் விபரம் பின்வருமாறு:

| மின் உற்பத்தி நிலையம் | மொத்த மின் உற்பத்தி (GWh) |
|---|---|
| கொத்மலை | 270.0 |
| விக்டோரியா | 392.8 |
| ரந்தெனிகல | 188.0 |
| ரந்தம்பே | 110.2 |
| உக்குவெல | 85.0 |
| போவத்தென்ன | 31.8 |
| நில்லம்பை | 5.1 |
| மேல் கொத்மலை | 259.0 |
| **கூட்டி மொத்தம்** | **1,342.8** |

### ஏனைய நீர்மின் உற்பத்தி நிலையத் தொகுதி

இந்த நீர் மின் உற்பத்தி நிலையத் தொகுதியில் சமனல வாவி, குக்குலே கங்கை, இங்கினியாகல, உடவளைவை நீர் மின் உற்பத்தி நிலையங்களும், ஹம்பாந்தோட்டை வளி மூலமான மின் உற்பத்தி நிலையமும் அமைந்துள்ளன. இந்த நீர் மின் உற்பத்தி நிலையம் 213 MW நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய கொள்ளளவைக் கொண்டுள்ளது. 2012இல் இந்த மின் உற்பத்தி நிலையம் மூலம் 501.44 GWh மின் உற்பத்தி செய்யப்பட்டது. இது மொத்த மின் உற்பத்தியில் 4.2% ஆகும். உடவளவை மற்றும் இங்கினியாகல இவை இரண்டும் நீர்பாசன நீர்வளத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை இங்கு குறிப்பிட்டாகவே வேண்டும். ஆயினும், இங்கினியாகல நீர் மின் திட்டத்தின் மூலம் 2012ஆம் ஆண்டு 31.60 GWh மின் உற்பத்தி செய்யப்பட்டது. இந் நீர்மின் உற்பத்தி நிலையத் தொகுதியின் விபரம் வருமாறு:

| மின் உற்பத்தி நிலையம் | மொத்த மின் உற்பத்தி (GWh) |
|---|---|
| சமனலவெவ | 195.2 |
| குக்குலே கங்கை | 266.5 |
| இங்கினியாகல | 31.6 |
| உடவளைவ | 5.8 |
| ஹம்பாந்தோட்டை (காற்று மூலம்) | 2.3 |
| **கூட்டி மொத்தம்** | **501.4** |

### அனல் மின் உற்பத்தித் தொகுதி

இம்மின் உற்பத்தி நிலையத் தொகுதியானது களனிதிஸ்ஸ வாயு செயற்பாட்டுத் தொகுதி (GT), களனிதிஸ்ஸ உள்ளீட்டு சுற்று வாயு செயற்பாட்டுத் தொகுதி (CCGT), சபுகஸ்கந்த – A மற்றும் சபுகஸ்கந்த – B மின் உற்பத்தி நிலையங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இது 540 MW மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய இயலுமையைக் கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இதன் மூலம் 2,023.6 GWh மின்சாரம் பெறப்பட்டது. இது மொத்த உற்பத்தியில் 17.1% ஆகும்.

| | மொத்த மின் உற்பத்தி (GWh) | பெறப்படும் அளவு (%) |
|---|---|---|
| களனிதிஸ்ஸ G.T. 7 | 120.3 | 24.5 |
| களனிதிஸ்ஸ CCGT 5 | 97.9 | 68.0 |
| களனிதிஸ்ஸ CCPP- G.T. | 588.9 | 85.0 |
| களனிதிஸ்ஸ CCPP- CCGT | 290.7 | 80.8 |
| சபுகஸ்கந்த - A | 392.6 | 78.8 |
| சபுகஸ்கந்த - B | 533.2 | 86.2 |
| **கூட்டி மொத்தம்** | **2,023.6** | |

சபுகஸ்கந்தவின் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அனைத்து அனல் மின் உற்பத்தி நிலையங்களுடன் ஒப்பீடு செய்யும்போது சபுகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திச் செலவுகள் யாவும் குறைவாகக் காணப்படுகின்றன. இதனது உற்பத்திச் செலவு குறைவாகக் காணப்படுவதற்குக் காரணம் இதற்குரிய எரிபொருள் சபுகஸ்கந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படுவதாகும்.



லக்விஜய நிலையம் - புத்தளம்

இலங்கையின் முதலாவது நிலக்கரி எரிபொருள் மின் உற்பத்தி நிலையம் இதுவாகும். இது 300 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இயலுமையைக் கொண்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் யூலை – டிசெம்பர் மாத காலப்பகுகளில் 1,404 GWh மின்சாரமானது உற்பத்தி செய்யப்பட்டது. இது மொத்தக் கேள்வியில் 12% ஆகும். குறித்த காலப்பகுதியில் இம்மின் உற்பத்தி நிறுவனம் 584,761 தொன் எடையுள்ள நிலக்கரியையும், 1,767 தொன் எடையுள்ள டீசலையும் எரிபொருளாகப் பயன்படுத்தியுள்ளது. இது பராமரிப்பு, பேணுகை வேலைகளுக்காக 40 நாட்கள் நிறுத்திவைக்கப்பட்டது. ஆயினும், 2012ஆம் ஆண்டில் இதன் இயலுமையில் ஏறத்தாழ 78%ஐப் பெறக்கூடியதாக இருந்தது. ஆண்டுக்கான எதிர்பார்க்கப்படும் மின் உற்பத்தி 85%ஆக இருக்கின்றது.

| மின் உற்பத்தி நிலைய கட்டடத் தொகுதி | எரிபொருள் பாவனை மில்லியன் ரூபா | இயந்திரங்கள் மற்றும் மூலப்பொருள் பேணுகை மில்லியன் ரூபா |
|---|---|---|
| அனல் | 42,515 | 2,715 |
| நீர்மின் | - | 495 |
| நிலக்கரி | 11,099 | 130 |
| **மொத்தம்** | **53,614** | **3,340** |

## மின் பிறப்பாக்கல் பிரிவு தொடர்ச்சி

| இலங்கை மின்சார சபையின் இயந்திரங்களின் சராசரி மின் உற்பத்திச் செலவு | |
|---|---|
| | அலகுக்கான செலவு (ரூ./kWh) |
| நீர்மின் பொறிகள் | 2.71 |
| அனல்மின் பொறிகள் | 23.88 |
| நிலக்கரி மின் பொறி | 11.30 |

### பிறப்பாக்கல் கருத்திட்டம்

பிறப்பாக்கல் கருத்திட்டமானது பிறப்பாக்கல் பிரிவின் கீழுள்ள இயந்திரங்களின் மீள்புனரமைப்பு, அதன் நிர்வாகம், முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு பிறப்பாக்கல் பிரிவுக்குத் தேவையான சகல பொருட்கள், உபகரணங்கள் போன்றவற்றை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவும் செய்கின்றது

### விமலசுரேந்திர மற்றும் புதிய லக்சபான மின்வலு உற்பத்தி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள்



விமலசுரேந்திர - சுழலியை ஏற்றுதல்

இச்செயற்றிட்டத்தின் கீழ் 2 X 50 MW சக்தி கொண்ட புதிய லக்சபான மற்றும் 2 X 25 MW சக்தி கொண்ட விமலசுரேந்திர மின் உற்பத்தி நிலையம் என்பன புனரமைப்புடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இப்புனருத்தாபன ஒப்பந்தத்தின் கீழ் 6,660.0 மில்லியன் ரூபா செலவில் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள், பல்வேறு உபகரணங்கள் (Turbine, Auxiliaries) என்பன புனரமைப்புச் செய்யப்பட்டன. இதன் புனரமைப்பு தொடர்பான ஒப்பந்தம் அல்ஸ்டம் ஹைட்ரோ என்ற பிரான்ஸ் நாட்டு நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பெறுமதியில் 85%ஆனது கடன் நிபந்தனை அடிப்படையில் பிரான்சின் கிரடிட் அக்ரிகோல் சீ.ஐ.பி. எனும் நிதி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டது. எஞ்சிய 15% நிதியானது ஹட்டன் நஷனல் வங்கியின் மூலம் வழங்கப்படுகின்றது. இக்கருத்திட்டப் பணிகள் 2008 பெப்புருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2014 யூலை மாதமளவில் நிறைவடையும்.

2012ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் இதன் முன்னேற்றம் 95%ஆகக் காணப்படுகின்றது. விமலசுரேந்திர மின் உற்பத்தி நிலையத்தின் 1ஆவது இயந்திரம் புனரமைக்கப்பட்டு 2012 நவம்பர் 17ஆம் திகதியிலிருந்து தனது வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. அவ்வாறே புதிய லக்சபான மின் உற்பத்தி நிலையத்தின் 1ஆவது இயந்திரம் புனரமைக்கப்பட்டு 2012 டிசெம்பர் 02ஆம் திகதியிலிருந்து தனது வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

புதிய லக்சபான மின் உற்பத்தி நிலையமானது புனருத்தாபனத்தின் பின்னர் தனது மின் உற்பத்தியின் அளவினை 7 MW அதிகரித்துள்ளது. புதிய லக்சபான மின் உற்பத்தி நிறுவனத்தின் வினைத்திறனானது 89.3%ஆக உயர்ந்துள்ளது.

### பழைய லக்சபான மின் உற்பத்தி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள்

இக்கருத்திட்டத்தின் கீழ் மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்களின் நம்பகத்தன்மை, வினைத்திறன் மற்றும் அவற்றின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் பழைய லக்சபான மின் உற்பத்தி நிலையத்தின் புனருத்தாபன நிலை 1இன் கீழ் 3 X 8.33 MW மின் பிறப்பாக்கி இயந்திரம் டேர்பைன் போன்ற உபகரணங்களைப் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் வைத் ஹைட்ரோ எனும் ஒஸ்ரிய நாட்டு நிறுவனத்துடன் 4,200.0 மில்லியன் ரூபா செலவில் 85%ஐ கடன் நிபந்தனை அடிப்படையில் யுனி கிரடிட் பேங் - ஒஸ்ரியா வழங்கியுள்ளதுடன், மிகுதி 15% ஹட்டன் நஷனல் வங்கியால் நிதியீட்டம் செய்யப்பட்டது. இக்கருத்திட்டம் 2010ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2013ஆம் ஆண்டு யூன் மாதம் பூர்த்தியடைய உள்ளது.

2012ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் இது 92% முன்னேற்றத்தைக் காட்டியது. 1ஆம் அலகு, 3ஆம் அலகு பழைய மின் இயந்திரங்கள் புனருத்தாபனம் செய்யப்பட்டு 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டது. அதேவேளை 1ஆவது அலகு இயந்திரமானது 2012 செப்ரெம்பர் 03ஆம் திகதியிலிருந்தும், 3ஆம் அலகு இயந்திரமானது 2012 டிசெம்பர் 14ஆம் திகதியிலிருந்தும் தமது விநியோக வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

லக்சபான மின் உற்பத்தி நிலையத்தின், உற்பத்தி கொள்ளளவு, புனரமைப்பின் பின் 7 MW இனால் அதிகரித்ததோடு அதன் வினைத்திரனும் 89.3% ஆக அதிகரித்தது.



பழைய லக்சபான மின் உற்பத்தி நிலையம்

## மின் பிறப்பாக்கல் பிரிவு தொடர்ச்சி



மின் இயந்திரச் சுழற்சி – பழைய லக்சபான மின் நிலையம்



நோட்டன் நீர்த்தேக்கத் திருத்த நடவடிக்கைகளில் ஊழியர்கள்

**சமனல மின் உற்பத்தி நிலையத்தின் புனருத்தாபனப் பணிகள்**

இக்கருத்திட்டத்தில் 41 வருடங்கள் மின் உற்பத்திச் செயற்பாட்டில் இருந்த 2 X 37.5 MW வலு சக்தி கொண்ட இயந்திரத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கான புனரமைப்பு நடவடிக்கைகள் பிரதான நோக்காகக் காணப்பட்டன. இதற்கான ஆய்வு நடவடிக்கைகள் யாவும் சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த பொய்றி எனேஜி ஏஜி எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆய்வினைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையால் இதற்கென கருத்திட்டக் குழு ஒன்று நியமனஞ் செய்யப்பட்டு ஒப்பந்த நடவடிக்கை தொடர்பான கேள்விப்பத்திர நடைமுறைக்கான வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

# கடத்துகைப் பிரிவு



# கடத்துகைப் பிரிவு

இலங்கை மின்சார சபையின் கடத்துகைப் பிரிவானது சகல கடத்துகைச் சொத்துக்களைப் பேணுதல், திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், செயற்படுத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு இலங்கை மின்சார சபையின் குறிப்பிட்ட பிரதேச அலுவலகங்களுக்கான சேவைகளையும் வழங்கி வருகின்றது.

### கடத்தகைப் பிரிவின் செயற் பணி

கடத்துகை வலையமைப்பினை பயன்மிக்கதாக மற்றும் வினைத்திறன் கொண்டதாகத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றை மேற்கொள்வதனூடே நம்பகத்தன்மையையும் தரத்தினையும் மேம்படுத்தி மின் விநியோகத்தை வழங்குவது என்பது இப்பிரிவின் பிரதான செயற் பணியாக அமைகின்றது. அத்தோடு சூழல் நியமங்களுக்கு அமைய திருப்திகரமான வருமான வீதத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இலங்கையர்களின் பொருளாதார விருத்திக்காக பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிற்சிகள் மற்றும் உற்பத்தித்திறன் கொண்ட ஊழியர் சபையின் பயன்மிக்க பங்களிப்புகளை வழங்கி கடத்துகைச் செயற்பாட்டை மேற்கொள்வதே இதன் பிரதான பணியாகும்.

### கடத்துகைப் பிரிவின் குறிக்கோள்கள்

இப்பிரிவின் செயற்பாட்டுக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- நம்பகத்தன்மை, வினைத்திறமை, ஒருங்கிணைப்பு என்பவற்றைப் பேணுவதோடு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், பொருளாதார சிக்கனமாக முறைமையை ஏற்படுத்தல்.
- பாவனையாளர்களுக்கு சிக்கனமான மின் விநியோகத்தை ஏற்படுத்தல், பாதுகாப்பான மற்றும் நம்பகரமான மின் விநியோகத்தை உறுதிசெய்தல், பாரியளவில் மின்சாரத்தை பெறுதலும், விற்பனை செய்தலும்.
- எதிர்காலத்தில் மின்சாரத்தின் கேள்வியினைப் பூர்த்திசெய்யுமளவில் மின் உற்பத்தி இயந்திரங்கள் உள்ளன என்பதை உறுதிசெய்தல்.
- 50Hzஇன் ±1%, 220 kVஇன் ±5%, 132 kVஇன் ±10% என வேறுபட்ட வோல்ட் மின் கடத்துகை முறைகளைப் பேணுதல் போன்றன.

### நடவடிக்கைச் செயற்பாடுகள்

நாளாந்தக் கடத்துகை 220 kV மற்றும் 132 kV நெய்யரியைக் கட்டுப்படுத்துடன் ஒத்திசைப்படுத்துகின்றது. சகல சந்தர்ப்பங்களிலும் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கடத்துகையைச் அனுப்பும் பணியும் இந்நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. நம்பகத்தன்மை பண்புசார் தரத்தின் செயற்பாட்டின் உயர்ந்தபட்சம் சிக்கனமாகப் பேணுவதற்காகவும் பிறப்பாக்கி மற்றும் கடத்துகை நிலையத்தினால் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. பிறப்பாக்கி மற்றும் கடத்துகைக்கான புள்ளிவிபர ஆவணங்களை மேற்கொள்வதற்காகவும் பொதுவாக முகாமைத்துவம் மற்றும் அதனுடன் இணைந்த தகவல்களை அறிக்கைப்படுத்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### முறைமைக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகள்

சகல மின் நிலையங்களையும் தழுவியுள்ள 220 kV மற்றும் 132 kV நெய்யரி முறைமையின் ஒருங்கிணைப்புக்கும், தொழிற்பாட்டுக்கும் முறைமைக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பாகும். தோற்றுவிப்பினதும், கடத்துகையினதும் முறைமையில் தொழிற்பாடானது நம்பகத்தன்மையையும், தரத்தையும் மற்றும் தொழிற்பாட்டிலான பொருளாதாரத்தையும் அதிகபட்சமாக்குவதற்கு முறைமைக் கட்டுப்பாட்டுக் கிளையினால் திட்டமிடப்பட்டு, மேற்கொள்ளப்படுகின்றது. இ.மிச. தோற்றுவிப்பு மற்றும் கடத்துகை முறைமை தொடர்பான பதிவேடுகளையும், சுவடிகளையும் இக் கிளை சேகரிப்பதுடன், கிரமமான அடிப்படையின் மீது முகாமைத்துவத்திற்கு தகவலையும் வழங்குகின்றது.

2012ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தக் களஞ்சியப்படுத்தலின் மின் அளவு 658.4 GWh ஆகும். இது மொத்தக் களஞ்சியப்படுத்தலில் 52.3% ஆகும். 2011ஆம் ஆண்டில் இது 88.1% ஆகக் காணப்பட்டது. குறிப்பிட்ட ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்ப மாதங்களில் இதனளவு மிகவும் குறைவாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டைவிட முதல் காலாண்டுகளில் நிலவிய வரட்சியுடன் காணப்பட்ட காலநிலையின் காரணமாக தென் மேற்கு பருவக்காற்றின் மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டதனால் மொத்த நீர் மின் உற்பத்திச் சேமிப்பு மார்ச் மாதம் 28ஆம் திகதி 426 GWhஆகக் குறைவடைந்து காணப்பட்டது. குறைந்தபட்ச மின் சேகரிப்பு 2012ஆம் ஆண்டு 16ஆம் திகதி 236.6 GWhஆகக் காணப்பட்டது. (இது மொத்த களஞ்சியப்படுத்தலின் 18.8% ஆகும்). 2012ஆம் ஆண்டில் அனல் மின்சாரக் களஞ்சியப்படுத்தலானது முன்னைய ஆண்டைவிட உயர்வாகக் காணப்பட்டது. உரிய கால வட கீழ் பருவப்பெயர்ச்சி மழை வீழ்ச்சி காரணமாக 2012ஆம் ஆண்டில் இறுதி காலாண்டுகளில் மின் களஞ்சியப்படுத்தல் அளவு உயர்வாகக் காணப்பட்டது. ஆகக்கூடிய மின்சார சேமிப்பாக 1072.7 GWh அளவு 2012ஆம் ஆண்டு டிசெம்பர் 29ஆம் திகதி பதிவாகியிருந்தது (இது மொத்த மின் களஞ்சியப்படுத்தலில் 85.1% ஆகும்). வருட இறுதியில் இது 1067 GWhஆகக் காணப்பட்டது.

2012ஆம் ஆண்டில் ஆகக்கூடிய சேமிப்பு அளவாக 2146.4 MW மே மாதம் 9ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. ஆயினும், ஆண்டிற்கான மின் உற்பத்தியாக 11800.8 GWh உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டு 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.4% அதிகரிப்பைக் காட்டியது.




**2012.05.09 இல் நாளாந்த உற்பத்தியளவு**

### முறைமை கட்டுப்பாட்டு நிலைய நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்

இச்செயற்றிட்டமானது இலங்கையில் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம் அமைப்பது தொடர்பான அறிக்கையை 2006ஆம் ஆண்டில் தயாரித்திருந்தது. இச்செயற்றிட்டமானது இரண்டு பொதிகளை உள்ளடக்கியிருந்தது. அவையாவன பக்கேஜ் - A, பக்கேஜ் - B என்பனவாகும். இதில் பக்கேஜ் - A தேசிய முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் கட்டுமான வேலைகள், எஸ்சிஏடிஏ (SCADA) ஐப் பொருத்துதல் மற்றும் தொலைத்தொடர்பு முறைகளை உள்ளடக்கியும் பக்கேஜ் - B நிலத்தின் கீழான மின் இணைப்பு, இடமாற்றல்கள், நிலத்திற்குக் கீழான மின்கம்பி வேலைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றன. முறைமைக் கட்டுப்பாட்டு நிலைய நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் ஆலோசனை ஒப்பந்தத்திற்காக 2010 மே மாதம் விருதினைப் பெற்றிருந்தது.

பக்கேஜ் - A மின்சாரக் கடத்தல் தொடர்பான முகாமை விடயங்களையும், மின் உற்பத்தி முறைமை பற்றிய விடயங்களையும் தேசிய முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு (NSCC) வழங்கும். புதிய முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம் இ.மி.ச. யின் கடத்தல்

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

வலைப்பின்னல் முறையில் 132/220 kV நெய்யரி உப மின் நிலையங்களின் மின் ஆளியின் கொள்ளளவைக் கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சக்தி முகாமைத்துவ முறைமை SCADA முறைமையுடன் ஒன்றிணைந்து காணப்படுகின்றது.

அத்தோடு NSCC என்பதை நிறுவுதல், உப மின் நிலையங்களில் இயந்திரங்களின் பூர்த்தி வேலைகள், நாடு பூராகவும் மின் இயந்திரங்களை அமைத்தல், ஒவ்வொரு உப மின் நிலையங்களுக்கிடையே தொலைத்தொடர்புப் பணிகளை விரிவாக்கல், அவ்வாறே மின் உற்பத்தி நிலையம், கட்டுப்பாட்டு நிலையங்களுக்கிடையேயுமான தொடர்பாடல் பணிகளை விரிவுபடுத்தல் என்பனவாகும்.

பக்கேஜ் - B, நிலத்திற்குக் கீழ் மின் வலைப்பின்னல் வேலைகளை உள்ளடக்கி இருக்கின்றது. குறிப்பாக 132 kV, 220 kV இரட்டைச் சுற்று மின் வலைப்பின்னல் கம்பி இணைப்பு நிலக்கீழ் வேலைகளை ஒவ்வொரு உப மின் நிலையங்களுடன் (OPGW) இணைத்தலும் கடத்துதலும்.

பக்கேஜ் - A மற்றும் பக்கேஜ் - B வேலைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஏறத்தாழ 25 மில்லியன் டொலர்களை நிதியீட்டம் செய்துள்ளது. எனினும், 200 கி.மீ. தூர நிலக்கீழ் மின்கம்பி வேலைகளுக்காக இலங்கை அரசாங்கம் நிதியீட்டம் செய்துள்ளது.

பக்கேஜ் - B இற்கான ஒப்பந்தம் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விஸ்கஸ் கோப்பரேசன் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டது. 2013 யூன் மாத இறுதியில் இயந்திர இணைப்பு வேலைகளில் 37% பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. B2 பக்கேஜ் ஒப்பந்த வேலைகள் LTL புறொஜெக்ட் (பிரை.) லிமிட். மற்றும் LTB லெய்துங்ஸ்போ GMbH என்பவற்றுடன் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்டது. பக்கேஜ் B1, B2 என்பவற்றின் வேலைகள் 2013ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடையும் என அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

பக்கேஜ் - A விலைகோரலுக்கான விலை மதிப்பீட்டு வேலைகள் இரண்டு ADBயினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பக்கேஜ் - A யிற்கான இரண்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடத்துகைப் பிரிவின் சொத்து முகாமைத்துவக் கிளை மின்கடத்துகை வலைப்பின்னல் முறைமையில் சகல இயந்திர சாதனங்கள் உபகரணங்களுக்கும் அதன் மூலம் கிடைக்கும்



132 kV GIS – களனிதிஸ்ஸ GSS



பன்னிப்பிட்டிய GSSஇல் 220 kV ஆளியார்ச்சாலை

வியாபார வருமான மட்டத்தை உயர்நிலையில் பேணுவதற்கும் பொறுப்பாகக் காணப்படுகின்றது. முகாமைத்துவக் கொள்கைகள், செயன்முறை நடவடிக்கைகள், இயந்திர சாதனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல், வினைத்திறனான பராமரிப்பு வேலைகள், விளைதிறனான செயற்பாடுகள் போன்றவற்றை உறுதிப்படுத்திவருவதுடன், சொத்துகளின் ஆயுட்காலத்தை நீண்ட காலம் பேணியும் வருகின்றது. சொத்துகளின் ஆயுட்கால முடிவில் சொத்தொன்றை இடமாற்றம் செய்வது தொடர்பான திட்டமிடல் முறைமை முக்கியமான சொத்து முகாமைத்துவத் தொழிற்பாடாகக் காணப்படுகின்றது.

உயர் மின்னழுத்த மின்கடத்துகை வலைப்பின்னல் முறைமையானது 132 kV மின் 1787.1 கிலோமீற்றர்களையும் வானை நோக்கிய உயரம் கூடிய 132 kV மின்னிணைப்புகள் 47.6 கிலோ மீற்றர்களையும் தரைக்குக் கீழான கேபிள் மின் கடத்துகை 220 kV 2 கிலோமீற்றர்களையும் கொண்டுள்ளது.

கடத்துகைப் பிரிவின் சொத்து முகாமைத்துவக் கிளை கடத்துகைப் பிரிவிற்கான உபகரணங்கள், கருவிகள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் பெறுவனவு நடவடிக்கைகள், பாவனைக்கொவ்வாத சொத்து விற்பனை நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது.

2012ஆம் ஆண்டில் பின்வரும் முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது:

- கொட்டுகொட களஞ்சியத்தில் MITFIN மென்பொருள் பயன்பாடு மூலமான கணினிமயமாக்கல் முறைமையில் 50% வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.
- கொட்டுகொட களஞ்சிய அபிவிருத்தி வேலைகளில் 50% பூர்த்திசெய்யப்பட்டதோடு, அதன் பாதுகாப்பிற்காக புதிய பாதுகாப்பு வேலி அமைத்தல் தொடர்பான கட்டுமானப் பணிகள் இடம்பெற்றன.
- சொத்துப் பதிவுகளை (சொத்துத் தரவுகள்) உள்ளடக்கிய கணினி முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு நெய்யரி உப மின் நிலையங்களின் பிரதான உபகரணங்களின் சகல தகவல்கள், தரவுகளை பெற்றுக்கொள்ள முடிவதுடன், 10 செக்கன்களுக்குள் தொடர்பான நெய்யரி உபமின் நிலைய வரைபடம் மூலமான சமிக்ஞை இணைப்பை மீளாய்வு செய்து கொள்ள முடியும்.
- நெய்யரி உபமின் நிலையங்களில் (GSS) உபகரணங்களின் நிலவரத்தை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

### கடத்துகை வலைப்பின்னலின் செயற்பாடும், பராமரிப்பும் (O&M)

கடத்துகை மற்றும் பராமரிப்புக் கிளை கடத்துகை வலைப்பின்னல் முறைமையில் செயற்பாட்டு நடவடிக்கைகளையும், பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது வினைத்திறனான, விளைதிறனான மற்றும் நம்பகத்தன்மையுடையதுமான 48 நெ.உ.மி.நி. (GSS) நிலையங்களை உள்ளடக்கிய 650 கி.மீ. 220kV மற்றும் 2300 கி.மீ. 132 kV கடத்தல் இணைப்புகளைக் கொண்டுள்ளது.

கடத்துகைச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிளை தனது செயற்பாடுகளை சிறப்புறச் செய்வதற்காக நான்கு பிராந்திய அலுவலகங்கள், பராமரிப்பு மத்தியமயப்படுத்தப்பட்ட சீராக்கல் பிரிவுகள் மற்றும் அழைப்பாணை மூலமான விரைவுப் பராமரிப்புப் பகுதி போன்றனவற்றை நிறுவியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட பகுதிகள் ஒவ்வொன்றினாலும் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் கீழ்வருமாறு.

### செயற்பாடு மற்றும் பராமரிப்பும் - கொழும்பு அலகு

இப்பிரிவானது கொழும்புப் பிராந்தியத்தின் கடத்துகை வேலைகளின் செயற்பாடு, பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக செய்து வந்தது. இதற்கு மேலதிகமாக, 380 கி.மீ. தூரங்களுக்கு 220 kV மற்றும் 132 kV மின்கடத்துகை தொடர்பான துப்புரவாக்கல் நடவடிக்கைகளையும், நெய்யரி உபமின் நிலையங்களில் 21 பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.

- பன்னிப்பிட்டியில் 31.5 MVA, 132/33 kV மின்சக்தி கொண்ட புதிய மின்மாற்றியை பொருத்தியமை, பரீட்சிப்பு வேலைகள் என்பன செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு அலகு ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டன.
- கொலன்னாவையில் உபநெய்யரி மின் நிலையத்தில் இயந்திரங்களைப் பொருத்துதல் மற்றும் 36 kV SF6 CB இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டன.
- களனிதிஸ்ஸ 132 kV புதிய நெய்யரி உபமின் நிலையத்தின் (GIS) இயந்திரப் பொருத்தல் வேலைகள், பரீட்சிப்பு வேலைகள் போன்றவற்றுக்கு சாட்சியினராகக் காணப்பட்டது.
- சீதாவாக்கை நெய்யரி மின்நிலையத்தில் GS குறைபாடுள்ள CT இயந்திரத்தை நீக்கியமை அமைந்தமை.
- களனி நெய்யரி மின் நிலையத்தில் GS குறைபாடுள்ள 132 kV CB மின்கம்பங்களை நீக்கியமை அமைந்தமை.
- சபுகஸ்கந்த நெய்யரி மின்நிலையத்தில் 33 kV VTs Bus bar குறைபாட்டை பழுதுபார்த்ததும் மாற்றியமைத்தமையும்.
- பியகம GSஇல் 33 kV குடாக்களின் கட்டுப்பாட்டு நாண்களைப் பதிலீடு செய்தல்.
- களனிதிஸ்ஸ 220 kV GISஇல் 220 kV சுற்று உடைபொறி பொறிமுறையைப் பழுதுபார்த்தலும், பதிலீடு செய்தலும்.
- கொஸ்கம நெய்யரி மின்நிலையத்தில் (GS) குறைபாடுள்ள 33 kV CB மின் தூண்களை மாற்றியமைத்தமை
- ஹொரணை நெய்யரி மின் நிலையத்தில் பஸ் இணையி பொறிமுறை உடைபொறி மாற்றியமைத்தமை.
- 5S கருதுகோளை மையமாகக் கொண்டு கொழும்புப் பிராந்தியத்தின் உபமின் நிலையங்களில் வர்ணப்பூச்சு வேலைகளில் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு அலகு ஊழியர் படையால் மேற்கொள்ளப்பட்டது.

### செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு - கண்டி அலகு

செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவின் கண்டி அலகு ஆறு உபமின் நிலையங்களின் அனைத்து உபகரணங்களின் வருடாந்தப் பாதுகாப்பு, செயற்பாட்டு பராமரிப்பு பணிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததுடன், 2012ஆம் ஆண்டில் 220 kV, 132 kV மின்கடத்துகை நடவடிக்கைகளை 670 கி.மீ. தூரம் மேற்கொண்டதுடன் இயற்கை வனப் பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டது. 2012ஆம் ஆண்டில் பின்வரும் விசேட பணிகளும் இவ்வலகினால் மேற்கொள்ளப்பட்டது.

- பதுளை நெய்யரி நிலையத்தில் 33 kV மின்சுற்று மின்மாற்றிகள் இல. 01, 02 மாற்றம் செய்யப்பட்டதுடன், புதியவை பொருத்தப்பட்டன. அவை தொடர்பான பரிசோதனைப் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு 36 kV மக்றினி கலிலோ SF6 CB எனும் இயந்திரப் பொறிமுறைச் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டது. AGSAREP கருத்திட்டத்தினூடாக அந்த உடைபொறிகள் மாற்றப்படுவது தொடர்பாகத் திட்டமிடப்பட்டு அவை தொடர்பான திருத்தங்கள் இலகுவாக மேற்கொள்ளப்பட்டன. எனினும், GSஇன் நீண்ட காலத்திற்கான நம்பகத்தன்மையை உறுதியாகப் பேண முடியவில்லை.
- அதன் பிரகாரம் AGSAREP கருத்திட்டத்தின் மூலம் பதுளை நெய்யரி மின் நிலையத்தில் (GS) 33 kV பழைய சுவிச்யார்ட் இயந்திரம் நீக்கப்பட்டு, கட்டுப்பாட்டுக் கேபிள்களை உள்ளடக்கிய AVR மின்மாற்றி முறைமையினூடாக HV இயந்திரங்கள் பொருத்தப்பட்டு நம்பிக்கையும், நம்பகத்தன்மை கொண்டதுமான தொடர்ச்சியான மின் விநியோகத்திற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பதுளை – அம்பாறை 132 kV மின்சுற்று கட்டம் Yஇன் மின்கடத்துகை இணைப்பில் காணப்பட்ட பாரிய பழுது 2012.08.14இல் சீர்செய்யப்பட்டு கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதிகளுக்கு மின்சாரம் சீர்செய்யப்பட்டது. எனினும், ஊழியர் சங்கம் தொடர்பான பிரச்சினைகளால் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்பட்டது.



பதுளை-அம்பாறை கம்பமியின் 145 kV சுற்று எடை பொறியின் பழுதுபார்த்தல் (16.08.2012 அன்று 00.15 மணித்தியாலத்தில் எடுக்கப்பட்டது)

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

- பிராந்தியத்தில் கிரிபத்கும்புற, குருநாகல் மற்றும் பதுளை நெய்யரி உபமின் நிலையங்களில் 132 kV சக்தி கொண்ட பழைய மின்மாற்றிகள் (CT) (ABB/ASEA IMB 145 A3) 58 நீக்கப்பட்டு, புதியவை பொருத்தப்பட்டன. அவை 26 வருடங்களுக்கு மேல் பழமையானவை. 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில இயந்திரங்கள் வெடிப்பிற்குள்ளாயின. எனினும், பராமரிப்பு வேலைகள் விசேடமாக மேற்கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட்டன. அவற்றை சில உற்பத்தியாளர்கள் சிபாரிசு செய்திருந்தார்கள். அந்த CT உபகரணங்கள் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் சேவையில் காணப்பட்டன.
- கரிபத்கும்புற நெய்யரி மின் நிலையத்தின் 1ஆம் இலக்க மின்மாற்றி, 2ஆம் இலக்க மின்மாற்றிகள் என்பன கடந்த காலத்தில் பல்வேறு கண்காணிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு, மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் இரு மின்மாற்றிகளின் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக அமைந்ததுடன் அவற்றுக்கான எண்ணெய் 2012ஆம் ஆண்டில் நிரப்பப்பட்டது.
- பதுளை நெய்யரி உபமின் நிலையத்தில் TF 02 ஒயில் கொன்சவேற்றர் (Oil conservator) பழுதடைந்து ஓட்டை காணப்பட்டது. இது உள்ளூரில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. பயன் ஏதுமின்றி புதிதாக ஒயில் நிரப்பி பொருத்தப்பட்டு மீண்டும் அதனது பணி சரிசெய்யப்பட்டது.
- நுவரெலியா நெய்யரி உபமின் நிலையத்தில் இல. 01 மற்றும் இல. 02 மின்மாற்றிகள், திசை திருப்பல் சுவிச்சுகள் சீராக்கம் செய்யப்பட்டன.
- பதுளை GS, அம்பாறை GS, நுவரெலியா GS கருத்திட்டங்களில் பாரிய அபிவிருத்திகள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக HV (132 kV, 33kV உள்ளரங்க மற்றும் வெளியரங்க மின்னூட்டல் ஏற்பாடுகள்) மின் சக்தி (AC, DC) விநியோகம், வடிவமைப்பு மற்றும் AVR முறைமை வடிவமைப்பு போன்றன. அத்தோடு மேற்கூறப்பட்ட நெய்யரி உபமின் நிலையங்களோடு GSS தொடர்புபட்ட உக்குவலை GS, விமலசுரேந்திர GS, மகியங்கணையில் அமைக்கப்பட்டுள்ள புதிய GS வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.



பதுளை BSCஇன் TF 02இன் கீழே சேதமடைந்த எண்ணெய் பாதுகாப்புக் கருவியை பழுதுபார்த்தல் பணி

- கிரபத்கும்புற மற்றும் துல்கிரிய நெய்யரி உபமின் நிலையங்களில் 5S கருதுகோள் அமுலாக்கல் தொடர்ந்தன.

#### செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு – காலி அலகு

- செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவின் காலி அலகு 10 உபமின் நிலையங்களின் அனைத்து உபகரணங்களின் வருடாந்தப் பராமரிப்புச் செயற்பாடு பாதுகாப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்ததுடன் 2012ஆம் ஆண்டில் 360 கி.மீ. 132 kV மின்கடத்தல் வேலைகளை மேற்கொண்டுவந்தது.
- தற்போதுள்ள மூன்று மின்மாற்றிகளின் செயற்பாடுகள் சிறப்பாக அமையவில்லை. இதனால் புதிய AVR ஐப் புதிதாகப் பெற்றிருந்தோம்.
- காலியில் 132 kV பழைய OCB திருத்தங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பொருத்தப்பட்டது. மற்றும் 2011 ஆம் ஆண்டு பலாங்கொடை இணைப்பு வெடிப்புக்கு உள்ளாகியது.
- பலாங்கொடை நெய்யரி உபமின் நிலையத்தில் இல.02 மின்மாற்றிக்கு எண்ணெய் மீள்நிரப்பப்பட்டது.
- பலாங்கொடை நெய்யரி உபமின் நிலையத்தில் இல.01 மின்மாற்றியின் ஒழுக்கு வேலை திருத்தம் செய்யப்பட்டது.
- ஹம்பாந்தோட்டை மற்றும் எம்பிலிப்பிட்டிய நெய்யரி உபமின் நிலைய பிழையான அனோயுனிசியேற்றர் (Announciator) முறைமை சீர்செய்யப்பட்டது.
- தெனியாய நெய்யரி உபமின் நிலையத்தில் SAS முறைமை சீர்செய்யப்பட்டது.
- காலி நெய்யரி உபமின் நிலையத்தில் 33 kV CT குறைபாடு மாற்றியமைக்கப்பட்டது.
- மத்துகம நெய்யரி உபமின் நிலையத்தில் 1ஆம் இலக்க ஊட்டியில் 33 kV CB இயந்திரவியல் குறைபாடு கண்டறியப்பட்டு, சீர்செய்யப்பட்டது.
- மத்துகம மற்றும் ஹம்பாந்தோட்டை நெய்யரி உபமின் நிலையங்களில் புதிய பிரேக்டவுன் காங் உருவாக்கப்பட்டிருந்தது.
- மத்துகம நெய்யரி உபமின் நிலையத்தில் ரிஎவ் ஏர்த்லிங் (TF earthlink) எண்ணெய் கசிவு பழுதுபார்க்கப்பட்டது.

#### செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு – அநுராதபுர அலகு

செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவின் அநுராதபுர அலகு 10 நெய்யரி உபமின் நிலையங்களின் வருடாந்தப் பாதுகாப்பு செயற்பாடுகள், பராமரிப்புப் பணிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தது. 2012ஆம் ஆண்டில் 132 kV மின்கடத்துகையை 900 கி.மீ. தூரம் மேற்கொண்டதுடன் பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.

- போலவத்தை நெய்யரி உபமின் நிலையம் பரீட்சிக்கப்பட்டதோடு 132 kV, 33 kV சேக்கிற் பிறேக்கர்ஸ் (Circuit Breakers) பொருத்தப்பட்டன.
- ஹபரணை நெய்யரி உபமின் நிலையம் அளவீடு செய்யப்பட்டதோடு கொள்வனவு விடயங்களுக்கு (Capacitance) ஒவ்வொரு கொள்ளளவிக் கருவிகள் (Capacitor) பொருத்தப்பட்டன.
- பன்னால உபமின் நிலையத்தில் 5S கருதுகோள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக விசேட சான்றிதழைப் பெற்று வெற்றியீட்டியிருந்தது.
- வாழைச்சேனை நெய்யரி மின் நிலையத்தின் கட்டுப்பாட்டு நிலையக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டது.

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

- பிராந்தியம் முழுவதற்குமான மூலப்பொருட்கள், உதிரிப்பாகங்கள், உபகரணங்களை விநியோகம் செய்வதன் பொருட்டு அநுராதபுர நெய்யரி உபமின் நிலையத்தில் புதிய களஞ்சிய நிலையத்திற்கான கட்டுமான வேலைகள் இடம்பெற்றிருந்தன.

**ஹொட்லைன் பராமரிப்பு அலகு**

தற்பொழுது ஹொட்லைன் பராமரிப்பு அலகு நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு அன்றாடப் பராமரிப்பு, வருடாந்தப் பாதுகாப்புச் செயற்பாடுகள் போன்றவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது. இது 2012ஆம் ஆண்டில் 220 kV மின்கடத்துகையை 650 கி.மீ. தூரத்திற்கும், 132 kV மின் கடத்துகையை 2300 கி.மீ. தூரத்திற்கும் மேற்கொண்டுவருகின்றது. இதனால் பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- போலவத்தை – புத்தளம் மின்கடத்தல் செயற்பாடுகளில் மின்கோபுரம் இல.210இலிருந்து இல.216 வரையானதும் மின்கோபுர இல.02இலிருந்து மின்கோபுர இல.06 வரையான பகுதிகளில் பழுதடைந்து காணப்பட்ட நிலக்கடத்தி (earth conductor) மாற்றஞ் செய்யப்பட்டன.
- அநுராதபுரம் நெய்யரி உபமின் நிலையத்தின் இல.01இன் 70 மீ. நீளம் கொண்ட பஸ்பார் (bus bar) மற்றும் இல.04இன் 18 மீ. நீளம் கொண்ட பஸ்பார் தரம் உயர்த்தப்பட்டு பொருத்தப்பட்டன.
- சூறாவளி அனர்த்தத்தினால் பதுளை - இங்கினியாகல மின்கடத்துகை மின்கோபுரம் ஒன்று பசறைப் பகுதியில் சேதமுற்று விழுந்திருந்தது. இது 161ஆம் இலக்கத்தையும் 132 kV மின்சக்தி கொண்டதாகும். இது பல்வேறு இடங்களுக்கும் தற்காலிகமாக நகர்த்தப்பட்டு அம்பாறைப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டதோடு இறுதியில் நிரந்தர மின்கோபுரமாக நிலைநிறுத்தப்பட்டது. அத்தோடு மின்கடத்தி கட்டம் ஒன்றில் மின்கோபுரம் இல.194இலிருந்து 196இற்கு திருத்தம் செய்யப்பட்டது.
- நுரைச்சோலை – வியாங்கொடை மின்கடத்துகை இணைப்பின் கோபுர இல.01 – கோபுர இல.50 வரையான பேணுகை/பராமரிப்பு நடவடிக்கைகளை வறட்சியான மற்றும் காற்று பருவகாலங்களில் ஹொட்லைன் பராமரிப்பு அலகின் 10 உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டது.
- வவுனியா – கிளிநொச்சி கடத்துகை மின்னிணைப்பு 132 kV புதிய கட்டுமானப் பணிகள் HLM அலகினால் பரிசோதிக்கப்பட்டது. அதில் குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவை கருத்திட்டத்திற்கு அனுப்பப்பட்டன.
- பன்னிப்பிட்டி நெய்யரி உபமின் நிலையத்தின் 31.5MVA புதிய மின்மாற்றி HLM அலகினால் வழங்கப்பட்டு ஆதார சேவைகளும் வழங்கப்பட்டன.
- இயந்திர உபகரணங்கள் தொடர்பான பருவகாலப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் சேவைகள் அலகினால் 2012 ஆம் ஆண்டில் பின்வரும் விசேட பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.**

1. புதிய லக்சபான மின்வலு நிலையத்தில் பழைய எலக்ரோமெக்கானிக்கல் முறைமை நீக்கப்பட்டு பாதுகாப்பான (L3Wyas) டிஜிடல் முறைமை கொண்டுவரப்பட்டது. குறிப்பாக
   a. புதிய லக்சபான – பலாங்கொடை 132kV மின்னிணைப்பு இல.1, 2
   b. புதிய லக்சபான – பொல்பிட்டிய 132kV மின்னிணைப்பு இல.1, 2
   c. புதிய லக்சபான – கன்யோன் 132kV மின்னனணைப்பு போன்றன.
2. சபுகஸ்கந்த மின்மாற்றி இல. 2இல் பழுதுகள் இனங்காணப்பட்டு பாதுகாப்பு முறைமையின் கீழ் புதிய மின்மாற்றி இணைக்கப்பட்டது.
3. பாதுகாப்புப் பராமரிப்பு மற்றும் சேவைகள் அலகு 2012ஆம் ஆண்டு யூன் மாதம் நிறுவப்பட்டு, அதனது பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அது நெய்யரி உபமின் நிலையங்களில் மின்மாற்றிகளைப் பொருத்துவது தொடர்பான கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு நாடுபூராவும் நெய்யரி மின் நிலையங்களில் மின்மாற்றிகளை பல்வேறு கருத்திட்டங்களின் வாயிலாக நிறுவி அவற்றின் மூலமாக ஒருமுகப்படுத்தப்பட்ட சேவையை வழங்கிவருகின்றது.

   2012ஆம் ஆண்டில் பின்வரும் மின்மாற்றிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

   a. சீதாவாக்கையில் இல. 1,3 மின்மாற்றிகள்
   b. நுவரெலிய நெய்யரி மின் நிலையம் இல. 3 மின்மாற்றி
   c. இரத்மலானை நெய்யரி மின் நிலையம் இல. 2, 3 மின்மாற்றிகள்



புதிய லக்சபான மின்நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள புதிய டிஜிடல் முறைமை

   d. பன்னிப்பிட்டி நெய்யரி மின் நிலையம் புதிய மின்மாற்றி 1 என்பவையாகும்.
4. 2012ஆம் ஆண்டில் பிரதான பாதுகாப்பு பராமரிப்புப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன.

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

| GS/PS | இட அமைவு | பணிகள் |
|---|---|---|
| கொஸ்கம GS | கொலன்னாவ மின்னிணைப்பு | குறைபாடுள்ள TOSHIBA வகை பாதுகாப்பு முறை நீக்கப்பட்டு நியுமொறிக்கல் IED (MiCOM P545) புகுத்தப்பட்டது. |
| பழைய அநுராதபுர GS | புத்தளம் 02 ஹபரனை 02 | குறைபாடுள்ள பழைய (L3Wyas) வகை பாதுகாப்பு முறைமை நீக்கப்பட்டு நியுமொறிக்கல் IEDs (MiCOM P545, & REL 316) புகுத்தப்பட்டது. |
| பதுளை GS | அம்பாறை மின்னிணைப்பு | இலக்கரீதியான IEDகளுடன் (சீமென்ஸ் 7SAS22) பழுதடைந்த RAZFE வகை தூர பாதுகாப்பு அஞ்சல்கள் பதிலீடு செய்யப்பட்டன. பழைய (RAZOLA வகையிலான தூரம் பாதுகாப்பு பதிலீடு செய்யப்பட்டது. |
| சபுகஸ்கந்த GS | மின்மாற்றி 02 | TF பரீட்சிப்பிற்கு பின்னர் 7UT 613 முறைமை புகுத்தப்பட்டது. |
| பியகம GS | கொத்மலை 01 | குறைபாடுள்ள RAZFE வகை பாதுகாப்பு முறைமை நீக்கப்பட்டு நியுமொறிக்கல் உடனான IEDs (Siemens 7SA522) முறைமை புகுத்தப்பட்டது. |

#### மின்னுற்பத்தித் திட்டமிடல்

- இலங்கை மின்சார சபையின் நீண்ட கால மின் உற்பத்தி விரிவுபடுத்தல் திட்டம் நவீன திட்டமிடல் கருவிகள் மற்றும் தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்தி 25 வருட காலங்களுக்கான நோக்கங்களை மையமாகக்கொண்டு கடத்துகை மற்றும் மின் உற்பத்தித் திட்டமிடல் கிளையின் கீழ் மின்சார உற்பத்தித் திட்டமிடல் பிரிவினால் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தயாரிக்கப்படும் ஒரு சுழற்சித் திட்டமாகும்.

- முதலாவது படியாக இந்தக் கிளை தேசிய எதிர்வு கூறலைத் தயாரிக்கின்றது. மின் உற்பத்தித் திட்டமிடல் ஆய்வுகள், சிக்கனமான உச்ச அளவு பொறித்தொகுதிச் சேர்ப்புக்களிலிருந்து ஆகக்குறைந்த செலவு எதிர்பார்க்கப்படும் நம்பகரமான மட்டம் மற்றும் சுற்றாடற் காரணிகளுள் எதிர்வுகூறப்பட்ட மின்சாரத் தேவையினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக தரப்பட்ட அனல் மற்றும் நீர்மின்வலு மின்னுற்பத்தி விரிவாக்கல் அபேட்சகர்களிடமிருந்து தெரிவுசெய்யப்படுகின்றன. பிந்திய மின் உற்பத்தி விரிவுபடுத்தல் திட்டமிடல் ஆய்வுகளுக்கிணங்க 2012 – 2032 இன் காலப்பகுதிகளிலும் அடுத்த 15 வருடங்களில் இந்த முறைமைக்கு அண்ணளவாக 6025 மெ.வா. மின்சாரம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றில் 4700 மெ.வா. மின் நிலக்கரியினை எரிபொருளாகக்கொண்ட மின்வலுப் பொறியிலிருந்து பெறவேண்டியிருக்கும்.

- மின் உற்பத்தித் திட்டமிடல் அலகு பிரேரிக்கப்பட்ட மின்னுற்பத்திச் செயற்றிட்டங்கள் பொருட்டு அடிப்படை ஆய்வுகளிலிருந்து விரிவான சாத்திய விளக்கங்கள் வரை வேறுபடும் பல்வேறு ஆய்வுகளைச் செயற்படுத்துவதில் இலங்கை மின்சார சபை எதிரிணையாகச் செயற்படுகின்றது.

- இது தொடர்பில் எதிர்கால மின் உற்பத்தி விரிவாக்கல் பொருட்டு பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கற்றல் முறைமைகளும் வேலைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்டர்நஷனல் ஒட்டோமிக் எனேஜி ஏஜென்சி (IAEA) எனும் நிறுவனத்துடன் இணைந்து மின் உற்பத்தித் திட்டமிடல் பிரிவானது அணுசக்தி மற்றும் மனித வள அபிவிருத்திக்கு சக்தி திட்டமிடலுக்கும், முன்-சாத்தியவள ஆய்வுக்கும் ஆதரவளித்தல். சக்தி திட்டமிடல் ஆதரவு மற்றும் அணுசக்திக்கான அடிப்படைக் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி எனும் கருத்திட்டத்தை ஆரம்பித்தது.

- அத்துடன் 2012ஆம் ஆண்டில் JICA (ஜப்பான் இன்டர்நெஷனல் கோப்பரேசன் ஏஜென்சி) எனும் நிறுவனத்தின் உதவியுடன் பேரளவுக் கேள்விக்கான மின் உச்ச அளவை உற்பத்தியை திட்டமிடலும், அதை அபிவிருத்தி செய்வதுமான திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது 2014ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- தென் பிராந்தியத்தில் 4 x 300 MW நிலக்கரி மின் உற்பத்தி அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டம் ஒன்று ஜப்பான் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிப்படைக் கற்றல் வேலைகள் 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும்.

- கடத்துகை மற்றும் உற்பத்தித் திட்டமிடல் கிளையின் கீழ் சக்தி மாற்றுகை, மேம்பாடு கருத்திட்டம், நிலை II ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- அத்துடன் KFAED (அரபுப் பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம்) இனால் நிதியளிக்கப்பட்ட மொரகொல்ல நீர்மின்வலு செயற்றிட்டத்திற்கான சூழல் தொடர்பான மதிப்பீட்டு வேலைகள் (EIA) பூர்த்தியடைந்துள்ளன. 2013ஆம் ஆண்டில் திட்ட அனுமதி முகவரால் அங்கீகாரம் வழங்கப்படும். இதற்கான பூர்வாங்க வேலைகள் வடிவமைப்பு, கேள்விப்பத்திர வேலைகளுக்கான நிதியளிப்பு ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும். இத்தகைய நீர்மின்வலு கருத்திட்டம் 2012ஆம் ஆண்டு ஆரம்பமாகும்.

#### கடத்துகைத் திட்டமிடல்

- நீண்ட கால கடத்தல் அபிவிருத்தி ஆய்வுகள் கடத்தல் முறைமையில் புதிய தேவைப்பாடுகள் மற்றும் தேவைக்கு வசதி வழங்கும் முகமாக 10 வருட சுழலும் திட்டமாக மேற்கொள்ளப்படுகின்றன. கடத்தல், திட்டமிடல் செயன்முறையின் பிரதான குறிக்கோள்கள் என்னவெனில் அக்கரையின் திட்டமிடல் காலப்பகுதி பொருட்டாக நம்பகரமானதும், நிலையானதுமான மின்வலு முறைமையினை உறுதிசெய்வதற்கு தேவைப்படும் கடத்தல் அபிவிருத்திகளின் தொகுதி மற்றும் இந்த கடத்தல் அபிவிருத்திகளைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படும் முதலீட்டுச் செலவு மதிப்பீட்டினையும் வகுத்தமைத்தலும்.

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

- நீண்ட கால கடத்துகை அபிவிருத்தித் திட்டம் 2013-2022 காலப்பகுதியில் ஐம்பத்தொரு கடத்தும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 2014 – 2022 காலப்பகுதிக்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்களுக்கு நிதியீட்டல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முன்னுரிமை கொடுக்கும் பல செயற்றிட்டங்களுக்கு யப்பான் இன்டநெஷனல் கோப்பரேசன் ஏஜென்சி (JICA) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) கடன் வசதி வழங்கும்.

- கிரிந்திவெல 220/132 kV சுவிச்சிங் நிலையம், 220/33 kV நெய்யரி உபமின் நிலையம், வெயாங்கொடை – கிரிந்திவெல – பாதுக்கை 220 kV கடத்துகை மின் இணைப்பு, புதிய பொல்பிட்டிய – கொத்மலை 220 kV கடத்துகை மின்னிணைப்பு, வெயாங்கொடை – துல்கிரிய 132 kV கடத்துகை மின்னிணைப்பு, கெரவலப்பிட்டிய 220/33 kV நெய்யரி உபமின் நிலையம், பத்தரமுல்ல 132/33 kV நெய்யரி உபமின் நிலைய 132 kV கட்டமைப்புப் பணிகள் போன்றனவும், பொல்பிட்டிய – ஹபரணை, கொலன்னாவ – பன்னிப்பிட்டிய மற்றும் இரத்மலானை – பன்னிப்பிட்டிய மின்கடத்துகை மின் இணைப்பு கட்டுமானப் பணிகளுக்கான நிதியீட்டம் JICAஆல் மேற்கொள்ளப்பட்டது.

- பழைய அநுராதபுர 132/33 kV நெய்யரி உபமின் நிலையம், கட்டுநாயக்க 132/33 kV நெய்யரி உபமின் நிலையம் போன்றவற்றின் விரிவுபடுத்தல் வேலைகள் மற்றும் கப்பல்துறை 132/33 kV (220/33kV) நெய்யரி உபமின் நிலையம், மன்னார் - நாச்சிக்குடா 132kV கடத்துகை மற்றும் நாச்சிக்குடா நெய்யரி உபமின் நிலையம், கெஸ்பேவ 132/33 kV நெய்யரி உபமின் நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை 220 kV மின் கடத்துகை போன்றவற்றின் கட்டுமானப் பணிகளுக்கான நிதியீட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- மேலும் மலிபோத, வெவல்வத்த, ராகல மற்றும் நாவலப்பிட்டி போன்ற 4 நெய்யரி உபமின் நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் அவை தொடர்பான கலந்துரையாடல்களுக்குமான நிதியீட்டம் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தால் (FDA) மேற்கொள்ளப்படும்.

### கடத்துகை வடிவமைப்பு மற்றும் சுற்றாடல்

திட்டமிடப்பட்ட ஊடுகடத்தல் அபிவிருத்திகளை செயற்படுத்தல் தொடர்பாக தேவைப்படும் பூர்வாங்க வேலை கடத்தல் வடிவமைப்பு மற்றும் சுற்றாடற் கிளையின் கடத்தல் வடிவமைப்பு அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. இது பொருத்தமான ஊடுகடத்தல் இணைப்பு, இணை பாதைகள் மற்றும் உபமின் நிலையங்கள் பொருட்டான காணி, பொறியியல் வடிவமைப்புகளைத் தயாரித்தல் மற்றும் கடத்துதல் செயற்றிட்டங்கள் பொருட்டான கேள்வி ஆவணங்களினை வரைவிடல் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது. செயற்படுத்தல் கட்டத்தின் போது நிர்மாணிப்பு வரைதல்களின் மீளாய்வு பொருள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப அமைந்தொழுகுதலைப் பரீட்சித்தல் மேலும் கடத்தல் வடிவமைப்பு அலகு தேவைப்படும் பொழுது வடிவமைப்புச் செயற்பாடுகளுக்கான கடத்தல் பிரிவின் உள்ளக ஆலோசனைகளின் பங்களிப்பினை வகிக்கின்றது.

### கடத்துகை வடிவமைப்பு

கடத்துகை வடிவமைப்புக் கிளையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு,

கேள்விப்பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. குறிப்பாக CENEIP பக்கேஜ் 1 பகுதி A, CENEIP பக்கேஜ் 2 பகுதி C – 1, CENEIP பக்கேஜ் 2 பகுதி C - 2, CENEIP பக்கேஜ் 3 பகுதி B, CENEIP பக்கேஜ் 2 பகுதி B, CENEIP பக்கேஜ் 2 பகுதி C, CENEIP பக்கேஜ் 3 பகுதி A, ECCFPP – கிழக்கு நிலக்கரி மின்சக்திக் கருத்திட்டம் பகுதி B மற்றும் ECCFPP – கிழக்கு நிலக்கரி மின்சக்தி கருத்திட்டம் A போன்றவற்றுக்கான கேள்விப்பத்திர ஆவணங்களைத் தயாரித்தல்.

வட கிழக்கு மின்வலு கடத்துகை அபிவிருத்தித் திட்டம் பகுதி A , பகுதி B, பகுதி C, புதிய காலி கடத்துகை அபிவிருத்திக் கருத்திட்டம் பகுதி A, பகுதி B, தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையம் நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் - பக்கேஜ் B, கிளிநொச்சி – சுன்னாகம் கடத்துகைக் கருத்திட்டம், வவுனியா – கிளிநொச்சி கடத்துகைக் கருத்திட்டம், கடத்துகை முறைமை வலுப்படுத்தல் நெய்யரி உபமின் நிலையக் கருத்திட்டம், கடத்தகை முறைமை வலுப்படுத்தும் கடத்துகை இணைப்பு கருத்திட்டம், கடத்துகை முறைமை வலுப்படுத்தும் கிழக்கு மாகாண கருத்திட்டம், உள்ளீர்ப்பு சக்தி புதுப்பித்தலுக்கான நெய்யரி உபமின் நிலையங்களின் விரிவாக்கல் கருத்திட்டம் மற்றும் காற்று சேகரித்தல் நுரைச்சோலை உபமின் நிலைய கருத்திட்டம் போன்ற பல்வேறு கருத்திட்டங்களுக்கான கடத்துகை வடிவமைப்பு வேலைகளை மேற்கொண்டது.

கொழும்பு கடத்துகை, விநியோக நட்டங்களைக் குறைத்தல் கருத்திட்டம், சூரியவெவ நெய்யரி உபமின் நிலைய கட்டுமான வேலைகளுக்கான பொறியியலாளர் வடிவமைப்பு அறிக்கைகளைத் தயாரித்தது.

### பாதுகாப்பு அபிவிருத்தி

#### நம்பகத்தன்மை

கடத்தல் வடிவமைப்பு மற்றும் சுற்றாடல் கிளையின் பாதுகாப்பு அபிவிருத்திப் பிரிவின் இலக்கு என்னவெனில் உயர்ந்த சர்வதேச நியமத்திற்கு மின்வலு நிலையங்களிலிருந்து விநியோக முறைமை வரை ஊடுகடத்தும் வலையமைப்பு பொருட்டாக கூட்டிணைக்கப்பட்டதும், நம்பகரமானதுமான பாதுகாப்பு முறைமை ஒன்றினை விருத்தி செய்தலாகும். பிரிவின் முக்கிய பணிகள் என்னவெனில் தேவைப்படும் பாதுகாப்புத் தத்துவ முறைமையினை இனங்காணல், பாதுகாப்பு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் தேவைப்பாடுகளினை வரையறுத்து பராமரித்தலாகும். இந்தப் பிரிவு புதிய கடத்தல் செயற்றிட்டங்களின் கீழ் பாதுகாப்பு அபிவிருத்தி வேலையில் முகாமை செய்வதற்கு பொறுப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் திட்டச் சீரமைப்புகளும் புதிய செயற்றிட்டங்களின் கீழ் வலையமைப்பு நீடிப்புகளின் ஒரு பகுதியாகச் செயற்பட்டுள்ளன. இந்தப் பிரிவும் கடத்தலில் ஏற்படும் ஏதேனும் மொத்த அல்லது பகுதியளவிலான தடைகளினதும், நம்பகரமான செயலாற்றுகை முறைமையினை மேம்படுத்துவதற்கு செயற்படுத்தப்படுகின்ற பரிகார அல்லது தடுப்பு நடவடிக்கைகளினதும் பகுப்பாய்வுகளினை செய்துள்ளது.

#### மின்தடைப் பகுப்பாய்வுகள்

இப்பிரிவானது கடத்துகை வலைப்பின்னல் முறைமையில் பாரிய அளவிலான மற்றும் பகுதியளவிலான மின்தடை ஏற்படுவதைத் தவிர்க்குமுகமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாண்டின்பொழுது மொத்த மின் தடைகள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

பாரிய பகுதியளவிலான மின்தடை 2012 மே மாதம் 4ஆம் திகதி ஏற்பட்டது. சில சிறிய அளவிலான மின்தடைகள் ஏற்பட்டன. அந்த மின்தடைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பரிகார நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டன. முறைமை செயலாற்றுகையில் முன்னேற்றம் பரிகார மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் செயற்படுத்துகை காரணமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

### இ.மி.ச. கருத்திட்டங்களுக்காக பொறுப்பேற்கப்பட்ட வேலைகள்

இ.மி.ச. மின்சாரம் வழங்கல் யாழ்ப்பாணப் பிரிவு கடத்தல், இணைப்பு செயற்றிட்டத்தின் கீழ் இ.மி.ச. யின் 220 கி.வா. கடத்தல் வலையமைப்பு பாதுகாப்புத் திட்டங்களின் புனரமைப்பு பொருட்டாக ஜேர்மனியின் கே.எவ்.டபிள்யு (KFW) வங்கியிடமிருந்து நிதியினைப் பெற்றுக்கொண்டது. செயற்றிட்டம் தொடர்பான ஆலோசனைச் சேவை ஜேர்மன் FitchnerGmbHஇனால் வழங்கப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் தற்போதுள்ள 220 கி.வா. இணைப்புகளின் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பியகம, கொத்மலை, விக்டோரியா, ரந்தம்பை, புதிய அநுராதபுரம் போன்ற நெய்யரி உபமின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகள் மாற்றியமைக்கப்பட்டு பியகம – களனிதிஸ்ஸ, கொத்மலை – விக்டோரியா, விக்டோரியா – ரந்தெனிகல, ரந்தெனிகல – ரந்தம்பை இணைப்புகள் நிறுவப்படும்.

ஓ.பி.ஜி.டபி. (OPGW) இற்கான பொருத்துதல் வேலைகளுக்கான ஒப்பந்தம் 2012ஆம் ஆண்டு மே மாதம் ஏற்படுத்தப்பட்டது. இது 2013 ஆகஸ்ட் மாதம் பூர்த்திசெய்யப்படும். பனல் இடமாற்றல் வேலைகளுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அவை 2014 மே மாதம் பூர்த்திசெய்யப்படும்.

2012ஆம் ஆண்டின் பொழுது ஏனைய புதிய மற்றும் புனரமைப்புச் செயற்றிட்டங்கள் தொடர்பான நோக்கெல்லைகளை இனங்காணல், தொழில்நுட்ப குறித்துரைகளினைத் தயாரித்தல், செயற்படுத்தல் போன்ற தொடர்புபட்ட செயற்றிட்டங்களைச் சாட்சிப்படுத்தல் மற்றும் தற்போதுள்ள முறைமைக்குள் புதிய செயற்றிட்டங்களின் வெற்றிகரமான ஒருங்கிணைப்பு உள்ளடங்கலாக பாதுகாப்பு அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. பூர்த்தியடைந்த மற்றும் நடைபெறுகின்ற செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு:

1. மேல்கொத்மலை நீர்மின் வலு செயற்றிட்டம்
2. பெலியத்த நெய்யரி உபமின் நிலைய செயற்றிட்டம்
3. உள்வாங்கல் மற்றும் புத்துருவாக்கல் கருத்திட்டம் கட்டம் IIஇன் கீழ் நெய்யரி உபமின் நிலைய விரிவாக்கல்
4. வட கிழக்கு மின்வலு கடத்துகை மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம்
5. வவுனியா - கிளிநொச்சி கடத்துகை செயற்றிட்டம்

### ஏனைய செயற்பாடுகள்

வடிவமைப்புச் சோதனைகள், வரைபுகள் தயாரித்தல் மற்றும் கணிப்பீடுகளைச் சரிசெய்தல் என்பன கிரிபத்கும்புற நெய்யரி உபமின் நிலையத்தில் குறைபாடான மின்மாற்றி பாதுகாப்பு மாற்றியமைத்தல், பழைய அநுராதபுர, புதிய அநுராதபுர நெய்யரி உபமின் நிலையங்களில் மற்றும் பொல்பிட்டிய நெய்யரி மின் நிலையம், கொத்துகொட நெய்யரி உபமின் நிலயங்களில் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தறை, சீதாவாக்கை நெய்யரி உபமின் நிலையங்களில் குறைபாடுகள் யாவும் களைந்தெறியப்பட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### சக்திக் கொள்வனவுகள்

சக்தி கொள்வனவுக் கிளை உச்ச செலவில் கேள்வி முறைமையினை பெற்றுக்கொள்வதற்கு தனியார் மின்வலு நடைமுறைகளிலிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பொறுப்பாக உள்ளது. இவை இரண்டு பெரிய வகைகளிலான மின்வலுப் பொறித்தொகுதிகள் இந்தக் கிளையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

- சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் (IPP)
- மரபுசாராத புதுப்பிக்கத்தகு சக்தித் தொகுதிகள்

இ.மி.ச. விற்குச் மொத்தமாக 775 MW அனல் மின்சாரத்தை வழங்கும் ஏழு சுயாதீன தனியார் மின்வலு உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்தம் 320 MW கொள்ளளவுள்ள 123 மரபு சாராத புதுப்பிக்கத்தகு சக்தி செயற்றிட்டங்கள் காணப்படுகின்றன.

### சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள்

| மின்வலுப் பொறித்தொகுதி | மின்வலு அளவு (MW) |
|---|---|
| AES (களனிதிஸ்ஸ) | 163.50 |
| ஹெலதனவி | 100.00 |
| ACE மின்வலு (எம்பிலிப்பிட்டிய) | 100.00 |
| கொழும்பு மின்வலு (தனியார்) லிமிட் | 60.00 |
| ஆசியா மின்வலு | 51.00 |
| வடக்கு மின்வலு | 30.00 |
| கெரவலப்பிட்டிய | 270.00 |
| **மொத்தம்** | **774.50** |

சக்தி கொள்வனவுக் கிளை வர்த்தக செயற்பாட்டில் மற்றும் சக்தி கொள்வனவு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தனியார் நிறுவனங்களுக்கான சகல கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும்.

### மரபு சாராத புதுப்பிக்கத்தகு சக்தி பொறித்தொகுதி (NCREP)

10 மெ.வா. இற்குக் கீழேயுள்ள மரபு சாராத புதுப்பிக்கத்தகு சக்திப் பொறித்தொகுதிகள் பின்வரும் இரண்டு விதிப்பனவு வகைகளில் செலுத்தப்படுகின்றன. அவையாவன்

- செலவு அடிப்படையிலான தொழில்நுட்ப குறித்துரைக்கப்பட்ட மூன்று அடுக்கு விதிப்பனவு
- தவிர்க்கப்படும் செலவு அடிப்படையிலான விதிப்பனவு

### சிறிய நீர்மின்வலு அபிவிருத்தி (MHPD)

2012ஆம் ஆண்டின் பொழுது 30 மெ.வா. கொள்ளளவினைக் கொண்ட பதினாறு சிறிய நீர்மின்வலு செயற்றிட்டங்கள் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டன. 107 சிறிய நீர்மின்வலு பொறித்தொகுதிகள் மொத்தக் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டு அதன் மூலம் இவ்வருடத்தில் 234 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வருடத்தின் இறுதியில் இதன் மொத்த மின் உற்பத்தியின் அளவு 563 கி.வா.ம. ஆகக் காணப்பட்டது. 171 மெ.வா. கொள்ளளவுள்ள 76 நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளை (SPPA) இ.மி.ச. யானது மேற்கொண்டுள்ளது.



தெனவக கங்கை சிறிய நீர்மின்வலு செயற்றிட்ட மின்வலு நிலையம்

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

#### பயோமாஸ் மின்வலு அபிவிருத்தி

பயோமாஸ் மின்வலுப் பொறித்தொகுதிகள் 3 பிரதான வகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன டென்ரோ, மாநகர விரயம் மற்றும் விவசாயக் கைத்தொழில் விரயங்களாகும். பயோமாஸ் மின்வலுச் செயற்றிட்டங்கள் தொடர்பில் மொத்தமாக 11.5 மெ.வா. கொள்ளளவினைக் கொண்ட இரண்டு விவசாய மற்றும் கைத்தொழில் விரய மின்வலுப் பொறித்தொகுதியும், ஒரு டென்ரோ மின்வலு பொறித்தொகுதியும் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டன. இதன் கடந்த ஆண்டு மொத்த மின் உற்பத்தி 22 கி.வா.ம. ஆகும். ஆண்டு இறுதிக்குள் இ.மி.ச. ஆனது 75 மெ.வா. கொள்ளளவுள்ள 14 நியமப்படுத்தப்பட்ட மின்வலு கொள்ளளவு உடன்படிக்கைகளைச் செய்துள்ளது.



டோக்கியோ பயோமஸ் மின்வலுச் செயற்றிட்டம் (உமி பயன்பாடு)

#### காற்று மின்வலு அபிவிருத்தி

2012ஆம் ஆண்டில் 30 மெ.வா. கொள்ளளவுள்ள மூன்று காற்று மின்வலு செயற்றிட்டங்கள் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டன. இதன் மொத்த மின் உற்பத்தியளவு 143 கி.வா.ம. வருட இறுதியில் 72 மெ.வா. கொள்ளளவுள்ள 9 காற்று மின்வலு இயந்திரங்களை நெய்யரிக் கட்டமைப்புடன் இணைத்துக்கொள்வது தொடர்பாக உடன் படிக்கைகளை (SPPA'S) மின்வலு இயந்திரங்களின் செயற்றிட்ட வேலைகள் செய்முறையில் உள்ளன.




**NCRE அபிவிருத்தி கொள்ளளவு 2012/12/31**




**NCRE கருத்திட்டங்களிலிருந்து வருடாந்த சக்தியின் பங்களிப்பு**

#### சக்தி சந்தைப்படுத்தல்

சக்தி சந்தைப்படுத்தல் கிளை ஊடுகடத்தல் உத்தரவுப்பத்திரம் பெறுநருக்கும், விநியோக உத்தரவு பெறுநருக்கும் இடையில் மின்சாரக் கொடுக்கல் வாங்கல் முறைமைக்கு ஏற்றவாறு 2010ஆம் ஆண்டில் மீளச்செயலுருப்படுத்தப்பட்டது. சக்தி சந்தைப்படுத்தல் கிளை இ.மி.ச.யின் கடத்தல் பிரிவு சார்பாக விதிப்பனவைத் தயாரித்தல் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் (PUCSL) முன்பாக ஒத்துழைப்புச் செய்தது.

2011 ஆம் ஆண்டில் இ.பொ.ப.ஆ.கு. (PUCSL) இனால் பாரிய மின்வழங்கல் விதிப்பனவின் அறிமுகத்துடன் சக்தி சந்தைப்படுத்தல் கிளை இலங்கை மின்சாரக் கம்பனி லிமிட்டெட் விநியோக உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் இ.மி.ச. யின் நான்கு விநியோக உத்தரவுப் பத்திரங்கள் கொடுக்கல் வாங்கல் பத்திரங்களுக்கு மின்சார விற்பனைகளின் பொருட்டாக பாரிய மின் வழங்கல் கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளின் தயாரிப்புக்களினை மேற்கொள்ள பொறுப்பிக்கப்பட்டது. துல்லியத்துடனான புதிய மின்சக்தி மின்மானிகள் வகுப்பு 0.2 கடத்தல் உத்தரவுப்பத்திரம் பெறுநரிடமிருந்து விநியோக உத்தரவாதப் பத்திரங்களுக்கு மாற்றப்படும் மின்சாரத்தினை பதிவுசெய்வதன் பொருட்டு கடத்தல் உத்தரவாதப் பத்திரம் பெறுநர் விநியோக உத்தரவாதப் பத்திரம் பெறுநரின் எல்லைகளுக்குக் குறுக்கே நிறுவுதல் பொருட்டு பெற்றுக்கொடுக்கப்பட்டது. சக்தி சந்தைப்படுத்தல் கிளை ஒவ்வொரு மாதத்திலும் கடத்தல்

# கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

பிரிவிலிருந்து விநியோக உத்தரவாதப் பத்திரம் பெறுநர்களுக்கு மாற்றப்படும் மின்சாரத்தினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த அடிப்படையில் 2012ஆம் ஆண்டு தொடர்பான கொடுக்கல் வாங்கல் கணக்குகள், ஆவணங்களைத் தயாரித்துள்ளது. 2012ஆம் ஆண்டில் இலங்கை மின்சாரக் கம்பனியின் விநியோக மற்றும் மொத்த மின்சார விற்பனை பற்றுச்சீட்டு விநியோக முறைமைகளில் புதிய மென்பொருள் நிகழ்ச்சித்திட்டமானது தகவல் தொழில்நுட்ப கிளையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### தொடர்பாடல்

தொடர்பாடல் கிளையின் பொறுப்பு என்னவெனில் இ.மி.ச. யின் மின் பிறப்பாக்கல், கடத்துகை மற்றும் விநியோகம் மற்றும் ஏனைய பிரிவுகள் அத்துடன் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு தேவைப்பாடு (SCADA) பொருட்டாக இ.மி.ச. யினுள் வெவ்வேறான தொழில்நுட்பங்களினால் ஒலி மற்றும் தொடர்பாடலினை வழங்குவதாகும்.

இந்தத் தொடர்பாடல் முறைமைகளுக்கு பின்வரும் தொழில்நுட்பங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

- மின்வலு இணைப்பு அடிப்படையிலான தொடர்பாடல் வலையமைப்புகள் (PLC) மற்றும் ஒப்ரிக்கல் பைபர் (Optical Fiber/OPGW)
- நுண்ணலை – டிஜிடல் தொடர்பாடல் வலையமைப்பு (DCN)
- VHF/UHF – நடமாடும் மற்றும் நிலையான வானொலி தொடர்பாடல் முறைமை

  தொடர்பாடல் முறைமைகள் அலகு ஒலி மற்றும் தரவு தொடர்பாடல் வலையமைப்பினை PLC வலையமைப்பு, முடிவு உபகரணம் உட்பட ஒப்ரிக்கல் பைபர் வலையமைப்பு பி.எல்.சி. மற்றும் பி.எல்.ரி.எஸ். தொலைபேசி முறைமைகள் தொலைபேசிப் பரிவர்த்தனை, மின்வலு நிலையங்களிலுள்ள துணை முறைகள் மற்றும் நாடு முழுவதும் கட்டமைப்பு நிலையங்கள் வழியாக கண்காணிக்கப்படுகின்றது. இந்த அலகு கொழும்பு, கண்டி, காலி, அநுராதபுரம், சமனலவெவ மற்றும் லக்சபான போன்ற இடங்களில் இயங்கும் ஆறு உப அலகுகளைக் கொண்டுள்ளது.

தொடர்பாடல் சேவைகள் அலகு SCADA முறைமையினை (ரெலிமெட்ரி) உபகரணம் மென்பொருள், வன்பொருள் மற்றும் நுண்ணுறுப்புகள் உள்ளடங்கலாக SCADA கணினிகள் மற்றும் முறைமைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பொருட்டு நடவடிக்கைத் தொடர்பாடலினை PLC, PLTS என்பன கவனிக்கின்றன.

டிஜிட்டலினைக் கொண்டுவரும் அலகு மின் உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத் தொடர்பாடல் சேவைகள், ஊடுகடத்தல் மற்றும் விநியோகம், இ.மி.ச. ஏனைய சார்பு அலகுகள் அத்துடன் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு வேலை தொடர்பான வானொலி (VHF/UHF) தொடர்பாடல் வசதி, ஊடுகடத்தல் மற்றும் பிரதான விநியோகப் பிரிவுகள் மற்றும் இ.மி.ச. யில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் பொருட்டாகவும் சேவையாற்றுகின்ற டிஜிடல் தொடர்பாடல் முறைமையை (DCN) கண்காணிக்கிறது.

### 2012ஆம் ஆண்டு

#### இந்த ஆண்டின் போது பி.எல்.சி. முறைமைகளில் பின்வரும் விசேட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன

- உக்குவெல மின் உற்பத்தி நிலையத்தில் பொல்கொல்ல அணைக்கட்டு கண்காணிப்பு தொடர்பான தரவுகள் பிரிவிற்கும் உக்குவெல PSS இற்குமிடையே புதிய கம்பியில்லா தொடர்பாடல் முறைமையை ஏற்படுத்துவது தொடர்பாக வடிவமைப்பு, ஒழுங்குபடுத்துதல் பொருத்துதல் வேலைகள் போன்றன இடம்பெற்றன.
- முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் புதிய PLTS முறைமையை ஏற்படுத்துவது தொடர்பான வடிவமைப்பு தயார் செய்தல், இணைப்புகளை ஏற்படுத்தல் போன்ற வேலைகளும் PLTS முறைமையில் மேலும் வசதிகளை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் SOPHO PABX முறைமையைப் புகுத்துவது தொடர்பாக வடிவமைப்பு, இணைத்தல் வேலைகள்
- தொலைத்தொடர்பு வசதிகள் மிகவும் குறைவான நிலையில் காணப்படும் பொல்பிட்டிய மற்றும் கிரிபத்கும்புற மின் நிலையங்களுக்கிடையில் சிறப்பான தொடர்பாடல் முறைமையினை ஏற்படுத்தும் வகையில் புதிய ETL 540 PLC முறைமை மேற்கொள்வது தொடர்பான வடிவமைப்பு, பொருத்துதல் வேலைகள்
- இ.மி.ச. தலைமை அலுவலகம் மற்றும் விநியோக அலுவலகங்கள், மின்வலு நிலையங்களுக்கிடையே fiber optic network முறைமையை ஏற்படுத்துவது தொடர்பாக FOX 515 fiber optic multiplexerஐப் பொருத்துவது தொடர்பான வேலைகள்
- ஹபரணை நெய்யரி உபமின் நிலையத்தின் PLC இணைப்பு இயந்திரம் மாற்றஞ் செய்யப்பட்டதுடன் வாழைச்சேனை நெய்யரி உபமின் நிலையத்திற்கு புதிய PLC இயந்திரம் பொருத்தப்பட்டு தொடர்பாடல் முறை சீர்செய்யப்பட்டது.
- திருகோணமலை நெய்யரி உபமின் நிலையத்தில் அநுராதபுரம்-திருகோணமலை PLC தொடர்பாடல் முறைமையில் பழைய coax கேபிள் நீக்கப்பட்டு புதிய கேபிள் பொருத்தப்பட்டது.
- கொத்மலை நெய்யரி மின் நிலையம், குருநாகல் GSS, கிரிபத்கும்புற GSS நிலையங்களின் பாதுகாப்பு அலுவலகங்களுக்கு புதிய PLC முறைமை ஏற்படுத்தப்பட்டது.

#### ஆண்டு காலப்பகுதியில் SCADA முறைமையில் பின்வரும் விசேட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன:

- பெலியத்த நெய்யரி உபமின் நிலையத்தில் வாசற்கதவு (Gateway) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
- செயற்றிட்டங்களின் கீழ் தொலைத்தொடர்பைப் பேணுதல் என்ற வகையில் தற்பொழுது இருக்கின்ற SCADA உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டும் வடிவமைக்கப்பட்டும் இருந்தன. (உதாரணமாக, வவுனியா – கிளிநொச்சி கடத்துகை செயற்றிட்டம்)
- ஒவ்வொரு முறைமை கட்டுப்பாட்டு தேவைகளுக்காக MIMIC டிஸ்பிளே முறைமை, SCADA கணினி டிஸ்பிளே முறைமை தரமுயர்த்தப்பட்டது.
- முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் மேல் கொத்மலை நீர்மின் வலு நிலைய SCADA முறைமை ஒருங்கிணைக்கப்பட்டது.
- மேல்கொத்மலை Gatewayயின் ஊடாக கொத்மலை மின்வலு நிலையத்திற்கான SCADA சமிஞ்ஞைகள் யாவும் சீர்செய்யப்பட்டன.
- முறைமைக் கட்டுப்பாட்டுத்திற்கு புதிய Gateway ஊடாக புதிய லக்சபான SCADA முறைமையை ஒருங்கிணைப்பது தொடர்பான ஆரம்ப படிப்பினை வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.
- முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் நுரைச்சோலை காற்று மின் இயந்திர SCADA முறைமையை ஒருங்கிணைப்பது தொடர்பான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- மொனராகலை மாவட்டத்தில் VHF தொலைத்தொடர்பு வசதியை ஏற்படுத்தும் வகையில் வேலைத்தளங்களில் பரீட்சிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. அத்தோடு கள பரீட்சிப்பு நடவடிக்கைகள் மெதகம, திம்பிரிய மொபிட்டல் பகுதிகளில் இடம்பெற்று திம்பிரிய மொபிட்டல் பகுதியில் VHFஐப் பொருத்துவதற்காக முடிவு செய்யப்பட்டது. இது மொனராகலை பகுதிகளில் தொடர்பாடல் வசதிகளை வழங்கும்.
- சில ஏர்கு ரிபிஏற்றர்ஸ் (repeaters) தெளிவான தொடர்பாடல் சமிக்ஞைகள் இல்லாததினாலும், பல்வேறு குறுக்கீடுகளினாலும் இடமாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன,

## கடத்துகைப் பிரிவு தொடர்ச்சி

- மகாவலி நிலையத்தின் கோரிக்கைக்கிணங்க உயர்பட்டி காலெஹிகந்த எனுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த உயர்பட்ட ரெபிரெர் (High band repeater) கந்தானையில் இடமாற்றம் செய்யப்பட்டது. இது மகாவலியில் உள்ள அனைத்து மின்வலு நிலையங்களிடையே சிறப்பான தொலைத்தொடர்பை ஏற்படுத்தியது.
- ஆற்றல் எல்லையை மேம்படுத்துவதற்காக ஹக்மனையில் முதிலயான டயலொக்குக்கு கல்கொட அமைவிடத்தில் உள்ள நடுத்தரப் பட்டை தானியங்கிக் கருவி இடமாற்றப்பட்டது.
- தொதலு ஓயாவில் பொருத்தப்பட்டிருந்த நடுத்தரப் பட்டி ரெபிரெர் (அனை band repeater) கிரிமரியநகந்த எனும் இடத்திற்கு நகர்த்தப்பட்டது.
- தற்பொழுது மட்டக்களப்புப் பிரதேசங்களில் தொடர்பாடல் முறைமையை பூரணப்படுத்தும் வகையில் புதிய Low band repeaters, Low band fixed/mobile transceiver, High band hand held transceivers என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

#### ஒன்றிணைக்கப்பட்டதும், ஒழுங்குபடுத்தலுக்குமான தொடர்புகள்

ஒன்றிணைப்பதற்கும் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்குமான தொடர்புக் கிளையின் பொறுப்பு என்னவெனில் ஊடுகடத்தற் பிரிவு பொருட்டாக வருடாந்த ஆளணித்திட்டம் தயாரித்தல், பதவியினரை அமர்த்தல் மற்றும் நிறைவேற்றுத்தரம், நிறைவேற்றுத்தரம் அல்லாத பதவியினரின் தொழில் அபிவிருத்தியினை அதிகரிப்பதற்கு பயிற்சிக்கிளை உதவியதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளினை ஒழுங்குசெய்தல் அல்லது நடாத்துவதன் மூலம் கடத்தல் பிரிவின் சரியான தொழிற்பாட்டினை உறுதி செய்தலாகும். பொறியியலாளர் கணக்காய்வுப் பிரிவின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் திட்டமிடல் நோக்கங்கள் தொடர்பான கட்டமைப்பு வேலைகள், உபமின் நிலையங்கள் / காற்று மின்வலுப் பொறித் தொகுதிகளில் மின்னழுத்தத் தளம்பல்கள், அலைவரிசை மாறுபாடு போன்றவற்றில் சீராக்கத்தினை ஏற்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டது.

#### பொறியியல் கணக்காய்வு

பொறியியல் கணக்காய்வு கூட்டுறவு மற்றும் ஒழுங்கமைப்புக் கிளையில் உள்ள பொறியியல் கணக்காய்வு அலகு தள அளவீடுகளினால் ஊடுகடத்தல் முறைமை பாரமீற்றர்களின் நியமம் மற்றும் தரத்தினைக் கண்காணித்துப் பராமரிப்பதற்கெனத் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த முறைமையினைக் கண்காணிப்பதற்கு தரவுகளைப் பதிவு செய்பவர்கள் மற்றும் மின்வலு தரப்பகுப்பாய்வாளர்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றனர்.

கடத்தல் வலையமைப்புக்கு இணைக்கப்படுகின்ற தனியார் காற்று மின்வலு பொறித் தொகுதிகள் இ.மி.ச.யின் வலு தர நியமங்களை அவை நிறைவு செய்கின்றனவா என்பதை அறிவதற்கு பொறியியல் கணக்காய்வின் கீழ் கண்காணிக்கப்பட்டன.

உடனடியாக மின்வலு தரத் தகவல்கள் மற்றும் மின் உற்பத்தியின் பக்கப்பார்வைத் தகவல்கள் தரவு பதிவுசெய்பவர்களைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டன. மின்வலுத் தரவுகள் காற்று மின்வலு பொறித் தொகுதிகளினால் மின்வலு முறைமைக்கு அமைதியான சேர்ப்புகளை பரிசோதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. மின்வலு உற்பத்தி பக்கப்பார்வைத் தரவு இ.மி.ச. வலையமைப்புக்கு காற்று மின்வலு உற்பத்திக்கு வசதியளிப்பதற்கு காற்று மின்வலு பொறித்தொகுதி உற்பத்தி முறைமைகள் மற்றும் எதிர்கால பகுப்பாய்வு வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

சேகுவான்தீவு 10 மெ.வா. காற்று மின்வலு பொறித்தொகுதியில் உள்ள மின்வலு உற்பத்தியை (2012 சனவரி 21ஆம் திகதியிலிருந்து 2012 சனவரி 23ஆம் திகதி வரையான) பின்வரும் வரைபு காட்டுகின்றது.



#### மனித வளங்கள்

இந்தப் பிரிவின் மனித வள முகாமைத்துவச் செயற்பாடுகள் கூட்டுறவு மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள் கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன. கடத்துகைப் பிரிவு மொத்தமாக 1088 ஊழியர்களைக் கொண்டுள்ளது. இவர்களுள் 127 பேர் நிறைவேற்றுத் தரத்தில் உள்ளவர்களையும், 961 பேர் நிறைவேற்றுத்தரம் அல்லாதவர்களையும் கொண்டுள்ளது. இந்த ஆண்டின் பொழுது இப்பிரிவுக்கு இ.மி.ச. வினால் 180 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். இ.மி.ச.யின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைக்கு அமைவாக 203 பேர் தரமுயர்த்தப்பட்டு, அவர்களுக்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்பட்டனர்.

பதவியினருக்கு வெளிவாரி பயிற்சி வாய்ப்புகள் திறன்கள் அபிவிருத்தி தேவைகளைப் பொறுத்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. வெளிநாட்டுப் பயிற்சியில் திட்டமிடல், தொடர்பாடல் உபநிலையங்கள் மற்றும் கடத்துகை இணைப்புகளைச் செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. 222 பேர் உள்நாட்டு, வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / பயிற்சிப் பட்டறைகளிலும் 27 பேர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றில் பங்குபற்றினர். அத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்கள் இ.மி.ச.யின் ஏனைய பதவியினருக்கு பயிற்சியில் தாம் பெற்றுக்கொண்ட அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கு வேண்டப்பட்டனர். கடத்துகைப் பிரிவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்களில் 27 பேருக்கு மின்கடத்துகை இணைப்பு, கட்டமைப்பு உபமின் நிலைய உபகரணத்தின் தொழிற்சாலை ஏற்றுக்கொள்ளல் சோதனைகள் சாட்சிக்கு பங்குபற்றுவதற்கு வாய்ப்பளித்துள்ளது.

CRR கிளை கடத்துகை பிரிவில் உள்ள பதவியினர் தொடர்பான பயிற்சிக் கிளையின் உதவியுடன் உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / பயிற்சிப் பட்டறையினை வழங்கியுள்ளது.

இந்தப்பிரிவு அலுவலக ஆதரவுடன் சுறுசுறுப்பான நலன்புரிச் சங்கத்தினைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டில் இதன் உறுப்பினர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கிய அதேவேளை பதவியினரின் வேறுபட்ட வகுதியினரிடையே சுமுகமான ஆள்சார் உறவுகளும் வளர்ச்சி அடைந்துள்ளன.

# விநியோகப் பிரிவுகள்



# விநியோகப் பிரிவு 1

விநியோகப் பிரிவு 01ஆனது வட மேல் மாகாணம், வட மத்திய மாகாணம், வட மாகாணம், கொழும்பு மாநகர பிரதேசம் உள்ளடங்கலாக நான்கு நிருவாக மாகாணங்களைக் கொண்டமைந்து காணப்படுகின்றது. தற்பொழுது 16 இ.மி.ச. பிரதேச பிரிவுகளை கொண்டமைந்து காணப்படும் இப்பிரிவானது 2014ஆம் ஆண்டின் இறுதியில் கிளிநொச்சிப் பிரதேசத்தையும் இணைத்து 17 பிரதேசங்களைக் கொண்டமையும். இப்பிராந்தியத்தின் மொத்த சனத்தொகை ஏறத்தாழ 7 மில்லியன்களாகும். அதியுயர் மின் விநியோக மட்டமான 99% கொழும்பு நகரிலும் மிகவும் குறைவான மின் விநியோக மட்டமான 65% வட மாகாணத்திலும் பதிவாகின.

இப்பிராந்தியத்தின் பாவனையாளர் ஒருவருக்கான வருடாந்த மின்சார நுகர்வு 2,136 kWh. கொழும்பு நகரத்தில் பாவனையாளர் ஒருவருக்கான வருடாந்த மின் நுகர்வு 7745 அலகுகளாகக் காணப்படுகின்ற பொழுது வட மேல் மாகாணத்தில் பாவனையாளர் ஒருவருக்கான வருடாந்த மின் நுகர்வு மிகவும் குறைந்த அளவாக 1580 அலகுகளாகக் காணப்படுகின்றது. கொழும்பு நகரம் இப்பிராந்தியத்தில் மிகவும் இலாபகரமான பகுதியாக உள்ளது. அதேவேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பிரதேசங்கள் தொழிலில் திருப்திகரமான மட்டத்திற்குக் கீழ் உள்ள பிரதேசங்களாக உள்ளன.

#### செயற்பாட்டுக் கட்டமைப்பு

இலங்கை மின்சார சபையின் பிராந்தியம் பொது முகாமையாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ள மேலதிக பொது முகாமையாளர் ஒருவரினால் தலைமைதாங்கப்படுகின்றது. நிருவாக நடவடிக்கைக்காக இப்பிராந்தியம் நான்கு மாகாணங்களாக, அதாவது கொழும்பு நகரம், வட மேல் மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணம் எனப் பிரிக்கப்படுகின்றது. பின்னர் இவை ஒவ்வொன்றும் தத்தமது நிருவாக சுலபத்திற்காக பிரதம பிரதேச மின் பொறியியலாளர் அல்லது பிரதேச மின் பொறியியலாளர்கள் என மேலும் பிரிக்கப்படுகின்றது. இப்பிராந்தியமானது 16 பிராந்திய அலுவலகங்களையும், 51 வாடிக்கையாளர் சேவை நிறுவனங்களையும் கொண்டமைந்து காணப்படுகின்றது.

மாகாணப் பிரதி முகாமையாளர்களுக்கு மேலதிகமாக மூன்று பிரதிப் பொது முகாமையாளர்கள் இப்பிராந்தியம் 1இன் செயற்றிட்டங்கள் மற்றும் பாரிய பராமரிப்பு வேலைகள், திட்டமிடல், அபிவிருத்தி வேலைகள் மற்றும் வர்த்தகக் கூட்டுறவு வேலைகளைக் கவனித்து வருகின்றார்கள். இதனைப் போலவே ஏனைய பிரிவுகளும் பிரதிப் பொது முகாமையாளருடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. (செயற்றிற்றடங்கள், பெறுகைகள்)

இந்த மாகாணங்களில் நிதி மற்றும் வருவாய்ப் பணிகள் கணக்காளரினால் மேற்கொள்ளப்படுவதுடன் இந்தப் பிரிவின் மேலதிக நிதி முகாமையாளரினால் கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் மனித வளப் பணியினைக் கவனிப்பதற்கென மனித வள அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான செயற்பாட்டுக் கூட்டிணைப்பு மற்றும் அனைத்து நிறைவேற்று அலுவலர்களின் மனித வளப் பணிகள் மற்றும் கூட்டுறவு அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட பதவியினர் போன்றோர் பிரதிப் பொது முகாமையாளரினால் கட்டுப்படுத்தப்படுகின்றனர் (வர்த்தக மற்றும் கூட்டாண்மை).

| விபரம் | அலகு | பெறுமதி |
|---|---|---|
| ஆண்டில் பிராந்தியம் 1 இன் விற்பனை அலகுகள் | GWh | 3,024 |
| ஆண்டிற்குள் பல்வேறு வலயப் பகுதிகளுக்கிடையேயான விற்பனை அலகுகள் | GWh | 2,892 |
| மின் விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் | ரூ. மில். | 52,642 |
| அலகிற்கான சராசரி விற்பனை விலை | ரூ. | 18.20 |
| விநியோக நட்டம் | % | 9.32 |
| கட்டணப் பெறுவனவு | மாதங்கள் | 1.93 |
| வருட இறுதியில் வலயத்திற்குள் மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | எண். | 3,216 |
| வருட இறுதியில் வலயத்திற்குள் சில்லறை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | எண். | 1,348,551 |
| குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வழங்கப் பட்ட புதிய இணைப்புகளின் எண்ணிக்கை | எண். | 86,304 |
| வருட இறுதிக் காலப்பகுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை | எண். | 2,831 |
| மாதம் ஒன்றுக்கான தலைக்குரிய சராசரி வருமானம் (மொத்த விற்பனைக்கான) | ரூ. | 947,546 |
| மாதம் ஒன்றுக்கான தலைக்குரிய சராசரி வருமானம் (சில்லறை விற்பனைக்கான) | ரூ. | 1,625 |
| வருட இறுதியில் ஊழியர் ஒருவருக்கான சராசரி சில்லறை வாடிக்கையாளர் எண்ணிக்கை | எண். | 477 |
| ஊழியர் ஒருவருக்கான குறையழுத்த முள்ள சராசரி நீளத்தினளவு | கி.மீ. | 10.28 |
| வாடிக்கையாளர் ஒருவருக்கான குறை யழுத்தமுள்ள சராசரி நீளத்தினளவு | கி.மீ. | 0.02 |
| விநியோக உபமின் நிலையம் ஒன்றுக்கான நடுத்தர மின்னழுத்தமுள்ள சராசரி நீளம் | கி.மீ. | 1.14 |



# விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி

### பிரதான நோக்கங்கள்

- நியதிச்சட்ட வோல்ட் அளவுகளுக்கமைய வலயத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான மின்சார விநியோகங்களுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- மொத்தச் செலவினத்திற்கு மேலதிகமாக வருமானத்தை ஈட்டுதல்.
- எதிர்பார்த்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு புதிய மின் இணைப்புகளை வழங்கல்.
- வலயங்களுக்குள் மின்சார விநியோக முறைமையில் யதார்த்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### விநியோக உட்கட்டமைப்பு

| | |
|---|---|
| 33 Kv மின் விநியோகக் கம்பிகள் | 7302 கி.மீ. |
| 11 kV விநியோகக் கம்பிகள் | 619 கி.மீ. |
| 11 kV நிலத்திற்குக் கீழான கேபிள் | 601 கி.மீ. |
| 33/11 kV பெறுமதியுள்ள முதனிலை உப மின் நிலையங்கள் | 41 எண். |
| குறையழுத்தமுள்ள வோல்ட் மின் விநியோகக் கம்பிகள் | 29,104 கி.மீ. |
| குறையழுத்தமுள்ள வோல்ட் நிலத்திற்குக் கீழான கேபிள் இணைப்பு | 544 கி.மீ. |
| குறையழுத்த வோல்ட் மின் விநியோக உப மின் நிலையங்கள் | 7,465 எண். |
| மொத்த மின் இணைப்புகளின் எண்ணிக்கை | 1,351,767 எண். |

### வாடிக்கையாளர் நலன்புரிச் சேவைகள்

2012ஆம் ஆண்டு காலப்பகுதியின் வாடிக்கையாளர்கள் நலன் கருதி பல்வேறு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கென 16 பிராந்திய அலுவலகங்களும், 51 வாடிக்கையாளர் சேவை நிலையங்களும், 12 விற்பனை நிலைய கருமபீடங்களும் அமைக்கப்பட்டன. அத்துடன் 4 விநியோகக் கட்டுப்பாட்டு நிலையங்களும் அமைக்கப்பட்டன. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்பட்டன. 9 புதிய விற்பனை நிலையக் கருமபீடங்கள் அமைக்கப்பட்டதனால் வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவை இலகுவாகச் செலுத்த முடிகின்றது.

இலங்கை மின்சார சபை நாட்டுக்கும், மக்களுக்கும் சிறப்பான சேவையை வழங்குவதற்கு “மின் நகரம்” (E-city) எனும் புதிய அலகொன்றை 2010 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. 2012ஆம் ஆண்டில் இதன் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. மின். நகரம் என்பது ஒரு கூரையின் கீழ் மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஓர் அலகாகக் காணப்படுகின்றது. இதனால் ஆங்கிலத்தில் இதனை “வண் ஸ்டொப் ஷொப்” (One Stop Shop) என அழைக்கப்படுகின்றது. மின் நகரம் காணப்படும் பிரதேசங்கள் பின்வருமாறு:

| மாகாணம் | பிரதேசம் | இல. |
|---|---|---|
| மேல் மாகாணம் (கொழும்பு நகரம்) | கொழும்பு மேற்கு | 1 |
| | கொழும்பு தெற்கு | 1 |
| | கொழும்பு கிழக்கு | 1 |
| | கொழும்பு வடக்கு | 1 |
| வட மேல் மாகாணம் | குளியாப்பிட்டிய | 1 |
| | குருநாகல் | 1 |
| | சிலாபம் | 1 |
| வட மத்திய மாகாணம் | மின்னேரியா | 1 |
| | அநுராதபுரம் | 1 |
| வட மாகாணம் | வவுனியா | 1 |

குறித்த காலப்பகுதியின் இறுதியில் மின் நகரத்தின் செயற்பாடுகள் பல்வேறு மின்சாரப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தகைய முறைமையில் உயர் தொழினுட்ப யுக்திகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்தோடு எஸ்.எம்.எஸ். (SMS) மூலம் நடவடிக்கைகள் பலவற்றை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிகின்றது. அத்தோடு மின் நகரத்தின் சேவைகள் மின் வாடிக்கையாளர் நிகழ்ச்சித் திட்டங்கள், தகவல் பிரச்சாரம், வினைத்திறன் மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

விலைமதிப்பற்ற வாடிக்கையாளர்களின் நலன்கருதி இலங்கை மின்சார சபையினால் மேலும் புதிய இரு பிராந்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.



பிராந்திய நிலையமொன்று புத்தளத்தில் திறந்துவைக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையினால் வடமத்திய மாகாணத்தில் மேலும் 3 வாடிக்கையாளர் சேவை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இதில் வாடிக்கையாளர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும். இதனால் இலங்கை மின்சார சபையின் சேவைகள் மென்மேலும் சிறப்புறும்.

### மின் விற்பனை

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் விநியோகப் பிரிவு 1 இனால் நாட்டின் மொத்த மின் விற்பனையளவில் 27.6% காணப்பட்டது. ஏறத்தாழ 2,892 GWh மின்சாரமானது இப்பிரிவினால் விற்பனை செய்யப்பட்டது. இது கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது 3.4% அதிகரித்தது.

## விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி




**மின் விற்பனை – விநியோகப் பிரிவு 1**

கொழும்பு நகர மின் விற்பனையானது மொத்த மின் விற்பனையில் 43% ஆகும். அதனைத் தொடர்ந்து வட மேல் மாகாணமும், வட மத்திய மாகாணமும், வடக்கு மாகாணமும் காணப்படுகின்றன.




**மின்சார வருமானம் மாகாணரீதியாக**

2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மின்சாரம் மூலம் 52,642 மில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டது. இது முன்னைய ஆண்டைவிட 23% உயர்வான வருமானத்தை ஈட்டியுள்ளது.




**பிராந்தியம் 1இல் மின்சார வருமானம் 1**




**விற்பனை வருமானம் மாகாண ரீதியாக**

### வாடிக்கையாளர்களுக்கான புதிய மின் இணைப்புகள்

2012ஆம் ஆண்டின் இறுதியில் பிரிவு 1இல் 1,351,767 பேர் புதிய மின் இணைப்புகளைப் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்களாகக் காணப்பட்டனர். இந்த மின் இணைப்பில் வீட்டுப் பாவனையாளர் முதலாவது இடத்திலும், கைத்தொழிற்சாலைகள் அடுத்த இடத்திலும் காணப்பட்டது. கொழும்பு நகரில் இந்த ஆண்டில் 3,216 பேர் மொத்த மின் விற்பனையில் புதிய வாடிக்கையாளர்களாகக் காணப்பட்டனர்.




**வாடிக்கையாளர் எண்ணிக்கை துறைரீதியாக**

மின்சார நுகர்வு தொடர்பாக 2012ஆம் ஆண்டில் ஆகக்கூடிய புதிய வாடிக்கையாளர்கள் வட மேல் மாகாணத்தில் (663514) காணப்பட்டனர். மிகக் குறைவான புதிய வாடிக்கையாளர்கள் (161,018) மேல் மாகாணத்தின் கொழும்பு நகரில் காணப்பட்டனர்.




**வாடிக்கையாளர் எண்ணிக்கை மாகாணரீதியாக**

# விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி

## மின்மானி பரிசோதனை ஆய்வுகூடம்

2012ஆம் ஆண்டு காலத்தில் மின்மானி பரிசோதனை ஆய்வுகூடமும் இன்னுமோர் முக்கிய சவாலாகக் காணப்பட்டது. இலங்கை பூராவும் ஏறத்தாழ 3,216 பேர் மொத்த மின்சார வாடிக்கையாளர்களாகக் காணப்பட்டனர். இதனால் மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூட ஊழியர்கள் மீண்டும் மின்மானிப் பரிசோதனையை மேற்கொண்டு இருந்தனர்.

இது ஒரு பெரிய சவாலாக அமைந்தது. அத்தோடு மனித வளங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கருவிகள் என்பவற்றை ஒருங்கிணைத்த வேலையாகவும் இருந்தபடியால் சிரமமானதொன்றாகக் காணப்பட்டது. ஊழியர்களுக்கு பரிசோதனை ஆய்வுகூடத்திற்கு வெளியேயும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மின்மானி பரிசோதனை ஆய்வுகூடத்தின் டி.டி.ஐ. பிரிவானது மேற்குறித்த பணியைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தது. இதனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

- பரிசோதனை செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட மின்மானிகளின் எண்ணிக்கை 1 phase 117660
- பரிசோதிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட மின்மானிகளின் எண்ணிக்கை 3 phase 4244
- கண்டுபிடிக்கப்பட்ட பழுதடைந்த இயந்திரங்களின் எண்ணிக்கை: 37
- நிகழ்ச்சி நிரற்படுத்தப்பட்டு மொத்த மின் விற்பனை விநியோகத்திற்காக வழங்கப்பட்ட மின்மானிகளின் எண்ணிக்கை: 325

மின்மானி மீள்நிகழ்ச்சி நிரற்படுத்தும் நிகழ்வுகள் 3 மாதகாலமாக இடம்பெற்றன. வட மத்திய மாகாணம், வட மேல் மாகாணம், வட மாகாணங்களில் மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூட ஊழியர்கள் மின்மானி தொடர்பான சகல பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதை தமது வழமையான கடமையாகக் கொண்டிருந்தனர். 16 பிரதேசங்களில் காணப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகள் யாவும் 12 மாத காலப்பகுதிக்குள் சீர்செய்யப்பட்டன. அத்தோடு மேற்குறித்த மாகாணங்களில் அமைந்துள்ள 10 பிரதேசங்களில் ஏறத்தாழ 1,452 மொத்த விற்பனை மின் விநியோக மின்மானி பரிசோதிக்கப்பட்டது.

## வழங்கலின் நம்பகத்தன்மை

வலயம் 1இல் காணப்படும் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் மின் விநியோகத்தின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக மின் தடங்கல்களைத் தவிர்த்தல், தடங்கல்களை குறுகிய நேரத்தில் சீர்செய்தல் மற்றும் விநியோகத்தினை மீளக்கட்டியமைக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இத்தகைய தன்மையானது மின்சார வலையமைப்பில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன், மின் வழங்கலில் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தும்.

மின் விநியோக வலையமைப்பு மரஞ்செடிகள், விலங்குகள், காற்றுக்கள், பாதகமான காலநிலையால் ஏற்படும் கோளாறுகள் போன்ற புறக்காரணிகளால் பாதிப்புக்கு உட்படுகின்றது. ஆனால், கொழும்பு நகரமானது மத்திய வோல்டினான மின் விநியோகத்தை நிலத்திற்குக் கீழ் கேபிள் முறை மூலம் மேற்கொள்வதனால் மேற்கூறிய பாதிப்பிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆண்டு காலப்பகுதியில் மத்திய வோல்டினை (MV) மின் விநியோக வலையமைப்பில் சாதாரண தடங்கல்களின் விகிதாசாரம் மாதம் ஒன்றுக்கு 100 கிலோமீற்றர் மின் கம்பிகளுக்கு 7.4ஆகக் காணப்பட்டது. அதே வேளை குறைந்த வோல்டினான சாதாரண மின் தடங்கல் விகிதாசாரம் மாதம் ஒன்றுக்கு 100 கிலோமீற்றர் மின் கம்பிக்கு 20.8ஆகக் காணப்பட்டது




மத்திய வோல்ட் மின் விநியோகத் தடங்கல் மாகாணரீதியாக




குறைந்த வோல்ட் மின் விநியோகத் தடங்கல் மாகாணரீதியாக

விநியோகக் கட்டுப்பாட்டு நிலையமும், விநியோக தன்னியக்கமயப் படுத்தலும்

நம்பகத்தன்மை சேவையை விநியோகக் கட்டுப்பாட்டு நிலையம், விநியோக தன்னியக்கமயப்படுத்தல் என்பதன் பிரதான நடவடிக்கையாக அமைகின்றது. மின் விநியோகத் தடங்கலின் நேரத்தைக் குறைத்தல், மின் விநியோகத் தடங்கல் வீதத்தைக் குறைத்தல் போன்றன நம்பகத்தன்மையை மேலும் மெருகூட்டுவதாக அமையும். இலங்கை போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையைக் கொண்டிருக்காமையினால் மத்திய வோல்ட் வலையமைப்பின் தடங்கல்களை ஒரு மட்டத்திற்கு அப்பால் குறைக்க முடியாதுள்ளது. அதற்காக கோளாறுகளை முன்கூட்டியே இனங்காணுதல் / பழுதுபார்க்கும் கால எல்லையைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாற்று விநியோக வலையமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் விநியோகத்தினைச் சீர்செய்யவும் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டு விநியோகக் கட்டுப்பாட்டு நிலையம் வடக்கு மாகாணத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அத்தோடு மத்திய வோல்ட் மற்றும் குறைந்த வோல்ட் மின் வலையமைப்பு தொடர்பான ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வடக்கு மாகாண மின்சார சபை பொறியியலாளர்களுக்கும், அதன் ஊழியர்களுக்கும் நடாத்தி வருகின்றது.

## விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி

**மாகாணங்களில் மத்திய வோல்ட் மின் வலைப்பின்னல் முறைமை தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்**




காரணம் நடுத்தர மின் வலி அளவு செயல் இழப்பு NWP




காரணம் நடுத்தர மின் வலி அளவு செயல் இழப்பு NCP




காரணம் நடுத்தர மின் வலி அளவு செயல் இழப்பு NP




காரணம் நடுத்தர மின் வலி அளவு செயல் இழப்பு CC

குறித்த காலப்பகுதியில் வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், கொழும்பு நகர் பிரதேசங்களில் விநியோகக் கட்டுப்பாட்டு நிலையத்தினால் கணிப்பீடு செய்யப்பட்டதும், கண்காணிக்கப்பட்டதுமான வாடிக்கையாளர் நம்பகத்தன்மை மட்டங்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது

| | வ.மே.மா. | | வ.ம.மா. | | கொழும்பு நகர் | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 |
| SAIFI | 38 | 66 | 18 | 20 | - | - |
| SAIDI (hrs) | 73 | 124 | 64 | 75 | 0.3 | 0.34 |

இலங்கை மின்சார சபையின் பிராந்தியம் 1இல் அடங்கும் கொழும்பு நகரத்திலும், வட மத்திய மாகாணத்திலும் மேலும் இரண்டு விநியோகக் கட்டுப்பாட்டு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன (DCC). கொழும்பு நகர விநியோகக் கட்டுப்பாட்டு நிலையமானது நவீன தொழினுட்பங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. இது SCADA விநியோக முறைமை, தன்னியக்க விநியோக இயந்திர முறைமை என்பவற்றோடு சிறப்பான நவீன தொடர்பாடல் முறைமைகளையும் கொண்டுள்ளது. SCADA விநியோக முறைமை ஊடாக உபகரணங்களின் செயற்பாடுகள், பாதுகாப்பு ஒழுங்குச் செயற்பாடுகள் மற்றும் அவற்றுக்கான வழிகாட்டல் முறைமை என்பன அபிவிருத்தியடைந்தன.

கொழும்பு நகர மின் விநியோக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 24 X 7 இயக்கத்துடன்கூடிய (நடுத்தர) மத்திய வோல்ட் மின்சார வலைப்பின்னல் முறையானது SCADA முறைமை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு 212 உப மின் நிலையங்கள் தன்னியக்கமயப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு 05 இல் கிளசன் (classen) பிளேசில் அமைக்கப்பட்டுள்ளது.

### மின் விநியோக இழப்புகளைக் குறைத்தல்

பிராந்தியம் 1இற்கான மின் விநியோக இழப்பானது குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. 2002ஆம் ஆண்டு மின் விநியோக இழப்பானது 17%இலிருந்து 2012ஆம் ஆண்டு 9.32%மாகக் குறைவடைந்துள்ளது. கடந்த காலங்களில் மின் விநியோகப் பிராந்தியம் 1இனால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு தொழில்நுட்பம்சார், தொழில்நுட்பம் சாரா நடவடிக்கைகளே இவ்விழப்பீடுகள் குறைவடைந்து சென்றமைக்கான காரணங்களாகும்.

# விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி

2012இல் மின் விநியோகப் பிரிவு இழப்பீடுகள் வருமாறு:

| மாகாணம் | வருடத்திற்கான உள்ளீட்டு மின் சக்தி Gwh | இழப்பீடுகள % |
|---|---|---|
| கொழும்பு நகரம் | 1323.2 | 5.88 |
| வட மேல் மாகாணம் | 1147.4 | 9.15 |
| வட மத்திய மாகாணம் | 423.2 | 12.3 |
| வட மாகாணம் | 272.5 | 23.53 |
| பிரிவு 1 மொத்தம் | 3166.3 | 9.4 |

**பிராந்தியம் 1 இன் மின் விநியோக இழப்பீடுகள்**

மின்சார இழப்பீடுகளில் 8.32%ஆனவை தொழில்நுட்பம்சார் இழப்பீடுகளாகவும், மிகுதி 1%ஆன இழப்புகள் தொழில்நுட்பம்சாரா இழப்பீடுகளாகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மின் களவு, சட்டவிரோதமான மின் நுகர்வு, மின் மானிகள் பொருத்தப்பட்டிராத தெரு விளக்குகள் என்பன இவற்றுள் அடங்குகின்றன.

இத்தகைய தொழில்நுட்பம்சாரா இழப்பீடுகளைத் தவிர்ப்பதாயின், பிரதேச பொறியியலாளர்களால் அடிக்கடி அவை பரிசோதிக்கப்பட்டும், கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்தோடு மின் மானிகளை வருடாந்தம் பரிசோதனை செய்வதன் மூலமும், தன்னியக்க மின் வாசிப்பு மூலமும் வர்த்தகரீதியான இழப்பீடுகளைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவர முடியும்.

### உற்பத்தித்திறன் மேம்பாடும், தர முகாமைத்துவமும்

வட மேல் மாகாணம் ISO 9001 – 2008 தரச் சான்றிதழைப் பெற்றது. இலங்கை மின்சார சபையின் வரலாற்றில் முதன்முதல் பின்வரும் நிறுவனங்கள் மின்சார விநியோகம் தொடர்பாக பிரபல்யம் பெற்றிருந்தன.

- கணக்கியல் அலுவலகம், மின்சார விநியோகம், மின்சார கட்டுமானம் என்பவற்றை உள்ளடக்கிய DGM அலுவலகம் - வட மேல் மாகாணம்
- மின்சாரப் பிராந்திய அலுவலகம் குருநாகல், சிலாபம் மின்சாரப் பிராந்திய அலுவலகம், குளியாப்பிட்டி மின்சாரப் பிராந்திய அலுவலகம் மற்றும் புத்தளம் மின்சாரப் பிராந்திய அலுவலகம்
- குருநாகல் நகர CSC அலுவலகம், பொத்துஹெர CSC அலுவலகம், நாரம்மல CSC அலுவலகம்
- சகல உதவி நிறுவனங்களின் (DM) கிளைகள்

அத்தோடு 2012ஆம் ஆண்டில் தைகி அகிமோட்டோ 5S (TAIKI Akimoto 5S) விருதினையும் பெற்றுள்ளது. அத்துடன் பின்வரும் நிறுவனங்களுக்கு அதியுத்தம விருதுகள் வழங்கப்பட்டன.

### தனிச்சிறப்பு விருதுகள் பெற்றவர்கள்

- பிரதம பொறியியலாளர் அலுவலகம் – குருநாகல்
- பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் – வாரியப்பொல
- கணக்கியல் வருமான அலுவலகம் – DGM வ.மே.மா.
- வாடிக்கையாளர் சேவை நிலையம் – பொத்துஹெர

### பின்வரும் அலுவலகத்திற்கும் விருது கிடைத்தது

- வாடிக்கையாளர் சேவை நிலையம் – மாகோ

இலங்கை மின்சார சபையின் கொழும்பு தெற்குப் பிராந்திய பொறியியலாளர் அலுவலகம், இலங்கை மின்சார சபையினால் நடாத்தப்பட்ட "5S போட்டியில்" முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அத்தோடு இந்த அலுவலகமானது யப்பான் - இலங்கை கூட்டுத் தொழில்நுட்ப கலாசார சம்மேளனத்திடமிருந்து "தைகி அகிமோட்டோ (Taiki Akimoto)" எனும் உயர் விருதை அதனது திட்டமிடல், தந்திரோபாயச் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொண்டது.

### அபிவிருத்தி முறைமை

இந்த முறைமையின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கிளிநொச்சி GSS இலிருந்து புதுக்காடு வரை 200 மில்லியன் ரூபா செலவில் DCV ELM மின்கம்பி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே கிளிநொச்சி GSSஇலிருந்து சாவகச்சேரி பிரதேசத்திற்கும், பருத்தித்துறைப் பிரதேசத்திற்கும் மின்னிணைப்பு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வேலைத்திட்டங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னர் யாழ். மாவட்டத்தில் மின் வெட்டு கணிசமான அளவு குறைக்கப்பட்டு சேவை வழங்கப்பட்டது.

யாழ். நகரத்தின் மின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்காக பரமேஸ்வரா PSSஇலிருந்து யாழ். நகருக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

வட மாகாணம் முழுவதிற்கும் மத்திய வோல்ட் (MV) மற்றும் குறைந்த வோல்ட் (LV) மின் இணைப்பைச் சீர்செய்வதற்கும், அதனை விருத்தி செய்வதற்கும் 342 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

மொத்த மின் விற்பனை தொடர்பான தன்னியக்க மின் வாசிப்பு மானி கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2012ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்திலிருந்து அதனது செயற்பாடுகள் வெற்றிபெற்றுள்ளன.

கொழும்பு நகர கட்டுப்பாட்டு நிலையம் (CCCC) முழு இயந்திர உபகரணங்களின் பொறிமுறையை உள்ளடக்கியுள்ளது. இதனது திட்டமிடல், செயற்பாட்டு நடவடிக்கைகள் யாவும் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய வலைப்பின்னல் முறைமையில் அமைந்துள்ளன.

முகாமைத்துவத் தகவல்கள், SAIDI, SAIFI மற்றும் இழப்பீடுகள் என்பன சிறப்பான முறையில் கணிப்பீடு செய்யப்பட்டு உண்மைத்தன்மை என்பன இந்நிறுவனத்தினால் பேணப்பட்டு வருகின்றது. அத்தோடு உப மின் நிலையம் ஒன்றில் நாளாந்தம் தோன்றும் இயக்கச் செலவையும் பேணிவருகின்றது. அத்தோடு இலங்கை மின்சார சபையின் ஊழியர்களை சரியான முறையில் பயன்படுத்தி வருகின்றது.

2012ஆம் ஆண்டில் ஊழியர்கள் புதிய நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய அறிவுத்திறன்களைக் கொண்டு காணப்பட்டனர். அத்தோடு # 1097, # 1428 ஒலிகளை உள்ளடக்கிய தன்னியக்க செயற்பாடுகளைக் கொண்ட இரு உப நிலையங்கள் SCADA நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. இது இலங்கை மின்சார சபையின் முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

## விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி



கொழும்பு நகர கட்டுப்பாட்டு நிலையத்தின் வலைப்பின்னல் முறைமை

### அதிகளவு மின் நுகர்வு வாடிக்கையாளர்கள்

புத்தளம் சீமெந்து தொழிற்சாலை, நெஸ்லே பாற் தொழிற்சாலை, இலங்கை உருக்குத் தொழிற்சாலை, பன்னலையில் அமைந்துள்ள ஸ்ரீ லம்கோ உருக்குத் தொழிற்சாலை மாதம்பையில் அமைந்துள்ள புவல்க உருக்குத் தொழிற்சாலை போன்ற பெரிய கைத்தொழிற்சாலைகள் இந்த மாகாணங்களில் அமைந்துள்ளன. இதனால் மின்சாரம் மூலமாகப் பெறப்படும் வருமானமும் அதிகமாக உள்ளது.

இந்த மாகாணம் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மாகந்துர பிரதேசத்தில் கைத்தொழிற் பூங்கா ஒன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவை மின் நுகர்வை அதிகரிக்கும் கெரலியவெல, மாவத்தகம மற்றும் பொல்கஹாவெல கைத்தொழில் பிரதேசங்கள் கைத்தொழில் முதலீட்டு சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு புத்தளம், கல்லடி போன்ற சில இடங்களில் கைத்தொழிற் பூங்காக்களை அமைத்து அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது என்பது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் எதிர்கால நோக்கமாக இருக்கின்றது. இவை மின் நுகர்வை மேலும் அதிகரிக்கும்.

இறால் பண்ணை தொழிற்சாலைகள் மாதம்பையிலிருந்து கற்பிட்டி வரையான கடற்கரையோரப் பிரதேசங்களில் விரைவான அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கொண்டுள்ளன.

நார்ப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை மாதம்பை, குளியாப்பிட்டி, சிலாபம் போன்ற பிரதேசங்களில் அபிவிருத்தியடையச் செய்தல், பேரளவான இரும்பு உருக்கு ஆலை, பன்னலையில் அமையவுள்ள கைத்தொழிற் சாலைகள் போன்றவற்றாலும் மின்சாரத்திற்கான கேள்வி அதிகரிக்கும்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையானது கற்பிட்டி குடாநாடு, மாரவில, தங்கொட்டுவ பிரதேசங்களை உள்ளடக்கிய கடற்கரையோரப் பிரதேசங்களில் சுற்றுலாத்துறையை விருத்தியடையச் செய்வதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன் மூலமும் இப்பகுதிகளின் மின்சாரத்திற்கான நுகர்வு அதிகரிக்கும்.

### கிராமிய மின் வழங்கல்

2012ஆம் ஆண்டு கிராமிய மின் வழங்கல் திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது அதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| கருத்திட்டத்தின் பெயர் | வேலையின் அளவு | | | |
|---|---|---|---|---|
| | HT (கி.மீ.) | S/S (எ/கை) | LT (கி.மீ.) | இணைப்பு (கி.மீ.) |
| வ.ம.மா. வெளிச்சமூட்டல் விதுலமு லங்கா | 164 | 134 | 832 | 88 |
| ஈரான் | 320 | 320 | 1961 | 38 |

விநியோகப் பிரிவு 1இன் கிராமப்புறப் பகுதிகளின் மின்சார விநியோகம் சிறப்பாக அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் 100%மும் பூர்த்தியடைந்துள்ளது. அத்தோடு கிராமப்புற மின்சார விநியோகத்திலும் நம்பகத்தன்மை, தர முகாமைத்துவம், சிறப்பான சேவை என்பன பேணப்பட்டு வருகின்றன.

### வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டம்

2009 மே மாத இறுதி வரை வட மாகாணத்தில் 30 வருட காலமாக போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அக்காலப் பகுதியில் யாழ். நகரை தவிர்த்து ஏனைய பிரதேசங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆயினும், போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பிரதேசம் முழுவதிற்கும் மின்சார வசதி வழங்கப்பட்டது



வட மாகாணத்தில் கிராமிய மின் விநியோகம்



வட மாகாணத்தில் கிராமிய மின் விநியோகப் பூர்த்தி

### கிராமிய மின் விநியோக கருத்திட்டம் - 8 (ஈரான்)

கிராமிய மின் விநியோகக் கருத்திட்டம் - 8 என்பதன் பிரதான நோக்கம் கிராமப் புறங்களுக்கு மின் விநியோகம் செய்தல். குறிப்பாக வட மேல் மாகாணத்தின் கிராமப்புறங்களுக்கு மின்சார வசதியை வழங்கல் என்பதாகும்.

# விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி

### கிராமிய மின்விநியோகக் கருத்திட்டம் - 4 (விரிவாக்கல்)

கிராமிய மின்விநியோகக் கருத்திட்டம் RE-4 என்பதன் பிரதான நோக்கம் வட மத்திய மாகாணத்தின் கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கல். இக்கருத்திட்டத்தின் வேலைத்திட்டங்களில் 100% பூர்த்தியடைந்துள்ளது. இதற்கு நோர்டியா வங்கி நிதியீட்டம் செய்தது.

### தேசத்திற்கு மகுடம்

தேசத்திற்கு மகுடம் எனும் தேசிய நிகழ்வு ஒயாமடுவ, அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இதற்கான மின் செலவு 425 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் பல்வேறு தேவைகளை முன்னிட்டு இது மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

| | தொழில்களின் எண்ணிக்கை | பதவிகளுக்கான கிரயம் |
|---|---|---|
| RE வேலைத்திட்டம் | 48 | ரூ. 463.4 மில்லியன் |
| RE விரிவாக்கல் | 130 | ரூ. 236.6 மில்லியன் |



தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி விழாவிற்கான 33 kV மின்சார கட்டுமானப் பணி நிகழ்வு

### கருத்திட்டங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகள்

இதனது பிரதான பொறுப்புகளாக அமைவது பிராந்தியத்தில் மத்திய வோல்ட் (MV) மின்சாரக் கட்டுமானப் பணிகளோடு பின்வரும் பணிகளும்

- 33 kV கோபுர மின்கம்பி மார்க்கங்கள்
- 33/11 kV ஆரம்ப உப மின் நிலையம்
- மின்கோபுரங்கள்
- தன்னியக்கக் கடத்திகள்
- முறிவுக் கடத்தி ஆளி
- உயர் அழுத்த மின்மாற்றி – பிரிவு 1

மத்திய வோல்ட் மின் விநியோக வலையமைப்பின் பராமரிப்புப் பணிகளை பராமரிப்பதற்கும், பொறுப்பேற்பதற்கும் விசேட ஆளணி, இயந்திர சாதனங்கள் காணப்படுகின்றன. இப்பராமரிப்புப் பணிக்காக தற்போது 140 பேர் ஊழியர்களாக உள்ளனர். இவர்களில் 18 பேர் மின்சார முகவர் நிறுவனங்களைச் சார்ந்தவர்களாவர். இப்பிராந்தியத்தில் 2012ஆம் ஆண்டில் இடம்பெற்ற பராமரிப்புப் பணிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| 33/11 kV ஆரம்ப நிலையிலான உபமின் நிலையங்கள் | 32 |
| மின் கோபுரங்கள் | 18 |
| தன்னியக்கக் கடத்திகள் | 77 |
| முறிவுக் கடத்தி ஆளி | 41 |
| உயரமுத்த மின்மாற்றி | 48 |
| 33kV கோபுர மின் இணைப்புகள் (கி.மீ.) | 1166 |

மின் விநியோகத்திற்கான தடைகள் ஏற்படாதவாறு மத்திய வோல்ட் கோபுரக் கம்பி மார்க்கங்களின் நாளாந்தப் பராமரிப்புப் பணிகள் 2011ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பிரதான நோக்கம் நம்பகத்தன்மையைப் பேணுதல் என்பதாகும். அவசர அழைப்பு செயற்பாடுகள் தொடர்பாக இலத்திரனியல் பரிசோதகர் ஒருவருக்கும், பொறியியலாளர் ஒருவருக்கும், 5 ஊழியர்களுக்கும் விசேட பயிற்சி இந்தியாவில் வழங்கப்பட்டது. தேவையான உபகரணங்கள், கருவிகள் அனைத்தும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றின் மூலம் தடங்கல் இல்லாத விரைவானதும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தக்கூடியதுமான சேவையை வழங்க முடியும்.

மின் பராமரிப்பு விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக 33 kV தூண் மின் இணைப்புகள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினைச் சிறப்பாகப் பேணிப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபையில் இருந்து சில ஊழியர்கள் தெரிவுசெய்யப்பட்டு, சிறப்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு, புதிய ஊழியர்கள் சிலரும் ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு விசேட பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீண்ட காலப் பாவனையுடனான மின் இணைப்பு 33 kVஐ வழங்குவதற்காக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்தோடு இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பப் பயிற்சிப் பணிப்பாளர்களுக்காக பயிற்சியளிப்பதற்காக பயிற்சி மத்திய நிலையம் 2014ஆம் ஆண்டில் அமையவுள்ளது. இது ஊழியர்களுக்கு சிறப்பான பயிற்சியை வழங்கும். இவற்றுக்கு மேலதிகமாக புதிய நிர்மாணிப்புகளுக்குரிய மத்திய வோல்ட் மின்சார அபிவிருத்தி யோசனைத் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் ஆரம்ப உப மின் நிலையங்கள் மத்திய வோல்ட் கோபுர மின் இணைப்பு மார்க்கங்கள் மற்றும் பாரந்துக்கிகளின் செயற்பாடுகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கான பொறுப்புகளும் இப்பிராந்தியத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

மத்திய வோல்ட் பிராந்தியம் 1 அபிவிருத்தித் திட்டம் 2010 - 2009, DGM (P&HM) RI எனும் பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ளன. இதில் பல்வேறு மின்கோபுரங்கள் அமைக்கப்பட்டு, மின்னிணைப்புகள் வழங்கப்பட்டன.

## விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி



நீடித்த வாழ்நாள் மின்னிணைப்பு 33 kV மின் கோபுரம்

இப்பிரிவானது ஆனையிறவு களப்புப் பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டிற்கான மின் இணைப்பை ஏற்படுத்துவதற்காக 33 kV இரட்டைச் சுற்றுக் கொண்ட மின் கம்பங்களையும், மின் கோபுரங்களையும் 4 கி.மீ. தூரம் நிர்மாண வேலைகளை மேற்கொண்டிருந்தது. இப்பகுதியின் நிர்மாண வேலைகள் யாவும் திறம்பட வடிவமைக்கப்பட்டிருந்ததனால், பல்வேறு பிரச்சினைகளும் தவிர்க்கப்பட்டன. குறிப்பாக இப்பிரதேசத்தின் சுற்றாடல், உவர்த்தன்மை, உப்பளம், விரைவில் துருப்பிடிக்கும் தன்மை என்பன.

யாழ்ப்பாணத்திற்கு மத்திய வோல்ட் மின்சார வலைப்பின்னல் இயக்கப்பாட்டு வசதிகளை வழங்குவதே DGM (P&HM) R1 பிரிவின் பொறுப்புகளில் ஒன்றாகும். 33 kV மின்சக்தியைக் கொண்ட 3 மின் நிலையங்கள் சுன்னாகத்தில் 2012ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. இது 24 MW மின்சக்தி கொண்ட “உத்துறு ஜனனி” டீசல் மின்சார நிலையமாக புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு வட மாகாணத்தில் அச்சுவேலி பிரதேசத்திலும் மின்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு CAARP நிறுவனம் நிதியீட்டம் செய்தது. இதற்கான செலவு ஏறத்தாழ 25 மில்லியன் ரூபா. இப்பகுதி வட மாகாணத்தின் ஒரு கைத்தொழில் மையமாகும்.

துல்கிரிய, நாரம்மல மின்கோபுரங்களை இணைத்து 20 km நீளமான பகுதிக்கு இரட்டைச் சுற்று கோபுர மின்னிணைப்பு வேலைத்திட்டம் பூர்த்தியடைந்துள்ளது. இதற்கான செலவு 250 மில்லியன் ரூபா. வாழைச்சேனையில் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்காகவும் அதனை மெருகூட்டுவதற்காகவும் DGM(P&HM)R2 பிரிவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க, வாழைச்சேனையில் 5 கி.மீ. நீளமான பகுதியில் இரட்டை மின்சுற்று கோபுர மின்னிணைப்பு 33 kV கட்டுமானப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன.

DGM (P&HM) R1 பிரிவினால் வடிவமைப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. கோபுர மின்னிணைப்பின் செயற்பாட்டு வடிவங்களை வடிவமைப்பதே இதன் பிரதான நோக்கமாகும். அத்தோடு அத்துறையில் கூடிய அறிவினையும், தேர்ச்சியையும் பெற்றுக்கொள்வதுமாகும். இதற்காக PLSCAD எனும் கோபுர மின் இணைப்பு தொடர்பான விசேட மென்பொருள் பக்கேச்சை கொள்வனவு செய்துள்ளது. 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாதம்பை – பிங்கிரிய, அநுராதபுரம் - கண்டுவெவா மற்றும் பொலநறுவை – ஜயந்திபுர பிரதேசங்களை இணைத்து 33 kV விரைவு மின்கோபுர மின்சார இணைப்பு வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்திருக்கின்றன. அத்தோடு இவ்வடிவமைப்பு நிலையமானது சகல MV மின்னிணைப்பு கோபுர மின் விநியோகம் தொடர்பான வடிவமைப்பு வேலைகளையும் மேற்கொள்ளும்.

சிவில் மேற்பார்வையாளர் மற்றும் சிவில் பொறியியலாளர்களின் மேற்பார்வையில் வேலைப்படை இயங்கி வருகின்றது. இதில் குறிப்பாக மேசன் குழாமும் மற்றும் தச்சுத் தொழிலாளர் குழாமும் காணப்படுகின்றன. இவர்கள் தமது செயற்பாடுகளை சிறப்புற மேற்கொண்டு வருகின்றனர். அவ்வேளை 2012ஆம் ஆண்டில் வேலைப்படைக் குழாமில் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு காணப்படுகின்றது. நில அளவை மற்றும் மண் பரிசோதனை நடவடிக்கைகளில் நவீன உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கடுவெல, கதுறுவெல, கஹட்டகஸ்திகிலிய எனும் இடங்களில் மூன்று மின்கோபுர நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ளன. மன்னம்பிட்டி, கனவெல்பொல, பிங்கிரிய எனும் இடங்களில் புதிய மின்கோபுரங்களை அமைப்பதற்காக காணிக் கொள்வனவுகள் இடம்பெற்று வருகின்றன. நாரம்மலவில் புதிய மின்கோபுர நிர்மாண நடவடிக்கைகளுக்காக காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பிரிவானது மின்னிணைப்பு தொடர்பான மின் கோபுர கட்டுமானப் பணிகளை 5 கி.மீ. தூர அளவு இடைவெளியில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

## விநியோகப் பிரிவு 1 தொடர்ச்சி



வடக்கின் உத்துறு ஜனனி மின் பிறப்பாக்கி நிலையம் (33 kV)



ஆனையிறவு களப்பில் 33 kV மின் கம்பங்களின் நிர்மாணிப்பு

### சமூக நிகழ்வுகள்

விநியோகப் பிரிவு 1 ஊழியர்கள் மின்சாரக் கட்டுமானப் பணிகளில் மட்டும் ஈடுபடாது, பல்வேறு சமூக நிகழ்வுகளிலும் பங்குபற்றுகின்றனர். அதன் முக்கிய நிகழ்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.



போயா தினத்தில் அநுராதபுரத்தில் பௌத்த மத பக்திப்பாடல் நிகழ்வு

# விநியோகப் பிரிவு 2

### செயற்பாட்டுக் கட்டமைப்பு

விநியோகப் பிரிவுக்கு தலைவராக மேலதிகப் பொது முகாமையாளர் ஆவார். இவர் பொது முகாமையாளரின் நேரடிக் கண்காணிப்பில் காணப்படுகின்றார். இவ்விநியோகப் பிரிவு 2ஆனது கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தின் வடக்குப் பகுதி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் தலைவராக பதில் பொது முகாமையாளர்கள் காணப்படுகின்றார்கள். ஒவ்வொரு மாகாணமும் அதன் நிர்வாகத்தை இலகுவாக்குவதற்காக பல்வேறு பிரதேச பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அவற்றின் பொறுப்புகள் தனித்தனி பிரதேச பொறியியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பிரதேசப் பிரிவுகள் மேலும் உப பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் என அழைக்கப்படுகின்றன. இப்பிரிவு 2இல் 20 பிரதேச அலுவலகங்களும், 58 வாடிக்கையாளர் சேவை நிறுவனங்களும் காணப்படுகின்றன. இதனால் இப்பிராந்தியத்தில் மின்சார நிர்வாக செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ள முடிகின்றது.

மாகாணங்களுக்கான பதில் பொது முகாமையாளர்கள் மூவரும் தமது பிரதேசங்களில் மின்சார விநியோகத்தை கருத்திட்டங்கள் திட்டமிடல், அபிவிருத்தி, பராமரிப்பு, வர்த்தகம், விநியோகம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். வர்த்தக மற்றும் கூட்டுறவுக் கிளையானது வருமானம் அதிகரிப்பு தொழில்நுட்பசார் குறைவான நட்டஈடு, மின்சக்தி முகாமைத்துவம், கணக்காய்வு மற்றும் மனித வள முகாமைத்துவம், அதன் அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. DD2 மின்மானி ஆய்வுகூடம், தலைமை அமைப்பு நிலையம் என்பவை வர்த்தக மற்றும் கூட்டுறவுக் கிளையின் பராமரிப்பின் கீழ் காணப்படுகின்றது. திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளையானது மின் விநியோக நம்பகத்தன்மை, நடுத்தர வோல்ட் மின் வலைப்பின்னல் அபிவிருத்தி, பிரதேச பகுதிக்குத் தேவையான சகல பொருட்களின் கொள்வனவு, மின் உற்பத்தி தொடர்பான வேலைகள், தொழில்நுட்பம்சார் இழப்பீடுகளைக் குறைத்தல், கிராமப்புறத்திற்கான மின் விநியோகம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கருத்திட்ட மற்றும் பராமரிப்புக் கிளையானது கட்டுமானப் பணி, 33 கி.வா. தெரு மின்கோபுர மின்னிணைப்பு வேலைகளின் பராமரிப்பு மற்றும் புனருத்தானம், LYNX மின்கடத்திகளைக் கொண்ட தெரு மின்கம்பங்களின் கட்டுமானப் பணி, 33 kV/11 kV மின்சக்தி கொண்ட உபமின் நிலையங்கள், 33 kV மின்கோபுர ஆளி மற்றும் உயர் அழுத்தம் கொண்ட தன்னியக்க மின்மானியைப் பொருத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கருத்திட்ட மற்றும் பராமரிப்புக் கிளையானது 33 கி.வா. தெரு மின்கோபுர மின்னிணைப்பு வேலைகளை மேற்கொண்டும், பராமரித்தும் வருகின்றது.

### செயற்பாட்டுப் பிரதேசம்

விநியோகப் பிரிவு 2இன் செயற்பாட்டு பிரதேசம் என்பதில் மொத்தக் கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணத்தின் ஒரு சில பகுதிகள், சப்பிரகமுவ மாகாணம் போன்ற மாகாணங்கள் அடங்குகின்றன. கிழக்கு மாகாணமானது அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை போன்ற வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய மாகாணமானது கேகாலை, மாவனல்லை, கண்டி நகரம், பேராதனை, குண்டசாலை, கட்டுகஸ்தோட்டை, கலகெதர, மாத்தளை, தம்புள்ள, நாவலப்பிட்டி போன்ற பன்னிரெண்டு பிரதேச வலயங்களைக் கொண்டுள்ளது. மேல் மாகாணமானது கம்பஹா, களனி, நீர்கொழும்பு, ஜா-எல, திவுலுப்பிட்டி, வெயாங்கொடை போன்ற 6 வலயப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் 4.98 மில்லியன் வாடிக்கையாளர்களில் 1,563,349 வாடிக்கையாளர்களை விநியோகப் பிரிவு 2 கொண்டுள்ளது

2012 ஆம் ஆண்டின் பிரிவு 2இன் முக்கிய அம்சங்கள்

| விவரணம் | அலகு | பெறுமதி |
|---|---|---|
| ஆண்டுக்கான பிராந்திய விற்பனை அலகுகள் | GWh | 2948 |
| மின் விற்பனையால் கிடைத்த வருமானம் | மில்லியன் ரூபா | 43283 |
| ஆண்டின் இறுதியில் மொத்த மின் வாடிக்கையாளர்கள் | எண்ணிக்கை | 1,563,349 |
| ஆண்டின் இறுதியில் சில்லறை மின் வாடிக்கையாளர்கள் | எண்ணிக்கை | 1,561,054 |
| ஆண்டில் புதிதாக வழங்கப்பட்ட மின் இணைப்புகள் | எண்ணிக்கை | 74604 |
| ஆண்டின் இறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 3826 |
| ஆண்டின் இறுதியில் மொத்த மின் நுகர்வு வாடிக்கையாளர்கள் | ரூபா/மாதம்/ பாவணையாளர் | 2295 |
| சராசரி வருமானம் (ரூ/ மாதாந்தம்/ வாடிக்கையாளர்) | எண்ணிக்கை/ ஊழியர் | 2307.17 |
| ஆண்டின் இறுதியில் ஊழியர் ஒருவருக்கான சராசரிச் சில்லறை மின் வாடிக்கையாளர்கள் | எண்ணிக்கை | 408 |
| பிரதேசங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 20 |
| CSC இன் எண்ணிக்கை | கி.மீ. | 58 |
| 33 கி.வா. மின் இணைப்பின் நீளம் | கி.மீ. | 7112.2 |
| 11 கி.வா. மின் இணைப்பின் நீளம் | கி.மீ. | 672.9 |
| குறை வோல்ட் விநியோக மின் இணைப்பு நீளம் | % | 29,611 |
| விநியோக இழப்பீடுகள் | எண்ணிக்கை | 10 |
| பிராந்தியத்தில் மின்கோபுர உப-மின் நிலையங்கள் | எண்ணிக்கை | 19 |
| 33/11 கி.வா. ஆரம்ப உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 39 |
| குறை வோல்ட் மின் விநியோக உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 5230 |
| NCRE பொறிகளின் எண் | எண்ணிக்கை | 24 |
| NCRE இயலளவுள்ள இயந்திரம் | MW | 51.34 |
| வீடுகளுக்கான மின் விநியோகம் | % | 83 |

## விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி




விநியோகப் பிராந்தியம் 2இன் எல்லைகள்




பல்வேறு இறுப்பு வகையின்படி (ஜி.வா.ம.) விற்பனை விநியோக பிரிவு 2




விநியோகப் பிராந்தியம் 2இன் வருமானம் மாகாணரீதியாக




பிராந்திய விநியோகப் பிரிவு 2இன் மின்சார வருமானம்




பிராந்தியம் 2இன் மின்சார விற்பனை




பிராந்தியம் 2இன் மின்சார வருமானம்

### 2012ஆம் ஆண்டு செயற்பாட்டுத் தகவல்கள்

### பிராந்தியம் 2இன் வர்த்தக மற்றும் கூட்டாண்மைக் கிளை

பிராந்தியம் 2இன் வர்த்தக மற்றும் கூட்டாண்மைக் கிளையின் தலைவராக பதில் பொது முகாமையாளர் காணப்படுகின்றார். இவர் பிராந்திய பொது முகாமையாளரின் கண்காணிப்பில் தனது கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்.

வர்த்தக மற்றும் கூட்டாண்மைக் கிளையின் பிரதான பணிகள்

1. பிரிவில் மின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
2. பிரிவில் மின்சக்தி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
3. பிரிவில் மனித வள முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்
4. மின்மானி ஆய்வுகூடப் பணிகளை மேற்கொள்ளல்

# விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

### 2012ஆம் ஆண்டில் வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய அம்சங்கள்

| | |
|---|---|
| 1 மெ.வா.க்குக் கூடிய புதிய மின் விநியோகம் | 22 MW (05 எண்.) |
| சட்டவிரோத மின் பாவனை மூலம் தவிர்க்கப்பட்ட நட்டம் | ரூ. 35,152,270/- |
| பிரதேசங்களில் மின் கணக்கு அறவீடு | ரூ. 18,597,095/- |

### இழப்பீட்டைக் குறைப்பதற்கான வேலைத்திட்டங்கள்

இழப்பீட்டைக் குறைப்பதற்கான வேலைத்திட்டங்களின் கீழ் தொழில்நுட்பம்சாரா நட்ட இழப்பைக் குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமாக தொழில்நுட்பம்சாரா நட்ட இழப்பீடுகளை இனங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கான புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு மின்சாரக் கணக்குகள் மூலம் பெறப்பட உள்ள கணக்கு நிலுவைகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பழைய கணக்கு நிலுவைகளைப் பெற்றுக்கொள்வதோடு புதிய கணக்குகளைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

### இலங்கை மின்சார சபைத் தலைமையலுவலக அழைப்பு நிலையம்

இலங்கை மின்சார சபையின் தலைமையலுவலக அழைப்பு நிலையம் 2012ஆம் ஆண்டில் வர்த்தக மற்றும் கூட்டாண்மை கிளைக்கு (DD2) கையளிக்கப்பட்டுள்ளது. இதனது நிருவாகத் தொழிற்பாடுகள் யாவும் பதில் பொது முகாமையாளர் (C&C) DD2 கிளையினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

### மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடம்

பிராந்திய விநியோகப் பிரிவு 2இற்கான மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடம் இல. 209, கண்டி வீதி, கிரிபத்கொடையில் அமைந்துள்ளது.

மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடத்தின் பிரதான பணிகள்

1. தனித்த நிலை (single phase) மற்றும் 3 நிலை (three phase) கொண்ட மின்சுற்று மின்மானியைப் பரிசோதித்தலும், பழுதுபார்த்தலும், தொலைநோக்கலும்
2. மொத்த மின் விற்பனை தொடர்பான மின்மானியைப் பரிசோதனையும், களப்பணியும்
3. மொத்த மின் விற்பனை வாடிக்கையாளர்களுக்கு மொத்த மின் விற்பனை மானியைப் பொருத்துதல்
4. மொத்த விற்பனை தொடர்பான மொத்த விற்பனை மின்மானியின் குறைபாடுகளைக் கண்டறிதலும், அவற்றை அகற்றுதலும்
5. மொத்த விற்பனை மின்மானியின் வாசிப்பு தொடர்பான சகல பிரச்சினைகளையும் தீர்த்துவைத்தல்

### 2012ஆம் ஆண்டு மின்மானி ஆய்வுகூடத்தின் முக்கிய அம்சங்கள்

| தொ.இல. | பூர்த்திசெய்யப்பட்ட வேலைகள் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மின்மானிப் பரிசோதனை | வீட்டு மின்மானி பரிசோதனைகள் | 72079 |
| | | 3-நிலை (three-phase) நேரடி இணைப்பு-மின்மானிப் பரிசோதனை | 2619 |
| | | மொத்த மின் விநியோக மின்மானி பரிசோதனை | 577 |
| | | பாதிக்கப்பட்ட மின் பிறப்பாக்கி நிலைய மாணிகள் | 16 |
| 2. | புதிய மின்மானிகளைப் பொருத்தல் | மொத்த மின் விநியோக மின்மானிகள் பொருத்தல் | 124 |
| | | மின்பிறப்பாக்கி நிலையத்தில் மின்மானி பொருத்தல் | 03 |
| 3. | மின்மானிகளை நீக்குதல் | மொத்த மின் விநியோக மின்மானிகள் | 88 |
| | | மின் பிறப்பாக்கி நிலையத்தில் மின்மானிகள் | 01 |
| 4. | மின்மானிப் பழுதுபார்த்தல்கள் | வீட்டு மின்மானிகள் பழுதுபார்த்தல் | 1191 |
| | | 3-நிலை (three-phase) நேரடி இணைப்பு மின்மானி | 215 |
| 5. | மின் வாசிப்பு தொடர்பான பிரச்சினைகள் தீர்வு | மொத்த மின் விநியோக மின்மானிகள் | 2541 |
| | | 3 – நிலை (three-phase) நேரடி மின் இணைப்பு மின்மானி | 23 |
| | | மின்மானி வாசிப்பு மானி இடவமைவு | 25 |

மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடமானது 1 நிலை (single phase) 3 – நிலை (three phase) மின்மானிப் பரிசோதனை தொடர்பாக புதிய உபகரணங்களை அண்மையில் கொள்வனவு செய்துள்ளது. இதன் மூலம் மின்மானிப் பரிசோதனையைத் திறம்பட மேற்கொள்ள முடியும். அத்தோடு மின்மானிப் பரிசோதனைகளை (IEC) சர்வதேச நியமங்களுக்கமைய மேற்கொள்ள முடியும். இத்தகைய உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் மின்மானிகள் வாடிக்கையாளர் வளவுகளில் பொருத்தப்பட்டுள்ளன.

# விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி



கிரிபத்கொடை 3 நிலை மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடம்

### விநியோகப் பிரிவு 2இன் மனித வளங்கள்

2012ஆம் ஆண்டின் இறுதியில் இவ்விநியோகப் பிரிவில் ஏறத்தாழ 3826 நிரந்தர ஊழியர்கள் காணப்பட்டனர். இவர்களது பதவி, தரம் தொடர்பான விபரங்களை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




. பதவிரீதியான ஊழியர் எண்ணிக்கை: விநியோகப் பிரிவு 2

### 31.12.2012இல் நிறுவன ஊழியர்கள் அல்லாதோர்

2012ஆம் ஆண்டின் இறுதியில் விநியோகப் பிரிவு 2இல் நிறுவனம்சாரா ஊழியர்களின் எண்ணிக்கை 1,652 ஆகும்.

### 33கி.வா. மின்கோபுர மின்னிணைப்பு கட்டுமான வேலைகள்

### 2012இல் பதவியணியினருக்கான பயிற்சிகள்

| தொ.இல. | தரம் | சாதிக்கப்பட்ட சதவீதம் |
|---|---|---|
| 1 | நடுத்தர மட்ட ஊழியர் | 100% |
| 2 | எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர்/SK | 60% |
| 3 | தேர்ச்சி தொடர்பான தரம் | 33% |
| 4 | சாரதிகள் | 56% |

### மனித வள தகவல் முறைமை (HRIS)

பிராந்தியம் 2 விநியோகப் பிரிவானது மனித வள முகாமைக்கான மனித வள தகவல் முறைமை தொடர்பான மென்பொருள் ஒன்றை அறிமுகஞ் செய்துள்ளது. இத்தகைய HRIS மென்பொருளினூடாக மனித வளம் தொடர்பான முகாமை, பயிற்சி, தேவையான அடிப்படைத் தகவல்கள் போன்றவற்றைப் பெறக்கூடியதாக உள்ளது.

### கருத்திட்டங்கள், பாரமான பராமரிப்பு கிளை

கருத்திட்டங்கள், பாரமான பராமரிப்புக் கிளையானது இரு அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இதில் ஒரு அலுவலகம் மேற்கு வலயத்தில் கம்பஹாவிலும், மற்றைய அலுவலகம் மத்திய வலயத்தில் கண்டியிலும் அமைந்துள்ளது. இவை 33 கி.வா. மின்சார மின்கோபுர இணைப்புகளைப் பராமரித்து வருகின்றன. அத்தோடு ஆரம்ப மின் உப நிலையங்கள், மின் கோபுரங்கள், தன்னியக்க மின் இயந்திரங்களைப் பொருத்துதல் மற்றும் CT/PT அலகுகளைப் பராமரித்து வருகின்றன. 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருத்திட்ட மற்றும் பராமரிப்புக் கிளையானது 2 வலயங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

### மேற்கு வலயம்
### பூர்த்தியாக்கப்பட்ட பிரதான கட்டுமானப் பணிகள்

1. 33 கி.வா. மற்றும் 11 கி.வா. LBS இணைப்புகள் 06.
2. 33 கி.வா. A/R பொருத்துதல் நடவடிக்கை 01.
3. மீரிகம தேவாலய மின்கோபுர கட்டுமானப் பணி
4. கட்டுநாயக்க அதிவேக பாதை 33 கி.வா. UG கேபிள் லைன் அமைப்பும், மீள்திருத்தமும்

### மேற்பார்வை நடவடிக்கைகள்

1. 2012ஆம் ஆண்டு காலத்தில் இப்பிராந்தியத்தின் முதன்மை மின்மாற்றிகளுக்கான எண்ணெய் நிரப்புதல் மற்றும் பராமரிப்பு வேலைகள் இடம்பெற்றன
2. அட்டவணைப்படுத்தப்பட்டவாறு மேல் மாகாணத்தின் வட பகுதி, மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் போன்ற பகுதிகளில் AR வேலைகள் பூரணப்படுத்தப்பட்டதோடு, மின்கோபுர மேற்பார்வை நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

| தொழில் | மாகாணம் | நீளம் (கி.மீ.) | செலவு ரூபா |
|---|---|---|---|
| கினிகத்தகென - இம்புல்பிட்டிய | மத்.மா. | 8.1 | 13,626,600 |
| இம்புல்பிட்டிய – உலப்பனை/சிங்கப்பிட்டிய | மத்.மா. | 7.7 | 27,721,700 |
| மட்டக்களப்பு – வாழைச்சேனை நிலை III (17-35) | கி.மா. | 5 | 2,915,000 |
| கால சந்தி – மங்கட வீதி | மே.மா.வ. | 2.5 | 19,672,000 |
| மட்டக்களப்பு – வாழைச்சேனை நிலை II | கி.மா. | 10 | 4,131,000 |
| **மொத்தம்** | | | **88,066,300** |

## விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

| கோல்ட் லைன் பராமரிப்பு - 2012 | | | | |
|---|---|---|---|---|
| பிரதேசம் | மின்னிணைப்பு கோபுரம் | கோபுரங்களின் எண்ணிக்கை | சராசரி நீளம் (கி.மீ.) | செலவு (ரூபா) |
| நீர்கொழும்பு | கொட்டுகொட – கட்டுநாயக்க கோபுர இணைப்பு | 36 | 7 | 1,862,695 |
| மாவனல்ல | எத்துறபொத்த – மாவனல்ல கோபுர இணைப்பு | 61 | 14 | 1,330,509 |
| கேகாலை | துல்கிரிய – எத்துறபொத்த கோபுர இணைப்பு | 61 | 18 | 1,787,608 |
| கம்பஹா | பூகொடை – கொஸ்கம கோபுர இணைப்பு | 28 | 6 | 386,244 |
| களனி | பியகம GSS – பியகம BOI கோபுர இணைப்பு | 37 | 5.5 | 6,839,789 |
| கேகாலை | துல்கிரிய GSS – வரக்காப்பொல சட்டகம் | 27 | 5 | 357,902 |
| கம்பஹா | இமுல்கொட – பண்டியமுல்ல கோபுர இணைப்பு | 30 | 4.8 | 485,000 |
| கம்பஹா | கொட்டுகொட GSS – பண்டியமுல்ல கோபுர இணைப்பு | 58 | 12 | 829,691 |
| வெயாங்கொடை | வெயாங்கொடை GSS – மல்வத்தை சட்டகம் | 25 | 7 | 921,967 |
| மாவனல்ல | எத்துறபொத்த – மொலகொட கோபுர இணைப்பு சட்டகம் | 33 | 8 | 742,111 |
| கேகாலை | எத்துறபொத்த – புளத்கொஹுபிட்டிய | 100 | 20 | 1,045,475 |
| மாவனல்ல | மாவனல்ல – கடுகண்ணாவை | 26 | 4 | 1,505,996 |
| **மொத்தச் செலவு** | | | | **18,094,987** |

| 33 கி.வா. மின்கோபுர இணைப்புகளின் புனருத்தாபனம் - 2012 | | | | |
|---|---|---|---|---|
| பிரதேசம் | மின் கோபுரம் | கோபுரங்களின் எண்ணிக்கை | சராசரி நீளம் (கி.மீ.) | செலவு (ரூ.) |
| ஜா-எல | தலுப்பிட்டிய - மாபோல | 16 | 3 | 12,467,928 |

### மத்திய வலயம்

### 33கி.வா. மின்கோபுர மின்னிணைப்பு கட்டுமான வேலைகள்

### பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் விபரம்

| வேலைகளின் விபரம் | மாகாணம் | விபரம் | நீளம்/கி.மீ. | செலவு /மில்.ரூ. |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு – வாழைச்சேனை நிலை 3 | கி.மா. | 33kV DC Lynx | 7.2 | 80.4 |
| மட்டக்களப்பு – வாழைச்சேனை நிலை 4 | கி.மா. | 33kV DC Lynx | 5 | 90 |

### மின் இணைப்பு மேற்பார்வை வேலைகள்

கருத்திட்டங்கள் மற்றும் பராமரிப்புக் கிளையின் பணிகளில் ஒன்றாக இம்மின்னிணைப்பு மேற்பார்வை வேலைகளும் அடங்குகின்றன. அந்த வகையில் மத்திய வலய அலுவலகமானது கண்டி, மாத்தளை, பேராதனை, குண்டசாலை, கட்டுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, கலகெதர, கண்டி நகரம், தம்புள்ளை, அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் அமைந்துள்ள 33 கி.வா. மின் கோபுரங்கள், மின் இணைப்புகளை பராமரித்து வருகின்றது. 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு வேலைகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| கோல்ட் லைன் பராமரிப்பு | | | | |
|---|---|---|---|---|
| பிரதேசம் | மின்கோபுர மின்னிணைப்பு | மின்கோபுரங்களின் எண்ணிக்கை | மின்னிணைப்பின் சராசரி நீளம் (கி.மீ.) | செலவு (ரூ.) |
| பேராதனை | எரியகம – கலஹா | 93 | 15.30 | 1,242,849 |
| திருகோணமலை | திருகோணமலை – கித்துளுதுவ | 100 | 28.00 | 1,326,968 |
| | திருகோணமலை – மொரவெவ | 83 | 20.75 | 783,455 |
| குண்டசாலை | கரலியத்த – மஹியங்கணை – ரந்தெனிகல | 149 | 27.00 | 1,525,028 |
| **மொத்தம்** | | | | **4,878,300** |

# விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

| அவசர மின் இணைப்புப் பராமரிப்பு | | | | |
|---|---|---|---|---|
| பிரதேசம் | மின்கோபுர மின்னிணைப்பு | மின்கோபுரங்களின் எண்ணிக்கை | மின்னிணைப்பின் சராசரி நீளம் (கி.மீ.) | செலவு (ரூ.) |
| கேகாலை | கேகாலைப் பிரதேசம் | 64 | 21.00 | 576,085 |
| திருகோணமலை | திருகோணமலை – மொரவெவ | | | |
| | திருகோணமலை – கித்துளுதுவ | 382 | 104.20 | 259,787 |
| நுவரெலியா | நாவலப்பிட்டிப் பிரதேசம் | 188 | 59.00 | 1,538,596 |
| மொத்தம் | | | | **2,374,468** |

| உடைந்த / முறிவடைந்த மின்கோபுர இணைப்பு மீள் அமைப்பு வேலைகள் 2012 | | |
|---|---|---|
| பிரதேசம்/மின்னிணைப்பு | வேலை | செலவு |
| நாவலப்பிட்டி | 33 கி.வா. மின்னிணைப்புப் பராமரிப்பு | 1,718,456 |
| | உலப்பனை மின்கோபுரப் பராமரிப்பு | 53,675 |
| | தொலஸ்பகே மின்கோபுரப் பராமரிப்பு | 109,289 |
| | வற்றாப்பளை மின்கோபுரப் பராமரிப்பு | 89,662 |
| | கம்பளை | 53,410 |
| | தொலஸ்பகே மின்கோபுர முறிவு | 807,820 |
| கட்டுகஸ்தோட்டை | கட்டுகஸ்தோட்டை மின்கோபுர முறிவு | 214,882 |
| | வளலை உக்குவலை மின்னிணைப்பு தாழ்த்தும் வேலை | 565,860 |
| மாத்தளை | உக்குவலை நெய்யரி உபமின் நிலையம் | 41,494 |
| மொத்தம் | | **3,654,549** |

மின்கோபுரக் கட்டுமானப் பணிகள்





## விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

### மின்னிணைப்பு பராமரிப்பு வேலைகள்





### திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளையின் திட்டமிடல், அபிவிருத்தி நடவடிக்கைகளை பதில் பொது முகாமையாளர் மேற்கொண்டு வருகின்றார். பதில் பொது முகாமையாளர் அவர்களின் கீழ் இரு பிரதம இலத்திரனியல் பொறியியலாளர்களும், ஆறு இலத்திரனியல் பொறியியலாளர்களும், காணப்படுகின்றனர்.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளையானது வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையைப் பேணுதல் நடுத்தர/மத்திய வோல்ட் மின்வலையமைப்பு அபிவிருத்தி, மூலப்பொருள் கொள்வனவு, மின்பிறப்பாக்கிகள் தொடர்பான வேலைகள், நட்ட இழப்பீடுகளைக் குறைக்கும் நடவடிக்கைகள், கிராமத்திற்கு மின்னூட்டல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மத்திய/நடுத்தர வோல்ட் மின் விநியோக அபிவிருத்தி மற்றும் அவற்றின் மேம்பாடு, பராமரிப்பு, மத்திய வோல்ட் மின்சார வலையமைப்பு வேலைகளே இதனது பிரதான பணிகளாகும்.

### திட்டமிடல்

இவ்வலகானது மாகாணத் திட்டமிடல் அமைப்புடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றது. ஆண்டுக்கான நடுத்தர வோல்ட் MV மற்றும் குறைந்த வோல்ட் MV மின்சார வலையமைப்புப் பணிகளைத் திட்டமிடல் மற்றும் பிரேரணைகளை மேற்கொள்ளல் மற்றும் மத்திய/ நடுத்தர வோல்ட் MV மின்சார வலையமைப்பு தொடர்பான நீண்ட காலத் திட்டங்களை வகுத்தல், அவற்றுக்கான பிரேரணைகளை மேற்கொள்ளல் என்பவை இவ்வலகின் முக்கிய பணிகளாக அமைகின்றன.

2012ஆம் ஆண்டு மத்திய வோல்ட் தொடர்பான பிரேரணையை நடைமுறைப்படுத்து வதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. வாகனங்கள், உபகரணங்கள் போன்றவற்றின் பற்றாக் குறையான தன்மையும் ஒப்பந்தகாரர்களது சூழ்நிலையுமே இதற்கான காரணங்களாகும். மத்திய வோல்ட் மின்சாரப் பிரேரணையானது குறிப்பிட்ட ஆண்டில் நடைமுறைப்டுத்தப் படாததினால் மின் தொடர்பான நட்ட இழப்பீடு, மின்னின் பண்புசார் தரம் போன்றவற்றைச் சரியாகப் பேண முடியவில்லை.

இக்கிளையானது ஒவ்வொரு அலகினாலும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளைக் கண்காணித்து வருகின்றது. பேரளவான கட்டுமான வேலைகளான மின்கோபுரங்கள், பாரந்தூக்கிகள், ஆரம்ப உபமின் நிலையங்களைப் புதுப்பித்தல் மற்றும் அவற்றின் கட்டுமானப் பணிகள் யாவும் கருத்திட்ட மற்றும் பராமரிப்பு அலகினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மற்றைய வேலைகள் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### மூலப்பொருள் முகாமைத்துவம்

மூலப்பொருள் தொடர்பான முகாமைத்துவத்தைப் பேணுதல் திட்டமிடல் அபிவிருத்திக் கிளையின் பிரதான பொறுப்புகளில் ஒன்றாகும். இக்கிளையின் பிரதான இலத்திரனியல் பொறியியலாளர் மூலப்பொருள் முகாமைத்துவம், மூலப்பொருளைத் திட்டமிடல், மூலப்பொருள் கொள்வனவு சம்பந்தமான பெறுவனவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.

2012ஆம் ஆண்டில் மூலப்பொருள் பெறுவனவு தொடர்பான திட்டமிடலையும், அவற்றுக்கான உண்மைச் செலவினையும் வரைபடம் காட்டுகின்றது.



# விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

### கிராமிய மின்சாரம்

பிரிவு 2 விநியோகப் பிரிவினுள் 3 மாகாணங்கள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றிலும் கிராமிய மின்சாரக் கருத்திட்டங்கள் பல அமைந்துள்ளன. இக்கருத் திட்டங்களுக்கான நிதியீடு வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமாகவோ, மத்தியமயப்படுத் தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மூலமாகவோ, மாகாண வரவு செலவுத் திட்டத்தின் மூலமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கிராமிய மின்சார வேலைகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| மாகாணம் | வேலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கிழக்கு | 411 |
| மத்திய | 794 |
| மேல் மாகாணத்தில் வட பகுதி | 332 |

### கருத்திட்டங்களின் பொழிப்பு

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் திட்டமிடல் மற்றும் விநியோகக் கிளையினால் ஒவ்வொரு கருத்திட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

- ADBஇன் தொழில்நுட்ப ஆலோசகர்களின் வழிகாட்டல்களின்படி மத்திய வோல்ட் தொடர்பான விநியோக இழப்பீடுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும், தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மின் கட்டுமான விஸ்தரிப்பு தொடர்பாக சக்தி மற்றும் வினைத்திறனான வலையமைப்பு மேம்படுத்தல் கருத்திட்டத்தின் மூலம் 130 கி.மீ. நீளமான தூரத்திற்கு 33 கி.வா. DC மின்கோபுர இணைப்பு வேலைகள் 05 எண்ணிக்கையுடைய 33 கி.வா. மின்கோபுரங்களை அமைப்பதன் மூலம் பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஆசிய வங்கி நிதியீட்டம் செய்திருந்தது.
- சக்தி மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டம் பகுதி 03 துண்டு இல. 3இன் கீழ் மின் விநியோக விஸ்தரிப்பு வேலைகள் தொடர்பில் 33 கி.வா. மின்கோபுர மின்னிணைப்புகளை பிரேரிக்கப்பட்டுள்ள ஆரம்ப உபமின் நிலையங்களான கிரிபத்கொடை, கட்டுநாயக்கா. நாவல, கொட்டிகாவத்தை நிலையங்களுக்கு விநியோகிக்க முடியும். இதற்கான நிதியீட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியாகும்.
- கிழக்கு மாகாணத்தை வெளிச்சமூட்டல் கருத்திட்டத்திற்காக 2012ஆம் ஆண்டு மே மாதம் சீனா சைனா எக்ஸிம் வங்கி மற்றும் GOSLஉடன் கடன் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.
- திருகோணமலை உள்ளாந்த மின் உட்கட்டமைப்புக் கருத்திட்டம் (TIIP) 2012 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. இதற்கான நிதியீட்டம் பிரான்ஸ்.
- வறுமையைக் குறைப்பதற்காக யப்பான் நாட்டு உதவியால் மேற்கொள்ளப்படும் JFPR அமைப்பின் 9158 இலக்க கருத்திட்டத்தினால் வழங்கப்படும் நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி என்பவற்றின் உதவியுடன் கிராமப்புறங்களில் மின்சார வேலைகள் புத்துருவாக்கம் செய்யப்பட்டன.
- JICA அளவைக் குழுவின் தொழில்நுட்பவியலாளர்கள் வினைத்திறமையான மின்சார விநியோகம் எனும் முறைமையின் கீழ் தகவல் சேகரிப்பு மற்றும் அளவை நடவடிக்கைகள் இடம்பெற்றன.
- பதிலீட்டு வலு உதவிப் பிரிவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டில் மூலப்பொருட்கள் கிராமப்புறங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

### கட்டுமான முன்னேற்றப் பணிகள் - 2012

#### கிழக்கு மாகாணம்

| நிதியீட்டம் | வேலைகளின் எண்ணிக்கை | பணிகளின் அளவு | | | | | செலவினம் மில்.ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | HT (கி.மீ.) | LT (கி.மீ.) | S/S (எண்) | 1-3 Ph (கி.மீ.) | 2-3 Ph (கி.மீ.) | |
| பன்முக வரவு செலவுத் திட்டம் | 74 | | 7.87 | | | | 9.49 |
| மாகாண சபை வரவு செலவு | 21 | | 2.89 | | | | 3.34 |
| AREP | 5 | 11.7 | 38.1 | 6 | | | 80.34 |
| BS | 45 | 11.55 | - | 44 | | | 114.13 |
| செலவின அறவீடு | 88 | 0.66 | 2.19 | 6 | | | 74.66 |
| கிராமிய மின்னூட்டல்-08 | 27 | 7.56 | 46.93 | 3 | | | 78.99 |
| கிழக்கிற்கு வெளிச்ச மூட்டல் | 58 | 3.872 | 41.41 | 3 | | | 63.62 |
| SYA | 44 | 13.1 | 3.63 | 8 | 8.15 | | 32.73 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 94 | 21.31 | 147.1 | 10 | 6.042 | 0.04 | 242.92 |
| NN | 216 | 58.42 | 438.95 | 49 | 26.310 | 1.03 | 775.68 |
| ஊவா உதனய | 4 | 4.89 | 32.66 | 4 | | | 54.72 |
| விசேட நிதி (சபையின்) | 4 | 9.71 | - | 1 | | | 28.83 |
| மொத்தம் | **680** | **142.8** | **822.81** | **134** | | | **1,559.45** |

AREP - கிராமிய மின்சாரத்தை துரிதப்படுத்தல் கருத்திட்டம்,

ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி , NN - கிழக்கின் உதயம்

## விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

### மேல் மாகாணத்தின் வடக்குப் பகுதி

| நிதியீட்டம் | வேலைகளின் எண்ணிக்கை | பணிகளின் அளவு | | | செலவு மில்.ரூ. |
|---|---|---|---|---|---|
| | | உயர் அழுத்தம் (கி.மீ.) | குறை அழுத்தம் (கி.மீ.) | உபமின் (எண்.) | |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 3 | - | 0.274 | - | 0.18 |
| மாகாண சபை வரவு செலவுத் திட்டம் | 22 | - | 2.087 | - | 2.47 |
| புத்துருவாக்கல் வேலை | 69 | 2.898 | 30.142 | 22 | 115.48 |
| ரண் அருண திட்டம் | 332 | - | 51 | 1 | 93.00 |
| மின் இணைப்பு மேற்பார்வை வேலைகள் | 108 | 75.216 | 2.1 | 30 | 59.82 |

### மத்திய மாகாணம்

| நிதியீட்டம் | | வேலைகளின் எண்ணிக்கை | பணிகளின் அளவு | | | செலவு மில்.ரூ |
|---|---|---|---|---|---|---|
| | | | உயர் அழுத்தம் (கி.மீ.) | குறை அழுத்தம் (கி.மீ.) | உபமின் | |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | | 139 | 0 | 24.15 | | 27.70 |
| மாகாண சபை வரவு செலவுத் திட்டம் | | 396 | 2 | 70.68 | 2 | 102.03 |
| செலவின அறவீடு | தொகை வழங்கல் | 83 | 17.98 | 0.65 | 65 | 179.44 |
| | விநியோகம் | 72 | 48.49 | 30.01 | 16 | 166.38 |
| புத்துருவாக்கல் முறைமை | | 185 | 14.81 | 98.32 | 7 | 72.48 |
| துரித கிராமிய ஒளியூட்டல் | | 30 | 26.05 | 60.62 | 11 | 150.83 |
| மத்திய மாகாணத்திற்கு ஒளியூட்டல் | | 111 | 1.56 | 49.78 | 3 | 76.81 |
| கேகாலை மாவட்டத்திற்கு ஒளியூட்டல் | | 27 | 1.65 | 9.3 | 2 | 17.07 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் - 8 | | 850 | 38.82 | 421.98 | 48 | 759.58 |
| ரண் அருண கருத்திட்டம் | | | | | | |
| SIDA | | 9 | 16.45 | 26.68 | 9 | 84.01 |

### 2012ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட குறை வோல்ட் மற்றும் மத்திய வோல்ட் மின்னிணைப்பு அபிவிருத்தி வேலைகள்

| மாகாணம் | புதிய உபமின் விநியோக நிலையங்கள் (எண்) | உபமின் விநியோக நிலையங்கள் புத்துருவாக்கல் (எண்) | புதிய மத்திய வோல்ட் மின் இணைப்பு (கி.மீ.) | புதிய குறை வோல்ட் மின்னிணைப்பு (கி.மீ.) | குறை வோல்ட் மின் இணைப்பு திருத்தல் (கி.மீ.) |
|---|---|---|---|---|---|
| மேல்மாகாண வடக்குப் பகுதி | 22 | 9 | 2.898 | 6.679 | 23.463 |
| மத்திய மாகாணம் | 90 | 3 | 121.5 | 822.8 | 41.5 |

### மின்சக்தி முகாமைத்துவ அலகு

1) சாதாரண மின் விநியோக மின்மானிச் சோதனை

அ) ஒரு இணைப்பு மின்மானிச் சோதனையின் விபரம்

| விடயம் | மேல் மாகாண வட பகுதி | மத்திய மாகாணம் |
|---|---|---|
| மின்மானிப் பரிசோதனை | 7494 | 1573 |
| பழுதான மின்மானி நீக்கம் | 726 | 95 |
| விநியோக நிலைய ஏற்பாடுகள் | | |
| மின்மானி கட்அவுட் | 913 | |
| புதிய கட்அவுட்களைப் பொருத்துதல் | 122 | |
| பழுதுபார்க்கப்பட்ட மானிகள் | 62 | |
| மின்மானிகளுக்கு பெட்டி பொருத்துதல் | 1283 | |
| சோதனைக்கு உட்படுத்தப்பட்டவை | 130 | 75 |

ஆ) மூன்று இணைப்பு மின்மானிச் சோதனையின் விபரம்

| விடயம் | மேல் மாகாண வட பகுதி | மத்திய மாகாணம் |
|---|---|---|
| மின்மானிப் பரிசோதனை | 3544 | 869 |
| பழுதான மின்மானி நீக்கம் | 174 | |
| விநியோக நிலைய ஏற்பாடுகள் | 98 | 211 |
| வாடிக்கையாளர் சுமைகளை அளவிடுதல் | 22 | 21 |
| அனலொக் வகை மின்மானி நீக்கி புதிய மின்மானி பொருத்துதல் | 57 | 170 |

# விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி

2) மொத்த வழங்கல் மின் விநியோக மின்மானிச் சோதனை

| விடயம் | மேல் மாகாண வட பகுதி | மத்திய மாகாணம் |
|---|---|---|
| நாளாந்தம் மின்மானிப் பரிசோதனை | 951 | 591 |
| AEE கோரிக்கையின் கீழ் மின்மானிப் பரிசோதனை | 48 | |
| பழுதான மின்மானி நீக்கம் | 93 | |
| மின்மானித் திருத்தம், புத்துருவாக்கல் | 15 | |
| புதிய மின் இணைப்புகளுக்கான மின்மானி பொருத்துதல் | 63 | |
| மின்மானி விசாரணை | 106 | |
| HT மின்மானி வயர்சுற்று, CT/PT இணைப்பு வேறுபாடுகள் | 09 | |
| மின்பிறப்பாக்கிகளுக்கான மின்மானியைப் பொருத்துதல் | 20 | |
| மின்மானி இடம் மாற்றிப் பொருத்துதல் | 01 | |

**2012 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்**

**மேல் மாகாணத்தின் வட பகுதி**

» **அழைப்பு நிலையத்தின் ஆரம்பம் - மே.மா.வ.**

கம்பஹா பிரதேசத்தில் மின்சார வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான, சிறப்பான சேவையை வழங்குவதற்காக அழைப்பு நிலையம் என்ற ஒன்றை மேல் மாகாணத்தில் பதில் முகாமையாளர் அலுவலகத்தில் நிறுவியிருத்தல். இதன் மூலம் 20 வாடிக்கையாளர் களுக்கு ஒரே நேரத்தில் பயனளிக்க முடியும்.

011 5 988988 என்ற இலக்கத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. மின் தடை, மின் வெட்டு போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
2. சட்டவிரோத மின்பாவனை பற்றி முறைப்பாடு செய்ய முடியும்.
3. மின் தடை, மின்வெட்டு அட்டவணை நேரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.
4. இலங்கை மின்சார சபை – மேல் மாகாண வடக்குப் பகுதி தொடர்பான சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.



**கிழக்கு மாகாணம்**

» **மின்சக்தி, மின்சாரம் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு மின்சக்தி தொடர்பான அறிவூட்டல் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.



கலந்துரையாடல், கருத்திட்டங்கள் என்பன திருகோணமலை றோயல் கல்லூரியில் இடம்பெறுகின்றன

» **கிராமப்புறங்களில் இடம்பெயர் சேவை**

2012ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் மூன்று இடம்பெயர் சேவைகள் நடாத்தப்பட்டன. இதனால் கிராமப்புற மக்கள் பெரிதும் நன்மை பெற்றனர். தெகியத்தகண்டி, பதியத்தலாவை, கந்தளாய் போன்ற இடங்களில் இவ் இடம்பெயர் சேவைகள் இடம்பெற்றன. இத்தகைய நிகழ்வினால் கிராமப்புறங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.

இடம்பெயர் சேவையில் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.

- வாடிக்கையாளர்களுக்கு ஒரு நாளிலேயே மின்சார இணைப்பு வழங்கப்பட்டது.
- ஒரு நாளிலேயே விண்ணப்பப்படிவங்களை ஏற்றல், அவை தொடர்பான மதிப்பீடு தயாரித்தல், கொடுப்பனவுகளைப் பெறுதல் மற்றும் புதிய மின் இணைப்பும் வழங்கப்பட்டன.
- மின்சாரப் பட்டியல் தொடர்பான பிணக்குகள் தீர்க்கப்பட்டன.
- பெறவேண்டிய மின்சாரக் கட்டணங்கள் பெறப்பட்டன.
- வாடிக்கையாளர் தொடர்பான பிரச்சினைகள், முறைப்பாடுகள் என்பன தீர்த்து வைக்கப்பட்டன.

## விநியோகப் பிரிவு 2 தொடர்ச்சி



கந்தளாய்ப் பிரதேசத்தில் இடம்பெயர் சேவை

- **மொத்த மற்றும் சாதாரண பாவனையாளர்கள் பகுதிரீதியாக பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டன**

  பிரதேசரீதியாக நுகர்வோர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. மின் சாதாரண நுகர்வு மற்றும் தொகைரீதியான நுகர்வு தொடர்பாக நுகர்வோர் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. பிரதேச ரீதியாக கூட்டங்களை நடாத்துவதனூடே பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, கலந்துரையாடப்பட்டு அவற்றுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. அத்தோடு மின்சார அறிவு பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டன.

### மத்திய மாகாணம்

வாடிக்கையாளர்களுக்கிடையே கலை மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் தொடர்பான விழிப்புணர்ச்சி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### விநியோகப் பிராந்தியம் 02 இல் 5S எண்ணக் கருதுகோள் நடவடிக்கைகள்

இலங்கை மின்சார சபை வாடிக்கையாளர்களது நன்மை கருதி 5S எண்ணக் கருதுகோள் நடவடிகடகைகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய 5S நிகழ்ச்சித்திட்டத்தில் 2012ஆம் ஆண்டு பின்வரும் நிறுவனங்கள் பரிசில்களைப் பெற்றன

- பிராந்திய அலுவலகம் - களனி - முதலாம் இடம்
- பிராந்திய அலுவலகம் - திவுலுப்பிட்டிய - இரண்டாம் இடம்
- DGM (C&C) அலுவலகம் - மூன்றாம் இடம்
- DGM (கிழக்கு) அலுவலகம் - அதியுயர் விருது
- பிராந்திய அலுவலகம் - பேராதனை – அதியுயர் விருது

### குண்டசாலை பிரதேசம்

- ISO 9001:2008 தர முகாமைத்துவச் சான்றிதழைப் பெற்றது.
- ஆஏ முறைமையை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் தன்னியக்க முறையின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 5S போட்டியில் TAIKI AKIMOTO பரிசு பெறப்பட்டது.
  - Kaizen விருது
  - துறைரீதியான வெகுமதிகள் (குறைந்த அளவீடு சேவை)
  - திறமையான 1ஆவது இறுதிப்போட்டி சுற்றுத் தேர்வு விருது
- தேசிய உற்பத்திச் செயலகத்தினால் நடாத்தப்படும் போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவில் 1ஆம் இடத்திற்கான விருது
- தும்பறா CSC எனும் இலங்கை மின்சார சபையினால் நடாத்தப்படும் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தெரிவில் 1ஆம் இடம் பெற்றதற்கான விருதுகள்

# விநியோகப் பிராந்தியம் 3

## ஆண்டுக்கான விசேட அம்சங்கள்

| விவரணம் | அலகு | பெறுமதி |
|---|---|---|
| 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிராந்தியத்தின் விற்பனை அலகுகள் | (கி.வா.ம.) | 1938 |
| மின்சார அலகுகள் மூலம் விற்பனை வருமானம் | (மில்.ரூ.) | 27,934 |
| சராசரி விற்பனை வலை | (ரூ./கி.வா.ம.) | 14.41 |
| விநியோக நட்டங்கள் | % | 10.3 |
| பெறக்கூடிய நிலையிலுள்ளவை | (மாதங்கள்) | 0.96 |
| வருட இறுதிக்குள் சில்லறை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | (எண்.) | 1,208,772 |
| ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட புதிய இணைப்புகள் | (எண்.) | 56,831 |
| ஆண்டு இறுதியில் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | (எண்.) | 2,867 |
| வருட இறுதிக்குள் மொத்த விற்பனை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | (எண்.) | 1,814 |
| மாதம் ஒன்றுக்கான ஒரு பாவனை யாளருக்கான சராசரி வருமானம | (ரூ./மாதம்/ பாவனையாளர்) | 1923 |
| வருட இறுதியில் ஒரு உபமின் நிலையத்தின் சராசரி சில்லறை வாடிக்கையாளர்கள் | (எண்.) | 422 |
| வருட இறுதியில் உபமின் நிலையம் ஒன்றுக்கான சராசரி மொத்த மின் நுகர்வு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | (எண்.) | 263 |
| ஊழியர் ஒருவருக்கான குறைந்த வோல்ட் இணைப்புகளின் சராசரி | (கி.மீ./ஊழியர்) | 9.4 |
| வாடிக்கையாளர் ஒருவருக்கான குறைந்த வோல்ட் இணைப்புகளின் சராசரி | (மீ./ பாவனையாளர்) | 22.36 |
| உபமின் நிலையம் ஒன்றுக்கான குறைந்த வோல்ட் இணைப்புகளின் சராசரி | (கி.மீ./உ.ப) | 1.5 |
| மின்சாரமயப்படுத்தலின் நிலை | % | 90.0 |
| 33/11 கே.வி ஆரம்ப உதவி நிலையங்கள் | (எண்.) | 39 |
| எல்வி. விநி.உதவி நிலையங்கள் | (எண்.) | 5230 |
| NCRC சக்தி ஆலைகளின் எண்ணிக்கை | (எண்.) | 24 |
| நிறுவப்பட்டுள்ள NCRC களின் கொள்ளளவு | MW | 51.34 |
| மின்சார மயமாக்கப்பட்ட வீட்டுப் பொருள் (வீதம்) | % | 83 |

விநியோகப் பிரிவு 03ஆனது சப்ரகமுவ மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணத்தின் தெற்குப் பகுதியையும் கொண்டுள்ளது. இங்கு மேல் மாகாணத்தின் தெற்குப் பகுதி எனக் குறிப்பிடும் போது ஹோமாகம, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, அவிசாவளை, ஹொரணை ஆகிய பிரதேசங்களைக் கொண்டுள்ளது. சப்ரகமுவ மாகாணமானது இரத்தினபுரி மாவட்டம், கேகாலைப் பிரதேசத்தின் ஒரு சில பகுதிகள், நுவரெலியா மாவட்டம் என்பவற்றைக் கொண்டுள்ளது. ஊவா மாகாணம் எனக் குறிப்பிடும் போது பதுளை, மொனராகலை, நுவரெலியா மாவட்டத்தின் ஒரு சில பகுதிகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. பிரிவு 03 இலங்கைத் தீவின் நிலப்பரப்பில் ஏறத்தாழ 23%ஐக் கொண்டுள்ளது. இப்பிரிவின் மொத்தக் குடித்தொகை ஏறத்தாழ 5.7 மில்லியனாகும். மின் விநியோக அறிக்கையின் பிரகாரம் மின் நுகர்வானது மேல் மாகாணத்தின் தெற்கு 02 பகுதி 99%ஆகவும் ஆகக்குறைந்த மின் நுகர்வு மட்டமானது 84% ஊவா மாகாணத்திலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. சப்ரகமுவ மாகாணத்தின் மின் நுகர்வு மட்டமானது 92% ஆகும்.

பொதுவாக இப்பிராந்தியத்தில் ஒரு ஆண்டுகாலப் பகுதியில் வாடிக்கையாளர் ஒருவருக்கான சராசரி மின் நுகர்வு 1601 அலகுகளாகும். மேல் மாகாணத்தின் தெற்கு 2 பகுதியில் இது அதிக உயர்வாக 2979 அலகுகளாகவும், ஊவா மாகாணத்தில் இது மிகவும் குறைந்தளவு நுகர்வாக 948 அலகுகளாகவும் காணப்படுகின்றது. மேல் மாகாணத்தின் தெற்கு 2 பிரிவானது அதிகளவு இலாபத்தை ஈட்டித்தரும் பிரதேசமாகக் காணப்படும் அதேவேளை சப்ரகமுவ, ஊவா மாகாணப் பிரதேசங்களில் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் வியாபாரரீதியாக மின்சார வருமானமானது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.




**பிரிவு 3இன் புவியியல்ரீதியான எல்லை**

### செயற்பாட்டுக் கட்டமைப்பு

விநியோகப் பிரிவு 03ஆனது உதவிப் பொது முகாமையாளர் என்பவரை தலைவராகக் கொண்டுள்ளது. உதவிப் பொது முகாமையாளர், பொது முகாமையாளரின் நேரடிக் கண்காணிப்பில் காணப்படுகின்றார். இவ்விநியோகப் பிரிவு 03, தனது செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக மேலும் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன, சப்ரகமுவ மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணத்தின் தெற்கு 2 பகுதி என்பனவாகும். ஒவ்வொரு பிரிவும் பிரதிப் பொது முகாமையாளரின் தலைமையின் கீழ் காணப்படுகின்றது. அத்தோடு ஒவ்வொரு பிரிவும் மீண்டும் சிறுசிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றின் நிருவாகம் பிரதேச இலத்திரனியல் பொறியியலாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்விநியோகப் பிரிவு 15 பிரதேச அலுவலகங்களையும், 46 நுகர்வோர் சேவை நிலையங்களையும் கொண்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, மூன்று பிரதிப் பொது முகாமையாளர்கள் இப்பிராந்தியத்தில் காணப்படுகின்றார்கள். இவர்கள் பிராந்தியத்தின் கருத்திட்டங்கள், அவற்றின் பராமரிப்பு, மேற்பார்வை, திட்டமிடல்,

## விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி

அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வதோடு வர்த்தக, கூட்டாண்மை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். வர்த்தகக் கூட்டாண்மை கிளை வருமானங்களை கண்காணித்தல், தொழில்நுட்பம்சார் இழப்பீடுகளைக் குறைத்தல், மின்சக்தி முகாமைத்துவம், அதன் அபிவிருத்தி போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை மின் வழங்கலின் நம்பகத்தன்மை, மத்திய வோல்ட் மின்சார வலைப்பின்னல் அபிவிருத்தி, பிராந்தியத்திற்குத் தேவையான பொருட் கொள்வனவு, மின்பிறப்பாக்கிகள் தொடர்பான வேலைகள், தொழில்நுட்ப இழப்பீடுகளைக் குறைத்தல் மற்றும் கிராமப்புறங்களுக்கு மின்சார விநியோகம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கருத்திட்ட மற்றும் பராமரிப்புக் கிளை மின் கட்டுமான வேலைகள், அவற்றைப் பேணுதல், 33 கி.வா. வீதி மின்கோபுரங்களின் கட்டுமான வேலைகள், பராமரிப்பு, புனர்நிர்மாணப் பணிகள், 33 கி.வா./11 கி.வா. ஆரம்ப உபமின் நிலையங்கள், 33 கி.வா. ஆளி இரும்புச் சட்டங்கள், தன்னியக்க றிக்குலோசர்கள், உயர் இழுவிசை அளவை மானி மின்மாற்றிகள் என்பவற்றின் நிர்மாண வேலைகள், 33 கி.வா. உருக்குக் கோபுர இணைப்புகளின் வெப்பப் பேணல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வலயத்தின் மேலதிக நிதி முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் கணக்காய்வாளர்களால் மாகாண அலுவலகங்களின் நிதி மற்றும் வருமானம் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சகல மாகாணப் பிரிவுகளின் மனித வளங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனி மனித வள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இச்சகல செயற்பாடுகளினதும் ஒட்டுமொத்தப் பணிகள், சகல நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் மனித வளம் சார்ந்த செயற்பாடுகள் அனைத்தும் பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனப் பிரிவு) அவர்களின் கீழுள்ள குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### மாகாணத்தில் பதிக்கப்பெற்ற மின்மாற்றிகள்

பிரிவு 3 இல் ஏறத்தாழ 90% சிறிய நீர்மின் வலு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அதில் 337 மின்பிறப்பாக்கிகள் பதிக்கப்பெற்றுள்ளன. பிராந்தியம் 3 இல் சிறிய நீர்மின் வலு நிலையங்களே பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 65% ஆனவை சப்ரகமுவ மாகாணத்திலும் 34% ஊவா மாகாணத்திலும் காணப்படுகின்றன. 75 வலு இயந்திரங்கள் பிராந்திய மின் விநியோக வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ளன. இது மின் உற்பத்தியில் 157 மெ.வா.ஐ அதிகரிக்கச்செய்துள்ளது. ஆயினும் பதிக்கப்பெற்ற பிறப்பாக்கிகளுக்காக எனினும், பதிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகளுக்கான புதிய முன்மொழிவுகளைத் தொடர்வதை நிறுத்துவதற்கு இட்டுச்செல்லும் புதிய பிரச்சனைகள் உள்ளன. நடைமுறையிலான வலையப்பின்னலின் கம்பி ஆற்றலளவுக்கு இவற்றில் சில போதுமானவையல்ல. இது சிறிய மின் பொறிகளுக்குக் கூட அர்ப்பணிக்கப்பட்ட ஊட்டிகளுக்கும் அத்துடன் புதிய ஊட்டிகளுக்கு கம்பி வழிமுறைகளிலான கஷ்டங்களுக்கும் இட்டுச்செல்கின்றது. மேலும், பிராந்தியத்தில் உள்ள பெருமளவு நெய்யரி உப நிலையங்கள் அனுமதிக்கக்கூடிய அனுப்புதல் எல்லையை மீறுகின்றன. இவ்வாறாக, பிராந்தியம் 3இல் உள்ள நெய்யரி உப நிலையங்களின் சிலவற்றுக்கு புதிய முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது பங்கீட்டு விரிவெல்லைக்கு அப்பால் விளங்குகின்ற கடத்துகை முன்மொழிவுகளினால் மட்டுமே தீர்க்கப்பட முடியும்.

### முக்கிய நோக்கங்கள்

- வாடிக்கையாளர்களுக்கு மின்னிணைப்பை வழங்குதல்
- மின் விநியோகத்தின் நம்பகத்தன்மையைப் பேணுதல்
- மின் விநியோகத்தில் பண்புசார் தன்மையைப் பேணுதல்
- தொழில்நுட்பசார், சாரா இழப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- குறுகிய காலப்பகுதிக்குள் வாடிக்கையாளர்களின் பிரச்சினையைத் தீர்த்தல்
- வாடிக்கையாளர்களுக்கு உயர் சேவையை வழங்குவத னூடே அவர்களைத் திருப்திப்படுத்தல்

| விநியோகக் கட்டமைப்பு | | |
|---|---|---|
| 33 கி.வா. மின் விநியோக இணைப்புகள் | கி.மீ. | 6,836.65 |
| 11 கி.வா. மின் விநியோன இணைப்பு (உயரமான) | கி.மீ. | 49.68 |
| 11 கி.வா. மின் விநியோகம் (தரைக்குக் கீழ் கேபிள்) | கி.மீ. | 3.90 |
| 33/11 கி.வா. முதனிலை உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 11.00 |
| குறைந்த மின்னழுத்த மின் விநியோகம் | கி.மீ. | 27,067.78 |
| குறைந்த மின்னழுத்த உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 4,597.00 |
| சேவை இணைப்புகள் | எண்ணிக்கை | 431,917.00 |

### 2012ஆம் ஆண்டு மின் விற்பனை

பிரிவு 03இன் மின்சார விற்பனையானது (LECO மின்சாரக் கம்பனியைத் தவிர்த்து) 21% ஆகும். மின்சாரக் கம்பனியின் விற்பனை நீங்கலாக 1938 கி.வா.ம. மின்சாரம் விற்பனை செய்யப்பட்டது. 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 5.0% அதிகரிப்பைக் காட்டியது. பிரிவு 03இன் மின் விற்பனையை துறைவாரியாகப் பார்த்தால் கைத்தொழில் துறைக்கு அதிகளவு மின்சாரம் விற்கப்பட்டுள்ளது. அது பிராந்திய விற்பனையில் ஏறத்தாழ 44% ஆகும். இதற்கு அடுத்தபடியாக வீட்டுத் துறையினரும், பொதுநோக்கமும் அமைந்துள்ளன. வலயத்தின் மொத்த விற்பனையில் 55% மேல் மாகாணம் தெற்கு 2 பிரதேசப் பிரிவுக்கு உரியது என்பதுடன், அதனைத் தொடர்ந்து சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் விற்பனைகள் காணப்படுகின்றன.



மின்சார விற்பனை



மின்சார விற்பனை - துறைரீதியாக

# விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி




**மின்சார விற்பனை - மாகாணரீதியாக**

## மின்சார விற்பனை வருமானம்

2012 ஆம் ஆண்டில் பிரவு 03இன் மின்சார விற்பனை வருமானம் 27,934 மில்லியன் ரூபாய்களாகும் (இது LECO மின்சாரக் கம்பனியின் விற்பனையைத் தவிர்த்து). இது முன்னைய ஆண்டைவிட 22% அதிகரிப்பாகும். இலங்கை மின்சார சபையின் மொத்த மின்சார விற்பனை வருமானத்தில் பிரிவு 03இன் வருமானமானது 17.0%ஆகக் காணப்படுகின்றது (LECOஇன் விற்பனை வருமானம் நீங்கலாக). பிரிவு 03 வருமானத்தில் எறத்தாழ 42%ஆனது கைத்தொழில் துறையிலிருந்தே கிடைக்கின்றது. இவற்றுக்கு அடுத்தபடியாக வீட்டுத் துறையினரும் பொது நோக்கமும் காணப்படுகின்றன. பிரிவு மின்சார வருமானத்தில் ஏறத்தாழ 59% மேல் மாகாணம் தெற்கு 2 பிரதேசப் பகுதியால் கிடைக்கின்றது. அதனைத் தொடர்ந்து சப்ரகமுவ, ஊவா மாகாணங்கள் அமைந்துள்ளன. இப்பிராந்தியத்தில் அலகு ஒன்றுக்கான சராசரி விற்பனை விலை 14.41 ரூபாவாகும். இது தேசிய சராசரி விற்பனை விலை 15.56 ரூபாவை விடக் குறைவாகக் காணப்படுகின்றது. ஒப்பீட்டுரீதியில் பிரிவு 1இன் அலகு ஒன்றுக்கான சராசரி விற்பனை விலை மிக உயர்வாக உள்ளது. இது அலகு ஒன்றுக்கான சராசரி விற்பனை விலையைவிட உயர்வாகும்.




**பிரிவு 3இல் வருமானப் பங்கீடு**




**மின்சார வருமானம் - துறைரீதியாக**




**மின்சார வருமானம் - மாகாணரீதியாக**




**அலகு விலை மாகாணரீதியாக**




**பிராந்தியரீதியாக அலகு விலை**

2012ஆம் ஆண்டில் வருமானச் சேகரிப்பானது விற்பனையின் 98% ஆகும். இது கடந்த காலத்தில் 101.9% ஆகும். 2012ஆம் ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் 2332 மில்லியன் ரூபா ஆகும். பிராந்தியத்தில் வருமானப் பெறுவனவுக் காலம் 0.96 மாதங்களாகும். அதேவேளை, 2011ஆம் ஆண்டில் இவ்வருமானப் பெறுவனவுக் காலவெல்லை 0.95 மாதங்களாகக் காணப்பட்டது.

2012ஆம் ஆண்டு இறுதியில் பிரிவு 03இல் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 1,210,586. மின்சார நுகர்வில் வீட்டுத் துறையினரே முதன்மை இடத்தில் காணப்பட்டனர். அடுத்ததாக கைத்தொழில் வர்த்தகத்துறை காணப்பட்டது. பிரிவின் மொத்த மின்சார விற்பனை வாடிக்கையாளர் எண்ணிக்கை 1,814. இதில் 867 பிரிவின்பேர் மேல் மாகாணத்தின் தெற்கு 2 பிரதேசத்தைச் சார்ந்தவர்களாவர்

## விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி

2012ஆம் ஆண்டு 56,831 புதிய மின்னிணைப்புகள் விநியோகப் பிரிவு 03இல் வழங்கப்பட்டன.




**வாடிக்கையாளர் மாகாண மற்றும் வகைரீதியாக**

### நம்பகத்தன்மை

2012ஆம் ஆண்டில் விநியோகப் பிரிவு 03இன் விநியோக நம்பகத்தன்மையை பேணும் வகையில் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மாகாண மட்டத்தில் இதனைப் பேணும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் பல ஒழுங்கமைக்கப்பட்டன. அத்தோடு நம்பகத்தன்மையை மேலும் பேணுவது தொடர்பாக தன்னியக்க றிக்குலேசர்கள் சீர்செய்யப்பட்டும், பொருத்தப்பட்டும் இருக்கின்றன. இவற்றின் மூலம் மின் தடையை இயன்றளவு குறைக்க முடிவதுடன், குறுகிய காலத்தில் அதனைச் சீர்செய்யவும் முடியும்.

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் விநியோக நம்பகத்தன்மை முன்னைய காலங்களை விட உயர்வாகக் காணப்பட்டது. உதாரணமாக, HT மற்றும் LT மின் இணைப்புகளின் நீளம் கடந்த காலத்துடன் ஒப்பீடு செய்யும்போது முறையே 1% மற்றும் 10%இனால் அதிகரித்திருந்தது. மாதம் ஒன்றுக்கான 100 கி.மீ. மின் இணைப்பின் தடை உயர் வோல்ட் மின் இணைப்பு 13ஆகவும், குறைவோல்ட் மின் இணைப்பு 22ஆகவும் உள்ளது.




**2012ஆம் ஆண்டில் பிராந்தியத்தின் மின் தடை விபரம்**

### மின்சார விநியோக முறைமை அபிவிருத்தி

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிராந்தியத்தில் பல்வேறு கிராமிய மின்சாரமயமாக்கல் திட்டங்கள், திருத்தங்கள், புனருத்தாபன வேலைகள் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 11398.9 கி.மீ. LT புதிய மின் இணைப்புகள், 656.0 கி.மீ. HT புதிய இணைப்புகள் மற்றும் 126 புதிய உபமின் நிலையங்கள்/சட்டங்களின் நிர்மாணம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2012ஆம் ஆண்டில் இவற்றுக்கான மொத்தச் செலவு 2515 மில்லியன் ரூபாய்களாகும்.

| செயற்றிட்டங்கள் | LT (கி.மீ.) | HT (கி.மீ.) | புதிய உப மின் நிலையம் (எண்.) | உபமின் நிலையத் திருத்தம் (எண்.) | உப மின் நிலையப் பராமரிப்பு | மொத்தச் செலவு (மில்.ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 5.7 | | | | | 8.3 |
| மாகாண சபை வரவு செலவுத் திட்டம் | 19.7 | | | | | 22.0 |
| முறைமை விருத்திசெய்தல் | 43.5 | 86.4 | 19 | 11 | | 321.3 |
| LKDD | 34.4 | | | | | 46.2 |
| ஊவா உதானய | 607.7 | 108.9 | 64 | | | 1061.2 |
| இரத்தினபுரிக்கு ஒளியூட்டல் | 349.7 | 14.4 | 9 | | | 431.0 |
| கமநெகும - கிராம எழுச்சி | 0.3 | | | | | 0.3 |
| பராமரிப்புச் செயற்பாடுகள் | 3.0 | 393.9 | | | 241 | 64.5 |
| CR வேலைகள் | 3.0 | 10.0 | | | | 16.0 |
| ஏனைய புனருத்தாபன வேலைகள் (RE8 உட்பட) | 179.2 | 42.4 | 34 | | | 342.1 |
| ஏனைய புனருத்தாபன வேலைகள் - விரிவாக்கல் பணி (RE8 உட்பட) | 152.8 | | | | | 202.4 |
| **மொத்தம்** | **1398.9** | **656.0** | **126** | **11** | **241** | **2515.2** |

## விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி

### மின்கோபுரத்தை நிர்மாணித்தலும், உபகரணங்களைப் பொருத்தும் நடவடிக்கைகளும்

| விடயம் | எண்ணிக்கை | மொத்தச் செலவு (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| **புதிய இணைப்புகள்** | | |
| இரட்டைச்சுற்று மின் இணைப்பு | | |
| ஒரு சுற்று மின் கோபுரம் (கி.மீ.) | 2.8 | 20 |
| இரட்டைச்சுற்று மின் கோபுரம் (கி.மீ.) Lynx | 12.4 | 173 |
| ஒரு சுற்று மின் கோபுரம் Lynx (கி.மீ.) | 9.5 | 85.5 |
| **மின் இணைப்புகளைப் பராமரித்தல்** | | |
| இரட்டைச்சுற்று மின் கோபுரம் (Raccoon) (கி.மீ.) | | |
| ஒரு சுற்று மின் கோபுரம் (Raccoon) (கி.மீ.) | 30.25 | 17.86 |
| இரட்டைச்சுற்று மின் கோபுரம் (Lynx) (கி.மீ.) | 34 | |
| ஒரு சுற்று மின் கோபுரம் (Lynx) (கி.மீ.) | 42 | |
| **ஆரம்ப உபமின் நிலையங்களைப் பராமரித்தல்** | | |
| உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | | 20.1 |
| **மின்தாங்கிகள்** | | |
| புதிய சட்டங்கள் | 1 | 20 |
| **உபகரணங்களைப் பொருத்துதல்** | | |
| தன்னியக்க றீக்குலோசர் உபகரணங்கள் (எண்.) | 7 | 14.9 |
| லோட் பிறேக் சுவிச்சுகள் (எண்.) | 2 | 3.8 |
| எல்லைப் பிரதேச ஆளிகள் (எண்.) | 3 | 5.79 |
| மொத்த மின்சார விநியோக அளவுமானிகள் (எண்.) | 13 | 27.02 |
| **மொத்தம்** | | **387.97** |

### ஊவா உதானய

2012ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரதான நோக்கம் கிராமப்புறங்களில் சிறு, நடுத்தரக் கைத்தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்குவதென்பதாகும். அந்த வகையில் 800 பின்தங்கிய கிராமங்களுக்கு புதிய மின் இணைப்புகளை ஏற்படுத்துவதோடு மின்சார விநியோகத்தை விரிவுபடுத்தலுமாகும். இக்கருத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவு 45 மில்லியன் ஸ்ரேளிங் பவுண் மில்லியன்களாகும். இத்திட்டத்தில் குறைந்தளவு வோல்ட் மின்சாரத்தை 625 கி.மீ. தூரம் வழங்குவதுடன், 250 விநியோக உபமின் நிலையங்களை உருவாக்குவதுமாகும். குறைந்த வோல்ட் மின் இணைப்பின் ஊடாக 80,000 வீடுகளுக்கு புதிதாக மின்சாரத்தை விநியோகிக்க முடியும். அத்தோடு 2,250 கிலோமீற்றர் பிரதேசங்களை உள்ளடக்கிய சிறு, நடுத்தர, பாரிய கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்க முடியும். 2012ஆம் ஆண்டு இக்கருத்திட்டத்தின் 35%ஆன வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

### ஈரான் (RE 8) கருத்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டமானது வட மேல், மத்திய, கிழக்கு, தென் மேற்கு I, தென்மேற்கு II, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்கள் கொண்டுள்ள இலங்கை மின்சார சபையின் 12 மாகாணங்களில் அமைந்துள்ள ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்திற்கு ஈரான் நாடானது நிதியீட்டம் செய்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 106.5 ஸ்ரேளிங் பவுண் மில்லியன்களாகும். இக்கருத்திட்டத்திற்கு ஒப்பந்தகாரர் சுனிர் கம்பனி (ஈரான்). இத்திட்டத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள், உபகரணங்கள், மின்கம்பம் என்பன இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும்.

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் :

- 100 கி.வா., 33 கி.வா./LV அளவுள்ள மின் விநியோக உபமின் நிலையங்களை அமைத்தல்
- 33 km MV இணைப்பு 1000 கிலோமீற்றர் தூரத்திற்கு வழங்குதல்
- மொத்த மின்சார மின் கடத்திகள் /3-phase இணைப்புகள், LV விநியோக மார்க்கங்களை 4000 கிலோமீற்றர் தூரத்திற்கு வழங்குதல்
- 3-phase மின் இணைப்புகள், LV விநியோக இணைப்பை 2000 கிலோமீற்றர் தூரத்திற்கு விஸ்தரித்தல்
- ஒரு phase மின் இணைப்பை 3 phase மின் இணைப்புக்கு 50 கி.மீ. தூரத்திற்கு விநியோகம் செய்தல

பாவனையாளருக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக பெருமளவு திட்டங்கள் முடிக்கப்பட்டு, உயிர்ப்பூட்டப்பட்டுள்ளன.

### இரத்தினபுரி மாவட்டத்திற்கு வெளிச்சமூட்டல்

இரத்தினபுரி மாவட்டம் முழுவதிற்கும் 100% மின்சாரத்தை விநியோகித்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் திட்டப் பணிப்பாளரால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. இது 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(1) இரத்தினபுரி மாவட்டத்தை ஒளிமயமாக்கல்

(2) 33 கி.வா. மின் அளவு கொண்ட 71 கிலோமீற்றர் தூரமான பிரதேசத்திற்கு விரைவான மின் இணைப்பு சேவை மற்றும் 3 மின்தாங்கிகள் நிர்மாணம்

(3) 1000 கி.மீ. தூரம் MV மின் இணைப்புகள், 2100 கி.மீ. தூரம் LT மின் இணைப்புகள், 550 உபமின் நிலையங்களை அமைத்தல்

### விநியோக இழப்பீடுகளைக் குறைத்தல்

2002ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையின் இழப்பானது மிகவும் உயர்வாக 21%ஆகவும் விநியோக இழப்பீடுகள் 17% ஆகவும் காணப்பட்டன. இந்த விநியோக இழப்பீடானது 2012ஆம் ஆண்டில் 10.67% வீதத்தினால் குறைக்கப்பட்டது. மின் விநியோக நடவடிக்கைகளில் திறமையான கண்காணிப்பு நடவடிக்கைகள், சிறப்பான அமுலாக்கல் திட்டம் என்பனவற்றின் மூலம் விநியோக இழப்பீடுகள் குறைக்கப்பட்டு வருகின்றன (தொழில்நுட்ப வர்த்தகரீதியான). விநியோக இழப்பீடுகளைக் குறைப்பதற்கான பல திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி

2012ஆம் ஆண்டில் விநியோகப் பிரிவு 03 இன் விநியோக இழப்பீடுகள் 10.3% ஆகும். 2012ஆம் ஆண்டு இந்த இழப்புக்கள் விபரம் மாகாணரீதியாக பின்வருமாறு :

| மாகாணம் | சக்தி (MWh) | % இழப்புக்கள் |
|---|---|---|
| மேல் மாகாணம் தெற்கு 2 | 1,456 | 6.0 |
| ஊவா | 449 | 15.2 |
| சப்ரகமுவ | 572 | 15.1 |
| பிரிவு 03 | 2477 | 10.3 |

மேற்குறிப்பிட்ட 10.3% இழப்பீட்டில் 8.4%ஆனவை தொழில்நுட்பம் சார்ந்தனவாகவும், மிகுதி 1.9% தொழில்நுட்பம் சாரா நட்டங்களாகவும் உள்ளன. தொழில்நுட்பம் சாரா நட்டங்கள் எனும் போது மின் களவாக நுகர்தல், சட்டவிரோத மின் பாவனை, பற்றுச்சீட்டில் ஏற்படும் பிழைகள், மின்மானி வாசிப்பில் தவறுகள், குறைபாடுகள், மின்வாசிப்புக்கு உட்படாத தெரு விளக்குகள் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம். மேல் மாகாண தெற்கு 2 பிரதேசத்துடன் ஒப்பிடும் போது சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் விநியோக இழப்பீடானது உயர்வாகக் காணப்படுகின்றது. இவ்விநியோக இழப்பீட்டைக் குறைப்பதற்காக நீண்ட தூரத்திற்கான மின் உட்செலுத்திகள், புதிய நெய்யரி உபமின் நிலையங்கள், Backbone lines போன்ற பல முறைகள் பிரேரிக்கப்பட்டுள்ளன. விநியோகப் பிரிவு 03 இந்த இழப்பீட்டைக் குறைப்பதற்காக சக்தி முகாமைத்துவ அலகு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. குறிப்பாக மொத்த மின்சார மின்மாற்றிகள் மின் அளவை மானியுடன் இணைக்கப்பட்டது. அத்தோடு மேல் மாகாணம் தெற்கு 2இன் சக்தி முகாமைத்துவ அலகு மின்சாரத்தைக் களவாக எடுத்தல், சட்டவிரோத மின்சார விநியோகம், மின்மானிப் பரிசோதனைகள் தொடர்பாக அடிக்கடி மேற்பார்வையையும், பரிசோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

### உற்பத்தித்திறனை மேம்படுத்தலும், தர முகாமைத்துவமும்

5S கருத்துரு நன்கு அமுல்படுத்தப்படுவதுடன், பிராந்தியம் 3இல் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலொன்றுள்ளது. பிராந்தியம் 3இல் பெரும்பாலான அலுவலர்கள் 2012இல் 5S போட்டியில் பங்கெடுத்துள்ளதுடன், விருதுகளையும் வெற்றியீட்டியுள்ளனர். போட்டியில் DGM (C&C) கிளை, DGMஇன் (WPSII) அலுவலகம், கஹவத்தை பகுதி அலுவலகம், கலவான CSC மற்றும் ஊவா பிரதம எந்திரவியலாளரின் அலுவலகம் (பங்கீடு, பராமரிப்பு ஆகியன விருதுகளை வெற்றியீட்டியுள்ளன.

ISO 9001:2008 சான்றுதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு SLSIஇனால் திட்டமிடல், அபிவிருத்திக் கிளை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ISO கணக்காய்வின் இறுதிக் கட்டம் 2013இல் இருக்கும் என்பதுடன், 2013இல் ISO 9001:2008 சான்றுதிப்பத்திரத்தை கிளை சாதிக்கும். மேலதிகமாக 2010/2011 தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கு "D1 தரம்" ஒன்று தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் திட்டமிடல், அபிவிருத்திக் கிளை வழங்கப்பட்டது.

### மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்

2012ஆம் ஆண்டில் 58 கேள்விதாரர்கள் (MPC, BPC and RPC மட்டங்களில்) கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பித்தார்கள். இவற்றுக்கான மூலப்பொருள் மதிப்பீட்டுச் செலவு 1539 மில்லியன் ரூபாய்களாகும். குறித்த வருடத்தில் 43 கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த வகையில் விநியோகப் பிரிவு 03 இற்கான கொள்வனவுகள் இடம்பெற்றன.

விநியோகப் பிரிவு 03இன் கேள்விப்பத்திர மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளில் பெறுவனவு முகாமைத்துவ முறைமை எனும் மென்பொருள் முறைமை திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளையினால் பயன்படுத்தப்பட்டது. இதனால் திட்டமிடல், முகாமைத்துவம், கட்டுப்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இதனால் தேவையில்லாத தாமதங்கள், நட்டங்கள், சேதங்கள் என்பன தவிர்க்கப்பட்டன.

### மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவ அலகு தொழிலாளர்களுடன் ஒத்தாசையாக இருப்பதுடன், அவர்களுக்குத் தேவையான சகல உதவிகள் மற்றும் மகிழ்ச்சிகரமான வேலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. 2012ஆம் ஆண்டின் இறுதியில் விநியோகப் பிராந்தியம் 03இன் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 2867 ஆகும். இவ்வெண்ணிக்கை பற்றாக்குறையான ஒன்றாகவே இருந்தது. சில அவசர வேலைகளின் போது தனிப்பட்ட முகவர் நிறுவனங்களிடமிருந்தும் ஊழியர்கள் பெறப்பட்டு இருந்தார்கள். இப்பிராந்தியத்தில் காணப்பட்ட ஊழியர்களின் விபரம் வருமாறு :




**2012ஆம் ஆண்டில் பிரிவு 03இன் தொழிலாளர் வகையீடு**

### ஊழியர் நலன்புரி

பிராந்தியத்திற்குள் சகல வேலைகளிலும் குழு உணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் சிறப்பானதொரு வேலைச் சூழலை உருவாக்க முடியும். அந்த வகையில் ஊழியர்கள் பொது நலன் கருதி பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

மேல் மாகாணம் தெற்கு 02 பிரிவினால் இரத்ததான நிகழ்வு ஒன்று நடாத்தப்பட்டிருந்தது. அத்தோடு 2012ஆம் ஆண்டில் வெசாக் பண்டிகையின்போது பிரித் ஓதுதல் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஊவா மாகாணத்தில் பதுளையில் அமைந்துள்ள வின்சென்ற் மைதானத்தின் அன்னதான நிகழ்வு ஒன்று (2012) நடைபெற்றது. அதில் 50க்கு மேற்பட்ட பௌத்த மதகுருமார் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இவற்றுக்கு மேலதிகமாக, ஊழியர் நலன்புரி அமைப்பின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியிருந்தது. "மியசிவில" எனும் இசை நிகழ்ச்சி 2012ஆம் ஆண்டு சனவரி மாதம் மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.

## விநியோகப் பிரிவு 3 தொடர்ச்சி



மேல் மாகாணம் தெற்கு 2 பிரிவு நடாத்தப்பட்ட இரத்ததான நிகழ்வு



2012 ஆம் ஆண்டில் பிரிவு 03 இன் ஆண்டு விளையாட்டுப் போட்டி

# விநியோகப் பிரிவு 4

**செயற்பாட்டுப் பிரதேசம்**

விநியோகப் பிரிவு 4, மேல் மாகாணத்தின் ஒருசில பகுதிகள் (மேல் மாகாணத்தின் தெற்கு 1), தெற்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணத்தின் ஒருசில பகுதிகள், ஊவா மாகாணம் போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. மேல் மாகாணத்தின் தெற்கு 1 பிரதேசமானது இரத்மலானை, களுத்துறை, தெஹிவளை போன்ற பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. விநியோகப் பிரிவின் விநியோக மின்சார வலையமைப்பு தெஹிவளையிலிருந்து கதிர்காமம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**2012 ஆம்ஆண்டின் முக்கிய அம்சங்கள்**

| விவரணம் | அலகு | பெறுமதி |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட அலகுகள் | கி.வா.ம. | 1,338 |
| மின்சார விற்பனை வருமானம் | மில்லியன் ரூ. | 20,159 |
| சராசரி விற்பனை விலை | ரூ./கி.வா.ம. | 15.07 |
| விநியோக இழப்பீடு | % | 12.6% |
| வருமானப் பெறுவனவு நிலை (தெரு வீதி விளக்குகளைத் தவிர்த்து) | மாதம் | 0.94 |
| வருட காலத்திற்குள் சாதாரண மின் வாடிக்கையாளர்கள் | எண்ணிக்கை | 875,322 |
| வருட காலத்திற்குள் மொத்த மின்சார வாடிக்கையாளர்கள் | எண்ணிக்கை | 1,266 |
| வருடத்திற்கான புதிய மின் இணைப்புகள் | எண்ணிக்கை | 29,389 |
| வருட இறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,015 |
| சராசரி வருமானம் | ரூ./மாதம்/ நுகர்வோர் | 1,916 |
| வருட இறுதியில் ஊழியர் ஒருவருக்கான சாதாரண வாடிக்கையாளர்கள் | எண்/ஊழியர் | 434 |
| விநியோக உபமின் நிலையம் ஒன்றுக்கான சாதாரண வாடிக்கையாளர்கள் | எண்/ஊழியர் உப-நிலையம் | 214 |
| ஊழியர் ஒருவருக்கான குறைந்த வோல்ட் மின் இணைப்பு நீளம் | கி.மீ./ஊழியர் | 10.90 |
| வாடிக்கையாளர் ஒருவருக்கான குறைந்த வோல்ட் மின் இணைப்பு நீளம் | கி.மீ./ நுகர்வோர் | 0.025 |
| விநியோக உபமின் நிலையம் ஒன்றுக்கான நடுத்தர வோல்ட் மின் இணைப்பின் நீளம் | கி.மீ./உப நிலையம் | 1.14 |

விநியோகப் பிரிவு 4இன் குடித்தொகை ஏறத்தாழ 3.93 மில்லியன்கள். ஆகக்கூடிய மின் நுகர்வான 99.5% மேல் மாகாணத்தின் தெற்கு 1 பிரதேசத்திலும் மிகக் குறைவான மின் நுகர்வு 99% தென் மாகாணத்திலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இரத்மலானை விமான நிலையம், இரத்மலானை கைத்தொழில் வலயம், கொக்கல கைத்தொழில் வலயம், ஹம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்ற முக்கிய பிரதேசங்கள் மற்றும் பிரசித்திபெற்ற கடற்கரைகளையும் பிரிவு கொண்டுள்ளது.

இப்பிரிவில் ஆண்டுக்கான வாடிக்கையாளர் ஒருவருக்கான மின் நுகர்வு 2236 அலகுகளாகும். இது மிகவும் உயர்வானதாகும். மிகக் குறைவான ஆண்டுக்கான மின் நுகர்வு 1258 அலகுகள் தென் மாகாணத்தில் பதிவாகியுள்ளது




**விநியோகப் பிரிவு 4இன் எல்லைகள்**




**மின்சார விநியோகம்**

# விநியோகப் பிரிவு 4 தொடர்ச்சி




**மின்சார விநியோகம் துறைவாரியாக**




**மின்சார வருமானம் பிரிவு 4**




**பிரிவு 4இன் மின்சார விநியோகம்**




**சராசரி விற்பனை விலை - விநியோகப் பிரிவு 4**




**விநியோகப் பிரிவு 4இன் வருமானத்தின் பங்கீடு**




**பிரிவு 4இன் வாடிக்கையாளர்கள்**




**வருமானம் - விநியோகப் பிரிவு 4**




**விநியோகப் பிரிவு 4இன் வாடிக்கையாளர்கள்**

# விநியோகப் பிரிவு 4 தொடர்ச்சி

### செயற்பாட்டுக் கட்டமைப்பு

விநியோகப் பிரிவு 4இற்கு தலைவராக மேலதிக பொது முகாமையாளர் காணப்படுகிறார். இவர் பொது முகாமையாளரின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பார். செயற்பாட்டுப் பணிகளுக்காக இப்பிரிவு இரு மாகாணங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. அவை தென் மாகாணம், மேல் மாகாணத்தின் தெற்கு 1 பிரதேசங்களாகும். இவை ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக பிரதிப் பொது முகாமையாளர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு மாகாணங்களும் நிர்வாக சுலபத்திற்காக பல்வேறு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பாக பிரதான பிரதேச பொறியியலாளர்கள் காணப்படுகிறார்கள். இப்பிரிவில் 09 பிரதேச அலுவலகங்களும் 36 வாடிக்கையாளர் சேவை நிலையங்களும் காணப்படுகின்றன.

மேல் மாகாணம் தெற்கு 1 பிரதேசம் தெஹிவளை, களுத்துறை, இரத்மலானை பிரதேசங்களையும், தென் மாகாணம் அம்பலாங்கொடை, காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, தங்காலை மற்றும் வெலிகம போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது. இவை அனைத்திலும் பிராந்திய அலுவலகங்கள் காணப்படுகின்றன.

| | மேல் மாகாண தெற்கு 1 | தென் மாகாணம் |
|---|---|---|
| காணி இடப்பரப்பு (சதுர கி.மீ.) | 1,230 | 5,640 |
| குடித்தொகை (மில்லியன்) | 1.47 | 2.46 |
| குடிமனைகளின் எண்ணிக்கை | 436,061 | 627,657 |
| மின்சாரமயமாக்கல் நட்டம் | 99.5% | 99% |

மாகாணப் பொது முகாமையாளருக்கு மேலதிகமாக செயற்றிட்டம், கனரகப் பராமரிப்பு, திட்டமிடல் அபிவிருத்தி, வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளுக்காக 3 பிரதிப் பொது முகாமையாளர்கள் காணப்படுகிறார்கள்.

மின் நிர்மாணப் பணிகள், உபகரணங்களைப் பொருத்துதல், ஆரம்ப உபமின் நிலையங்களின் பராமரிப்பு, 33 கி.வா. மின்கோபுர மின்னிணைப்பு, பளுதாங்கிகள், அவை தொடர்பான உபகரணங்கள், 33 கி.வா. மின்சார வலையமைப்பு மற்றும் பிராந்தியத்திற்குத் தேவையான உள்நாட்டு, வெளிநாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான கேள்விப்பத்திர நடவடிக்கைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை கருத்திட்ட மற்றும் கனரக பராமரிப்புக் கிளையானது மேற்கொண்டு வருகின்றது.

மின்மானிப் பரிசோதனை ஆய்வுகூடமானது தனி மின்னிணைப்பு மற்றும் மூன்று மின்னிணைப்பு உள்ளக மின்மானிகள் பரிசோதனை மற்றும் சகல பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளைப் பரிசோதித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை மின்விநியோகத்தின் நம்பகத்தன்மை, நடுத்தர வோல்ட் மின் விநியோகம், அதன் அபிவிருத்தி, பொருத்தப்பட்ட மின் பிறப்பாக்கிகள் தொடர்பான வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

வர்த்தக மற்றும் கூட்டுறவுக் கிளை வர்த்தகக் கொள்கைகளை மேற்கொள்ளல், கனரக வழங்கல்கள் மற்றும் பிராந்தியத்தின் முகாமைத் தகவல்களை வழங்கிவருகின்றது. ஒவ்வொரு மாகாணத்திலும் மனித வளங்களைச் சிறப்பாக முகாமை செய்வதற்காக மனித வள உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் மாகாண மனித வளத் தொழிற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலைகள் உட்பட சகல நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர் சபையின் மனித வளம் சார் செயற்பாடுகள் போன்றவற்றை வர்த்தக மற்றும் கூட்டாண்மைக் கிளை மேற்கொண்டு வருகின்றது.

மாகாணங்களில் நிதி மற்றும் வருமானச் செயற்பாடுகள் வலயத்தின் நிதிக் கிளையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### பிரதான நோக்கங்கள்

பிரிவின் முக்கிய நோக்கங்கள் வருமாறு

- நியதிச்சட்ட வோல்ட் அளவுக்கமைய வலயத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு நம்பகரமான மின் விநியோகத்தை வழங்குதல்.
- மொத்த செலவுகளுக்கும் மேலதிகமாக திட்டமிடப்பட்ட வருமானத்தை ஈட்டுதல்
- வாடிக்கையாளர்களுக்கு புதிய மின் இணைப்பை வழங்கல்
- வலயத்திற்குள் மின்சார விநியோக முறைமையில் யதார்த்தபூர்வமான அபிவிருத்தி வேலைகளை உறுதிப்படுத்தல

| விநியோகக் கட்டமைப்பு வசதிகள் | | |
|---|---|---|
| 33 கி.வா. மின் விநியோக இணைப்புகள் | கி.மீ. | 4,333 |
| 11 கி.வா. மின் விநியோக இணைப்புகள் | கி.மீ. | 310 |
| 33/11 கி.வா. ஆரம்ப உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 34 |
| குறைந்த வோல்ட் மின் இணைப்புகள் | கி.மீ. | 21,973 |
| குறைந்த வோல்ட் மின் விநியோக உபமின் நிலையங்கள் | எண்ணிக்கை | 4083 |
| மின் இணைப்புகள் (மொத்த மின் விநியோகம் உட்பட) | எண்ணிக்கை | 876,588 |

### வாடிக்கையாளர் நலன்புரிச் சேவைகள்

வாடிக்கையாளர் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிராந்திய வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவையை வழங்குவதற்காக 9 பிரதேச அலுவலகங்கள், 36 வாடிக்கையாளர் சேவை நிலையங்கள், மக்கள் வங்கிக் கிளைகளில் 41 விற்பனை கருமபீடங்கள் மற்றும் 2 விநியோக அழைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. விநியோக அழைப்பு நிலையங்கள் மூலம் வாடிக்கையாளர்களது பிரச்சினை இனங்காணப்பட்டு மிகவும் குறுகிய நேரத்தில் அவர்களுக்குத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

2010ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வட மாகாணம் தெற்கு 1 பகுதியில் விநியோக அழைப்பு நிலையம் தாபிக்கப்பட்டது. இந்நிலையம் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதன் பொருட்டு புதிய நவீன தொழில்நுட்பக் கருவிகள், கணினி இயந்திரங்கள் என்பன பொருத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

### மின்சார விற்பனை

நாட்டின் மொத்த மின்சார விற்பனையில் விநியோகப் பிராந்தியம் 4 ஏறத்தாழ 13% ஆகும். 2012ஆம் ஆண்டில் ஆண்டுக்கான மின்சார விற்பனை 1338 கி.வா.ம. ஆகும். வலயத்தின் மின் விற்பனையின் 48%ஆனது வீட்டுத் துறையினரைச் சார்ந்துள்ளது. விநியோகப் பிராந்தியம் 4இன் 601ஆன வாடிக்கையாளர்கள் தென் மாகாணத்தைச் சார்ந்து காணப்படுகிறார்கள்.

## விநியோகப் பிரிவு 4 தொடர்ச்சி

### மின்சார வருமானம்

2012ஆம் ஆண்டில் பிராந்தியம் 4, மின்சார வருமானமாக 20,159 மில்லியன் ரூபாவைப் பெற்றது. இது முன்னைய ஆண்டைவிட 24% அதிகரிப்பாகும். இது இலங்கை மின்சார சபையின் மின்சார வருமானத்தின் 12% ஆகும். மின்சார வருமானத்தில் ஆகக்கூடிய வருமானம் வீட்டுத்துறையினரிடமிருந்தே பெறப்பட்டது. இப்பிராந்தியம் 4இன் மொத்த வருமானத்தில் 54% வருமானமானது தென் மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதை இப்பிராந்தியத்தின் அலகு ஒன்றுக்கான (kwh) மின் விற்பனையின் சராசரி விலை 15.07 ரூபாவாகும் இது நாட்டின் சராசரி விலை (kwh) 15.56 ரூபாவைவிடக் குறைவாகும் (தெரு விளக்கு, வெளிச்சமூட்டல் தவிர்த்து). மொத்த மின் விற்பனை வாடிக்கையாளர்கள் மற்றும் சாதாரண மின் விற்பனை வாடிக்கையாளர்கள் போன்றோரிடம் பணப் பெறுவனவு அளவானது முறையே 1.11 மாதங்களாகவும், 0.83 மாதங்களாகவும் காணப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் விற்பனையிலிருந்து பெறப்பட்ட நிதியானது 98.7%ஆகக் காணப்பட்டது.

### மின் வாடிக்கையாளர் கணக்கு மற்றும் புதிய மின் இணைப்புகள்

பிரிவு 4, 2012ஆம் ஆண்டின் இறுதியில் 876,588 வாடிக்கையாளர்களைக் கொண்டு காணப்பட்டது. இவர்களில் பெரும்பான்மையினர் வீட்டுத்துறையினராகக் காணப்பட்டனர். குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் 29,389 புதிய மின் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### நம்பகத்தன்மை

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் 100 கி.மீ. மின்னிணைப்பில் ஒரு மாதத்திற்குள் இடம்பெறும் மின் தடங்கல்களின் அளவு மத்திய/ நடுத்தர வோல்ட் அளவில் 14ஆகவும் குறை வோல்ட் அளவில் 17ஆகவும் காணப்பட்டன.

### மின் விநியோக முறைமையினை அபிவிருத்தி செய்தல்

2012ஆம் ஆண்டில் சகலருக்கும் மின்சாரம் என்ற அரசின் நோக்கினை எட்டுவதற்காக கிராமிய மின் வழங்கல் வேலைத்திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டன. 2012ஆம் ஆண்டில் அமுல்படுத்தி வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்ட கிராமிய மின் வழங்கல் திட்டங்கள், ஏனைய நிருமாணப் பணிகள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மின் வலைப்பின்னல் அபிவிருத்திக் கருத்திட்டங்கள், தென் மாகாணத்தில் வீதிகளை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் வீதி விளக்குகள் அமைக்கும் பணி, அவ்வாறே அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் வீதி விஸ்தரிப்புக் கருத்திட்டத்தில் வீதி விளக்குகளை அமைக்கும் பணி, தென் மாகாண புகையிரதக் கருத்திட்டத்தின் மின்சார அபிவிருத்தி வேலைகள் போன்ற வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2012ஆம் ஆண்டு முக்கிய அம்சங்கள்:

- 175 மில்லியன் ரூபா செலவில் ஹம்பாந்தோட்டையிலிருந்து மத்தளை வரையான சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள பகுதிகளில் 33 கி.வா. இரட்டைச் சுற்று மின் கோபுரம், அதன் நிர்மாணப் பணிகள்.

| பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | HT (கி.மீ.) | S/S (எண்ணிக்கை) | LT (கி.மீ.) | மின்னிணைப்பு (கி.மீ.) |
| பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் + மாகாண சபை வரவு செலவு | 0.0 | 0.0 | 6.4 | 3.4 |
| செலவினம் செலுத்தப்பட்டதும், மொத்த மின் வழங்கலும் | 43.9 | 72.0 | 22.5 | - |
| கம நெகும | - | - | 1.5 | 0.5 |
| சொத்து அபிவிருத்தி | 3.3 | 13.0 | 35.3 | 0.6 |
| முறைமை அபிவிருத்தி | 64.3 | 37.0 | 30.3 | 162.9 |
| ஈரான் | 72.8 | 55.0 | 254.6 | 29.2 |
| சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| மின் ஒளியூட்டல் (காலி – மாத்தறை) | - | - | 211.9 | 58.9 |
| ஹம்பாந்தோட்டை கருத்திட்டம் | 0.0 | 0.0 | 0.0 | - |
| களுத்துறை கருத்திட்டம் | 0.0 | 0.0 | 24.6 | 2.1 |
| எனையவை | - | - | 0.0 | - |
| **மொத்தம்** | **186.7** | **179.0** | **587.0** | **257.8** |

- 28 மில்லியன் ரூபா செலவில் மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் 33 கி.வா. மின் பழுதாங்கி நிர்மாண வேலைகள்
- 70 மில்லியன் ரூபா செலவில் மேல் மாகாணம் தெற்கு 1, தென் மாகாணங்களில் 175 கி.மீ. நீளமான 33 கி.வா. மின்கோபுர மின்னிணைப்பு, அது தொடர்பான வேலைகளில் புனருத்தாபனம்
- 237 கி.மீ. நீளமான 33 கி.வா. மின்கோபுர மின்னிணைப்பில் அவசர மின் பராமரிப்பு வேலைகள்
- 180 மில்லியன் ரூபா செலவில் புல்லர்ரொன் மற்றும் பொரலஸ்கமுவ ஆரம்ப உபமின் நிலையம் தொடர்பான புனருத்தாபன வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.
- 8 மில்லியன் ரூபா செலவில் களுவமோதர ஆரம்ப உபமின் நிலையத்திற்காக 33 கி.வா. மின் ஆளி கட்டுமானப் பணி
- 70 மில்லியன் ரூபா செலவில் தன்னியக்க ரெக்லோசஸ் உபகரணம், கனமான தடை ஆளி மற்றும் மின்மாற்றிகளின் மின் வாசிப்பு நடவடிக்கைகள் போன்றன மேற்கொள்ளப்பட்டன.
- நாளாந்தப் பராமரிப்பு வேலைகளுக்காக இயந்திரங்களை உள்ளடக்கிய ஆரம்ப உபமின் நிலையங்கள் 15ஐயும், உபமின் நிலையங்கள் 20ஐயும் ஏற்படுத்தியமை
- நாளாந்தப் பராமரிப்பு வேலைகளுக்காக 29 சுவிச் பளுதாங்கிகள், 83 தன்னியக்க ரெக்குலோசஸ்கள், 132 கனமான தடை ஆளிகள் மற்றும் 51 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டன.

# விநியோகப் பிரிவு 4 தொடர்ச்சி

### நடுத்தர வோல்ட் முறைமை அபிவிருத்தி

நடுத்தர வோல்ட் விநியோக மின் வலைப்பின்னல் திட்டம் 2013 – 2012 பூர்த்தியடைந்திருக்கிறது.

தெஹிவளை விநியோகப் பிரதேசத்தில் MV வலைப்பின்னல் முறைமையின் தற்போதைய நிலை கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றின் தொழிற்பாடுகளை தொடர்ந்துவரும் ஐந்து ஆண்டுகளில் திருப்திகரமான முறையில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மின் விநியோகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கான திட்டங்கள் பல வகுக்கப்பட்டு அவற்றை LECO மின்சாரக்கம் பணியுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான வடிவமைப்பு வேலைகள் ஆயத்தமாகி இருக்கின்றன.

ஹம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் கைத்தொழிற்சாலைகளை மையமாகக் கொண்டு அப்பிரதேசத்தில் மத்திய வோல்ட் மின் முறைமைக்கமைய செயற்படுத்துவதற்கு விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன.

### மத்திய வோல்ட் முறைமையின் நம்பகத்தன்மை

மத்திய வோல்ட் முறைமையின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்காக பிராந்திய மின் விநியோக நம்பகத்தன்மை மீளாய்வு செய்யப்பட்டது. அத்தோடு அதன் முன்னேற்றத்திற்காக நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன.

நம்பகத்தன்மை மற்றும் MV வலைப்பின்னலின் இயக்கப்பாட்டு நெகிழ்வுத்தன்மையைப் பேணுவதற்காக புதிய மின் ஆளிகள், தன்னியக்க ரிக்குலோசர்கள் என்பவற்றைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன..

### பதிக்கப்பெற்ற பிறப்பாக்கிகள்

15 மெ.வா.அ. மின்சக்தி கொள்ளளவைத் தரக்கூடிய 7 பிறப்பாக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.

### விநியோக இழப்புக்களின் குறைப்பு

விநியோக இழப்புக்களைக் குறைப்பதற்காக எல்லைப்புறங்களில் எல்லைப்புற மின்மானிகளைப் பொருத்துவதற்கான பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டதோடு, அதனைப் பொருத்துவதற்காக உரிய கிளைத்தாபனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் விடப்பட்டிருந்தன.

மேல் மாகாணம் தெற்கு 1 பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட சக்தி முகாமைத்துவ அலகு மாகாணங்களுக்கிடையேயான தொழில்நுட்பம்சார், தொழில்நுட்பம்சாரா இழப்புக்களை இனங்கண்டு, அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அத்தோடு சக்தி முகாமைத்துவ அலகு மின்மானிப் பரிசோதனை, மின்மானி இடமாற்றல், மொத்த மின்சார விநியோக மின்மானிப் பரிசோதனை, விநியோக மின்மாற்றிகளின் சக்திக் கணக்காய்வு போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.

### கூட்டங்கள்

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச மின்மானிச் சோதனை ஆய்வு கூடத்தினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன:

- விநியோகப் பிரிவு 4 இற்கு அன்ரெலிக்கோ கம்பனியால் (ANTELECO Company) வழங்கப்பட்ட மின்மானிகளை மின்மானி ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்தல்.
- 3 நிலை CT இயக்கத்தைப் பரிசோதித்தல் மற்றும் பிரிவு 4இன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள சக்தி மின்மானிகளைப் பரிசோதித்தல்
- ஆரம்ப உபமின் நிலையங்களின் HV, LV சக்தி மின்மானிகளின் உண்மைத்தன்மையைப் பரிசோதித்தல், நெய்யரி மின் நிலையங்கள், சிறு நீர்மின் நிலையங்களில் மின்மானிகள் பரிசோதிக்கப்பட்டன.
- இலங்கை மின்சார சபையின் பிரிவு 4இன் சகல பிரதேசங்களிலும் காணப்படும் குறைந்த வோல்ட் மின்மாற்றிகள் பரிசோதிக்கப்பட்டன.
- மேல்மாகாணம் தெற்கு 1 பகுதியில் பிரச்சினைக்குரிய மின்மானி பரிசோதனை செய்து நீக்கப்பட்டு, புதிய மொத்த மின் விற்பனை மானிகள் பொருத்தப்பட்டன.

### பொருட் கொள்வனவு

2012ஆம் ஆண்டின் போது, பின்வரும் பாரிய செயற்பாடுகளை பிரதேச கொள்வனவு அலகு மேற்கொண்டது.

- தென் மாகாணத்திலும், மேல் மாகாணம் தெற்கு 1இலும் அமுல்படுத்தப்பட்ட 33 KV பங்கீட்டு முறைமையினதும், கிராமிய மின்னொளியேற்றல் கருத்திட்டங்களினதும் அபிவிருத்திக்காக பற்றாக்குறையின்றி பொருட்களை விநியோகிப்பதற்கு சர்வதேச மற்றும் தேசிய போட்டிக்குரிய கூறுவிலையிடல் ஊடாக 950 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது 95%க்கு மேற்பட்ட கிராமிய மின்னொளியேற்றலைச் சாதித்தது.
- கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீது அறிவூட்டுவதற்கும், பரிச்சயமாக்குவதற்கும் பயிற்சியும், செயலமர்வுகளும், கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.
- “PMS எனும்” பொருட் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திர மென்பொருள் வாங்கப்பட்டது. இது பொருள் கொள்வனவு தொடர்பான விடயங்களை இலகுவாக்கும்.

### கணினிமயப்படுத்தும் செயற்பாடுகள்

2011ஆம் ஆண்டு பிராந்தியம் 4இல் மனித வள தகவல் முறைமை (HRIS) எனும் கணினி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் HRIS முறைமையானது 13 வகைகளைக் கொண்டுள்ளது. இதில் முதல் 3 வகைகள் விடுகைச் செயற்பாடுகள், மருத்துவ வகை, மனித முறைமைகளோடு ஒன்றிணைந்து காணப்படுகின்றது.

நிதியேடு, பொது நாளேடு, காசுப் புத்தகம், வேலைக் கிரயம் போன்ற பணிகளுக்காக MITFIN மென்பொருள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. பிரிவு 4இன் சகல பிராந்திய அலுவலகங்களிலும் வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் அமைந்துள்ள மேல்மாகாண தெற்கு 1 மற்றும் தென் மாகாண கருத்திட்டங்கள் யாவும் இவ் MITFIN முறைமை பயன்படுத்தப்படுகின்றது.

## விநியோகப் பிரிவு 4 தொடர்ச்சி

அத்தோடு ஹம்பாந்தோட்டை பிரதேசத்திற்கு மின் வெளிச்சமூட்டும் கருத்திட்டத்தின் அலுவலகங்கள் என்பன online சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் கணினி வேலைகள் யாவும் 2012 ஆம் ஆண்டு முடிவடைந்திருக்கின்றன.

### உற்பத்தித்திறன் மேம்பாடு

2012 ஆம் ஆண்டில் 5S கருதுகோள் பிராந்தியம் 4 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை மின்சார சபையானது 5S கருதுகோள் விடயங்களில் வென்று தேசியரீதியாக 5S விருதினைப் பெற்றது. இலங்கை மின்சார சபையால் நடாத்தப்பட்ட போட்டியில் பிராந்திய அலுவலகம் 4இன் மேலதிக பொது முகாமையாளர் அலுவலக முதலாம் இடத்தைப் பெற்றது. இப்பிராந்தியத்தின் கருத்திட்ட மற்றும் கனரக பரபமரிப்பு அலுவலகம் மற்றும் டிக்வெல CSE என்பன இப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றன. அவ்வாறே பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம், மாத்தறை பிராந்திய அலுவலகங்கள் என்பன மூன்றாம் இடத்தைப் பெற்றன. இத்தகைய தன்மையானது வாடிக்கையாளர் சேவையை குறைந்த நேரத்திலும், வினைத்திறனான பண்புசார் தன்மையிலும் வழங்க வழிசமைக்கும்.

### ISO 9001:2008தரச் சான்றிதழின் அங்கீகாரம்

பிரிவு 4இன் பதில் பொது முகாமையாளர் அலுவலகம், மின்மானி பரிசோதனை ஆய்வுகூடம் என்பவை ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளன. அத்தோடு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்து வருகின்றன.

### இலங்கைக்கு ஒளியூட்டும் ஹம்பாந்தோட்டைக் கருத்திட்டம்

இலங்கைக்கு ஒளியூட்டும் ஹம்பாந்தோட்டை கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் இலங்கையின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் 100% மின்சாரத்தை வழங்கும் ஓர் பாரிய திட்டமாகும். 2012ஆம் ஆண்டில் குறைந்தது 30,000 வீடுகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதோடு, ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் அனைவருக்கும் தரமானதும் மற்றும் நம்பகரமான சேவையை வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். இதற்கென இலங்கை அரசாங்கம் 4,000 மில்லியன் ரூபாவை நிதியீட்டம் செய்திருக்கின்றது.

230 எண்ணிக்கை கொண்ட விநியோக உபமின் நிலையங்கள், 350 கி.மீ. நீளமான நடுத்தர வோல்ட் மின் இணைப்புகள், 1,250 கி.மீ. நீளமான குறைந்த வோல்ட் மின் இணைப்புகள், 180 கி.மீ. நீளமான 33 கி.வா. கடுகதி இரட்டைச்சுற்று கோபுர மின் இணைப்புகள், 33 கி.வா. நிலை தாங்கிகள் - 06 என்பன இக்கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

மின்சார விநியோக வேலைகளில் கட்டுமானப் பணிகள், அவற்றின் மேற்பார்வை நடவடிக்கைகள் என்பனவும் இக்கருத்திட்டத்தின் பிரதான பணியாகும். உபமின் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மற்றும் RE வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய வோல்ட் மற்றும் குறைந்த வோல்ட் மின் இணைப்பு வேலைகள் 2012ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன. 75% குறை வோல்ட் மின்னிணைப்பு கட்டுமானப் பணிகள் (ABC) ஏரியல் பண்டுள் உணர்திறன் கடத்திகள் பாவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டமையினால் மாவட்டத்தில் பெறுமதியான மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து தவிர்க்கப்பட்டன.

இத்தகைய திட்டத்தின் மூலம் நடுத்தர வோல்ட் மின் இணைப்பு 5 கி.மீ. தூரம் விநியோகிக்கப்பட்டு, காட்டு மரங்கள் வெட்டப்படாது காட்டு வளங்கள் பாதுகாக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும். ஏனைய பிராந்தியங்களிலும் மேற்குறித்த தொழில்நுட்ப முறை பயன்படுத்தப்பட்டு, இயற்கை வனங்களின் அழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டன.

2012ஆம் ஆண்டில் 33 கி.வா. மின்கோபுர கட்டுமானப் பணிகளில் 65%மும், மின்பழுதாங்கிகளின் கட்டுமானப் பணிகளில் 55%மும் பூர்த்தியடைந்துள்ளன. அவற்றின் மிகுதி வேலைகள் 2013ஆம் ஆண்டில் முடிவடையச்செய்யும் விதமாக வேலைத்திட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. PLCCAD மென்பொருள் பாவிக்கப்பட்டு 33 கி.வா. மின்கோபுர மின்னிணைப்பு வேலைகள் வடிவமைக்கப்பட்டன. இவற்றுக்கான பயிற்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் மின்கோபுர மின்னிணைப்புச் செலவுகள் மேலும் உயர்வடையும்.

இக்கருத்திட்டத்தில் புதிய நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி நிலப்பரப்பின் அளவைக் குறைத்து 33 கி.வா. மின்கோபுரத்தை அமைப்பதோடு, இலங்கையில் முதன்முதலில் நான்கு சுற்று மின் கோபுர இணைப்புகளை 4.5 கி.மீ. தூரம் ஏற்படுத்தி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு மின்சாரம் வழங்கப்பட இருக்கின்றது.

இக்கருத்திட்டத்தின் இலக்குகளில் பெரும்பான்மையானவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 33 கி.வா. கோபுர மின் நிர்மாணம் மற்றும் 33 கி.வா. பழுதாங்கி வேலைகள் என்பன 2013ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

### தெஹிவளை – கல்கிசை பிரதேச மின் விநியோக அபிவிருத்தித் திட்டம

இத்திட்டத்தில் பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- UG கேபிள் வலைப்பின்னல் வேலைகள் நிலை 1 அளவை விபரங்கள் கோவை செய்யப்பட்டன.
- நெதிமாலவில் 10.5 மீற்றர் நீளமுடைய பாலத்திற்கு கேபிள் மூலமான மின்சார விநியோக நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டதோடு, SLLRDCஇன் அங்கீகாரமும் பெறப்பட்டது. அதற்கான மதிப்பீட்டு வேலைகளும் முடிவடைந்தன. இதன் ஆரம்ப பணிகளுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.
- வெளிக்கள விசாரணைகள், 50 விநியோக உபமின் நிலைய அபிவிருத்தித் திட்டத்திற்கான மதிப்பீட்டு வேலைகளின் கட்டம் 1 பூர்த்திசெய்யப்பட்டன. MV, LV உபகரணங்கள், LV barlines என்பன உபமின் நிலைய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன.
- கருத்திட்டம் தொடர்பான பிரேரணை ஒன்று JICAஇடம் கையளிக்கப்பட்டது. இதற்கான நிதியைப் பெறுவதற்கான அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### மனித வள விநியோகம்: விநியோகப் பிரிவு 4

வருட இறுதியில் விநியோகப் பிரிவு 4இல் 2,015 ஊழியர்கள் காணப்பட்டனர். அவர்களின் விரிவான விபரம் பின்வருமாறு:




**விநியோகப் பிரிவு 4இன் ஊழியர்களின் விரிவான விபரம்**

# கருத்திட்டப் பிரிவு



# கருத்திட்டப் பிரிவு

**மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தி செயற்றிட்டம்**

**கொள்ளளவு:**

தாபிக்கப்பட்ட கொள்ளளவு 150 MW (75 MW x 2 Units)

வருடாந்த மின் உற்பத்தி அளவு 409 கி.வா.ம.

இயந்திர உபகரணங்கள் 31 %

**செலவு:**

வெளிநாட்டுச் செலாவணி (JICA கடன்) JPY 37,817 M (USD 346 M)

உள்ளூர் (இலங்கை மின்சார சபை) LKR 8,548 M (USD 100 M)

**செயற்றிட்டத்தை அமுல்படுத்தல் :**

கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையம் 409 GWh வருடாந்த எதிர்பார்க்கப்பட்ட மின் உற்பத்தியையும், 150 மெ.வா. நிலையான கொள்ளளவு கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதன் மூலம் இலங்கையில் அதிகரித்துச்செல்லும் மின்சாரத்தின் கேள்வியினையும் பூர்த்திசெய்யும் நோக்குடன் தாபிக்கப்பட்ட மின் உற்பத்தி செயற்றிட்டம் ஆகும். இச்செயற்றிட்டம் போதியளவு சூழல் மற்றும் சமூக அழுத்தங்களைச் சமநிலைப்படுத்தி அமுல்படுத்தப்பட்டுள்ளது

இச்செயற்றிட்டமானது பின்வரும் கருத்திட்டப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- 35.5 மீற்றர் உயரம் மற்றும் 180 மீற்றர் நீளம் கொண்ட அணைக்கட்டு தலவாக்கலை நகருக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 0.25 சதுரகிலோ மீற்றர் (60 ஏக்கர்) பரப்பினைக் கொண்ட நீர்த்தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவு 0.8 மீற்றர் மில்லியனாக இருப்பதுடன் கடத்துகைக் கொள்வனவு 2.5 மில்லியன் மில்லிலீற்றர்களாகும். நீர்த்தேக்கத்தின் முழுமையான விநியோக மட்டம் கடல் மட்டத்திலிருந்து 1,194 மீற்றர்களாகும். குறைந்தபட்ச விநியோக மட்டம் 1,190 மீற்றர்களாகும். சாதாரண மட்டம் கடல் மட்டத்திலிருந்து 703 மீற்றர்களாகும்.
- 12.89 கிலோமீற்றர் நீளம் கொண்ட சுற்றளவு 4.5 – 5.8 மீற்றர்களுக்கிடைப்பட்ட விரிவாக்கப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சுரங்கம் நீர்த்தேக்கக் கட்டுமானத் திலிருந்து வட பிரதேசத்திற்குச் செல்வதுடன் அது பூண்டுலோயா நீர்த்தேக்கத்திற்கு அருகாமையில் இருந்து வடமேல் பிரதேசத்திற்கு தற்போதுள்ள கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. நீர்த்தேக்கம் மற்றும் மின்னுற்பத்தி நிலையத்திற்கிடையில் உயர்த்தப்பட்ட நீர்வீழ்ச்சி 491 மீற்றர்களாகும்.
- 12 மீற்றர் சுற்றளவினைக் கொண்ட 98 மீற்றர் உயரம் மற்றும் வரையறுக்கப்பட்ட திறந்த அடிப்படையிலான தாங்கி மின்னுற்பத்தி நிலையம் மேற்பரப்பில் அமைந்துள்ளது.
- 4.5 மீற்றர் சுற்றளவினைக் கொண்ட 1.45 மீற்றரைவிடக் கறைவான பென்ஸ்ரொக் குழாய் இது 793 மீற்றர் நீளமும் நிலத்திற்குக் கீழான சுரங்கம் மற்றும் 48 மீற்றர் நீளங் கொண்ட இரட்டைச் சுரங்கங்களைக் கொண்டுள்ளது.
- கிராமிய நுளைவாயிலில் அமைந்துள்ள 86.3 மீற்றர் நீளம் + 18.8 மீற்றர் அகலம் கொண்ட நிலத்திற்குக் கீழ் மின்னுற்பத்தி கொத்மலை ஓயாவுடன் பூஜா ஓயா இணையுமிடத்தில் இருந்து 2 கி.மீ. உடுகங்கைத் திசையில் அமைந்துள்ளது. 77,000 மறு வீதம் இரு சுழற்சி இயந்திரங்கள் 88,000 Gwh இரட்டை மின்னுற்பத்தி இயந்திரங்கள் 2 மற்றும் 220 kV மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உபமின் உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளன.
- 220 kV மின்னுற்பத்தி நிலையத்தின் பிறப்பாக்கி மார்க்கம் மற்றும் அதனை இணைக்க 86.3 மீற்றர் நீளம் + 130 மீற்றர் அளவு கொண்ட வெளி உற்பத்தி நிலையமும் கிராமிய நுழைவாயிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- 18 km நீளம் கொண்ட, 220 KV இரட்டைச்சுற்று செலுத்துகைக் கம்பியானது, தற்போதுள்ள கொத்மலை உபநிலையத்திற்கு சக்தியை கடத்துவதற்கு பயன்படும்.

செயற்றிட்டத்தின் முகாமைப் பணிகளின் வசதிக்காக செயற்றிட்டத்தின் பணிகள் 5 இடத் துண்டுகளுக்கு பகிரப்பட்டதுடன் கீழ்க் குறிப்பிட்டவாறு அவை 05 ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலை**

ஒப்பந்தகாரர்களின் விபரங்கள்

| துண்டு (வலயம்) | ஒப்பந்தகாரர் பெயர் | வழங்கப்பட்ட திகதி | ஒப்பந்தக் காலம் | ஒப்பந்தப் பெறுமதி | | செலுத்தப்பட்ட தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | LKR M | JPY M | LKR M | % | JPY M | % |
| ஒப்பந்தச் சேவை | J மின்சக்தி | 2003.11.15 | 76 மாதங்கள் | 734 | 2,358 | 616 | 84 | 2,184 | 93 |
| துண்டு 1:<br>ஆரம்பப் பணிகள் | மெய்டா கோப்பரேசன் | 2005.07.27 | 33 மாதங்கள் | 6,830 | 661 | 5,770 | 84 | 630 | 95 |
| துண்டு 2:<br>பிரதான சிவில் பணிகள் | மெய்டா நிஷிமற்சு JV | 2006.12.06 | 54 மாதங்கள் | 5,609 | 7,726 | 5,523 | 98 | 7,389 | 96 |
| துண்டு 3:<br>நீர்மின் தொழில்நுட்ப<br>உபகரணங்கள | குறிமோட்டோ லிமிட். | 2007.11.29 | 42 மாதங்கள் | 788 | 2,060 | 788 | 100 | 2,060 | 100 |
| உபகரணங்கள் | | | | | | | | | |
| துண்டு 4:<br>மின் தொழில்நுட்ப<br>உபகரணங்கள் | மிட்சுபிசி கோப்பரேசன் | 2008.06.20 | 36 மாதங்கள் | 585 | 7,973 | 531 | 91 | 7,235 | 91 |
| துண்டு 5:<br>மின்மாற்றல்கள் இணைப்பு | கிங்டன்<br>கோப்பரேசன் | 2009.10.06 | 22 மாதங்கள் | 723 | 738 | 706 | 98 | 720 | 98 |
| | | | | 15,271 | 21,517 | 13,934 | 91 | 20,218 | 94 |

# கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

**2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் இக்கருத்திட்டத்தின் முன்னேற்றம்**

| விடயம் | விபரம் | % பூர்த்தி நிலை |
|---|---|---|
| துண்டு 1 | ஆரம்பப் பணிகள் | 94 |
| துண்டு 2 | பிரதான சிவில் வேலைகள் | 99 |
| துண்டு 3 | நீர்மின் தொழில்நுட்ப உபகரணங்கள் | 100 |
| துண்டு 4 | மின்சார தொழில்நுட்ப உபகரணங்கள் | 99 |
| துண்டு 5 | கடத்துகை கம்பி மார்க்கம் | 100 |
| | **செயற்றிட்டத்தின் சராசரி முன்னேற்றம்:** | **98** |

**எதிர்பார்க்கப்பட்ட ஒப்படைப்புக் காலம் :** அலகு 01 : 2012 யூன் 21
அலகு 02 : 2012 மார்ச் 28

**நிதியிடல் வசதி**

நிதி முகவர்கள்
JICA கடன் (SLP 74-JPY 33,265 M & SLP 100-JPY 4,552 M) JPY 37,817 M
இலங்கை மின்சார சபை நிருவாகச் செலவு LKR 8,548 M




துண்டு 1இன் புனர்நிர்மாண வேலைகள்



துண்டு 2 – அணைக்கட்டு

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி



துண்டு 3 – அணைக்கட்டு கதவுகள் பொருத்தப்பட்டன



துண்டு 3 – Stop logs



துண்டு 4 – மின்னுற்பத்தி நிலையத்தினுள் உபகரணங்கள் பொருத்துதல்



துண்டு 4 – பிரதான கட்டுப்பாட்டு அறை



துண்டு 5 – கேபிள் மின் வேலைகள்



துண்டு 5 – மின்சார விநியோகம்

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

வெயாங்கொடை - ஹபரணை – சம்பூர் பிரதேசங்களில் 220 kV மின்சார இணைப்புகளைக் கொண்டமைந்த திருகோணமலை நிலக்கரி மின் உற்பத்தி செயற்றிட்டம்

### திருகோணமலை 2×250MW நிலக்கரி மின் சக்திப் பொறி

இக்கருத்திட்டம் இலங்கை மின்சார சபையினாலும், இந்தியாவின் NTPC கம்பனியாலும் ஏற்படுத்தப்பட்ட ஓர் கூட்டு முயற்சித் திட்டமாகும். 2011ஆம் ஆண்டில் திருகோணமலை மின்சாரக் கம்பனியும் இக்கூட்டு முயற்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டு இருக்கின்றது. இந்நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 2,250 MW மின்சார வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றின் செயற்பாடுகளுக்கும் திருகோணமலை மின்சாரக் கம்பனியே பொறுப்பாக இருக்கின்றது.

இச்செயற்றிட்டத்திற்கான அடிப்படை வசதிகள் என்பன பற்றிய ஆய்வினை 2012 யூன் மாதம் இந்திய NTPC கம்பனி மேற்கொண்டிருந்தது. அது பற்றிய மீளாய்வு அறிக்கையை இலங்கை மின்சார சபை மேற்கொண்டு, அவ்வாய்வு அறிக்கை இலங்கை மின்சார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தம் மற்றும் ஏனைய கருத்திட்ட ஒப்பந்தங்கள் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் அல்லது அக்டோபர் மாதம் வரையில் காலம் நீடிக்கப்பட்டிருக்கின்றன. இத்திருகோணமலை நிலக்கரி மின்னுற்பத்தி செயற்றிட்டத்தின் வேலைகள் அடுத்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும்.

### வெயாங்கொடையிலிருந்து ஹபரணைக்கு 220 kV மின்சாரம் விநியோகம்

ஹபரணையில் புதிய உபமின் நிலையத்தை அமைத்தல் மற்றும் வெயாங்கொடை உபமின் நிலையத்தை விரிவாக்கல் நடவடிக்கைகளின் மூலம் வெயாங்கொடையிலிருந்து ஹபரணை வரையுள்ள 150 கி.மீ. தூரங் கொண்ட பிரதேசங்களுக்கு 220 kV மின்சாரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயற்றிட்டத்திற்கு JICA (யப்பான் ஜென் 9,573 மில்லியன் நிதி வசதி செய்துள்ளது. இதற்குரிய பூர்வாங்க வேலைகள் முடிவடைந்து மின்சக்தி அமைச்சின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. புதிய ஹபரணை உபமின் நிலையம் அமையவுள்ள இடம் வனத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. வெயாங்கொடை உபமின் நிலைய விரிவாக்கல் வேலைகளுக்காக தனியாரிடமிருந்து காணிகள் (225 பேர்ச்சஸ்) கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன. இச்செயற்றிட்டத்தில் காடாக்கல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இச்செயற்றிட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2013 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படும்.

### ஹபரணையிலிருந்து சம்பூருக்கு 220kV மின்சார விநியோகம்

இச்செயற்றிட்டமானது ஹபரணையிலிருந்து சம்பூர் வரையான 98 கி.மீ. தூரமான பிரதேசங்களுக்கு 220 kV மின்சார விநியோகம் செய்வதாகும். இச்செயற்றிட்டத்திற்கான நிதி இந்திய கிறடிற் லைன் (60 மில்லியன் அமெ.டொலர்) இச்செயற்றிட்டம் தொடர்பாக ஆரம்ப ஒப்பந்த வேலைகளை இந்திய அரசாங்கத்தோடு மேற்கொள்ளுமாறு மின்சக்தி அமைச்சின் செயலாளரால் திறைசேரிக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. 98 கி.மீ. தூரம் கொண்ட 220 kV மின் விநியோக மின்னிணைப்பு நடவடிக்கைகள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. சுற்றுப்புறச் சூழல் பரிசோதனை அங்கீகாரத்திற்கான அறிக்கைகள் மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றன. இதனது கட்டுமானப் பணிகள் 2013 ஒக்டோபர் மாதமளவில் ஆரம்பிக்கப்படும்.

வெயாங்கொடை - ஹபரணை – சம்பூர் செயற்றிட்டத்திற்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் லியய்சன் மற்றும் மாற்றல் வடிவமைப்பு கிளையினால் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

### புத்தளம் நிலக்கரி மின்சக்தி 900 MW கருத்திட்டம்

புத்தளம் நிலக்கரி மின்னுற்பத்தி நிலையமே இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது நிலக்கரி மின்னுற்பத்தி நிலையமாகும். 300 மெ.வா. மின்சக்தியைப் பெறக்கூடிய இம்மின் உற்பத்தி நிலையத்தின் முதலாம் கட்டப் பணிகள் 2007ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டப் பணிகளுக்கான செலவு 455 மில்லியன் ஸ்ரேளிங் பவுண்களாகும். இச்செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு இலங்கை மின்சார சபையாகும்.

இச்செயற்றிட்டம் கற்பிட்டிக் குடாநாட்டின் தென்பகுதி கரையில் நுரைச்சோலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இது கற்பிட்டிப் பிரதேச செயலக பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. இது 93 ஹெக்டயர் இடப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளதோடு, இதற்குரிய நிதியீட்டம் கடனடிப்படையில் எக்ஸிம் வங்கி எனும் சீன வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலக்கரி மின்சார நிறுவனமானது 2011ஆம் ஆண்டு யூலை மாதம் தனது விநியோக வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. நாளாந்தம் 5 கி.வா.ம. பெறப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் 2012 சனவரி பூர்த்திசெய்யப்பட்டது.

கட்டம் 1ஆனது பின்வரும் 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

#### மின்சக்திப் பொறி

உயர் அமுக்க மிகை வெப்பத்தில் இயங்கும் 300 MW நிலக்கரி மூலமான மின் பிறப்பாக்கி இயந்திரம். ஏனைய உபகரணங்களான கொதிகலன், Coal Conveying Belts, Pulverizes, Crushers, Demineralized water உபகரணங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளன.

#### நிலக்கரி கையாளல் உபகரணம்

இங்கு கடல் மூலம் விநியோகிக்கப்படும் நிலக்கரியைப் பெறுவதற்கும், கையிருப்பு சாலைக்கு எடுத்துச்செல்வதற்கும் வசதியான இறங்குதுறையொன்றும் கருத்திட்டத்தில் அடங்கும். இதன் நீளம் 500 மீற்றர்களாகும். 5,000 மெற்றிக்தொன் நிலக்கரியை எடுத்து வருவதற்கான கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளது. அங்கு மணிக்கு 650 மெற்றிக்தொன் நிலக்கரியை நகர்த்துவதற்காக 2 பாரந்தூக்கிகள் காணப்படுகின்றன. அத்தோடு கையிருப்பு சாலை பிரதேசத்தில் மணிக்கு 1,500 மெற்றிக்தொன் நிலக்கரியை நகர்த்துவதற்கான வசதிகள் காணப்படுகின்றன. கையிருப்புசாலையில் 750,000 மெற்றிக்தொன் நிலக்கரியை வைத்துப் பேணக்கூடிய வசதி உள்ளது. இது 900 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரத்திற்கு 3 மாதகாலத்திற்குப் போதுமானதாகும்.

#### கடத்துகை இணைப்பும் உபமின் நிலையமும்

கடத்துகை இணைப்பு கட்டம் 1ஆனது நுரைச்சோலையிலிருந்து வெயாங்கொடை உபமின் நிலையம் வரையான 117 கி.மீ. நீளமான பகுதிகளுக்கு 220 கி.வா. மின் விநியோகத்தை உள்ளடக்கியது. இது இரட்டை மின் கடத்தி, இரட்டை மின் சுற்று மின் கடத்துகை இணைப்பாகும்.

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

### ஊழியர் வீடமைப்பு திட்டம்

இது இக்கருத்திட்டத்தில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அனைவருக்கும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

### புத்தளம் நிலக்கரி மின்சக்திக் கருத்திட்டம் - கட்டம் II

புத்தளம் நிலக்கரி மின்சக்தி கருத்திட்டம், கட்டம் II 2 X 300 MW மின் சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய கொள்ளளவைக் கொண்டதாக அமையும். கட்டம் IIஆனது பின்வரும் கட்டுமான வேலைகளைக் கொண்டதாக அமையும்.

1. 1ஆவது மின்சக்திப் பொறியை ஒத்த 300 MW மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய 2ஆவது மின்சக்திப் பொறியின் கட்டுமானப் பணிகள்
2. 1ஆவது மின்சக்திப் பொறியை ஒத்த 300 MW மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய 3ஆவது மின்சக்திப் பொறியின் கட்டுமானம்
3. நிலக்கரிகளை நிரப்பும் இரண்டு பாரந்தூக்கிகளின் நிர்மாண வேலைகள்
4. சிலாபத்தில் அமையவுள்ள உபமின் நிலையத்தின் நிர்மாண வேலைகள்
5. அநுராதபுர உபமின் நிலையத்திற்கு 220 kV மின் இணைப்பை விநியோகிப்பது தொடர்பான நிர்மாண வேலைகள

இப்புத்தளம் நிலக்கரி மின்சக்தி கருத்திட்டம் IIஇற்கான ஒப்பந்தம் 2009ஆம் ஆண்டு யூன் மாதம் கைச்சாத்திடப்பட்டது. மொத்தச் செலவு 891 மில்லியன் ஸ்ரேளிங் பவுண். கட்டம் IIஇன் 1ஆவது அலகுக்கான வேலைகள் 2010 ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதனது செயற்பாடு 2013ஆம் ஆண்டின் இறுதியிலும், 2ஆம் அலகுக்கான செயற்பாடு 2014ஆம் ஆண்டு ஏப்பிரல் மாத இறுதியிலும் மேற்கொள்ளப்படும்.

இச்செயற்றிட்டத்தின் கட்டம் I, கட்டம் IIஇற்குமான நிதி (கடனடிப்படையில்) மக்கள் சீனா வங்கியால் மேற்கொள்ளப்படும்.

### புரோட்லான்ட் நீர்மின் உற்பத்தி செயற்றிட்டம்

புரோட்லான்ட் நீர்மின் உற்பத்திச் செயற்றிட்டம் எனப்படுவது லக்ஷபான நீர்மின் உற்பத்தி கட்டடத்தொகுதியில் காணப்படும் பொல்பிட்டிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஓரளவு தாழ்ந்த நீர்மின் உற்பத்தி இயலுமை கொண்டதாக களனி கங்கையில் தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கங்கை நீர்மானி வகையின் செயற்றிட்டமாகும். 35 MW நிலையான சக்தி செயற்றிட்டத்தில் அடங்குவதுடன், வருடாந்த மின்சக்தி 126 GWh ஆகும். செயற்றிட்டத்தின் பிரதான வேலைத்தளம் கித்துலுகல நகருக்கு அருகாமையில் கொழும்புக்குத் தென் மேற்கே 90 கி.மீ. தொலைவில் தாபிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரதான பகுதிகளாக அமைவன பிரதான அணை, திசை திருப்பும் அணைக்கட்டு, சுரங்கம், திசை திருப்பும் சுரங்கம், மின் உற்பத்தி நிலையத்தின் மேற்பரப்பு, சேற்று நிலம், கடத்துகைக் கம்பி மார்க்கங்களாகும்.

இச்செயற்றிட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2006ஆம் ஆண்டு பெறப்பட்டது. வெற்றிகரமான ஒப்பந்தகாரர்களினால் நிதியீட்டத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் சீன தேசிய இலத்திரனியல் உபகரணக் கூட்டுத்தாபனம் (CNEEC) வெற்றிகரமான விலைமனுக் கோரலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 2010ஆம் ஆண்டின் இறுதியில் அவர்களுடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு 82 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடன் நிதியீட்டம் மேற்கொள்வன கைத்தொழில் மற்றும் சீன வர்த்தக வங்கி மற்றும் மக்கள் வங்கி இலங்கை என்பனவாகும். நிதி உடன்படிக்கைகள் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2013ஆம் ஆண்டு காலாண்டு இறுதியை எட்டும் போது ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுவதுடன், நான்கு ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்றிட்ட ஆலோசகர் ஒருவரை நியமிப்பதற்கான கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன. புரோட்லான்ட் நீர்மின் உற்பத்திச் செயற்பாட்டில் CER வருமானங்கள்/CDM பதிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைக்காக எகோய் கம்பனி லிமிட்ட் எனும் கொரிய நாட்டுக் கம்பனி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்குரிய ஒப்பந்தமானது 2012 டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

### யாழ்ப்பாண மின்சக்தி கருத்திட்டம்

யாழ். குடாநாட்டில் மின்சக்தித் தேவைப்பாடு

வட பிராந்தியத்தில் மின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கை மின்சார சபையால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் இக்கருத்திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மின்சக்தியை விநியோகம் செய்வதோடு, அதன் நம்பகத்தன்மை பேணுவதுமாகும். இது தேசிய மின் இணைப்புடன் இணைக்கப்படாது, தனித்து அமைக்கப்படும். இதன் மூலம் செலவுகளைக் குறைத்துக்கொள்வதுடன், குறுகிய காலப் பகுதிக்குள் மின்சக்தியை உற்பத்தி செய்து அதனை விநியோகம் செய்வதன் மூலம் நம்பகத்தன்மையைப் பேணுவதாகும். நீண்ட காலப்போக்கில் இக்கருத்திட்டத்தின் மூலம் அதிகளவு வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதுடன், அதன் நம்பகத்தன்மையையும் பேண முடியும்.

### கருத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

வடிவமைப்பு, உற்பத்தி, விநியோகம், இயந்திரங்கள் உபகரணங்களைப் பொருத்துதல் போன்ற விடயங்கள் இக்கருத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். 24 MW வலு மின் சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய டீசலில் இயங்கக்கூடிய மின்பிறப்பாக்கியை யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுன்னாகப் பிராந்தியத்தில் அமைக்கப்படுவதற்கான ஒப்பந்தங்கள் (EPC) மேற்கொள்ளப்பட்டன. மின்சக்திக் கருத்திட்டம் 3 X 8 MW DG sets மற்றும் அன்சிலியறி முறைமை, மின்தாங்கி, ராடியேற்றர் வங்கி, 33 kV மின்தாங்கி, எரிபொருள் களஞ்சியம், இன்சினரேட்டர், வேலைத்தளப்பட்டறை, நிருவாக அலுவலகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

# கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

### கருத்திட்ட வடிவமைப்பு

| | |
|---|---|
| கருத்திட்டத்தின் பெயர் | : 24 MW யாழ்ப்பாண மின்சக்தி கருத்திட்டம் |
| ஒப்பந்த இல. | : CEB / JPP /01-2012 |
| தொழில்தருனர் | : இலங்கை மின்சார சபை |
| பொறியியலாளர் | : இலங்கை மின்சார சபை |
| EPC ஒப்பந்தக்காரர் | : லக்தனாவி லிமிடட் |

### ஒப்பந்த காலம்

| செயற்பாடு | திட்டமிடப்பட்டது | உண்மை நிலை |
|---|---|---|
| கருத்திட்டத்தின் கால அளவு | 261 நாட்கள் | 259 நாட்கள் |
| கருத்திட்ட ஆரம்பத் திகதி | ஏப்ரல் 30, 2012 | ஏப்ரல் 30, 2012 |
| கருத்திட்ட முடிவு திகதி | சனவரி, 2013 | |

### ஒப்பந்தப் பெறுமதி (கட்டளை வேறுபாட்டிற்குப் பின்)

**வெளிநாட்டு நாணயம் -** 9,195,659.17 ஸ்ரேளிங் பவுண், 12,850,430.49 யூரோ
**உள்ளூர் நிதி -** 686,156,781.49 இலங்கை ரூபா

### நிதியீட்டம்

2012ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி ஒப்பந்தப் பெறுமதியில் 101ஆன தொகை இலங்கை மின்சார சபையால் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு இலங்கை மின்சாரக் கம்பனி 3.0 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**இக்கருத்திட்டத்தின் முக்கிய நிகழ்வுகள்**

| | |
|---|---|
| கேள்விப்பத்திர ஆரம்பத் திகதி | : 22.12.2011 |
| கேள்விப்பத்திர முடிவுத் திகதி | : 02.02.2012 |
| அமைச்சரவை அங்கீகாரத்திற்கும் SCAPCஇன் அங்கீகாரத்திற்காக TEC அறிக்கை சமர்ப்பித்த திகதி | : 08.02.2012 |
| அமைச்சரவை அங்கீகாரத் திகதி | : 09.04.2012 |
| ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட கடிதம் | : 11.04.2012 |
| ஒப்பந்தம் கைச்சாத்தான திகதி | : 27.04.2012 |
| ஒப்பந்தத்தின்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | : 30.04.2012 |
| 10% ஒப்பந்த முற்பணக் கொடுப்பனவு | : 16.05.2012 |
| கருத்திட்டத்தின் முதல் அலகு வேலைகளின் ஆரம்பத் திகதி | : 20.12.2012 |

2013ஆம் ஆண்டின் முதல் 3 காலாண்டிற்குள் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம்

இக்கருத்திட்டமானது உமா ஓயாவை வெலிமடை புகுல்பொல என்னும் இடத்தில் அணையைக் கட்டியும், மஹதொட்டில ஓயாவை தைராப என்னுமிடத்தில் அணையைக் கட்டியும் நீர்த்தேக்கங்களை அமைத்து தரைக்கீழ் மின்வலு நிலையம் சுவிச்யார்ட், கடத்துகை மின்னிணைப்பை பதுளை உபமின் நிலையத்துடன் இணைப்பதென்பதாகும்.

இதன் மூலம் இலங்கையின் தென் கிழக்கு வறள் வலயப் பகுதிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு வருடாந்தம் சராசரியாக 145 MCM கொள்ளளவு நீர்ப்பாசன வசதியையும், 120 MW சக்தி கொண்ட மின்சக்தியையும் உற்பத்திசெய்ய முடியும்.

இரு கொங்கிரீட்டு அணைகளை கருத்திட்டம் கொண்டுள்ளது. முதலாவது புஹுல்பொல பிரிவில் உமஓய ஆறு மீது கட்டப்படவுள்ளது. பின்னர் புஹுல்பொல அணையில் கட்டுப்படுத்தப்பட்ட நீரானது இணைக்கப்படுவதுடன், அது தியரபவவில் மஹாதொட்டில் ஓய மீது இன்னொரு அணையின் நீர்த்தேக்கத்தினுள் இணைப்புச் சுரங்கமொன்றின் ஊடாக அனுப்பப்படும். அங்கு நீண்ட தலையோடைச் சுரங்கமும், நிலைக்குத்தான தண்டொன்றும் நிலக்கீழ் மின்நிலையத்திற்கு நீரைக் கொண்டு செல்லும். மின்நிலையத்திலிருந்து வெளியேற்றமானது கிரிந்தி ஓயவில் கிளை ஆறு ஒன்றான அலிகொட் ஓயவினுள் தலையோடைக் கால்வாயொன்றின் ஊடாக திருத்தப்படும்.

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு (MOIWM) மின்சக்தி அமைச்சுடன் கூட்டிணைந்து இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இக்கருத்திட்டத்திற்கான ஒப்பந்தமானது 2008ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28ஆம் திகதி MOIWMஇற்கும், ஈரான் நாட்டிற்குமிடையே மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு 529 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 85%மானது ஈரான் நாட்டு வெளிவாரி அபிவிருத்தி வங்கியினாலும், மிகுதி 15% இலங்கை அரசாங்கத்தினாலும் பொறுப்பேற்கப்படும். இத்திட்டத்தின் வேலைகள் 2010 மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. மின் கடத்துகை, சுரங்கப் பணி வேலைகள் என்பன தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன. இத்திட்டமானது 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பூர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் மின்வலு பிறப்பாக்கி உபகரணம் கடத்துகை இணைப்பிற்கான (EM, HM வேலைகள்) செலவு 189 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இலங்கை மின்சார சபை இதன் வேலைகளை மேற்பார்வை செய்துவருகின்றது.

### கடத்துகை செயற்றிட்ட அபிவிருத்தி

2012ஆம் ஆண்டில் இத்தகைய கடத்துகை அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது. பெலியத்த மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங்கள் அமைக்கப்பட்ட உபமின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் 2012ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டன. சுன்னாகம், மகியங்கணை, நாவுல, மாஹோ, பள்ளேகல போன்ற இடங்களில் உபமின் நிலைய வேலைகள் தற்பொழுது நடைமுறையில் உள்ளன. இதைவிடுத்து ரண்தெம்பை, இரத்தினபுரி, விமலசுரேந்திர, சீதாவாக்கை, பெல்லன்கொட, பதுளை, நுவரெலியா, உக்குவலை, ஹபரணை, பாணந்துறை, மாத்தறை, புத்தளம், அம்பாறை, வாழைச்சேனை போன்ற பிரதேசங்களின் உபமின் நிலையத்தின் விரிவாக்கல் வேலைகளும் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன. காலி – மாத்தறை, புத்தளம் - மாஹோ, உக்குவலை – பள்ளேகல, ஹபரணை – வாழைச்சேனை, ரண்தம்பை – மகியங்கணை,

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

வவுனியா – கிளிநொச்சி, கிளிநொச்சி – சுன்னாகம் போன்ற மின் இணைப்பு கட்டுமானப் பணிகளும் தற்பொழுது நடைமுறையில் உள்ளன. 2012ஆம் ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கடத்துகை செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு.

### பெலியத்தை நெய்யரி உபமின் நிலைய செயற்றிட்டம்

ஹம்பாந்தோட்டைக்கு ஒளியூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் முதலாம் கட்டமான இச்செயற்றிட்டத்தின் கீழ் 132/33 kV நெய்யரி உபமின் நிலையம் பெலியத்தையில் நிர்மாணிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, இந்த நெய்யரி உபமின் நிலையம் தேசிய நெய்யரி வலையமைப்புடன் தொடர்புபடுத்தும் வகையில் ஹக்மனையில் இருந்து பெலியத்தை வரை 132 kV கடத்துகைக் கம்பிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. உபமின் நிலையத்திற்காக (4.731 மில்லியன் யூரோ மற்றும் 89.332 மில்லியன் ரூபாவும்) கடத்துகைக் கம்பித் தொகுதிக்காக (472 மில்லியன் ரூபா) இலங்கை அரசினால் நிதியளிக்கப்படுகின்றது. சகல ஒப்பந்தப் பணிகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், உபமின் நிலையம் மற்றும் கம்பித்தொகுதிகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடத்துகைக் கம்பித்தொகுதியின் வேலைகள் 2011ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டன. நெய்யரி உபமின் நிலையங்களின் வேலை 2012 பெப்புருவரி 13ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு ஒளியூட்டல் வேலைகளும் இடம்பெற்றுவருகின்றன.

### வவுனியா - கிளிநொச்சி கடத்துகைச் செயற்றிட்டம்

அரசாங்கத்தினால் வட மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. வடமாகாணத்திற்குத் தேவையான மின் கம்பங்களை நிர்மாணித்தல் மற்றும் நெய்யரி உபமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்திற்கு 2700 மில்லியன் ரூபாவை JICA நிறுவனம் நிதியீட்டம் செய்துள்ளது. இச்செயற்பாட்டு விரிவாக்கங்களுக்கமைய 132/33 kV மின் இணைப்புடன்கூடிய 63 MVA நெய்யரி உபமின் நிலையங்களும் அமையவுள்ளன. வவுனியா உபமின் நிலையத்திலிருந்து கிளிநொச்சி உபமின் நிலையம் வரை 67 கிலோமீற்றரைக் கொண்ட 132 கி.வா. கடத்துகை கம்பிகளை நிர்மாணித்தல் போன்ற விடயங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

இச்செயற்றிட்டத்திற்கான ஒப்பந்தமானது 2010 யூலை மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதனது வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் நெய்யரி உபமின் நிலையம் எமது நாட்டின் சனாதிபதி அதிமேன்மைதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களால் 2012ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.



2012 செப்ரம்பர் 25ஆம் திகதிய திறப்பு விழா

### கிளிநொச்சி – சுன்னாகம் கடத்துகைச் செயற்றிட்டம்

இச்செயற்றிட்டமும் வட மாகாண அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் மற்றுமொரு பகுதியாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இச்செயற்றிட்டத்திற்கு 28.72 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியீட்டம் செய்துள்ளது. இச்செயற்றிட்டம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 132/33 kV மின் இணைப்புடன்கூடிய நெய்யரி உபமின் நிலையம் (63 MVA) மற்றும் கிளிநொச்சி நெய்யரி உபமின் நிலையம், கிளிநொச்சியிலிருந்து சுன்னாகம் வரைக்குமான 73 கி.மீ. நீளம் கொண்ட 132 kV மின் இணைப்பு பணிகள் யாவும் இச்செயற்றிட்டத்தில் அடங்குகின்றன.

கிளிநொச்சிக்கும் சுன்னாகப் பகுதிக்குமிடையில் 215 மின்தாங்கிகள் 132 kV மின் இணைப்பைத் தாங்கி நிற்கின்றன. இப்பகுதியை சுத்தப்படுத்தும் செயற்றிட்டம் பணியாளர்களுக்கு மிகுந்த சிரமமாக அமைந்தது. வீதியின் இரு மருங்கிலும் கண்ணிவெடிகள் உட்பட வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட மையம் இது. விசேடமாக முகமாலைப் பிரதேசம் மற்றும் ஆனையிறவு ஏரி உள்ளிட்ட பிரதேசங்கள் பாரிய அளவில் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்ட இடங்களாக இனங்காணப்பட்டன. இப்பகுதியில் மூலப்பொருட்கள், உபகரணங்களை நகர்த்தும் வேலைகளும் மிகுந்த சிரமமாக காணப்பட்டன.

இச்செயற்றிட்டம் 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நெய்யரி உபமின் நிலைய இணைப்பின் ஒரு பகுதி வேலைகள் முடிவடைந்துள்ளன. முழு வேலைகளும் முடிந்தவுடன் நாட்டின் மொத்த மின் வலைப்பின்னலுடன் இணைக்கப்படும். இச்செயற்றிட்டம் பூர்த்திசெய்யப்பட்டதும் 23 வருடங்களுக்குப் பின் யாழ். மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் மின்சார விநியோகத்தை சிறப்பாக வழங்க முடியும்.



சுன்னாகத்தில் தொடரும் நிர்மாணப் பணிகள்

### விரிவாகக்ல் உபமின் நிலையமும் மின்சக்தியை உள்வாங்கும் மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி கருத்திட்டமும் (AGSAREP)

இக்கருத்திட்டமானது ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியீட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் இரண்டாம் கட்ட வேலைக்காக

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

ADBஆனது 2,998 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது. 132/33 kV மின் இணைப்புடன்கூடிய 63 MVA சக்தியைக் கொண்ட உபமின் நிலையமானது மகியங்கணையில் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அத்தோடு சீதாவாக்கை, பலாங்கொடை, பதுளை, நுவரெலியா, உக்குவலை உபமின் நிலையங்களின் விரிவாக்கல் பணிகளும் இக்கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

இக்கருத்திட்டத்தின் மிகுதி வேலைகளுக்கு இலங்கை அரசாங்கம் 1,361 மில்லியன் ரூபாவை நிதியீட்டம் செய்துள்ளது. இச்செயற்றிட்டத்தின் கீழ் இரத்தினபுரி, விமலசுரேந்திர, ரண்தம்பை போன்ற இடங்களில் காணப்படும் உபமின் நிலையங்கள் மேலும் விரிவுபடுத்தப்படுவதோடு, மின்சக்தியின் அளவும் அதிகரிக்கப்படும். அத்தோடு 132 kV மின்சக்தி கொண்ட 21 கி.மீ. நீளமான தூரத்தைக் கொண்ட ரண்தம்பைக்கும், மகியங்கணை உபமின் நிலையத்திற்குமிடையே மின் இணைப்பு கட்டுமானப் பணிகளும் இதில் அடங்குகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியீட்டம் செய்யப்பட்ட கருத்திட்டப் பணிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) நிதியீட்டம் செய்யப்பட்ட கருத்திட்டப் பணிகள் என்பன முறையே 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலும், 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ரண்தம்பை மற்றும் மகியங்கணை மின் கட்டுமானப் பணிகளை இலங்கை மின்சார சபை மேற்பார்வை செய்து வருகின்றது. இக்கருத்திட்டத்தில் அடங்கும் சகல வேலைகளும் 2012ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றின் மூலம் மின்சக்தியின் அளவை (சிறிய நீர்மின் உற்பத்தி) அதிகரித்துக்கொள்ள முடியும்.

### கடத்துகை முறைமையை வலுப்படுத்தும் கடத்துகை இணைப்புச் செயற்றிட்டம்

இக்கடத்துகை முறைமை வலுப்படுத்தும் கடத்துகை இணைப்புச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் 20.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியீட்டம் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. அதில் தூய்மையான மின்சக்தி மற்றும் அது சார்ந்த பிரவேசங்களை



அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் 2518–SRI/2519–SRI (SF) மற்றும் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.

132 kV மின்சார இணைப்பு வேலைகள் காலி, மாத்தறை, புத்தளம், மாஹோ, உக்குவலை, பள்ளேகல போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இக்கருத்திட்டமானது 2013ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடத்துகை முறைமையை வலுப்படுத்தும் நெய்யரி உபமின் நிலைய செயற்றிட்டம்

இக்கருத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 33.1 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியானது 2518–SRI/2519–SRI (SF) எனும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது.

தொழில்நுட்பத் தேவையின் அடிப்படையில் இக்கருத்திட்டம் 3 கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் கட்டமான A1இல் குருநாகல் நெய்யரி உபமின் நிலைய அபிவிருத்தியையும் A3 கட்டமானது வெயாங்கொடை, ஹொரணை நெய்யரி உபமின் நிலையங்களின் அபிவிருத்தியையும் உள்ளடக்கியது. இவற்றின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருக்கின்றன. கட்டம் A2இன் ஒப்பந்த வேலைகள் 2010 நவம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டன. இச்செயற்றிட்டத்தில் நாவுல, மாஹோ, பள்ளேகல புதிய நெய்யரி உபமின் நிலையங்கள் மற்றும் ஹபரணை, பாணந்துறை, மாத்தறை, புத்தளம், காலி ஆகிய இடங்களிலுள்ள நெய்யரி உபமின் நிலையங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளும் இச்செயற்றிட்ட கட்டம் 2இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டம் 2இன் பணிகள் யாவும் 2013ஆம் ஆண்டின் மத்தியில் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கிழக்கு மாகாண கடத்துகை முறைமையைப் பலப்படுத்தும் கருத்திட்டம்

மின்சக்தி மற்றும் பிரவேசத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் கடன் முறைமை 2518–SRI/2519–SRI (SF) - இன் கீழ் இச்செயற்றிட்டத்திற்காக 25.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படுகின்றது.

இச்செயற்றிட்டத்தின் கட்டம் (ஆ) இன் கீழ் ஹபரணை நெய்யரி உபமின் நிலையத்திலிருந்து வாழைச்சேனை நெய்யரி உபமின் நிலையம் வரை 100 கிலோமீற்றர் நீளம் கொண்ட புதிய 132 kV கடத்துகைக் கம்பி இணைப்புகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. செயற்றிட்டத்தின் (அ) கட்டமானது வாழைச்சேனை மற்றும் அம்பாறை நெய்யரி உபமின் நிலையங்களின் அபிவிருத்திப் பணிகளைக் கொண்டிருக்கின்றது.

கருத்திட்டத்தின் கட்டம் (அ) மற்றும் கட்டம் (ஆ) இனது ஒப்பந்தங்கள் முறையே 2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இவை இரண்டினதும் வேலைகள் 2013 ஆம் ஆண்டளவின் நடுப்பகுதியில் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வடக்கு – கிழக்கு மின் கடத்துகை அபிவிருத்திச் செயற்றிட்டம்

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண மின் விநியோகங்களைத் தொடர்ந்து விருத்தி செய்யும் தேவை இனங்காணப்பட்டுள்ளமையினால், இப்பணிக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து நிதியுதவி கோரப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மின் கடத்துகை அபிவிருத்திச் செயற்பாட்டில் இனங்காணப்பட்ட விடயங்களுக்கு 55 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினைக் கடனாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. கடன் உடன்படிக்கை செயற்பாடுகள் பூர்த்தியடைந்துவருகின்றன.

## கருத்திட்டப் பிரிவு தொடர்ச்சி

இச்செயற்றிட்டமானது பின்வரும் 3 கட்டங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

(i) கட்டம் (அ): இது மொனராகலை, பொலநறுவை மற்றும் வவுணதீவு ஆகிய இடங்களில் புதிய நெய்யரி உபமின் நிலையங்கள் மூன்றினை நிர்மாணித்தல் மற்றும் அம்பாறை, ரண்தம்பையில் உள்ள நெய்யரி உபமின் நிலையங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள்

(ii) கட்டம் (ஆ): இது மகியங்கனையிலிருந்து வவுணதீவு மற்றும் உகணையில் இருந்து அம்பாறை மற்றும் மெதகமையிலிருந்து மொனராகலை வரை 132kV மின் இணைப்புகள்

(iii) கட்டம் (இ): இது புதிய அநுராதபுரம் - கொத்மலை வரை 220 kV மின் இணைப்பு கட்டுமானப் பணிகள் போன்றனவாகும்

கட்டம் (அ), கட்டம் (ஆ) மற்றும் கட்டம் (இ) இனது ஒப்பந்தங்கள் முறையே 2012 ஓகஸ்ட் மாதத்திலும், 2012 ஏப்ரல் மாதத்திலும், 2012 பெப்புருவரி மாதத்திலும் கைச்சாத்திடப்பட்டன. இவற்றின் வேலைகள் 2013ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

#### புதிய காலி மின் கடத்துகை அபிவிருத்திச் செயற்றிட்டம்:

இக்கருத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 21.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியீட்டம் செய்துள்ளது.

இக்கருத்திட்ட்ததின் கட்டம் (அ)ஆனது புதிய நெய்யரி உபமின் நிலையத்தை காலியில் அமைத்தலும், கட்டம் (ஆ)ஆனது அம்பலாங்கொடை நெய்யரி உபமின் நிலையத்திலிருந்து புதிய காலி நெய்யரி உபமின் நிலையம் வரை 132 kV மின் இணைப்பு, நிர்மாணப் பணிகள் என்பன உள்ளடங்கப்பட்டுள்ளன.

கட்டம் (அ), (ஆ) இரண்டினதும் ஒப்பந்த வேலைகள் 2012 ஓகஸ்ட் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டன. இவற்றின் வேலைகள் முழுவதும் 2014ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு

# கூட்டாண்மை உபாயப் பிரிவு



# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு

**சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது.**

- **சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய மற்றும் கூட்டாண்மை**
- **பயிற்சி**
- **வேலைத்தளம் மற்றும் அது சார்ந்த சேவைகள்**
- **சிவில் வேலைகளும், கட்டடங்களும்**
- **கருத்திட்ட முகாமைத்துவ அலகு** (Vidulakpaya)
- **பாதுகாப்பு**

**சொத்து முகாமைத்துவம் மற்றும் கூட்டாண்மை**

சொத்து முகாமைத்துவம் மற்றும் கூட்டாண்மைக் கிளையானது இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டுடனும் இயக்கத்துடனும் தொடர்புபட்ட இலங்கை மின்சார சபையின் சொத்துக்களைப் பேணிவருவதாகும். இலங்கை மின்சார சபையின் காணி கட்டடங்களைத் திறமையாக முகாமை செய்தல், இலங்கை மின்சார சபையின் வளங்களை உச்சமாகப் பயன்படுத்துவதன் மூலம் மின்னுற்பத்தியையும், அதன் வருமானத்தையும் அதிகரித்தல் என்பன இக்கிளையின் பிரதான நோக்கங்களாகும்.

அத்தோடு பின்வரும் முக்கிய பணிகளும் இக்கிளையினால் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன. அவையாவன,

- இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்தலும், அவை தொடர்பான ஆவணங்களைப் பரீட்சித்தலும்
- இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான காணி, கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்தல்
- மிதக்கும் வானூர்தி மற்றும் படகுச் சேவைகள் போன்ற சுற்றுலா ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களுக்காக இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான நீர்நிலைகளைக் குத்தகைக்கு வழங்குதல்
- இலங்கை மின்சார சபை வளாகம் மற்றும் எல்லைப் பிரதேசங்களுக்குள் வர்த்தக விளம்பர அறிவித்தல்களுக்கு பொருத்தமான இடங்களைக் குத்தகைக்கு வழங்குதல்
- இலங்கை மின்சார சபையின் காணி, கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான விடயங்களை கணினிமயப்படுத்தலும் இற்றைப்படுத்தலும்
- இலங்கை மின்சார சபையின் வளங்களை வருமானம் உழைக்கும் நோக்கத்திற்காக உச்சமாகப் பயன்படுத்தல்
- இலங்கை மின்சார சபையின் மனித வளங்களை சிறப்பாக முகாமை செய்தல் போன்றனவாகும்.

**பயிற்சிக் கிளை**

இக்கிளையானது இலங்கை மின்சார சபையின் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக ஊழியர் படைக்க பல வருடங்களாகப் பயிற்சிகளை வழங்கிவருகின்றது. இது ஊழியர் படைக்கு பொருத்தமான கல்வி வசதி, பயிற்சிகள், அறிவுத்திறனை வளர்த்தல், வினைத்திறனான பயிற்சிகளை வழங்கிவருகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் வெவ்வேறு வகைப்பட்ட ஊழியர் குழாமிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு பயிற்சிகள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சிக் கிளையானது பின்வரும் அலகுகளைக் கொண்டுள்ளது. அவையாவன,

- இலங்கை மின்சார சபை பயிற்சி நிலையம் - பிலியந்தலை
- இலங்கை மின்சார சபை பயிற்சி நிலையம் - காசல்ரீ
- வெளியக பயிற்சி நிலையம், இது கொழும்பு CEB தலைமையகத்தில் உள்ளது.
- பரீட்சை அலகு
- தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலகு
- தரம் மற்றும் முறைமை அலகு

**இலங்கை மின்சார சபையின் பயிற்சி நிலையம் - பிலியந்தலை**

இப்பயிற்சி நிலையம் தர முகாமைத்துவ முறைமை தொடர்பாக ISO 9001: 2008/SLS ISO 9001: 2008 விருதினைப் பெற்றுள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தினால் தர முகாமை சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது.

**செயற்பணி**

***இலங்கையில் பயன்பாட்டுத் துறையில் முதன்மைப் பயிற்சி நிறுவனமாக உருவாதல்***

**நோக்கம்**

***இலங்கையின் தேசிய வளர்ச்சியை நோக்கிய பொருத்தமான வழிகாட்டி, அறிவைப் பெருக்குதல், அறிவுதிறன், உளப்பான்மை போன்றவற்றை வழங்குதல்***

பயிற்சி நிலையம் என்பதினால் பின்வரும் கடமைகளும் பொறுப்புக்களும் ஆற்றப்படுகின்றன.

| | அலகு | பொறுப்புக்களும் கடமைகளும் |
|---|---|---|
| 1 | இமிச. பயிற்சி நிலையம் பிலியந்தலை | |
| | பிலியந்தலை பயிற்சி நிலையம் | பதவியுயர்வுக்கான பயிற்சிகள், வெளிக்கள வேலைகள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர் களுக்கான பயிற்சிகள் 2002 திட்ட ஆட்சேர்ப்பு பதவியுயர்வு தொடர்பான பயிற்சிகள் |
| | உள்ளகப் பயிற்சி அலகு | CEB நிறுவன தொழில்நுட்பம்சாரா ஊழியர் களின் பதவியுயர்வு தொடர்பான கணினிப் பயிற்சிகள். 2002 திட்டம் தொடர்பில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பான பயிற்சிகள், பொறி இயந்திரம் தொடர்பான பயிற்சிகள், பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் மற்றும் பொறியியல் துறை, தொழில்நுட்பப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. |
| | தொழில்நுட்பப் பயிற்சி அலகு | பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சிகள் |

## சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

| | அலகு | பொறுப்புக்கள் |
|---|---|---|
| 2 | பயிற்சி நிலையம் - காசல்ரீ | மின் பிறப்பாக்கிப் பிரிவின் ஊழியர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகள், CEB ஊழியர்களின் பதவியுயர்வு தேவைப்பாடு களுக்கான பயிற்சிகள். மின் பிறப்பாக்கிப் பிரிவின் வெளிக்கள ஊழியர்களுக்கான பயிற்சிகள், 2002 திட்டத்தின் கீழ் CEB ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பான பயிற்சிகள் |
| 3 | வெளியகப் பயிற்சி அலகு | சகல CEB ஊழியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிகள |
| 4 | பயிற்சி அலகு | CEBஇன் சகல ஊழியர்களுக்கான பரீட்சைகள், CEB ஆட்சேர்ப்பு தொடர்பான பரீட்சைகள், CEB ஊழியர்களுக்கான தொழில்சார் ரீதியான பயிற்சியும் அதற்கான வசதிகளும் வழங்குதல் |
| 5 | தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு அலகு | CEB ஊழியர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விபத்து நிகழ்வு தொடர்பான தகவல்களைச் சேகரித்தல். இது பகுப்பாய்வு நடவடிக் கைக்கு உதவும். |
| 6 | தரம் மற்றும் முறைமை அலகு | தர மேம்பாடு தொடர்பான பயிற்சிகள், CEBஇன் 5S கருதுகோளை அமுல்படுத்துவதோடு உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்தலும். |

#### 2012ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயற்பாடுகள்

#### வெளியகப் பயிற்சி அலகுகள்

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் CEBஇன் 370 ஊழியர்களுக்கு வெளியகப் பயிற்சி அலகினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| பொருட் பெறுவனவு தொடர்பான பரிசோதனைகள் | 167 | 228 |
| பயிற்சி | 35 | 103 |
| மாநாடுகள் | 09 | 09 |
| வேலைப் பட்டறை | 10 | 11 |
| கூட்டங்கள் | 23 | 56 |
| கருத்தரங்குகள் | 05 | 04 |
| புலமைப்பரிசில்கள் | 01 | 01 |
| கல்விச் சுற்றுலாக்கள் | 07 | 08 |
| விளையாட்டுச் சுற்றுலாக்கள் | 03 | 06 |

#### உள்ளகப் பயிற்சி அலகு

2012ஆம் ஆண்டில் உள்ளகப் பயிற்சி அலகானது இலங்கை மின்சார சபையின் உள்ளகத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாது வெளியகப் பயிற்சியாளர்களுக்கும் அதிகளவு பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஏறத்தாழ CEBஇன் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 441 ஊழியர்களுக்கு பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற வெளி நிறுவனங்களிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக இயந்திர உபகரணப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

CEBஇன் 461 ஊழியர்களுக்கு பதவியுயர்வுத் தேவைப்பாடுகளுக்காக பயிற்சிகள் வழங்கப்பட்டன. 1,062 ஊழியர்களுக்கு கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவர்களுள் நிறைவேற்று உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

2012ஆம் ஆண்டு காலத்தில் ஒழுக்கப் பண்புசார் தொடர்பாக 128 ஊழியர்களுக்கு உள்ளூர் நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.





# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

### தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலகு

இலங்கை மின்சார சபையின் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலகின் பிரதான நோக்கமாக அமைவது CEB ஊழியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகும். தேசிய மற்றும் சர்வதேசரீதியாக ஊழியர்களின் நலன் கருதிய தேவைப்பாடுகளுக்கிணங்க இப்பிரிவானது உருவாக்கப்பட்டது. இப்பிரிவினால் ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பான கல்வியறிவு, பயிற்சிகள், பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. பாதுகாப்பு நலன் கருதிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. 2012ஆம் ஆண்டில் மேற்குறித்த அலகினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன

| | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | நிறைவேற்று உத்தியோகத்தர், மேற்பார்வை உத்தியோ கத்தர்களுக்கான பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் | 12 | 379 |
| 02. | மின் உற்பத்தி நிலையங்கள், வேலைத்தளத்தில் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் | 08 | 326 |
| 03. | முதலுதவி நடவடிக்கைகள் | 60 | 2629 |
| 04. | ஆபத்திலிருந்து தவிர்த்தல், தீ விபத்திலிருந்து பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 05 | 212 |
| 05. | பொறியியலாளர்களுக்கான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 | 108 |

### பரீட்சை அலகு

இப்பிரிவானது 4,411 ஆட்சேர்ப்புகள் தொடர்பான பரீட்சைகள் மற்றும் பதவியுயர்வு தொடர்பான பரீட்சைகள் நடாத்தப்பட்டன. வெளி நிறுவனங்களின் உதவியுடன் இப்பரீட்சை அலகானது சிறப்பான முறையில் பரீட்சைகளை நடாத்திவருகின்றது.

### தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் - பிலியந்தலை

குறிப்பிட்ட ஆண்டு காலப்பகுதியில் பொறியியலாளர்கள், மேற்பார்வையாளர்கள் உள்ளடங்கலாக 2,082 மின்சார சபை ஊழியர்களுக்கு பிலியந்தலை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தினால் பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அரச நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள், வேலைத்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் பின்வருமாறு

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| தொழில்சார் அபிவிருத்தி | 16 | 196 |
| வேலைப்பட்டறை | 06 | 236 |
| பதவியுயர்வு தொடர்பான பயிற்சிகள் | 46 | 1650 |
| ஏனைய நிறுவனங்களுக்கான பயிற்சிகள் | 02 | 76 |

### பிலியந்தலை பயிற்சி நிறுவனத்தின் வளங்கள் வாடகைக்கு விடப்படல்

மாநாட்டு மண்டபங்கள், விரிவுரை அறைகள், பயிற்சிக்கான சகல வசதிகள், உணவு, தங்குமிட வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய பிலியந்தலைப் பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடம் வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் 2012ஆம் ஆண்டில் 182,464.00 ரூபா இலாபமாக உழைக்கப்பட்டது.



### தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் காசல்றீ

இலங்கை மின்சார சபையின் முன்னோடி தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் இதுவாகும். 2012ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 1,466 இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது. தொழில் முறைமைசார் பயிற்சிகள், தொழில்நுட்பப் பயிற்சிகள், தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள், முதலுதவி மற்றும் உற்பத்தியியலளவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. CEB ஊழியர்களுக்கு மட்டுமல்ல பொதுமக்களுக்கும் வருமானத்தை ஈட்டும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### தரம் மற்றும் முறைமை அலகு

இலங்கை மின்சார சபையின் 5S தர மேம்பாடு செயற்பாட்டின் கீழ் பிலியந்தலை தொழில்நுட்ப நிறுவனம், விரயமாகும் மூலப்பொருள் தொடர்பான முகாமை, இயந்திர சாதனங்களின் முகாமை போன்ற

# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

இலங்கை மின்சார சபையின் சகல விடயங்களிலும் தரம் பேணும் நடவடிக்கையாகும். இங்கு சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் கருதுகோள் என்பனவும் கவனத்தில் கொள்ளப்படும்.

2011ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபையின் பிலியந்தலை தொழில்நுட்ப நிலையமானது ISO 9001-2008 எனும் சர்வதேச தர முகாமை விருதினைப் பெற்றது.

**1. சூழல் அபிவிருத்தி**

இலங்கை மின்சார சபையின் பிலியந்தலைப் பயிற்சி நிலையத்தின் வளவினுள் 5,000 லீட்டர் கொள்ளளவுடைய உயிரியல் வாயு இயந்திரம் அலுவலக தேநீர்ச்சாலையில் நாளாந்தம் மிஞ்சும் கழிவுகளை இவ்வுயிரியல் வாயு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது. நாளாந்தம் 25 கி.கி. எடையுடைய கழிவுப் பொருட்கள் இவ்வாயு உற்பத்திக்கு உள்ளீடாக அமைகின்றது. உயிரியல் வாயு பிலியந்தலை பயிற்சி நிலையத்தின் தேநீர்ச்சாலையில் சமையல் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

உயிரியல் வாயுவின் இணை உற்பத்தியான திரவப் பொருள் இந்நிலையத்தின் தாவரச்செடிகளின் உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய பயிற்சிகளும் குறிப்பிட்ட சில துறைகளில் சிறப்புத் தேர்ச்சியை வழங்கக்கூடிய பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2012ஆம் ஆண்டில் பின்வரும் தொழில்நுட்பப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

1. MV மற்றும் LV மின்விநியோக இணைப்பு கட்டுமானப் பணிகள்
2. தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்
3. மின் விநியோக வடிவமைப்பு முறைகள்




**2011- 2012 ஆண்டில் பயிற்சிகளின் ஒப்பீடு**

| | | |
|---|---|---|
| WS/Semi | - | வேலைப்பட்டறை, மாநாடு |
| CPD | - | தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சி |
| Frg. Tr. | - | வெளிநாடுகளில் பயிற்சி |
| Int. Tr. | - | உள்ளகப் பயிற்சிகள் |
| Pro. Tr. | - | பதவியுயர்வுக்கான பயிற்சிகள் |
| OHS | - | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பயிற்சிகள் |

**வேலைத்தளம் மற்றும் அது சார்ந்த சேவைகள் கிளை**

வேலைத்தளம் மற்றும் அது சார்ந்த சேவைகள் கிளையானது பின்வரும் 4 பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன,

- வளிச் சீராக்கி மற்றும் குளிரூட்டல
- மின் சக்தி இயந்திர உபகரணங்கள்
- மின்தூக்கி
- மத்திய வேலைத்தளம் மற்றும் மத்திய வாகனத் தரிப்பிடம்

**வளிச் சீராக்கி மற்றும் குளிரூட்டல் பிரிவு**

1. 2012ஆம் ஆண்டில் வைத்தியசாலைகள், சுகாதார அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களில் வளிச் சீராக்கி மற்றும் குளிரூட்டல் பிரிவு பின்வரும் பணிகளை ஆற்றியது.
   a. பழுதடைந்திருந்த வளிச் சீராக்கி மற்றும் குளிரூட்டிகளைத் திருத்தம் செய்திருந்தது.
   b. வளிச் சீராக்கி, குளிரூட்டி முறைமையை நவீனமயமாக்கல் செய்தது.
   c. புதிய வளிச் சீராக்கிகள், குளிரூட்டி இயந்திரங்களைப் பொருத்துவது தொடர்பான ஆலோசனைகள், வடிவமைப்புகளை மேற்கொண்டது.
2. இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் மதிப்பீட்டுச் செலவுகள் பின்வருமாறு

**பாரமரிப்பு வேலைகள்**

| சேவை வழங்குநர் | வேலைகளின் எண்ணிக்கை | | மதிப்பீட்டுச் செலவு வரி நீங்கலாக (ரூ.) | |
|---|---|---|---|---|
| | CP | CEB | CEB | CP |
| இ.மி.ச. | 38 | 44 | 6,269,550 | 135,815,251 |
| ஒப்பந்தக்காரர் | 9 | 63 | 8,408,039 | 3,000,000 |
| **மொத்தம்** | 47 | 107 | 14,677,589 | 138,815,251 |

**உபகரணங்கள் பொருத்துதல், பழுதுபார்த்தல்**

| சேவை வழங்குநர் | வேலைகளின் எண்ணிக்கை | | மதிப்பீட்டுச் செலவு வரி நீங்கலாக (ரூ.) | |
|---|---|---|---|---|
| | CP | CEB | CEB | CP |
| இ.மி.ச. | 0 | 0 | - | - |
| ஒப்பந்தக்காரர் | 5 | 27 | 8,021,288 | 3,040,794 |
| **மொத்தம்** | 5 | 27 | 8,021,288 | 3,040,794 |

சகல வேலைகளும் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

**மின்சக்தி இயந்திரப் பிரிவு**

மின்சக்தி இயந்திரப் பிரிவு பின்வரும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது.

- அரச வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் அவற்றைச் செயற்படுத்தல்
- நிறுவனங்களில் டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரங்களைப் பொருத்துதல், குறைபாடுகளை இனங்காணுதல், பழுது பார்த்தல்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

- தேசிய மின்னிணைப்புத் தொகுதிக்கு மின் சக்தியினை வழங்குவதற்கு டீசல் மின் பிறப்பாக்கிகளை இயங்க வைத்தல்
- பிரமுகர்கள் கலந்துகொள்ளும் விழாக்களைப் போன்று தேசிய பாதுகாப்பு தொடர்பான நோக்கங்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த தேசிய விழாக்களுக்காக நடமாடும் டீசல் மின் பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை வழங்குதல்
- வாடகை அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களுக்கு டீசல் மின் பிறப்பாக்கிகளை வழங்குதல்
- டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரங்களில் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல்
- அரச வைத்தியசாலைகள், ஏனைய அரச நிறுவனங்களில் பொருத்தப்பட்டுள்ள டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

**2012ஆம் ஆண்டில் மின்சக்தி இயந்திரப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது**

| தொ. இல. | வேலைகளின் வகை | வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுச் செலவு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | பராமரிப்பு வேலைகள் | 117 | 69,957,863 |
| 2 | பழுதுபார்த்தல்கள் | 43 | 11,609,976 |
| 3 | மின் பிறப்பாக்கி வாடகைக்கு விடுதல் | 50 | 43,853,188 |
| 4 | மின் பிறப்பாக்கி வாடகைக்கு விடுதல் (PVT, PSD, PMSD) | 351 | 144,741,424 |
| 5 | மின் பிறப்பாக்கிகளை பொருத்துதல் | 03 | 56,566,116 |
| 6 | வேறு தொழில்கள் | 47 | 2,285,621 |

**எதிர்காலத் திட்டங்கள்**

- முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றும் விழாக்கள், வைபவங்கள் போன்றனவற்றுக்கு நடமாடும் டீசல் மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தை விநியோகித்தல்
- அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை டீசல் மின் பிறப்பாக்கிகள் மூலம் விநியோகித்தல்
- அரச வைத்தியசாலைகள், ஏனைய அரச நிறுவனங்கள் போன்றவற்றில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்பிறப்பாக்கிகளைப் பொருத்துதல், பழுதுபார்த்தல், பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றன.
- வெளிநிறுவனங்களுக்குச் சொந்தமான டீசல் மின்பிறப்பாக்கிகளைப் பொருத்துதலும் மின்சாரத்தை விநியோகம் செய்தலும்
- அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் மின்சாரப் பொருட்களின் பெறுவனவு கேள்விப்பத்திர நடவடிக்கைகள், ஒப்பந்த ஆவணங்கள், கேள்விப்பத்திர விலைமனுப் பத்திரத்தைப் பரிசோதித்தல், மின் பிறப்பாக்கிகளைப் பொருத்துதல் மற்றும் மின்சார வேலைகள் தொடர்பான அனைத்து வேலைகளுக்கும் ஆலோசனைகளை வழங்குதல் போன்றனவாகும்.

**உற்பத்தி மேம்படுத்தல் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகள்**

- மின்சக்தி இயந்திரப் பிரிவின் வேலைத்தளங்கள், அலுவலகக் கட்டடங்கள், நில அளவை வரைபடம், தள வரைபடம் போன்ற உட்கட்டமைப்பு வேலைகளைத் தரமுயர்த்தல்
- இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு வெளியக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் ஊழியர்களுக்கான முக்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்

**2012இல் உயர்த்தி கிளையின் செயற்திறன்**

| வேலை வகை | வேலைகளின் எ/கை | மதிப்பீட்டு செலவு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| சீராக்கம், பராமரிப்பு | 130 | 54,157,000 | பூர்த்திசெய்யப்பட்டது |
| பழுதுபார்த்தல் | 16 | 2,470,500 | பூர்த்திசெய்யப்பட்டது |
| புனருத்தாபனம் | 02 | 1,203,500 | பூர்த்திசெய்யப்பட்டது |
| புதிய பொருத்தல்கள் | 02 | 11,900,000 | கொடுப்பனவு செய்யப்பட்டது |
| | 01 | 8,800,000 | செயன்முறையில் |
| ஆலோசனை சேவை | 01 | 1,000,000 | 90 % பூர்த்தி |
| | 01 | 5,000 | மேற்பார்வை |
| | 01 | 65,000 | செயன்முறையில் |

**சீராக்கமும், பராமரிப்பும்**

இலங்கை மின்சார சபையின் மேற்பார்வையின் கீழ் 05 தனிப்பட்ட ஒப்பந்தகாரர்களால்/உள்ளூர் முகவர்களால் 82 எலிவேட்டர் மின் உபகரணம் பராமரிப்பு செய்யப்பட்டது.
பின்வரும் 04 மின்தூக்கிகளின் செயற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுவதற்காக CEB இன் மின்தூக்கி பராமரிப்பு கிளையினால் சீராக்க மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை;

01. வரக்காப்பொல அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகளை காவிச்செல்லும் 02 மின்தூக்கிகள்

02. கண்டி அரச வைத்தியசாலையில் பொதுமக்களை காவிச்செல்லும் 02 மின்தூக்கிகள்

**இவற்றைவிட பின்வரும் முக்கியமான பராமரிப்பு/பழுதுபார்த்தல்/புனருத்தாபன வேலைகளும் இடம்பெற்றிருந்தன**

1. வரக்காப்பொல அரசினர் வைத்தியசாலையில் 02 நோயாளர்களைக் காவிச்செல்லும் மின்தூக்கிகள் நவீனமயப்படுத்தப்பட்டன.
2. ராகம அரச வைத்தியசாலையில் வேகம் குறைந்து இயங்கிய மின்தூக்கி சீர்செய்யப்பட்டு, வழமையான வேகத்தில் இயங்கவைக்கப்பட்டது.
3. கொழும்பு தேசிய ஆதார வைத்தியசாலையில் மின் தூக்கி உபகரணங்கள் இடமாற்றம் செய்யப்பட்டதுடன், அதன் கட்டுப்பாட்டு உபகரணம் நவீனமயமாக்கப்பட்டது.
4. நாகொடை அரச வைத்தியசாலையில் மின்தூக்கி உபகரணம் இடமாற்றம் செய்யப்பட்டதுடன், அதன் கட்டுப்பாட்டு உபகரணம் நவீனமயமாக்கப்பட்டது.

# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

5. கராபிட்டிய அரச வைத்தியசாலையில் 2 மின்தூக்கிகளுக்கு காலந்தோறும் பராமரிப்பு வேலைகள் இடம்பெற்றன.

6. கொழும்பு தேசிய ஆதார வைத்தியசாலையின் B கட்டடத் தொகுதியின் மின்தூக்கி புனருத்தானம் செய்யப்பட்டது. மற்றும் 70 வருடகால ஆயுள்கொண்ட நோயாளர் படுக்கைகளை தூக்கிச் செல்லும் மின்தூக்கி புனருத்தானம் செய்யப்பட்டதுடன், அதன் கட்டுப்பாட்டு உபகரணமும், சமிஞ்ஞைக் கருவியும் திருத்தம் செய்யப்பட்டன.

7. கண்டி அரச வைத்தியசாலையில் பயணிகளைக் காவிச்செல்லும் மின்தூக்கி புனருத்தானம் செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டது. இதனால் மின்தூக்கி அடிக்கடி தடைப்படாது தனது செயற்பாட்டை திறமையாக மேற்கொண்டது.

### புதிதாகப் பொருத்தப்பட்ட மின்தூக்கி உபகரணங்கள்

1. யாழ்ப்பாண அரச போதன வைத்தியசாலையில் 3 மாடிக்கட்டடத்தில் இரண்டு (02) நோயாளர்களைக் காவிச்செல்லும் மின்தூக்கிகள் புதிதாகப் பொருத்தப்பட்டன. 02 பழைய நோயாளர் மின்தூக்கிகள் திருத்தப்பட்டு செயற்பாட்டுக்குவிடப்பட்டன. 01 நோயாளர் மின்தூக்கி திருத்தப்பணிகளில் உள்ளன. இவற்றுக்கான உபகரணங்கள் கொள்வனவு தாமதமே இதற்கான காரணமாகும்.

2. இரத்தினபுரி அரச வைத்தியசாலையில் பழைய மின்தூக்கி நீக்கப்படு, புதிய மின்தூக்கி வேலைகளுக்கான பெறுகை வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

3. கண்டி DGM அலுவலகத்தில் புதிய பயணிகள் மின்துக்கிகளைப் பொருத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

   நிறுவுகைக்காக நிதியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

### ஆலோசனை சேவை

பின்வரும் நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

1. 10 அதியுயர் வேகம் கொண்ட மின்தூக்கி நவீனமயப்படுத்தல் தொடர்பாக இலங்கை வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2. பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் 02 பயணிகள் மின்தூக்கி நீக்கப்பட்டு, புதிய மின் தூக்கிகளைப் பெறுவது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3. களனிதிஸ்ஸ மின்சக்தி இயந்திரப் பகுதிக்கு 2 பயணிகள் மின்தூக்கிகள் பொருத்தப்பட்டன.

4. பிராந்திய அபிவிருத்தி வங்கியில் மின்தூக்கிகள் பொருத்தல் வேலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

### புதிதாக பொருத்தப்பட்ட மின்தூக்கி உபகரணங்கள்

யாழ்ப்பாண மற்றும் இரத்தினபுரி அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களைக் காவிச்செல்லும் மின்தூக்கிகள் பொருத்தப்பட்டன.

### ஆலோசனை சேவை

அரச நிறுவனங்கள் மற்றும் இலங்கை மின்சார சபை நிறுவனங்களான மேல்கொத்மலை HPP களனிதிஸ்ஸ இணைந்த சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொழும்பு நகர மின்சார விநியோக நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றிற்கு ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன.

### மத்திய வேலைத்தளம்

### இலத்திரனியல் பிரிவு

2012ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளை இலத்திரனியல் பிரிவு மேற்கொண்டிருந்தது.

- 110 kW, 30 kW, 22 kW, 18 kW, 15 kW 3 சுற்றுக்களைக் உடைய மோட்டார்களில் மின்சுற்று வேலைகள். இதற்காக SPS பெறப்பட்டிருந்தது.
- 100 kVA Alternator main stator உபகரணத்தில் மற்றும் 500 கி.வா.அ., 130 கி.வா.அ. Alternator exciter rotor உபகரணத்தில் மற்றும் மின்சக்தி இயந்திரத்தின் exciter stator உபகரணத்தில் மின்சுற்று வேலைகள்.
- மின்தூக்கி மோட்டாரின் பிறேக்கொயில் மின்சுற்று வேலைகள்.

2012ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட மின்சுற்று வேலைகளிற்கான மதிப்பீட்டுச் செலவு 1,799,980.00 ரூபாவாகும்.

### நடமாடும் மின்சேவைப் பிரிவு

நடமாடும் மின்சேவைப் பிரிவினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- வாகனப் பழுதுபார்த்தல்கள் (எஞ்சின் வேலை, வர்ணம் தீட்டல், மெக்கானிக்கல் பழுதுபார்த்தல்கள்)
- வாகனத்தின் உடம்புப் பகுதியை புனருத்தானம், திருத்தம் செய்தல்.
- அறிக்கைகள் தயாரித்தல் (வாகன விபத்துக்கள்/அதன் பெறுமதி/திருத்தத்திற்கான செலவு மதிப்பீடுகள் போன்றன)
- வாகனங்களின் எரிபொருட் சோதனை
- வாகனங்களின் சீராக்கல் வேலைகள் (Service work)
- பாவனைக்கு ஒவ்வாத வாகனங்களை விற்றுத்தீர்ப்பது தொடர்பாக அளவீட்டு/மதிப்பீட்டு சபை ஒன்றை அமைத்தல் போன்றன

**2012ஆம் ஆண்டில் பின்வரும் முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன**

- ஹொாண்டா (Honda CRV SUV) வாகனத்தின் என்ஜின் பழுதுபார்க்கப்பட்டது.
- பிலியந்தலை மின்சார சபை பயிற்சிக் கிளைக்கு சொந்தமான மிற்சுபி L 200 டபுள் கப் (Mitsubishi L200 Double) வாகனத்தின் என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் உடம்புப் பகுதி வேலைகள்
- கொலன்னாவை மின்சக்தி இயந்திரப் பிரிவுக்கு சொந்தமான இசுசு (Isuzu FSR Lorry) FSR லொறி வாகனத்தின் (ரிங்கறிங் வேலை) உடம்புப் பகுதி வேலைகள்
- IT கிளைக்குச் சொந்தமான CR41 வாகனத்தின் பழுதுபார்த்தல், மீள்திருத்த வேலைகள்
- SI கிளைக்கு சொந்தமான நிஷான் கரவன் (Nissan Caravan) வாகனத்தின் என்ஜின் பழுதுபார்த்தல் வேலைகள்

2012ஆம் ஆண்டில் பழுதுபார்த்தல்/திருத்தங்கள்/சீராக்கல் சேவைகளுக்கான மதிப்பீட்டுச் செலவு 2,033,508.00 ரூபாவாகும்.

# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

**இயந்திரங்களை புனைதல் மற்றும் பொருத்துதல் வேலைகள்**

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறு

- சகல வகையான இயந்திரங்களுக்குமான பழுதுபார்த்தல் வேலைகள், உருக்குவார்ப்பு வேலைகள், ஒட்டுதல் வேலைகள் போன்றவற்றை மேற்கொள்ளல்
- HT மற்றும் LT விநியோக முறைமைகளில் LT/HT இயந்திர உபகரணங்களை நிர்மாணித்தல்
- அபாயப் பலகையை (danger boards) நிர்மாணித்தல்
- வர்ணப்பூச்சு வேலைகள்
- பாதுகாப்பு நோக்கத்திற்காக பாதுகாப்பு வேலிகள், கொட்டகைகள், தடை உத்தரவுகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விசேட இயந்திர பழுதுபார்தல் வேலைகள், சிவில் எஞ்ஜினியரிங் வேலைகள், திட்டமிடல், வரைபியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

**2012ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன**

- 2012 ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் இடம்பெற்ற "தேசத்திற்கு மகுடம்" நிகழ்வில் 03 TDL கோபுரங்களை அமைத்திருந்தது.
- கண்டி அரச வைத்தியசாலையின் மின்தூக்கியின் கதவு பழுதுபார்த்தல்
- அரச அச்சகத்தின் மின்தூக்கியின் கதவு பழுதுபார்த்தல்
- இலங்கை மின்சார சபையின் தலைமையகத்தின் கூரை வேலைகள்
- சபுகஸ்கந்தை மின் உற்பத்தி நிலையத்தில் Machining rotor shaft வேலைகள்
- சபுகஸ்கந்தை மின்சார நிலையத்தின் அல் இன்ஜெக்சன் பைப் வேலைகளின் பழுதுபார்த்தல் மற்றும் உருக்கு வேலைகள்
- 33 kV அபாய விளம்பரப் பலகை தயாரித்தல்
- T மற்றும் PG க்லாம்ஸ் (clamps) நிர்மாணிப்பு மற்றும் உருக்கு வேலைகள

2012 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தல்கள் / பொருத்தல்கள் / தயாரிப்பு வேலைகளுக்கான மதிப்பீட்டுச் செலவு 17,609,253.00 ரூபாவாகும்.

**சிவில் வேலைகளும் கட்டடங்களும்**

கடந்த 2012 ஆம் ஆண்டில் சிவில் வேலைகளும் கட்டடங்களும் கிளையினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

மேலும் இக்கிளையானது கட்டுமானப் பணிகளிலும், புனரமைப்பு பணிகளிலும் நாடு பூராவும் செயற்படுகிறது.

**கட்டுமான வேலைகள்**

| | |
|---|---|
| 1. | கிழக்கு மாகாணத்தில் பிரதிப் பொது முகாமையாளர் 3 மாடி அலுவலக கட்டட நிர்மாண, திருகோணமலையில் ஊழியர் தங்குமிட வசதி கட்டடங்கள் நிர்மாண மற்றும் வடிவமைப்பு வேலைகள் |
| 2 | வட மாகாணத்தின் மின்சார பிரதி பொது முகாமையாளர் அலுவலக 5 மாடிக் கட்டடத்தின் நிர்மாண மற்றும் அதன் வடிவமைப்பு வேலைகள் |
| 3 | மத்திய மாகாணம் கண்டியில் மின்சார பிரதி பொது முகாமையாளர் அலுவலக 4 மாடிக் கட்டடத்தின் விஸ்தரிப்பு வேலைகள் |
| 4. | பிலியந்தலை மின்சாரப் பயிற்சி நிலையத்தின் கட்டடத்தொகுதியில் புதிய மலசலகூட கட்டுமானப் பணி மற்றும் போசனசாலை புனருத்தாபன வேலைகள் |
| 5. | கொலன்னாவையில் உள்ள கொழும்பு நகர மின்சார சேமிப்பு மாடிக் கட்டடத்தின் புத்துருவாக்கல் வேலைகள் |
| 6 | மேல் மாகாணத்தில் கிரிபத்கொடையில் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக 2ஆம் மாடி, 3ஆம் மாடிக் கட்டடத்தில் புதுப்பித்தல் வேலைகள் |
| 7 | மேல் மாகாணத்தில் கிரிபத்கொடையில் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமை யாளர் அலுவலகத்தின் 1ஆம் மாடி கட்டட புதுப்பித்தல் வேலைகள் |
| 8 | கிரிபத்கொடையில் அமைந்துள்ள முறைமை கட்டுப்பாட்டு நிலைய கட்டடத்தின் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் பணிகள் |
| 9. | காசல்ரீ பயிற்சி நிலையத்தில் புதிய மலசலகூடத்திற்கான நிர்மாண வேலைகள் |
| 10. | பிலியந்தலையிலுள்ள பயிற்சி நிலையத்தில் பாதுகாப்பு குடில், மலசலகூடத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் அல்லாதவருக்கான விடுதி புனருத்தாபன வேலைகள் |
| 11 | கிரிபத்கொடையில் அமைந்துள்ள (மேல் மாகாணத்தில்) பிரதிப் பொது முகாமையாளர் களஞ்சியப்படுத்தும் கட்டடத்தொகுதியின் புனருத்தாபன வேலைகள் |
| 12 | திவுலுப்பிட்டியில் உள்ள வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் புனருத்தாபன வேலைகள் |
| 13. | கொழும்பு 2இல் உள்ள GCSU கட்டடத்தில் பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தை 3ஆம் மாடியில் அமைத்தல் |
| 14 | BMICH இல் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தின் உட்பகுதி திருத்த வேலைகள் |
| 15 | மேல் மாகாணத்தில் கிரிபத்கொடையில் உள்ள பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தின் முன்னரங்கு அலுவலக புனருத்தாபன வேலைகள் |
| 16. | இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்தின் பணிப்பாளர் (வேலை) அலுவலகத்தின் உட்பகுதி திருத்த வேலைகள் |
| 17 | சுன்னாகத்தில் அமைந்துள்ள நிலக்கரி மின் உற்பத்தி வளவினுள் துப்புர வாக்கல் மற்றும் கிடங்குகளை நிரப்பும் பணிகள் |
| 18 | KPS இன் தொலைத்தொடர்புக் கட்டுப்பாட்டு நிலையத்தில் சாப்பாட்டு அறை புனருத்தாபன வேலை, கூரை வேலைகள் போன்றன |





# சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி

**தலைமை அலுவலக பராமரிப்பு அலகும் அதனுடன் தொடர்புபட்ட வேலைகளும்**

சிவில் பராமரிப்பு அலகு இலங்கை மின்சார சபையின் பல்வேறு கிளைகள், அமைச்சுக்களின் கட்டடங்கள், பாதுகாப்பு அமைச்சின் அமைச்சர் தங்குமிட இருப்பிடங்கள் போன்ற வற்றில் அவசரப் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. பழுதுபார்த்தல் வேலைகள், சிவில் வேலைகள் மற்றும் கட்டடக் கிளையினாலும், பராமரிப்பு வேலைகள் பராமரிப்புக் குழுவினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விதுலக்பவ கருத்திட்டம்**

இலங்கை மின்சார சபை கருத்திட்டத்திற்கான அத்திவாரப் பணிகள் 2012ஆம் ஆண்டு இடம்பெற்றது. இக்கட்டடம் 3 மாடிகளைக் கொண்டும் மறுபகுதியில் ஏழு தட்டுகளைக் கொண்ட இரண்டு மின்கோபுரங்களையும் கொண்டும் அமையவுள்ளது. இது 27,800 சதுர மீற்றர் பரப்பளவில் அமையவுள்ளது.

2012-02-23ஆம் திகதி விலைமனுக்கோரல் நிகழ்வுகள் இடம்பெற்று, 2012-11-06ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டன. கட்டுமானப் பணிகள் நடைமுறையில் உள்ளன. இக்கட்டுமானப் பணிகளில் 370 – 400 வரையான தூண்கள் எழுப்பப்பட்டு, கட்டடம் அமையவுள்ளது. பூர்த்தி அடையும் திகதிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. 370 தூண்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன.







**தரமான கட்டமைப்பு வேலைகள்**

குறித்த வருட காலப்பகுதியின் இறுதியில் கேள்வி விலைமனு பத்திர வேலைகள் நடைமுறையில் உள்ளன.

பாதுகாப்புப் பிரிவு

இலங்கை மின்சார சபையின் பாதுகாப்புப் பிரிவு மின்சார சபைக்குச் சொந்தமான சகல மின்சார நிலையங்கள், அதன் வளவுகள், உபமின் நிலையங்கள், மின்னுற்பத்தி நிலையங்கள் போன்றனவற்றில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ளது.

மூன்று நிலையான பாதுகாப்பு அலகுகள் இலங்கை மின்சார சபையின் முக்கிய பிரிவுகளான மின்பிறப்பாக்கி, மின்மாற்றல், விநியோகம் போன்ற ஒவ்வொரு பிரிவுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தது. மூன்று நிலையான பாதுகாப்பு அலகுகளின் கீழ் 98 உபமின் பாதுகாப்பு அலகுகள் தமது பணிகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தன.



## சொத்து முகாமைத்துவ, மையப்படுத்திய சேவைகள் பிரிவு தொடர்ச்சி



இலங்கை மின்சார சபையின் பாதுகாப்பு நடவடிக்கையில் CEBஇன் பாதுகாப்புப் பிரிவுடன், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களும் இணைந்து பணியாற்றுகின்றன.





தலைமைப் பாதுகாப்பு பிரிவில் ஒரு பதில் முகாமையாளர், 03 சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 22 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 743 பாதுகாப்பு ஊழியர்கள் காணப்பட்டார்கள்.

#### பாதுகாப்பு ஆளணியினருக்கான பயிற்சிகள்

2012ஆம் ஆண்டில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவோருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, துப்பாக்கியால் சுடுதல், தீ அனர்த்தப் பாதுகாப்பு, முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு, முதலுதவி, பேரிடர் இழப்புகளில் இருந்து தவிர்த்தல், பணத்தைப் பாதுகாத்தல் மற்றும் மின்சார சபையின் 5S கொள்கைகளை பாதுகாத்தல் போன்றவை.

# கூட்டாண்மை உபாயப் பிரிவு

### வியாபார மற்றும் செயற்பாட்டு உபாயம் (B&OS)

இலங்கை மின்சார சபையின் வியாபார மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை இலங்கை மின்சார சபையின் நிறுவனச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், அதனை மேற்கொள்வதற்குமான வசதிகளையும், வாய்ப்புகளையும் வழங்கிவருகின்றது. இதற்கு மேலதிகமாக, இலங்கை மின்சார சபையின் பல்வேறு கிளைகளுக்கிடையே கூட்டாண்மைப், பேணுதல், அதை நிலைநிறுத்தல் போன்ற நடவடிக்கைகளையும் இப்பிரிவானது மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்படியாக, உபாய முகாமைத்துவச் செயற்பாட்டுக் கருவி, இ.மி.ச. யில் சமநிலைப்புள்ளி அட்டை (BSC) முறைமை போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டு, சமநிலைப் புள்ளி அட்டை முறைமை நிறுவப்பட்டது. இதன் செயற்பாடு தொடர்பான முதலாவது கூட்டம் ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் (CMT) 2012ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக, இக்கிளையானது வசதிகளை ஏற்படுத்தல், கூட்டாண்மையை ஏற்படுத்தல் மற்றும் தீர்மானங்களின் பின்னரான சிபாரிசுகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக முகாமையினால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இது இலங்கை மின்சார சபையின் பல்வேறு விடயங்களிலும் சிறப்பியல்புத் தன்மைகளைக் கொண்டமைந்த சிறப்பறிஞர்களைக் கொண்டமைந்து காணப்படுவதனால், மிகவும் முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றது. இத்தேவைப்பாடுகளின் விளைவாக உபாய தீர்மான அமைப்பு (SDF) 2012ஆம் ஆண்டில் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது.

உபாய தீர்மான அமைப்பின் (SDF) முதல் உபாய கருத்துக்களம் காற்று சக்தி மீது காணப்பட்டது. காற்று புதுப்பிக்கத்தக்க மற்றும் இடைவிடாத ஓர் வளமாகக் காணப்படுகிறது. இத்தகைய தன்மை அதன் முக்கியத்துவத்தை மேலும் வலுவூட்டியது. SDFஇன் பரிந்துரைகளின் விளைவாக இ.மி.ச. 1000 மெ.வாட்ஸ் கொள்ளளவுள்ள அரை விரைவுச் செயலாற்றுகை மின்பிறப்பாக்கியை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்ததோடு, அதனை இயக்குவதற்கும் தீர்மானித்துள்ளது.

பல்வேறு தேவைப்பாடுகளுக்கமைய ஊழியர்களின் தொழில் வடிவங்களை தொடர்ச்சியாக மேம்படுத்த முடியும். இதன் மூலம் அவர்களுக்கிடையே தொழில் கலாசார பாரம்பரியம், பரஸ்பரம் என்பவற்றைக் கட்டியெழுப்ப முடியும். இக்கிளையானது ஊழியர்களிடையே போட்டி மனப்பான்மையை வளர்க்கும். அத்தோடு கீழ்மட்ட மற்றும் உயர்மட்ட மதிப்பீடுகள் என்பவற்றின் மூலம் போட்டியை மேலும் ஊக்கப்படுத்துவதாக அமையும். இவற்றுக்கு மேலதிகமாக, புதிய கருத்துக்கள், சிந்தனைகள், எண்ணங்கள் போன்றவற்றை கண்டுபிடிக்கும் விதத்திலான நோக்கத்திற்கான முறைமை ஒன்றும் உருவாக்கப்பட்டது. சமநிலை அட்டையில் புதிய கண்டுபிடிப்பிலான எண்ணங்கள், கருத்துக்கள் என்பன பிரதான செயற்பாட்டுச் சுட்டியாக (KPI) அமைந்துள்ளது. 2012ஆம் ஆண்டில் 5S கருதுகோள் போட்டியிலும், புதுமையைப் புகுத்தும் போட்டியிலும் வெற்றிபெற 5S போட்டி வெற்றியாளர்கள் பரிசுவழங்கல் வைபவத்தில் கௌரவப்படுத்தப்பட்டார்கள்.

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினை வறட்சி என்பதாகும். இதன் விளைவாக மின்சக்தியை மீதப்படுத்தி சேமிக்கும் போட்டி ஒன்று மக்களிடையே இலங்கை மின்சார சபையால் நடாத்தப்பட்டது. இதற்கான அளவீடுகள், பிரசாரங்களை கேள்விப் பக்க முகாமைத்துவம் (DSM) மேற்கொண்டு வருகின்றது. வியாபார மற்றும் செயற்பாட்டு உபாயம் இப்போட்டியை நடைமுறைப் படுத்தலின் அளவு கருவியாக அமைந்தது.

### கூட்டாண்மை உபாயமும், ஒழுங்குபடுத்தும் விவகாரங்களும்

ம.பொ.ஆ. (PUCSL) ஆணைக்குழுவைப்போல் உரிய பகுதிகளுக்கிடையே இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட உருவாக்குதல், பரப்புதல் மற்றும் பகிர்ந்தளித்தல் அனுமதிப்பத்திரங்களிலிருந்து எழுகின்ற மற்றும் அவை தொடர்பான கருமங்களை ஒன்றிணைக்கப்பட்ட செயல் நுணுக்க மற்றும் ஒழுங்குபடுத்தும் அலுவல்கள் கிளையானது ஒருங்கிணைக்கப்படுகின்றது. ஒழுங்குபடுத்தும் அலுவலர்களுக்கு மேலதிகமாக, இந்தப் பிரிவானது செயல்நுணுக்க வகுத்தமைத்தல் கருமங்களை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பாக இருக்கும்.

2010 யூலை மாதத்தில் எஸ்.எல்.ஈ.ஏ. இன் கீழ் அதன் அரசிறை தேவைப்பாடுகளின் முதலாவது பல்வருடக் கோப்பிடலை இலங்கை மின்சார சபை செய்துள்ளது. 2010 யூலை மாதத்தில் (PUCSL) பொ.பாவனை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வரி முறைமைகளுக்கிணங்க 2011 – 2015 காலப்பகுதிக்கான அவர்களது அரசிறை தேவைப்பாடுகளை கோப்பிடுவதற்கு அனுமதிப்பத்திரங்கள் தேவைப்பட்டன. பின்வரும் நியதிச்சட்ட ஆலோசனைச் செயன்முறையின் பின்னர் 2011 சனவரி மாதத்திலிருந்து செயலுறுப்பு பெறும் வகையில் பொ.ப. ஆணைக்குழுவினால் புதிய மின்சார வரிகள் அறிவிக்கப்பட்டன. PUCSLஆல் அவ்வாறு அறிவிக்கப்பட்ட மின்சார வரிகள் 2011ஆம் ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையின் அரசிறைத் தேவைப்பாடுகளுக்கும் அறிவிக்கப்பட்ட வரியின் கீழ் தேறிய அரசிறைக்கும் இடையே 11 பில்லியன் ரூபா விடுபாட்டை சுமத்துகின்றது. அடுத்ததாக மேலதிக வரி கோப்பிடுதல் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாத்ததில் செய்யப்பட்டதுடன் PUCSL ஆணைக்குழுவிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை இறுதித் தீர்மானத்தை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. 2012ஆம் ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையின் அரசிறைத் தேவைப்பாடுகளுக்கும் அறிவிக்கப்பட்ட வரியின் கீழ் தேறிய அரசிறைக்கும் இடையே 61 பில்லியன் ரூபா விடுபாட்டை சுமத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட வரிமுறைகளுக்கு இணங்க 2013க்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.மி.சபையானது பின்வரும் ஆவணங்களைத் தயாரித்தல் என்பது இப்பிரிவின் நோக்கமாக அமைந்தது.

- தாபனத் திட்டம் (இற்றைப்படுத்தல்) 2009 – 2013
- ஆண்டறிக்கை – 2011
- புள்ளிவிபரவியல் – 2011
- விற்பனைகள் மற்றும் உற்பத்தி தரவு புத்தகம் – 2011

ஒன்றிணைக்கப்பட்ட உபாய மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளையானது PUCSL உடன் நெருக்கமாக இணைந்து காணப்படுவதுடன் அவர்களுடைய ஆலோசனையாளர்கள் 2012ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான பின்வரும் ஆவணங்களை முடிவுறுத்துவார்கள்.

- விநியோகக் குறியீடு
- விநியோகச் செயற்பாட்டு ஒழுங்குபடுத்தல்கள்

## கூட்டாண்மை உபாயப் பிரிவு தொடர்ச்சி

- மின்சார பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்ச்சியான ஒழுங்குமுறை
- கைத்தொழிலாளர்களுக்கான வரி மதிப்பீடு
- நெய்யரி குறியீட்டை வரைதல்
- வழங்கப்படும் சேவைக் குறியீடு

2012ஆம் ஆண்டிற்கான மரபுசாராத புதுப்பிக்கத்தக்க சக்தி பொறிக் கொள்வனவிற்கான விதிப்பனவுகள் PUCSLஇற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதே வருடத்தின் போது, இ.மி.சபைக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நடைமுறையிலான தோற்றுவிப்பு உத்தரவுப்பத்திரத்தில் மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டத்தை உள்ளடக்குவதற்கும், பங்கீட்டுப் பிரிவு 2 (DDS) மற்றும் DD3 ஆகியவற்றின் உல்லைகளின் மீள் எல்லைப் பிரிப்பதற்கு அங்கீகாரத்தை வழங்குவதற்கும் PUCSCக்கு வேண்டுகோல்கள் விடுக்கப்பட்டன.

### தொழிற்பாட்டு உபாயமும் செய்முறை அபிவிருத்திக் கிளையும் (FS&PD)

2010 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட உபாயப் பிரிவு தொழிற்பாட்டு உபாய செய்முறை அபிவிருத்திக் கிளைக்கு அங்கீகாரம் வழங்கியிருந்த நிலையில் 2012ஆம் ஆண்டில் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் FS&PD நிறுவன ரீதியாக தனது பணிகளை ஆரம்பித்தது.

நிறுவன தொழிற்பாட்டு உபாயம், கொள்கைகள் மற்றும் செய்முறை அபிவிருத்தித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவையே FS&PD கிளையின் பிரதான நோக்கமாகும். இவற்றுக்கு மேலதிகமாக சகல உபாய முறைமைகளுக்கும் பொறுப்பாக இருத்தல், கோப்பியல் முறைமை தொடர்பான செயற்பாடுகளுக்கு ஒன்றிணைந்து இருத்தல் மனித தொழிற்பாட்டு வேலைகளுக்கு பொறுப்பாகக் காணப்படுகின்றது.

2012ஆம் ஆண்டில் FS&PD கிளையானது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

- இ.மி.ச. யின் தொழிற்பாடு மற்றும் செயற்பாட்டு, மனித செயற்பாட்டு தகவல்களைச் சேகரித்தலும், அவை தொடர்பான படிப்பினைகள், மீளாய்வு, எதிர்கால பயன்பாட்டினை தரமுயர்த்தியமை
- CMS முறைமையை பயன்படுத்துவதன் மூலம் சுற்றுநிருபங்களை சேகரித்தலும் அவசியமான Web Searchable Circulars Databaseஐப் பெறுதலும் [Circular Management System (CMS)].
- தேவையான வளங்களை நிவர்த்திசெய்தலும் நிரப்புதலும் (ஊழியர், கணினிகள், அலுவலக உபகரணங்கள் போன்றன)

### தகவல் தொழில்நுட்பம்

2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பக் கிளையினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டது.
- டிஜிடல் பதிவு முகாமைத்துவ முறைமையை (DRMS) வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் WPS1இற்கு நடைமுறைப்படுத்தியது
- இ.மி.ச. வரி முறைமைகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், நடைமுறைப் படுத்தியது
- சட்ட வழக்குகள் முகாமைத்துவ முறைமையை (LCMS) வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், சட்டப் பகுதியில் நடைமுறைப்படுத்தியது
- அழைப்பு நிலைய அடிப்படை முகாமைத்துவ முறைமையை WPS1இற்கு நடைமுறைப்படுத்தியது
- கடத்துகை பிரிவிற்கான மின்சார விநியோகத்திற்கான இலங்கை மின்சாரக் கம்பனியின் (LECO) பற்றுச்சீட்டை நடைமுறைப்படுத்தியது.
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பிரதேசத்தில் மொத்த மின் கொள்வனவாளருக்கு e-bills பற்றுச்சீட்டை அறிமுகப்படுத்தியது.
- வாடிக்கையாளர் தமது பற்றுச்சீட்டிற்குரிய பெறுமதியை SMS மூலம் அறிந்து கொள்வதற்கான மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இ.மி.ச. இன் பற்றுச்சீட்டிற்கான கொடுப்பனவுகளில் கடன் அட்டை முறைமையை ஏற்படுத்தப்பட்டது.
- சக்தி சேமிப்பு போட்டிகள் மற்றும் பெறுபேற்று ஆய்வுகளை ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்கு உதவியமை
- பிராந்தியம் 4இன் கடத்துகைப் பிரிவு மற்றும் ஆளணி கிளையில் மனிதவள முகாமைத்துவ மென்பொருள் முறைமையினை நடைமுறைப்படுத்தியது.

### தகவல் தொழில்நுட்ப (IT) உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பிரதேச வலைப்பின்னல் சேமிப்பு முறைமை நிறுவப்பட்டது. தகவல் முறைமையில் உள்ள இழப்பீட்டை பூரணப்படுத்தும் வகையில் ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றின் மூலம் தகவல் முறைமையில் நம்பத்தகுதன்மையை மேம்பாடடைந்தது.

தகவல் முறைமைகளின் பாதுகாப்பு கருதியும் அதை வலுவூட்டுவதற்காகவும் (firewall) பயர்வோல் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டது.

இவற்றுக்கு மேலதிகமாக, 44 இ.மி.ச. நிறுவனப் பகுதிகள் ஒழுக்கமான தனியார் வலைப்பின்னல்களுடன் இணைப்புச் செய்யப்பட்டன. இவற்றின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சேவைகளை ஏற்படுத்த முடிந்தது. 2012ஆம் ஆண்டின் இறுதியில் விபிஎன் (VPN) இணைப்புகளின் எண்ணிக்கை 246ஆகக் காணப்பட்டது.



- ஆளணி கிளை
- விசேட சட்டப் பிரிவு
- விசேட விசாரணைக் கிளை
- உள்ளக கணக்காய்வு கிளை

# ஆளணியினர் கிளை

இலங்கை மின்சார சபையின் ஆளணியினர் கிளையானது இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களும் சந்தோசத்துடன் வேலைசெய்வதற்கும் உசிதமான சூழலை உருவாக்குவதற்கும் தன்னாதிக்கம், ஆக்கத்திறன், பொறுப்புடமை போன்ற விடயங்களை ஊக்குவித்தும் வருகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள், பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஊழியர்களின் சாதனையிட்டு இ.மி.ச. பெருமிதமடைகின்றது. இ.மி.ச. ஆளணிக் கிளையினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, சம்பந்தப்பட்ட பிரிவுகளின் மனித வள பிரிவுகளினால் ஏனைய மனித வளச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கை மின்சார சபையில் வெற்றிடமாகவுள்ள நிரந்தர பணியாட் தொகுதிக்கு ஊழியர்களை ஆட்திரட்டல்
- கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட ஊழியர் கோப்புக்களில் ஊழியரின் பதவியுயர்கள்
- இலங்கை மின்சார சபையின் மனித வளக் கொள்கைகளை வகுத்தல்
- தலைவரினதும், பொது முகாமையாளரினதும் கீழ் கிளைகளின் சகல ஊழியரா்களின் மனித வள நிருவாகம்

2012ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. யின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 16,709 ஆகும். குறித்த காலப்பகுதியில் 1,106 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இளைப்பாறுதல், இராஜினாமா செய்தல் போன்ற காரணங்களால் 589 பேர் சேவையிலிருந்து விலகியிருந்தனர். 2011ஆம் ஆண்டில் 291ஆகக் காணப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான ஊழியர் விகிதமானது 2012ஆம் ஆண்டில் 298 ஆகக் காணப்பட்டது.

அடுத்துவரும் 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 2,637 ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுவார்கள் என வயதுப் பகுப்பாய்வு அறிக்கை காட்டுகின்றது. ஊழியர் படையில் 51 – 55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் 18.85%ஆகக் காணப்படுகிறார்கள். இத்தகைய தன்மைகளைக் கவனத்திற் கொண்டு, இலங்கை மின்சார சபையின் தொழில்சார் மனித வளத்தில் எதிர்பார்க்கப்படும் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான தொழில் பாதீட்டுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.




**இலங்கை மின்சார சபை ஊழியர்களின் வயதுப் பகுப்பாய்வு**

கீழே தரப்பட்டுள்ள ஊழியர்களின் சேவைக்கால பகுப்பாய்வு வரைபு இ.மி.ச. யின் நீண்ட கால அனுபவமடைந்த ஊழியர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது. இ.மி.ச. யின் மொத்த ஊழியர்களில் ஏறத்தாழ 45.5%ஆனோர் 20 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவங்களைக் கொண்டுள்ளனர்.




**இ.மி.ச. ஊழியர்களுடைய சேவை பகுப்பாய்வு**

இ.மி.ச.இன் ஊழியர் படை ஏறத்தாழ 7.9% நிறைவேற்று உத்தியோகத்தர்களையும், 56.3% தேர்ச்சி பெற்ற மற்றும் ஓரளவு தேர்ச்சி ஊழியர்களையும் கொண்டுள்ளது.




**இ.மி.ச. ஊழியர்களின் வகைகள்**

### நியமனங்கள்

இலங்கையின் இ.மி.ச. இன் முகாமைத்துவக் கட்டமைப்பில் பல மாற்றங்களைக் கொண்ட ஆண்டாக 2012ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். திரு. ஈ.ஜி. அபயசேகர – மேலதிக பொது முகாமையாளர் (DD 01), திரு. டி.ஜி.சி. ரத்னபால – மேலதிக பொது முகாமையாளர் (DD 04), திரு. எம்.ஜி. லியனகே – மேலதிக பொது முகாமையாளர் (உதவி முகாமை மற்றும் மத்தியமயப்படுத்தல் சேவை), திரு. ஆர். லொக்குபாலசூரிய – உதவிப் பொது முகாமையாளர் (மாற்றல்கள்) மற்றும் திரு. ஆர்.ஜே. குணவர்த்தன – மேலதிக பொது முகாமையாளர் (DD 02) போன்றோர் வேலையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தனர். திரு.எல்.ஏ.எஸ். பெர்னாண்டோ, திரு. எம். ஜி. திலகரத்ன, திரு. கே.டபி.எல்.விஜயவர்த்தன, திருமதி. வை.எம். சமரசிங்க, திரு. ஏ. டந்தநாராயன போன்றோர் மேலதிக பொது முகாமையாளர்களாக நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்.

# ஆளணியினர் கிளை தொடர்ச்சி

குறித்த காலப்பகுதியின் இறுதியில் திரு. ஏ. டந்தநாராயன – மேலதிக பொது முகாமையாளர் (DD 02) அவர்கள் இளைப்பாற, அவருக்குப் பதிலாக திரு. ரி.டி. கந்தகம அவர்கள் மேலதிக பொது முகாமையாளராக (DD 02) 2012 நவம்பர் மாதம் 30ஆம் திகதியில் நியமனம் செய்யப்பட்டார்.

2012 ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி இ.மி.ச. யின் நிதி முகாமையாளர் செல்வி. என்.ஆர். மஹமூத் இளைப்பாறிச் சென்றிருந்தார்.

### மனித வளம்சார் கொள்கைகள்

இ.மி.ச.இன் சகல பிரிவுகளினதும் மனித வளங்களை நிர்வகிக்கும் பொறுப்பாளிகளாகக் காணப்படும் சகல பிரதிப் பொது முகாமையாளர்களை உள்ளடக்கியுள்ள மனித வளம்சார் கொள்கைக் குழுவினர் இ.மி.ச. வின் மனித வளக் கொள்கைகளை மீளாய்வு செய்வதோடு, புதிய மனித வளம்சார் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது.

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு சிறப்பான வேலைச் சூழல், ஊழியர்கள் நலன்சார் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. 2012 ஆம் ஆண்டில் இ.மி.ச. ஊழியர்களின் நன்மை கருதி பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இவற்றில் மிகையூதியக் கொடுப்பனவு, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், சுகவீன/ஓய்வு விடுமுறை, முற்பணக் கொடுப்பனவுகள் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன

### மிகையூதியக் கொடுப்பனவு

2012ஆம் ஆண்டு இ.மி.ச. ஊழியர்களுக்கு முன்னைய ஆண்டுகளுக்கான மிகையூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இதற்கான மொத்தச் செலவு 648,289,027 ரூபாக்களாகும்.

### சுகவீன/ஓய்வு விடுமுறை ஊக்குவிப்புக் கொடுப்பனவு

1984 ஆம் ஆண்டிலிருந்து சுகவீன/ஓய்வு விடுமுறை ஊக்குவிப்புக் கொடுப்பனவு திட்டம் என்பதன் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. 2012ஆம் ஆண்டில் சுகவீன/ஓய்வு விடுமுறை ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இதற்கான மொத்தச் செலவு 497,234,998 ரூபா.

### தமிழ்/சிங்கள புதுவருட விசேட முற்பணக் கொடுப்பனவு

2012ஆம் ஆண்டு தமிழ், சிங்கள புதுவருட விசேட முற்பணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

### ரம்ழான் பண்டிகை விசேட கொடுப்பனவு

2012ஆம் ஆண்டு ரம்ழான் பண்டிகைக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

### பணியாளர் நலன்புரி அலகு

இ.மி.ச. இன் பணியாளர் நலன்புரி அலகு ஊழியர்களின் நலன்சார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இலங்கை மின்சார சபையானது பல்வேறு பிரதேசங்களில் சுற்றுலா பங்களாக்களை அமைத்துள்ளதோடு, அவற்றைப் பேணியும் வருகின்றது. குறிப்பாக ஹட்டன், பண்டாரவளை போன்ற குளிர் பிரதேசங்கள், அநுராதபுரம், மின்னேரியா, கண்டி, கதிர்காமம், யாழ்ப்பாணம் ஆகிய சமய நகரங்கள் போன்ற நகரங்களில் இச்சுற்றுலா பங்களாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இ.மி.ச. ஊழியர்கள் தமது விடுமுறை நாட்களை இப்பங்களாக்களில் சந்தோசமாகக் கழிப்பதே இதன் பிரதான நோக்காகும். இதனால் உயர்ந்தபட்ச வசதிகள் இப்பங்களாக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஊழியர்களின் விளையாட்டு மற்றும் களியாட்ட நிகழ்வுகளுக்காக இலங்கை மின்சார சபையானது 125,000/- ரூபாவை ஆண்டுக்கான உதவுதொகையாக வழங்கிவருகிறது.

இ.மி.ச. சமயப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் இ.மி.ச. பௌத்த சங்கம், கிறிஸ்தவ கழகம் போன்ற சமயங்கள் மூலமாக வெசாக் வைபவம், பொசன் வைபவ நிகழ்வுகள், கிறிஸ்மஸ் நத்தார் பண்டிகைகளை நடாத்துவதற்காக ஆண்டுதோறும் உதவு தொகைகள் வழங்கப்பட்டுவருகின்றன. அத்தோடு ஒவ்வோர் ஆண்டும் ஓகஸ்ட் மாதத்தில் கண்டி தலதா மாளிகையிலும், டிசெம்பர் மாதத்தில் மவுசாகல சமன் கிறிஸ்தவ தேவாலயத்திலும் யூன் மாதம் மிகிந்தலை நகரிலும் ஓகஸ்ட் மாதம் கதிர்காமத்திலும் சமய அனுட்டானங்கள் இ.மி.ச. இனால் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றது.

2012ஆம் ஆண்டு இ.மி.ச. இனால் சுற்றுப்போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. குறிப்பாக "விதுலமு லங்கா கலா" எனும் சுற்று விளையாட்டுப்போட்டி 28.07.2012ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. இதன் பிரகாரம் இ.மி.ச. ஊழியர்கள் நடனம், சங்கீதம், நடிப்பு, பட்டிமன்றம் போன்ற போட்டிகளில் ஈடுபட்டு தமது திறமைகளை வெளிக்கொண்டு வந்தார்கள். அது அவர்களுக்கொரு வரப்பிரசாதமாக அமைந்தது. அத்தோடு இலங்கை மின்சார சபையின் நலன்புரி அலகானது திரு. டி. ஜே. விமலசுரேந்திரா அவர்களின் 138வது பிறந்த தின நினைவுகூர் நிகழ்வுகளை 17 செப்ரெம்பர் 2012இல் நிகழ்த்தியதோடு சமய அனுட்டானங்களை நவம்பர் 1ஆம் திகதி நடாத்தியது.

அத்தோடு சகல மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளை பராமரிப்பதற்கு நிதி வசதியை வழங்கிவருகின்றது.

### நீண்ட கால சேவை விருதுகள்

இ.மி.ச. தனது ஊழியர்களின் தன்னலமற்ற நீண்ட கால அளப்பெரிய சேவைகளைப் பாராட்டுமுகமாக "நீண்ட கால சேவை விருதுகளை" வழங்கிவருகின்றது.

இத்தகைய விருது வழங்கும் வைபவம் 1984ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம் எவர் ஒருவர் இலங்கை மின்சார சபையில் தொடர்ந்து 35 வருடங்கள் சேவை புரிகின்றாரோ அவரை கௌரவித்து இவ்விருது வழங்கப்படும். ஆயினும், 1991ஆம் ஆண்டிலிருந்து எவர் ஒருவர் இ.மி.ச. 30 வருடங்கள் இடையுறாத சேவையை வழங்குகின்றாரோ அவருக்கு இவ்விருது வழங்கப்படும். 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ 250 ஊழியர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் இதுவரை 4,980 பேருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

# ஆளணியினர் கிளை தொடர்ச்சி



கலை விழா – 2012

### பிரச்சார அலகு

இலங்கை மின்சார சபையின் பிரச்சார அலகினால் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள், நேரடி ஒளிபரப்பு போன்ற பிரச்சார ஊடகங்களுக்கு தகவல்களை வழங்க வருகின்றன. அத்தோடு இ.மி.ச. தகவல்கள், கலை விழாக்கள், கொண்டாட்ட நிகழ்வுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கை மின்சார சபையின் பிரச்சார அலகினால் 2012ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய பத்திரிகைகளின் ஊடாக பல்வேறு விளம்பரங்கள், ஆக்கங்கள், கட்டுரைகளை வெளிப்படுத்தல்
- பத்திரிகையாளர் மாநாடுகள், பல்வேறு வகைப்பட்ட ஊடக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்
- தேசிய மட்டத்திலான கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தல்
- இ.மி.ச. இன் விசேட வைபவங்களை ஒன்றிணைத்தல்
- இ.மி.ச. தொடர்பான பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள், குறிப்புகள் போன்றவற்றை பிரசுரித்தல்.

## சட்டப் பிரிவு

இ.மி.ச. இல் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து வேலைகளையும் கையாளுவதற்காக இ.மி.ச. சட்டப் பிரிவு எனும் ஓர் அலகு காணப்படுகிறது. இப்பிரிவானது பிரதான சட்ட உத்தியோகத்தர், ஐந்து சட்ட உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாட் தொகுதியினரையும் கொண்டு காணப்படுகின்றது. இப.பகுதியின் (i)ஆம் வகையானது இ.மி.ச. மற்றவர்களுக்கு எதிராகச் செய்யும் வழக்குகளையும் (ii)ஆம் வகையானது மற்றவர்கள் இ.மி.ச. இற்கு எதிராகச் செய்யும் வழக்குகளையும் கையாளும்.

முதலாம் வகையில் உள்ளடங்குவன:

a) மின் துண்டிப்பு/மின்மானிப் பழுதுகள்/கையாளல்கள்/சட்டவிரோத மின்பாவனை/களவு போன்ற விடயங்களில் நிலுவைகளைப் பெறுதல்

b) உடன்படிக்கை/ஒப்பந்தங்களை மீறும் நடவடிக்கை

c) இ.மி.ச. சொத்துக்கள், வாகனங்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதங்களை அறவிடல்

d) இ.மி.ச. விடுதிகள், காணி விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்றன

இரண்டாம் வகையில் உள்ளடங்குவன:

a) மின் துண்டிப்பு, விலைப்பட்டியல் மீளாய்வுகள் என்பவற்றின் மீதான வழக்குகள்

b) மூன்றாம் தரப்பினருக்கோ/அவர்களின் சொத்துக்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள், குறிப்பாக மூன்றாம் தரப்பினரது வளவுகளுக்கு மேலாக மின் கம்பிகளை அமைத்தல், அவர்களின் சொத்துக்கள், மரங்கள், பயிர்கள் போன்றவற்றுக்கு சேதங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள், நட்டஈடு என்பன.

c) கேள்விப்பத்திர/உடன்படிக்கைகள்/ஒப்பந்தங்களை மீறுதல், வன்முறை நடவடிக்கைகள், நட்டங்களுக்கான கோரிக்கைகள் போன்றன.

2012ஆம் ஆண்டில் இப்பிரிவானது பின்வரும் விடங்களில் வழக்குகளை மேற்கொண்டி ருந்தது. அவையாவன,

| நீதிமன்றத்தின் பெயர் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 12 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 35 |
| குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 5 |
| மேல் நீதிமன்றம் | 12 |
| மாவட்ட நீதிமன்றம் | 165 |
| ஊழியர் நியாயசபை | 9 |
| கைத்தொழில் நீதிமன்றம் | 3 |
| நீதவான் நீதிமன்றம் | 2 |

தொழில்தருநருக்கும், ஊழியர்களுக்கிடையேயான பிரச்சினைகளை முடிவுறுத்தல், பதவியை வெறிதாக்கல், ஊழியர்களின் மனக்குறைகள் என்பன இனங்காணப்பட்டு, நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களினால் தீர்க்கப்பட்டன.

- தொழில் நியாயசபை
- தொழில் திணைக்களம்
- மனித உரிமைகள் ஆணைக்குழு
- கைத்தொழில் நீதிமன்றம்

இவற்றுக்கு மேலதிகமாக, குற்றப்பத்திரிகைகள், நீண்ட கால ஒப்பந்தங்கள் மீதான நியமனக் கடிதங்கள், ஆவணங்கள் என்பன சட்டப் பிரிவினால் நுணித்தாய்வு செய்யப்பட்டுவருகின்றன.

இ.மி.ச. மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகள், ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பாக வெளிநாட்டுக் கம்பனிகளுடனும், உள்ளூர் கம்பனிகளுடனும் தனியாட்களுடனும் மேற்கொள்ளும் பெருந்தொகையான ஒப்பந்தங்கள், வர்த்தக உடன்படிக்கைகள், நிதி ஒப்பந்தங்கள், மின்சாரக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்கள் போன்றவற்றை பார்வையிடுவதோடு சட்டரீதியான ஆவணங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தி வருகின்றது. இது சட்டங்களை பேணுவதை உறுதி செய்கின்றது.

**நொத்தாரிசு வேலை**

(i) இ.மி.ச. தேவைப்பாடுகளுக்கிணங்க காணி/கட்டடங்களை குத்தகைக்கு எடுத்துள்ள சந்தர்ப்பத்தில் அவற்றைப் பரிசீலனை செய்கின்றது.

(ii) வெளிநபர்களிடமிருந்து சொத்துக்களை இ.மி.ச. கொள்வனவு செய்யும்போது ஒப்பந்த உறுதிகளை பரிசீலனை செய்கின்றது.

**சட்ட அபிப்பிராயம்**

இ.மி.ச. தொடர்பான அனைத்து விடயங்களிலும் சட்ட அபிப்பிராயம் தொடர்பான நடவடிக்கைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

**தொழில் நியாயசபை**

தொழில் நியாய சபை சட்ட இல. 11, 1995 இன் பிரகாரம் இ.மி.ச.க்கும், வெளியாட்களுக்குமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. சட்டப் பிரிவினால் நான்கு தொழில் நியாயசபை விடயங்கள் தீர்க்கப்பட்டன.

## விசேட விசாரணை அலகு

விசேட விசாரணை அலகானது விசாரணை முகாமையாளரின் தலைமையில் 1995ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்விசாரணைக் கிளையானது மாகாணங்களில் இடம்பெறுகின்ற மின் களவு, சட்டரீதியான மின் இணைப்பு, மின்மானி வாசிப்புகளில் குளறுபடிகளை ஏற்படுத்தல், மின்மானி வாசிப்பு மோசடிகள் போன்ற விடயங்களில் விசாரணையை மேற்கொண்டுவருகின்றது.

2012ஆம் ஆண்டின் இக்கிளையினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நடவடிக் கைகள் | வெற்றிகரமான நடவடிக்கை களின் எண்ணிக்கை | நீதிமன்ற அறவீடு | இ.மி.ச. நட்டங்கள் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| மின்மானி வாசிப்பு | 1940 | 23.21 | 157.04 | 180.26 |
| கள்ள இணைப்பு | 1629 | 14.97 | 16.80 | 31.78 |
| **மொத்தம்** | 3569 | 38.18 | 173.85 | 212.03 |




இக்கிளையினால் பல்வேறு நடவடிக்கைகளில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதோடு குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும், ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## உள்ளகக் கணக்காய்வுக் கிளை

உள்ளகக் கணக்காய்வுக் கிளையானது பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வையில் காணப்படும். அவர் இ.மி.ச.இன் தலைவருக்கு நேரடியாக அறிக்கை களைச் சமர்ப்பித்து வருகின்றார். இவ்வுள்ளகக் கணக்காய்வுக் கிளையில் 5 நிறைவேற்று உத்தியோகத்தர்களும் 20 நிறைவேற்று உத்தியோகத்தரல்லாதவர்களும், 9 அலுவலர்களும் காணப்படுகின்றார்கள். இக்கிளையானது உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதோடு, நோக்கங்களைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தல், மதிப்பீடுகள், பரிந்துரைகள், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் சார்ந்த செயற்பாடுகள் ஊடாகவும் உரிய விளக்கங்களை வழங்குவதன் மூலம் சகல முகாமைத்துவ அங்கத்தவர்களுக்கும் தமது பொறுப்புக்களை பயன்மிக்கதாக மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒத்துழைப்புக்களை வழங்கிவருகிறது.

2012ஆம் ஆண்டில் இக்கிளையினால் பின்வரும் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

- வழமையான கணக்காய்வுகள் 08
- வருமானங்கள் மீதான கணக்காய்வு 14
- கணக்காய்வு முறைமைகள் தொடர்பாக 41
- விசேட விசாரணைகள் 13

#### கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு நிதிக் கூற்றுக்களை மேற்பார்வை செய்தல், முகாமைத்துவத்தின் தன்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள், முறைப்பாடுகள், உள்ளக, வெளியக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இக்குழு நான்கு நிறைவேற்று உத்தியோகத்தரல்லாத சபை உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவர்கள் சுதந்திரமாக தமது பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறித்த காலப்பகுதியில் இக்குழுவினால் ஆறு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பிராந்திய உற்பத்தி முறைமை முகாமை முறைமையில் கணக்கீட்டு ஆவண முறைமை, இ.மி.ச. காணி கட்டடங்களில் சிறப்பான முகாமை, திட்டமிடல், கட்டுப்படுத்தல், ஊழியர்களுக்கான கடன் முறைமைகள், இ.மி.ச. கொடுப்பனவு முறைமை, உள்ளக, வெளியக கணக்காய்வு முறைமை என்பவற்றை இக்கணக்காய்வுக் குழு மேற்பார்வை மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதனால் இ.மி.ச. முகாமையை சிறப்பாக மேற்கொள்ள முடிகின்றது.



# நிதியியல் தகவல்கள்


நிதிப் பிரிவு 106
நிதி மீளாய்வு 107
பணிப்பாளர்களின் அறிக்கை 108
ஒன்றித்த வருமானக் கூற்று 109
ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்று 110
நிதி நிலைக் கூற்று 111
உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (குழுமம்) 112
சபையின் மூலதன உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று 114
ஒன்றித்த காசுப் பாய்வுக் கூற்று 115
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 116
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 164
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதில்கள் 179

# நிதிப் பிரிவு

இப்பிரிவானது இலங்கை மின்சார சபையின் மொத்தச் செயற்பாடுகள் தொடர்பாக விசேட பணிகளை ஆற்றியுள்ளது. இலங்கை மின்சார சபைக்குரிய நிதியை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் முகாமைத்துவம் செய்த்தன் மூலம் இலங்கை மின்சார சபையின் நீடித்த நிலையான பொருளாதார ஸ்தீரத் தன்மையைப் பேண முடிந்தது.

சிறந்த திட்டமிடப்பட்ட முகாமைத்துவங்களைப் பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினால் சிறந்த நிதி திட்டமிடல்கள், வரவு - செலவு நிருவாகம், வங்கிக் கடன்மீது வட்டியைக் குறைப்பதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் மொத்த நிதிச் செயற்பாடுகள் தொடர்பான மேற்பார்வைகள் மற்றும் மதிப்பீடுகள் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இப்பிரிவினால் அதன் பலத்தை மேலும் பலப்படுத்துவதற்காக பல செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. குறிப்பாக 5S என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட பல செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இதனால் சிறப்பான முகாமை, கட்டுப்பாடு, சிறப்பான ஊழியர்களின் உளப்பாங்கு, ஊழியர்கள் குழுவாக இணைந்து வேலை செய்யும் தன்மை என்பன ஏற்படுத்தப்பட்டன. இதனால் நிதிப் பிரிவின் முகாமை சிறப்பாக அமைந்தது. இ.மி.ச. இன் நிதிப் பிரிவானது 5S கருதுகோள் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று விருதினைக் கைப்பற்றியது.

இ.மி.ச. நிதிப் பிரிவில் சர்வதேச தர நிதியியல் கொள்கை நியமனங்களுக்கமைவாக மேற்கொள்ள IFRS முறைமை இ.மி.ச. நிதிப் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது நிதிப் பிரிவிற்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது. இதற்காக நிதிப் பிரிவிற்கு ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அத்துடன் பல்வேறு வேலைத்திட்டங்கள், இ.மி.ச. உத்தியோகத் தர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. இலங்கையில் பிரதான நிறுவனம் இந்நிகழ்ச்சித் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப் படுத்தியது. இ.மி.ச. நிதிப் பிரிவு 2012 ஆம் ஆண்டிற்கான கணக்குகள், நிதிக் கூற்றுகள், நிதி நிலைமை என்பவற்றை சர்வதேச தர IFRS நியமத்திற்கேற்ப தயார் செய்திருந்தது.

நடப்பு ஆண்டில் வருமானத்தைச் சேகரிக்கும் பணியில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இ.மி.ச. நிதி சேகரிப்பு பணிகளில் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களும் நியமிக்கப்பட்டன. குறிப்பாக HDFC வங்கி, மக்கள் வங்கி நிறுவனங்களில் மின்சார வருமானத்தை சேகரிப்பதற்கான கருமபீடங்கள் அமைக்கப்பட்டன. குறித்த காலப்பகுதியில் இக்கருமபீடங்களின் எண்ணிக்கை 222 ஆக உயர்ந்து காணப்பட்டது.

உத்தியோகத்தர்களின் அறிவினை மேம்படுத்தவும் அவர்களின் பதவியுயர்வினை விரிவுபடுத்துவதற்காகவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகள், செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

### ஓய்வூதியசம்பள நிதி

இந்நிதியத்தின் பயனாளிகள் இலங்கை மின்சார சபையின் 20 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக்கொண்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களாகும். இலங்கை மின்சார சபையில் தமது சேவைக்காலத்திற்கு அமைய 30% - 34% ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றது.

இந்த ஆண்டின்போது 523 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் நிலையை எட்டியதுடன் ஓய்வுபெற்ற 73 பேர் மரணமடைந்தனர்.

2012 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிதியத்தின் நிகர சொத்துக்களின் பெறுமதி 13,044 மில்லியன் ரூபாவாகும். ஆண்டு காலப்பகுதியில் முதலீடுகள் மூலம் பெறப்பட்ட வருமானம் 1,319 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

### 2012 ஆம் ஆண்டில் ஓய்வூதியக் கொடுப்பனவு





இ.மி.ச ஓய்வூதியக்காரர்களுக்கான ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பான வைபவம் ஒன்று 2012 ஆண்டு மின்வலு மின்சக்தி அமைச்சின் உதவியுடன் இடம்பெற்றது.

### இலங்கை மின்சார சபையின் ஊழியர் சேமலாப நிதியம்

இலங்கை மின்சார சபையின் ஊழியர் சேமலாப நிதியமானது 1958 இல. 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய தனிப்பட்ட ஊழியர் சேமலாப நிதியமாக இந்நிதியம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 8 அங்கத்தவர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவினால் இது நிர்வகிக்கப்படுகின்றது. இலங்கை மின்சார சபையின் தலைவர் பதவிவழியாக தலைவராக நியமனம் பெற்றுள்ளதுடன் பொது முகாமையாளராக பதவிவழியே நியமனம் பெற்றுள்ளார். ஏனைய நான்கு அங்கத்தவர்கள் சபையினால் நியமிக்கப்படுகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் இந்நிதியத்திற்கான பங்களிப்பு 2080 மில்லியன் ரூபாய்களாகும். இதில் 832 மில்லியன் ரூபா இலங்கை மின்சார சபை ஊழியர்களால் வழங்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி மொத்தத் திரட்டு நிதியம் 33,776 மில்லியன் ரூபாய்களாகும். இது முன்னைய ஆண்டைவிட 10.54% அதிகரிப்பைக் காட்டியது. இந்நிதியம் மூலமான முதலீட்டு வருமானம் 3,921 மில்லியன் ரூபாய்களாகும். 2012 ஆம் ஆண்டிற்காக 11.17% இலாபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்தவர்களுக்கு வீடமைப்புக் கடனுக்காக 1,693 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் ஓய்வு பெற்ற இ.மி.ச. ஊழியர்களுக்கு 2,391 மில்லியன் ரூபாய்கள் ஊழியர் சேமலாப நிதியமாக வழங்கப்பட்டன.

# நிதி மீளாய்வு

**பொது**

2011 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையின் நிதிநிலையானது சிக்கல் நிறைந்த ஒன்றாகவே காணப்பட்டது. ஆண்டிற்கான எதிரீட்டு ஒதுக்கீட்டு இலாபமானது 118,795 மில்லியன் ரூபாவிலிருந்து 138,778 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. எனினும் மழைவீழ்ச்சி குறைவடைந்திருந்தமையும் எரிபொருள் விலையேற்றமும் எதிர்பார்க்கப்பட்ட மின்னுற்பத்தி குறைவடைந்து இருந்தமைக்கான காரணங்களாகும். 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது நீர்மின் உற்பத்தியானது 1012 மில்லியன் அலகுகளால் குறைவடைந்திருந்தது. (18% குறைவு) மாறாக அனல்மின் பிறப்பாக்கி கடந்த 2011 உடன் ஒப்பீடு செய்யும்போது 36% அதிகரிப்பைக் காட்டியது. இதன் விளைவாக உற்பத்திச் செலவு ஆனது கடந்த காலத்தைவிட 30% தினால் அதிகரித்திருந்தது. ஆயினும் நிதிச் செலவின மானது கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது 30% இனால் குறைவடைந்து காணப்பட்டது. நீண்டகாலத் தவணைக் கடன்கள் மற்றும் வங்கி மேலதிகப்பற்று என்பவற்றின் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டமையே இச்செலவானது குறைவடைந்தமைக்கான காரணங்கள் ஆகும்.

**செயற்பாடுகள்**

கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்கான மொத்த விற்பனைப் புரள்வு 9.32% தினால் அதிகரித்துக் காணப்பட்டது. குறித்த காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையானது 10023 மில்லியன் அலகு மின்னினை விற்பனை செய்திருந்தது. கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது இம்மின்சார விற்பனையானது 8.1% தினால் அதிகரித்திருந்தது. கடந்த காலத்தில் விற்பனை செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு 9628 மில்லியன் அலகுகளாகும்.

**நிதிப் பாய்ச்சல்**

இ.மி.ச., தேறிய உட்காவுப் பாய்ச்சலை பேணுவதையும் பாதகமான காசு மீதி 3102 ரூபா குறைப்பனவைப் பேணுவதையும் முக்கிய நோக்காகக் கொண்டிருந்தது. ஆண்டின் இறுதியில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இம்மீதியானது 1178 மில்லியன் ரூபாய்களாகக் காணப்பட்டது. இருந்தும் வியாபார மற்றும் கொடுப்பனவுகள் 26082 மில்லியன் ரூபாய் களால் அதிகரித்திருந்தன. அதில் 8814 மில்லியன் ரூபா CPS க்கான கொடுக்குமதியாகவும் 11109 மில்லியன் ரூபா IPP அனல் மின்சார உற்பத்திக்கான கொடுக்குமதியாகவும் காணப்பட்டது.

**கடன் பெறல்**

2010 ஆம் ஆண்டில் நீண்டகால தவணைக் கடன்களின் பெறுமதி 174264 மில்லியன் ரூபாவிலிருந்து 2011 ஆம் ஆண்டில் 192,746 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக் காணப்பட்டது.

**நிலையான சொத்துக்கள்**

கடத்துகை மற்றும் விநியோகம் தொடர்பான சொத்துக்கள் அதிகரித்தமையினால் மொத்த இயந்திர சாதனங்கள், பொறி உபகரணங்கள், காணி கட்டடங்கள் போன்ற மொத்தச் சொத்துக்களின் பெறுமதி 12% தினால் அதிகரித்துக் காணப்பட்டது. குறிக்கப்பட்ட காலப்பகுதியில் விநியோகப் பிரிவில் ஏற்பட்ட அபிவிருத்திப் போக்கை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

மொத்தச் சொத்துக்கள் 91,021 மில்லியன் ரூபாய்களால் அதிகரித்துக் காணப்பட்டன. எனினும் பொறுப்புக்கள் 52,082 மில்லியன் ரூபாய்களால் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் ஆண்டு காலப்பகுதியில் மூலதனம் மற்றும் மூலதன ஒதுக்கங்கள் 38,938 மில்லியன் ரூபாய்களாகக் காணப்பட்டன. இ.மி.ச. மக்கள் வங்கியில் தனியான காப்புறுதி (Escrow) உடன்படிக்கை பேணப்பட்டுள்ளமையினால் சபையின் நிலையான சொத்துக்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் தேறிய நிலையான சொத்துக்களின் பெறுமதி 0.1% இல் நிதியளிப்புச் செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட ஆண்டில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி 4,027 மில்லியன் ரூபாயாகக் காணப்பட்டது. இது கடந்த வருடத்தில் 3,710 மில்லியன் ரூபாய்களாகக் காணப்பட்டது.

| | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| விநியோக உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | 24,322 | 22,839 | 21,930 | 21,319 |
| நடுத்தர வோல்ட் மின்னிணைப்புகள் (கி.மீ.) | 28,433 | 27,590 | 26,684 | 25,212 |
| குறை வோல்ட் மின்னிணைப்புகள் (கி.மீ.) | 112,995 | 108,468 | 104,153 | 99,445 |
| சேவை இணைப்புகளின் எண்ணிக்கை | 4,979,862 | 4,717,448 | 4,480,423 | 4,280,168 |

**குழுக் கணக்குகள்**

இ.மி.ச. தனது கணக்குகளைத் தயாரித்து வருவதுடன் அதன் துணை நிறுவனங்களான இலங்கை மின்சார தனியார் கம்பனி, இலங்கை டிரான்ஸ்போமர்ஸ் கம்பனி, லங்கா நிலக்கரி சுரங்க கம்பனிகள் என்பன ஒன்றிணைந்து குழுக் கணக்குகளை மேற்கொண்டு வருகின்றன.

| இலாப, நட்டம் | 2012 மில்லியன் ரூபா | 2011 மில்லியன் ரூபா | 2010 மில்லியன் ரூபா | 2009 மில்லியன் ரூபா | 2008 மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|---|
| புரள்வு | 163,513 | 132,460 | 121,862 | 110,518 | 111,287 |
| நேரடிச் செலவினம் | (222,419) | (151,448) | (116,168) | (118,186) | (145,712) |
| மொத்த இலாபம் / (நட்டம்) | (58,906) | (18,988) | 5,694 | (7,668) | (34,425) |
| நிர்வாகச் செலவுகள் | (2,997) | (1,636) | (1,851) | (2,870) | (1,487) |
| ஏனைய வருமானம் | 4,225 | 3,810 | 3,062 | 3,412 | 3,580 |
| தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்) | (57,678) | (16,814) | 6,905 | (7,126) | (32,332) |
| நிதிக்கிரயம் - நிகர | (3,769) | (3,371) | (2,047) | (2,212) | (1,537) |
| வரிக்கு முன் இலாபம் / நட்டம் | (61,447) | (20,185) | 4,858 | (9,338) | (33,869) |
| **ஐந்தொகை** | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் | 738,171 | 661,333 | 605,422 | 516,021 | 465,296 |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | 193,230 | 257,464 | 282,631 | 275,208 | 270,176 |
| நடைமுறையல்லா பரிப்புக்கள் | 407,585 | 281,835 | 229,128 | 141,883 | 110,419 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 137,356 | 122,034 | 93,663 | 98,930 | 84,700 |
| காசு | (17,812) | (1,178) | (3,102) | (4,039) | (2,261) |
| விற்பனை (கி.வா.ம.) | 10,474 | 10,023 | 9,263 | 8,441 | 8,418 |
| மின் உற்பத்தி (கி.வா.ம.) | 11,801 | 11,528 | 10,689 | 9,882 | 9,901 |

# பணிப்பாளர்களின் அறிக்கை

இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர்கள் 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அவர்களுடைய அறிக்கைகள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

#### முதன்மையான நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வும்

சபையின் முதன்மையான நடவடிக்கைகளாக மின் பிறப்பாக்கம், கொள்வனவு, ஊடுகடத்தல், வினைத்திறனான விநியோகம் மற்றும் மின்சார விற்பனை என்பன காணப்படுகின்றன.

#### நிதியியல் பெறுபேறுகள்

இ.மி.ச. இன் ஆண்டு மீளாய்வின் போது 8.7% எனும் அதிகரித்த ஒரு புரள்வு பதிவு செய்யப்பட்டது. 77,645 மில்லியன் ரூபாவிலான ஒரு நிகர நட்டம் ஆண்டின் மீளாய்வின் போது பதிவாகியது.

#### முதலீடு

இ.மி.ச. ஆனது லங்கா எலக்றிசிற்றி கம்பனி (பிரை) லிமிட். இன் பங்குகளில் 55.2% இனையும் LTL ஹோல்டிங் (பிரை) லிமிட். இன் பங்குகளில் 63% இனையும் லங்கா நிலக்கரி கம்பனி (பிரை) லிமிட். இன் பங்குகளில் 60% இனையும் ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (பிரை) லிமிட். இன் பங்குகளில் 100% இனையும் தனது முதலீடாகக் கொண்டுள்ளது. மேலும், இ.மி.ச. மற்றும் இந்திய NTPC இன் கூட்டாண்மையான திருகோணமலை பவர் கம்பனி லிமிட். இல் 50% முதலீட்டினையும் இ.மி.ச. கொண்டிருக்கிறது.

2011/12 நிதியாண்டிற்கான இறுதிப் பங்கிலாபம் 500 மில்லியன் ரூபா எனவும் 2012/13 நிதியாண்டிற்கான இடைக்காலப் பங்கிலாபம் 2,750 மில்லியன் ரூபா எனவும் LTL ஹோல்டிங் (பிரை) லிமிட்டெட் வெளிப்படுத்தியுள்ள அதேவேளை இ.மி.ச. இன் 2012 ஆம் ஆண்டிற்கான பங்கிலாப வருமானமாக 2,035 மில்லியன் ரூபாயினை இ.மி.ச. பெற்றுக் கொண்டது. 2011/12 நிதியாண்டிற்கான பங்கிலாபம் 172 மில்லியன் ரூபா என லங்கா எலக்றிசிற்றி கம்பனி (பிரை) லிமிட். வெளிப்படுத்தியுள்ளதுடன் இ.மி.ச. இன் 2012 ஆம் ஆண்டிற்கான பங்கிலாப வருமானமாக 94 மில்லியன் ரூபாயினை இ.மி.ச. பெற்றுக் கொண்டது.

#### சுய காப்புறுதி ஒதுக்கம்

இலங்கை மின்சார சபை தனது நிலையான சொத்துக்களுக்கான தனது சுய காப்புறுதியினைப் பேணுவதுடன் ஆண்டின் இறுதியில் மொத்த மீள்மதிப்பிடப்பட்ட நிலையான பெறுமதியில் வருடாந்தம் அண்ணளவாக 0.1% ஆக இது காணப்படுகிறது. ஐந்தொகைத் தரவில் உள்ளவாறு இந்த காப்புறுதியின் மொத்த ஒருங்கிணைந்த நிதி 4,433 மில்லியன் ரூபாவாகும்.

#### ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கான சேர்ப்புகள்

மூலதனச் சொத்துக்களுக்கு கடந்த வருடம் சேர்க்கப்பட்ட 17,183 மில்லியன் ரூபா ஆதனம், பொறி மற்றும் உபகரணத் தொகையுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் காலப்பகுதியில் 21,069 மில்லியன் ரூபா சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சேர்ப்பு பிரதானமாக ஊடுகடத்தல் மற்றும் விநியோகச் சொத்துக்களுடன் தொடர்புடையதாகும்.

#### பெறப்படும் கடன்கள்

சபையினால் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி ரூ.346,900 மில்லியனாக அமைந்திருந்தது. இது கடந்த வருடம் ரூ.213,352 மில்லியன் ஆகும்.

#### 2012 ஆம் ஆண்டிற்கான சபை உறுப்பினர்கள்

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. இன் தலைவரது அலுவலகத்துடன் பேராசிரியர். விமலதர்ம அபேவிக்கிரம தொடர்பினைப் பேணியிருந்தார். அவர் இ.மி.ச. இன் துணைக் கம்பனிகளான லங்கா எலக்றிசிற்றி கம்பனி (பிரை) லிமிட். மற்றும் LTL ஹோல்டிங் (பிரை) லிமிட். ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் ஒரு பணிப்பாளராகவும்கூட சேவையாற்றியிருந்தார்.

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் பொறியியலாளர். டபிள்யு.டி. அநுர சேனக விஜயபால அவர்கள் இ.மி.ச. இன் துணை தலைவராகவும் திரு. பி.பி. குணசேன அவர்கள் இ.மி.ச. இன் செயற்படு பணிப்பாளராகவும் இருந்தனர். மேலும் அவர்கள் லங்கா நிலக்கரி கம்பனி (பிரை) லிமிட்., ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (பிரை) லிமிட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி (பிரை) லிமிட். ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் பணிப்பாளர்களாகவும்கூட சேவையாற்றியுள்ளனர்.

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக கலாநிதி. பி.எம்.எஸ். பட்டகொட மற்றும் திரு. ஜயசிங்க ஆகியோர் சேவையாற்றியுள்ளனர்.

2012.07.23 அன்று திரு. கே.டி. ரணசிங்க ராஜினாமா செய்ததுடன் 2012.07.16 அன்று கலாநிதி. வை.டி. நிஹால் ஜயதிலக ராஜினாமா செய்திருந்தார்.

2012.07.16 அன்று இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரான திரு. ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க நியமிக்கப்பட்டதுடன் 2012.08.13 அன்று இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்கு இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு. சி.ஜே.பி. சிறிவர்த்தன நியமிக்கப்பட்டார்.

#### சேமலாப நிதியும் ஓய்வூதிய நிதியும்

சபையானது தனது ஊழியர்களின் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய நிதி தொடர்பிலான ஒரு சுயாதீன நிதியத்தினைப் பேணுகிறது.

2012 இல் இ.மி.ச., சேமலாப நிதி முதலீட்டின் மீது 3,921 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியிருப்பதுடன் 11.17% பங்கிலாபம் ஒன்றினை வெளிப்படுத்தியுள்ளது. 2012 இல் ஓய்வூதிய நிதியின் முதலீட்டிலிருந்து கிடைத்த வருமானம் ரூ.1,319 மில்லியன் ஆகும்.

#### ஊழியர்கள்

ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 16,709 ஆக இருந்ததோடு 2012 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான நுகர்வோர் எண்ணிக்கை 298 ஆகவும் காணப்பட்டது.

#### கணக்காய்வாளர்கள்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

#### கணக்காய்வுக் குழு

2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடனான மீளாய்வு மற்றும் கலந்தாய்வின் கீழ் ஆண்டின் காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு ஆறு கூட்டங்களை நடத்தி, உள்ளக கணக்காய்வு அறிக்கையை முகாமைத்துவத்திற்குக் கையளித்தது. கணக்காய்வுக் குழுவானது பரிந்துரைக்கப்பட்டுள்ள மேலதிகக் கட்டுப்பாடுகளில் அவர்களுடைய பரந்துபட்ட அனுபவம், நிபுணத்துவ அறிவு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்தத் தேவையானதும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதுமான தணிக்கை உத்திகள் ஆகியவற்றை பயன்படுத்தியதால் உரிமையாண்மை முகங்கொடுத்த மோசடி மற்றும் வழுக்கள், செயற்பாட்டு மற்றும் நிதிசார்ந்த இடர்கள் என்பவற்றின் மீள்வருகை மற்றும் தாக்கத்தினைக் குறைப்பதற்கு இயலுமாகவிருந்தது. குழுவானது இ.மி.ச. இன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை மீள்மதிப்பீடு செய்ததுடன் திட்டமிடல், முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் தரத்தினை தீர்மானிப்பதன் மீதான வழிகாட்டலையும்கூட வழங்கியது.

# ஒன்றித்த வருமானக் கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | குழுக்கணக்கு 2012 ரூபா | குழுக்கணக்கு 2011 ரூபா | சபை 2012 ரூபா | சபை 2011 ரூபா |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | | | |
| வருமானம் | 3 | 180,516,200 | 142,540,999 | 163,512,580 | 132,459,860 |
| விற்பனைச் செலவு | | (231,319,947) | (155,587,266) | (222,419,279) | (151,448,504) |
| | | **(50,803,747)** | **(13,046,268)** | **(58,906,699)** | **(18,988,644)** |
| ஏனைய வருமானமும் பெறுவனவுகளும் | 4 | 5,630,063 | 4,420,540 | 4,225,332 | 3,810,426 |
| விநியோகச் செலவு | | (53,247) | (79,423) | - | - |
| ஏனையவை | | (335,901) | (230,991) | - | - |
| நிருவாகச் செலவுகள் | | (5,127,526) | (3,391,488) | (2,997,355) | (1,636,103) |
| **செயற்பாட்டு இலாபம்** | | **(50,690,357)** | **(12,327,630)** | **(57,678,722)** | **(16,814,321)** |
| நிதி வருமானம் | 5.1 | 2,574,594 | 1,435,208 | 2,428,969 | 416,133 |
| நிதிச் செலவு | 5.2 | (6,356,251) | (4,050,956) | (6,197,562) | (3,787,193) |
| நிகர நிதிச் செலவு | | (3,781,657) | (2,615,748) | (3,768,593) | (3,371,060) |
| கூட்டு முயற்சி நட்டப் பகிர்வு | 11 | (37,421) | (27,737) | - | - |
| **வரிக்கு முன் நட்டம்** | 6 | **(54,509,434)** | **(14,971,115)** | **(61,447,315)** | **(20,185,381)** |
| வருமான வரி | 7.1 | (1,453,825) | (951,711) | - | - |
| பிற்போடப்பட்ட வரி (ஒதுக்கீடு) | 7.2 | (15,982,615) | (673,028) | (16,198,080) | (829,953) |
| **ஆண்டுக்கான செயற்பாட்டு நட்டம்** | | **(71,945,874)** | **(16,595,854)** | **(77,645,395)** | **(21,015,334)** |
| கட்டுப்பாடற்றோர் பாத்தியதை | | (3,646,791) | (2,162,456) | - | - |
| **ஆண்டிற்கான இலாபம் / நட்டம்** | | **(75,592,666)** | **(18,758,310)** | **(77,645,395)** | **(21,015,334)** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் குறிப்பிட்ட பக்கங்களும் நிதிக் கூற்றுகளின் ஒன்றித்த பகுதிகளாகும்.

# ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | குழுக்கணக்கு 2012 ரூபா | குழுக்கணக்கு 2011 ரூபா | சபை 2012 ரூபா | சபை 2011 ரூபா |
|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான தொடரும் செயற்பாடுகளிலிருந்து நட்டம்** | **(71,945,874)** | **(16,595,854)** | **(77,645,396)** | **(21,015,333)** |
| **ஏனைய முற்றடக்க வருமானங்கள்** | | | | |
| காணி, கட்டட மீள் மதிப்பீடு | - | 379,306 | - | - |
| மீள மதிப்பீட்டு கட்டடம்மீது பிற்போடப்பட்ட வரி | - | (34,255) | - | - |
| பதிவழிப்புச் செய்யப்பட்ட காணி | - | (11,300) | - | - |
| கடந்தகால தொழிற்பயன் கடப்பாட்டு காலத்தேய்மான முறை கணிப்பீட்டு நட்டம் | (124,403) | (307,977) | (124,403.00) | (307,977) |
| அந்நிய உபகம்பனிகளின் தொழிற்பாடுகளின் நாணயமாற்று வித்தியாசம | 7,029 | 3,987 | - | - |
| விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களின் சீர்மதிப்பீட்டு நயம் | 57,114 | 581,404 | - | - |
| அந்நிய கடன்களை நாணயமாற்றம் செய்வதன் நிகர நயம் அல்லது இழப்பு | (17,927) | (14,161) | - | - |
| ஆண்டிற்கான வரிக்குப் பிந்திய மொத்த முற்றடக்க வருமானம் | **(72,024,062)** | **(15,998,850)** | **(77,769,799)** | **(21,323,310)** |
| ஒதுக்கப்படுவது: | | | | |
| மேன்னிலைக் கம்பனியின் உரிமையாண்மைப் பங்குதாரர் | (75,693,400) | (18,587,958) | - | - |
| கட்டுப்பாடற்றோர் பாத்தியதை | 3,669,337 | 2,589,109 | - | - |
| | **(72,024,062)** | **(15,998,850)** | **-** | **-** |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் குறிப்பிட்ட பக்கங்களும் நிதிக் கூற்றுகளின் ஒன்றித்த பகுதிகளாகும்.

# நிதி நிலைக் கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | குறிப்பு | குழுக்கணக்கு | | | சபை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | 2011<br>1ஆம் திகதியில் | 2012 | 2011 | 2011<br>1ஆம் திகதியில் |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 8 | 637,647,777 | 559,719,351 | 506,746,081 | 622,340,524 | 545,606,651 | 493,050,260 |
| குத்தகைக் காணிக்கு செலுத்திய மிகை (வட்டம்) | | 5,903 | - | - | - | - | - |
| அருவச் சொத்துக்கள் | 9 | 22,025 | 23,327 | 25,748 | - | - | - |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 10 | - | - | - | 761,902 | 736,902 | 736,902 |
| கூட்டு முயற்சியில் முதலீடு | 11 | 84,843 | 122,264 | - | 150,000 | 150,000 | - |
| எனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் | 12 | 4,864,344 | 5,057,495 | 5,510,688 | - | - | - |
| காப்புறுதி ஒதுக்கத்தில் முதலீடு | 13 | 4,433,045 | 4,027,412 | 3,710,485 | 4,433,045 | 4,027,412 | 3,710,485 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | 647,057,936 | 568,949,849 | 515,993,001 | 627,685,471 | 550,520,965 | 497,497,647 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| தொக்குகள் | 14 | 32,597,217 | 21,172,864 | 18,645,058 | 29,949,063 | 18,916,632 | 16,669,168 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 15 | 78,367,473 | 87,701,726 | 89,268,547 | 71,120,194 | 84,624,353 | 85,435,368 |
| உறவுமுறை சார்ந்தோரிடமிருந்து வருமதியான தொகைகள் | 16 | - | - | - | 1,810,852 | 1,627,537 | 1,831,493 |
| எனைய நடைமுறை நிதிச் சொத்துகள் | 12 | 14,186,296 | 14,211,385 | 9,868,553 | 5,035,090 | 4,164,890 | 3,690,470 |
| வருமதியான வரி மீளளிப்புக்கள் | | 232,601 | 222,800 | 470,672 | - | - | - |
| காசு மற்றும் வங்கி மீதி | 26 | 5,717,455 | 7,118,700 | 4,616,516 | 2,570,748 | 1,479,258 | 1,546,976 |
| மொத்த நடைமுறைச் சொத்துகள் | | 131,101,043 | 130,427,474 | 122,869,346 | 110,485,947 | 110,812,670 | 109,173,475 |
| மொத்தச் சொத்துகள் | | 778,158,979 | 699,377,323 | 638,862,347 | 738,171,418 | 661,333,635 | 606,671,122 |
| **உரிமையாண்மையும் பரிப்புகளும்** | | | | | | | |
| **மூலதனமும் உரிமையாண்மையும்** | | | | | | | |
| பங்களிப்பு மூலதனம் | 17 | 109,567,864 | 96,090,404 | 83,311,423 | 109,567,864 | 96,090,404 | 83,311,423 |
| ஒதுக்கங்கள் | 18 | 32,259,936 | 31,011,415 | 29,388,050 | 25,721,509 | 24,525,260 | 23,436,293 |
| கைக்கொள்வருமானம் (நட்டம்) | | 68,577,432 | 145,478,078 | 165,191,016 | 57,940,887 | 136,848,860 | 158,729,823 |
| **மேன்னிலை உரிம பங்குதாரர்** | | | | | | | |
| **உரிமையாண்மை** | | 210,405,232 | 272,579,897 | 277,890,489 | 193,230,260 | 257,464,524 | 265,477,539 |
| கட்டுப்பாடற்றோர் பாத்தியதை | | 16,023,522 | 14,018,587 | 11,282,136 | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | 226,428,754 | 286,598,484 | 289,172,625 | 193,230,260 | 257,464,524 | 265,477,539 |
| **நடைமுறையல்லா பரிப்புகளும்** | | | | | | | |
| பிற்போடப்பட்ட வட்டியுடனான கடனும் | | | | | | | |
| கடன்படுகைகளும் | 19 | 304,295,360 | 203,721,934 | 175,054,426 | 305,714,769 | 202,346,713 | 174,264,109 |
| வாடிக்கையாளர் வைப்புகள் | 20 | 8,899,445 | 8,162,181 | 7,543,940 | 8,899,444 | 8,162,181 | 7,543,940 |
| பரிப்புக்கள் | 21 | 4,144,075 | 3,577,866 | 3,355,504 | 3,592,799 | 3,092,032 | 2,929,958 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 22 | 58,285,116 | 53,049,813 | 47,081,839 | 55,208,276 | 50,262,392 | 44,390,174 |
| பிற்போடப்பட்ட வரி | 23 | 34,602,781 | 18,620,167 | 17,912,883 | 34,169,764 | 17,971,684 | 17,141,731 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 410,226,777 | 287,131,961 | 250,948,592 | 407,585,052 | 281,835,002 | 246,269,912 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 24 | 91,649,271 | 105,953,976 | 80,905,259 | 86,959,050 | 103,832,911 | 78,596,719 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | | 19,322 | 328,953 | 282,273 | - | - | - |
| உறவுமுறை சார்ந்தோருக்கு செலுத்த வேண்டிய தொகை | 25 | - | - | - | 4,311,820 | 2,294,474 | 1,447,831 |
| வட்டியுடனான கடனும் கடன்படுகைகளும் | 19 | 42,993,289 | 12,891,733 | 11,600,070 | 41,185,236 | 11,006,724 | 9,979,121 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 6,841,566 | 6,472,216 | 5,953,529 | 4,900,000 | 4,900,000 | 4,900,000 |
| **மொத்த நடைமுறைப் பரிப்புக்கள்** | | 141,503,449 | 125,646,878 | 98,741,130 | 137,356,106 | 122,034,109 | 94,923,671 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | 778,158,979 | 699,377,323 | 638,862,347 | 738,171,418 | 661,333,635 | 606,671,122 |

இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு சபையும் முகாமைத்துவமும் பொறுப்புடையதாகும்.
சபை சார்பாக கையெழுத்திடப்பட்டது:

.......................... தலைவர்

.......................... பொது முகாமையாளர்

.......................... நிதி முகாமையாளர்

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் குறிப்பிட்ட பக்கங்களும் நிதிக் கூற்றுகளின் ஒன்றித்த பகுதிகளாகும்.

23.04.2014
கொழும்பு

# உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (குழுமம்)

**2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு**

| | பங்களிப்பு மூலதனம் | மூலதன ஒதுக்கம் | கருதப்படு கிரய செம்மையாக்கம் | மீள் மதிப்பீடு ஒதுக்கம் |
|---|---|---|---|---|
| **2012 சனவரி 1 திருத்திய மீதிகள்** | 83,311,423 | 17,792,799 | 4,529,883 | 403,244 |
| ஆ,பொ.உ மீது மீள் மதிப்பு மிகை | | | | |
| ஆண்டு காலப்பகுதியில் சீராக்கங்கள் | | | | |
| ஆண்டுக்கான நட்டம் | | | | |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது | | | | |
| காப்புறுதியின் மீதான வட்டி வருமானம் | | | | |
| நினிது பங்கு வழங்கல் | | | | |
| பவன் தனாவி பங்கு வழங்கல் | | | | |
| வெப்ப வீத ஒதுக்கம் | | 12,489 | | |
| நிலையான சொத்து பிரதியீட்டு ஒதுக்கம் | | | | |
| புனர்நிர்மான ஒதுக்கங்கள் | | | | |
| சாதாரண பங்குகளுக்கான பங்கிலாபம் | | | | |
| AREP செயற்திட்டம் | 1,560,000 | | | |
| கிராமிய மின் வழங்கல் செயற்திட்டம் 08 | 5,566,289 | | | |
| CAARP செயற்திட்டம் | 95,902 | | | |
| IDC செயற்திட்டக் கடன் | 7 | | | |
| கிளிநொச்சி, சுன்னாகம் கடத்துகை செயற்திட்டம் | 139,994 | | | |
| இலங்கைக்கு ஒளியூட்டல் செயற்திட்டம் | 1,914,000 | | | |
| வவுனியா, கிளிநொச்சி கடத்துகை செயற்திட்டம் | 1,046,052 | | | |
| கிராமிய மின்வழங்கல் செயற்திட்டம் (04) (விரிவாக்கல்) | 1,160,072 | | | |
| கிராமிய மின்வழங்கல் செயற்திட்டம் (04) பழைய | 1,296,666 | | | |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | | |
| வரையறுத்த நலன்சார் திட்டங்கள் மீதான இலாபம் / நட்டம் | | | | |
| காணி பதிவழிப்பு | | | | (6,238) |
| காணி, கட்டடம், மீள்மதிப்பிடல் | | | | 209,377 |
| பிற்போடப்பட்ட வரிச் சீராக்கல் | | | | (18,909) |
| விலை குறித்த, குறிக்கப்படாத பங்குகளின் சீர்மதிப்பு நயம் | | | | |
| அந்நிய துணைக்கம்பனி நாணயமாற்ற வித்தியாசம் | | 2,052 | | |
| வெளிநாட்டுச் செலாவணிக் கடன்கள் மீதான தேறிய இலாபம் / நட்டம் | | (7,289) | | |
| **2011 டிசெம்பர் 31 இல் மீதி** | 96,090,405 | 17,800,051 | 4,529,883 | 587,475 |
| IFRS சீராக்கம், மீள்பெறுமதியிடல் | - | | | |
| ஆண்டிற்கான சீராக்கம் | - | | | |
| ஆண்டிற்கான நட்டம் | - | | | |
| காப்புறுதிக்கான ஒதுக்க மாற்றங்கள் | - | | | |
| காப்புறுதி மீதான வட்டி வருமானம் | - | | | |
| காலப்பகுதிக்கான சேதார அறவீடு | - | | | |
| பவன் தனவி பங்குகள் வழங்கல் | | | | |
| வெப்ப வீத ஒதுக்கம் | | 2,093 | | |
| முதலீட்டு ஒதுக்கம் | | | | |
| நிலையான சொத்து பிரதியீடு ஒதுக்கம் | | | | |
| புனர்நிர்மான ஒதுக்கங்கள் | | | | |
| CAARP கருத்திட்டம் | 105,769 | | | |
| AREP கருத்திட்டம் | 140,000 | | | |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் (8) ஈரான் | 3,153,437 | | | |
| IDC கருத்திட்டக் கடன் | 8 | | | |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4-(விரிவாக்கம்) | 3,064,325 | | | |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4-(பழைய) | 463,364 | | | |
| வவுனியா, கிளிநொச்சி கடத்துகை கருத்திட்டம் | 966,970 | | | |
| கிளிநொச்சி, சுன்னாகம் கடத்துகை கருத்திட்டம் | 646,080 | | | |
| மேற்கு ரண்அருண கருத்திட்டம் | 35,000 | | | |
| கிழக்கு நவோதயா கருத்திட்டம் | 1,062,959 | | | |
| றுகுணு உதான கருத்திட்டம் | 160,000 | | | |
| ஊவா உதான கருத்திட்டம் | 1,396,516 | | | |
| ரஜரட்ட நவோதயா கருத்திட்டம் | 75,000 | | | |
| யாழ்ப்பாணம் மின்சார மீள்புனருத்தாபன வழங்கல் கருத்திட்டம் | 315,825 | | | |
| மின்வலு துறையை வலுப்படுத்தும் ஆதார கருத்திட்டம் | 129,960 | | | |
| வடக்கின் வசந்தம் கருத்திட்டம் | 1,757,069 | | | |
| DSMSLP கருத்திட்டம் | 5,178 | | | |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | | |
| வரையறுத்த பயன் திட்டங்கள் மீதான இலாபம் / நட்டம் | | | | |
| விலை குறித்த, குறிக்கப்படாத பங்குகளின் சீர்மதிப்பு வருவாய் | | | | |
| அந்நிய துணைக்கம்பனிகளின் தொழிற்பாட்டு நாணயமாற்று வித்தியாசம் | | 3,618 | | |
| அந்நிய நாணய கடன்கள் மீதான நிகர உழைப்பு / நட்டம் | | (9,227) | | |
| சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபம் (இறுதி) 2011 / 12 (LTL) | | | | |
| சாதாரண பங்குகள் மீதான இடைக்கால பங்கிலாபம் 2012 / 13 (LTL) | | | | |
| LECO கம்பனி பங்கிலாப கொடுப்பனவு | | | | |
| **2012 டிசெம்பர் 31 இல் மீதி** | 109,567,865 | 17,796,535 | 4,529,883 | 587,475 |

கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் குறிப்பிட்ட பக்கங்களும் நிதிக் கூற்றுகளின் ஒன்றித்த பகுதிகளாகும்.

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| புனர் நிர்மான ஒதுக்கம் | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | சொத்து பிரதியீட்டு ஒதுக்கம் | முதலீட்டு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | விற்பனைக்கு கிடைக்கும் ஒதுக்கம் சொத்து | கைக்கொள் இலாபம் | சிறுபான்மையினர் பாத்தியதை | மொத்தம் |
|---:|---:|---:|---:|---:|---:|---:|---:|---:|
| **2,984** | **23,000** | **189,615** | **60,530** | **5,816,735** | **569,259** | **165,191,016** | **11,282,136** | **289,172,625** |
| | | | | | | 45,439,094 | | 45,439,094 |
| | | | | | | (45,224,706) | | (45,224,706) |
| | | | | | | (18,758,310) | 2,162,456 | (16,595,854) |
| | | | | 772,040 | | (772,040) | | - |
| | | | | 316,927 | | | | 316,927 |
| | | | | | | | 14,667 | 14,667 |
| | | | | | | | 470,400 | 470,400 |
| | | | | | | (19,824) | 7,335 | - |
| | | 9,892 | | | | (15,702) | 5,810 | (0) |
| 33,689 | | | | | | (53,474) | 19,785 | (0) |
| | | | | | | - | (370,654) | (370,654) |
| | | | | | | | | 1,560,000 |
| | | | | | | | | 5,566,289 |
| | | | | | | | | 95,902 |
| | | | | | | | | 7 |
| | | | | | | | | 139,994 |
| | | | | | | | | 1,914,000 |
| | | | | | | | | 1,046,052 |
| | | | | | | | | 1,160,072 |
| | | | | | | | | 1,296,666 |
| | | | | | | | | - |
| | | | | | | (307,977) | | (307,977) |
| | | | | | | | (5,062) | (11,300) |
| | | | | | | | 169,929 | 379,306 |
| | | | | | | | (15,346) | (34,255) |
| | | | | | 299,335 | | 282,070 | 581,405 |
| | | | | | | | 1,935 | 3,987 |
| | | | | | | | (6,872) | (14,161) |
| **36,673** | **23,000** | **199,507** | **60,530** | **6,905,702** | **868,594** | **145,478,078** | **14,018,587** | **286,598,485** |
| | | | | | | (366,345) | | (366,345) |
| | | | | | | 9,524 | | 9,524 |
| | | | | | | (75,592,666) | 3,646,791 | (71,945,874) |
| | | | | 781,354 | | (781,354) | | - |
| | | | | 470,933 | | | | 470,933 |
| | | | | (56,038) | | | | (56,038) |
| | | | | | | | 49,000 | 49,000 |
| | | | | | | (3,322) | 1,229 | (0) |
| | | | 6,319 | | | (10,030) | 3,711 | 0 |
| | | 14,193 | | | | (22,529) | 8,336 | (0) |
| 5,999 | | | | | | (9,521) | 3,523 | 0 |
| | | | | | | | | 105,769 |
| | | | | | | | | 140,000 |
| | | | | | | | | 3,153,437 |
| | | | | | | | | 8 |
| | | | | | | | | 3,064,325 |
| | | | | | | | | 463,364 |
| | | | | | | | | 966,970 |
| | | | | | | | | 646,080 |
| | | | | | | | | 35,000 |
| | | | | | | | | 1,062,959 |
| | | | | | | | | 160,000 |
| | | | | | | | | 1,396,516 |
| | | | | | | | | 75,000 |
| | | | | | | | | 315,825 |
| | | | | | | | | 129,960 |
| | | | | | | | | 1,757,069 |
| | | | | | | | | 5,178 |
| | | | | | | | | - |
| | | | | | | (124,403) | | (124,403) |
| | | | | | 29,277 | | 27,836 | 57,114 |
| | | | | | | | 3,411 | 7,029 |
| | | | | | | | (8,700) | (17,927) |
| | | | | | | - | (412,447) | (412,447) |
| | | | | | | - | (1,240,195) | (1,240,195) |
| | | | | | | 0 | (77,560) | (77,560) |
| **42,671** | **23,000** | **213,700** | **66,849** | **8,101,951** | **897,871** | **68,577,432** | **16,023,522** | **226,428,756** |

# சபையின் மூலதன உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | பங்களிப்பு மூலதனம் | மூலதன ஒதுக்கம் நிதி | மூலதன மீட்பு ஒதுக்க | மீள்மதிப்பீடு ஒதுக்கம் | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | சுய காப்புறுதி | கைக்கொள் வருவானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2012 சனவரியில் மீதி** | **83,311,423** | **17,447,062** | **165,446** | **-** | **23,000** | **5,800,785** | **158,729,823** | **265,477,538** |
| IFRS சீராகக்ம் | - | - | - | - | - | - | 45,439,094 | 45,439,094 |
| PPE மீள்மதிப்பீட்டு எதிர்ப்பதிவு | - | - | - | - | - | - | (45,224,706) | (45,224,706) |
| ஓய்வூதிய நிதி, ஆளணிக் கிரய நட்டம் | - | - | - | - | - | - | (21,015,334) | (21,015,334) |
| மோட்டார் வாகன சீர்மதிப்பீட்டு இலாபம் | - | - | - | - | - | 772,040 | (772,040) | - |
| காப்புறுதி மீதான வட்டி வருமானம் | - | - | - | - | - | 316,927 | - | 316,927 |
| AREP கருத்திட்டம | 1,560,000 | - | - | - | - | - | - | 1,560,000 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 8 (ஈரான்) | 5,566,289 | - | - | - | - | - | - | 5,566,289 |
| CAARP கருத்திட்டம் | 95,902 | - | - | - | - | - | - | 95,902 |
| IDC கருத்திட்டக் கடன் | 7 | - | - | - | - | - | - | 7 |
| கிளிநொச்சி சுன்னாகம் கடத்துகை கருத்திட்டம் | 139,994 | - | - | - | - | - | - | 139,994 |
| இலங்கைக்கு ஒளியூட்டல் கருத்திட்டம் | 1,914,000 | - | - | - | - | - | - | 1,914,000 |
| வவுனியா கிளிநொச்சி கடத்துகை கருத்திட்டம் | 1,046,052 | - | - | - | - | - | - | 1,046,052 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4 (விரிவாக்கல்) | 1,160,072 | - | - | - | - | - | - | 1,160,072 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4 (பழைய) | 1,296,666 | - | - | - | - | - | - | 1,296,666 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | - | | | | | | | |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் மீதான இலாபம் / நட்டம் | - | - | - | - | - | - | (307,977) | (307,977) |
| **2011 டிசெம்பர் 31 இல் மீதி** | **96,090,404** | **17,447,062** | **165,446** | **-** | **23,000** | **6,889,752** | **136,848,860** | **257,464,524** |
| **2012 சனவரி 01 இல் திருத்திய மீதி** | **96,090,404** | **17,447,062** | **165,446** | **-** | **23,000** | **6,889,752** | **136,848,860** | **257,464,525** |
| IFRS மீள்மதிப்பிடல் சீராக்கம் | - | - | - | - | - | - | (366,345) | (366,345) |
| ஆண்டின்போது மேற்கொண்ட சீராக்கங்கள் | - | - | - | - | - | - | 9,524 | 9,524 |
| ஆண்டுக்கான நட்டம் | - | - | - | - | - | - | (77,645,395) | (77,645,395) |
| காப்புறுதி ஒதுக்க மாற்றல் | - | - | - | - | - | 781,354 | (781,354) | - |
| காப்புறுதி நிதியம் மீதான வட்டி வருமானம் | - | - | - | - | - | 470,933 | - | 470,933 |
| ஆண்டின்போது அறவிட்ட சேதாரங்கள் | - | - | - | - | - | (56,038) | - | (56,038) |
| CAARP கருத்திட்டம் | 105,769 | - | - | - | - | - | - | 105,769 |
| AREP கருத்திட்டம் | 140,000 | - | - | - | - | - | - | 140,000 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 8 (ஈரான்) | 3,153,437 | - | - | - | - | - | - | 3,153,437 |
| IDC கருத்திட்டக் கடன் | 8 | - | - | - | - | - | - | 8 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4 (விரிவாக்கல்) | 3,064,325 | - | - | - | - | - | - | 3,064,325 |
| கிராமிய ஒளியூட்டல் கருத்திட்டம் 4 (பழையது)) | 463,364 | - | - | - | - | - | - | 463,364 |
| வவுனியா கிளிநொச்சி கடத்துகை கருத்திட்டம் | 966,970 | - | - | - | - | - | - | 966,970 |
| கிளிநொச்சி சுன்னாகம் கடத்துகை கருத்திட்டம் | 646,080 | - | - | - | - | - | - | 646,080 |
| மேற்கு ரண்அருண கருத்திட்டம் | 35,000 | - | - | - | - | - | - | 35,000 |
| கிழக்கு நவோதயா கருத்திட்டம் | 1,062,959 | - | - | - | - | - | - | 1,062,959 |
| றுகுணு உதானய கருத்திட்டம் | 160,000 | - | - | - | - | - | - | 160,000 |
| ஊவா உதானய கருத்திட்டம் | 1,396,516 | - | - | - | - | - | - | 1,396,516 |
| ரஜரட்ட நவோதயா கருத்திட்டம் | 75,000 | - | - | - | - | - | - | 75,000 |
| யாழ்ப்பாணம் மின்சார விநியோக புனருத்தாபன கருத்திட்டம் | 315,825 | - | - | - | - | - | - | 315,825 |
| மின்வலுத் துறையை வலுப்படுத்தும் ஆதார கருத்திட்டம் | 129,960 | - | - | - | - | - | - | 129,960 |
| வடக்கின் வசந்தம் | 1,757,069 | - | - | - | - | - | - | 1,757,069 |
| DSMSLP கருத்திட்டம் | 5,178 | - | - | - | - | - | - | 5,178 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | | | | | | - |
| வரையறுத்த பயன் திட்டம் மீதான இலாபம் / நட்டம் | - | - | - | - | - | - | (124,403) | (124,403) |
| **2012 டிசெம்பர் 31 இல் மீதி** | **109,567,865** | **17,447,062** | **165,446** | **-** | **23,000** | **8,086,001** | **57,940,887** | **193,230,261** |

# ஒன்றித்த காசுப் பாய்வுக் கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | குழுக்கணக்கு 2012 ரூபா | குழுக்கணக்கு 2011 ரூபா | சபை 2012 ரூபா | சபை 2011 ரூபா |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்வு வரி முன் நட்டம் | (54,509,434) | (14,971,115) | (61,447,315) | (20,185,380) |
| **சீராக்கங்கள்** | | | | |
| ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு | 21,256,910 | 18,288,543 | 21,131,465 | 16,944,263 |
| நுகர்வோர் பங்களிப்பு - ஆண்டின்போது காலத்தேய்மானம் | (2,189,202) | (2,155,369) | (2,053,541) | (1,853,318) |
| அரச மானியம் - ஆண்டின்போது காலத்தேய்மானம் | (12,391) | (12,391) | (12,391) | (12,391) |
| முதலீட்டு வருமானங்கள் | (5,664,925) | (1,507,541) | (2,401,213) | (385,887) |
| ஆதனம், பொறி, உபகரண விற்பனை இலாபம் / நட்டம் | (68,608) | (56,437) | (54,678) | (56,437) |
| நிதிச் செலவு | 6,356,122 | 4,050,956 | 6,197,563 | 3,787,193 |
| வழக்கிழந்த, பாவிக்கமுடியாத தொக்குகளுக்கான ஏற்பாடு | 172,452 | 241,069 | 135,343 | 241,069 |
| விலை முரண்களுக்கான ஏற்பாடு | 779,295 | 228,809 | 779,295 | 228,809 |
| வியாபார கடன்பட்டோர் சேதஇழப்பு ஏற்பாடு | 623,981 | 72,876 | 597,181 | 72,896 |
| ஏனைய கடன்பட்டோர் சேதஇழப்பு ஏற்பாடு | (1,214,839) | 29,255 | (1,209,009) | 29,255 |
| ஓய்வூதிய நிதியம் - இலாபத்தில் நிகர தாக்கம் | (353,781) | (145,904) | (353,781) | (145,904) |
| IFRS இன் கீழ் பெறுமானத் தேய்வு, விற்பனை சீராக்கங்கள் | (1,498,464) | | (1,498,464) | - |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் | 1,244,447 | 400,729 | 1,162,056 | 320,874 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலாபம் / நட்டம்** | **(35,078,436)** | **4,463,480** | **(39,027,489)** | **(1,014,958)** |
| தொக்குகளில் அதிகரிப்பு / குறைவு | (12,172,320) | (2,997,684) | (11,743,287) | (2,717,342) |
| வியாபார, ஏனைய வருமதிகளில் அதிகரிப்பு / குறைவு | 10,009,365 | 1,698,927 | 13,150,100 | 2,438,419 |
| வியாபார, ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு / குறைவு | (14,296,395) | 25,041,138 | (14,856,518) | 26,075,130 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்டகாசு** | **(51,537,786)** | **28,205,861** | **(52,477,194)** | **24,781,249** |
| நிதிச் செலவு செலுத்தியது | (3,567,132) | (1,489,668) | (3,408,444) | (1,225,905) |
| ஓய்வூதிய பயன் கடப்பாடு | (448,859) | (340,440) | (431,911) | (320,873) |
| வருமான வரிக் கொடுப்பனவு | (1,084,474) | (433,024) | - | (2,000,000) |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து நிகர காசு** | **(56,638,251)** | **25,942,729** | **(56,317,549)** | **21,234,471** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்வுகள்** | | | | |
| ஆதனம், பொறி, உபகரண கொள்வனவு, மூலதன புத்துருவாகும் வேலை | (89,211,205) | (63,795,772) | (88,022,279) | (62,420,017) |
| அருவச் சொத்து கொள்வனவு | 1,302 | 2,421 | | |
| கூட்டுமுயற்சிகளில் முதலீடுகள் | 37,421 | (122,264) | | (150,000) |
| காப்புறுதி ஒதுக்க நிதியங்கள் மீதான முதலீடுகள் | (405,633) | (316,927) | (405,633) | (316,927) |
| காப்புறுதி ஒதுக்க நிதியிலிருந்து கிடைத்த வட்டி | 405,633 | 316,927 | 405,633 | 316,927 |
| நடைமுறையல்லா நிதிச்சொத்துக்களில் முதலீடுகள் | 250,264 | 1,034,598 | | |
| நடைமுறை நிதிச்சொத்துக்களில் முதலீடுகள் | 25,088 | (4,342,832) | | |
| முதலீடுகளின் கொள்வனவுகள் | - | - | (25,000) | |
| வெளிநாட்டு முதலீட்டு வருமானங்கள் | 960,883 | 72,334 | | |
| முதலீட்டு வருமானங்கள் | 4,704,042 | 1,435,208 | 2,401,213 | 385,887 |
| நிலையான சொத்து விற்பனைப் பெறுவனவுகள் | 51,750 | 235,036 | 37,820 | 235,036 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (2,039,833) | (323,974) | - | - |
| **தலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசுப் பாய்வுகள்** | **(85,220,288)** | **(65,805,245)** | **(85,608,246)** | **(61,949,094)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்வுகள்** | | | | |
| மூலதனப் பங்களிப்பு | 13,400,253 | 12,778,981 | 13,400,254 | 12,778,981 |
| நுகர்வோர் பங்களிப்பு | 7,436,897 | 8,135,735 | 7,011,818 | 7,737,927 |
| முன்னுரிமைப் பங்குகள் மீட்பு | - | (7,516) | - | - |
| நுகர்வோர் வைப்பு - நிகர காசு | 729,556 | 625,949 | 737,264 | 625,949 |
| குத்தகையாளர்களுக்கான நிகர கொடுப்பனவு | (23,094) | (8,286) | 114,734 | 5,956 |
| வட்டி கொண்ட கடன்கள் - பெறுவனவு | 110,219,457 | 28,441,292 | 112,395,167 | 26,833,093 |
| வட்டிகொண்ட கடன்கள் - மீள்கொடுப்பனவு | (9,178,880) | (6,174,290) | (8,368,039) | (5,343,133) |
| பவன் தனாவி - பங்குகள் வழங்குதல் | 49,000 | 470,400 | - | - |
| நிவிது - பங்குகள் வழங்குதல் | - | 14,667 | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப் பாய்வுகள** | **122,633,189** | **44,276,932** | **125,291,198** | **42,638,773** |
| **காசும் காசுச் சமமானங்களிலும் அதிகரிப்பு / குறைவு** | **(19,225,350)** | **4,414,414** | **(16,634,597)** | **1,924,150** |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுச்சமான மீதி** | **3,402,380** | **(1,012,034)** | **(1,178,067)** | **(3,102,216)** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுச்சமான மீதி** | **(15,822,970)** | **3,402,380** | **(17,812,664)** | **(1,178,067)** |

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**1.0 கூட்டிணைப்புத் தகவல்கள்**

**1.1 பொதுத் தகவல்**

இலங்கை மின்சார சபை 1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதாகும். சபையின் தலைமை அலுவலகம் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் 50ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

**1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

**சபை:**
ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாவன மின்சார பிறப்பாக்கம், கொள்வனவு, கடத்தல், செயற்திறனான வினியோகம் மற்றும் விற்பனை ஆகியனவாகும்.

**மட். லங்கா மின்சார (தனி) கம்பனி**
ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாவன இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்து காலி, களுத்தறை, மொறட்டுவை, களனி, நுகேகொட, கோட்டே மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதன் கிளைகளினூடாக குடிமனை மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளருக்கு சில்லறை விற்பனை செய்தல்.

**மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**
கூட்டிணைவு வியாபார தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு குழுமக் கம்பனிகளில் முதலீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

**மட். லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**
புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நுரைச்சோலை அனல்மின் நிலைய பொறியில் மின்பிறப்பாக்கத்திற்காக கந்தகம் குறைவான உயர்தர நிலக்கரி வழங்குதல்

**மட். ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி**
கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன மின்சாரம் அனுப்பும் கம்பிநிரைகள் மற்றும் சட்டக நிலையங்களை நிருமானித்தல், புதுப்பிக்கக்கூடிய வலுச் செயற்திட்டங்களை நிருமானித்து, பராமரித்து, செயற்படுத்தல் மற்றும் மின் வலுவைப் பிறப்பாக்குவதற்கு அவசியமான வேலைகள் மற்றும் புதுப்பிக்கக் கூடிய வலுவை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**கூட்டு முயற்சி**
**மட். திருகோணமலை வலு கம்பனி**

கம்பனியின் முக்கிய செயற்பாடு மின்சாரம் உற்பத்தி செய்து இ.மி.சபையின் தேசிய சட்டகத்திற்கு விற்பனை செய்தல்.

**1.3 வழங்குதலுக்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி:** இலங்கை மின்சார சபையின் 2012 டிசம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2014.04.23 திகதியில் பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்தின்படி வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

**2.0 பொதுவான கொள்கைகள்**

**2.1 2012 ஜனவரி 1ந் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலங்களுக்கு நடைமுறைக்கு வரும் தயாரிப்பின் அடிப்படை மற்றும் SLAS (SLFRS மற்றும் LKAS) இன் கடைப்பிடிப்பு**

குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட, SLFRS / LKAS களை அடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக (இதன் பின்னர் SLFRS என அழைக்கப்படும்) தயாரிக்கப்பட்டுள்ளன.

2011 டிசம்பர் 31ந் திகதி முடிவுற்ற ஆண்டு அடங்கலாக அதுவரையான சகல காலங்களுக்கும் குழுமம் அதன் நிதிக்கூற்றுக்களை முன்னைய கணக்கீட்டு நியமங்களுக்கு (SLAS) அமைவாக தயாரித்தது. 2012 டிசம்பர் 31ந் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான இந்த நிதிக்கூற்றுக்களே குழுமம் இந்த நியமங்களுக்கு அமைய தயாரித்த முதலாவது நிதிக்கூற்றுத் தொடையாகும்.

சில இடைக்கால விதிவிலக்குகள் மற்றும் குறிப்பு 5 இல் வெளிக்காட்டப்பட்ட வெளிக்காட்டல்கள் தவிர, குழுமம் 2011 ஜனவரி 1ந் திகதியில் ஆரம்ப மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்ட சகல காலங்களுக்குமான SLFRS/ LKAS நிதி நிலைக் கூற்றுக்களை தயாரித்தலில் கணக்கீட்டுக் கொள்கைகளை அதே அடிப்படையில் பிரயோகித்துள்ளது.

நிதிக்கூற்றுக்கள் கீழே குறிப்பிடப்பட்ட சில சொத்துக்கள் மற்றும் பரிப்புகளின் சீர்மதிப்பீட்டில் திருத்தம் மேற்கொண்டமை தவிர வரலாற்று கிரய முறைப்படி அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

SLFRS/LKAS களுக்கு இசைவாக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளை உபயோகிக்கவேண்டி ஏற்படும். அத்துடன், கணக்கியற் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில் தமது சுயதீர்மானங்களை பிரயோகிக்க வேண்டிய தேவையை முகாமைக்கு ஏற்படுத்தும். உயர்மட்ட சுயதீர்மானங்கள் சம்மந்தப்பட்ட அல்லது சிக்கலான பகுதிகள், அல்லது எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் நிதிக்கூற்றுக்களுக்கு கணிசமானவையாக அமையும் பகுதிகள் **குறிப்பு 04** இல் வெளிக்காட்டப்பட்டு உள்ளது.

**குறிப்பு 2.6** ஆனது குழுமத்தின் 2012 டிசம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கு SLAS க்கு அமைய தயாரிக்கப்பட்ட நிதிநிலைக் கூற்றுக்களில் உபயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளிலிருந்து தன்மையிலும் தாக்கத்திலும் கணிசமான மாற்றங்கள் உள்ளடங்கலாக அறிக்கையிடப்பட்ட நிதிநிலைக் கூற்று, நிதிச்சாதனை மற்றும் காசுப்பாய்வுகள் மீதான இடைக்கால SLFRS இன் தாக்கங்களை வெளிக் காட்டுகின்றது.

**2.1.1 ஒத்திசைவுக் கூற்று:** குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக (SLASs) தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

2.1.2 **ஒன்றித்தலின் அடிப்படை:** குழுமக் கணக்குகள் இலங்கை மின்சார சபையினதும் அதன் உபகம்பனிகளான மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி (LTL), மட். லங்கா மின்சார (தனி) கம்பனி (LECO), மட். லங்கா நிலக்கரி (தனி) கம்பனி (LCC), மட் இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனி மற்றும் மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனியினதும் (LTL), மட். லங்கா மின்சார (தனி) கம்பனியினதும் (LECO) உப கம்பனிகள் ஆகியவற்றை கொண்டுள்ளது.

மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனியின் உபகம்பனிகள் மட். பவான் தனாவி (தனி) எனும் கம்பனியின் பகுதி உரிமைகொண்டுள்ள உபகம்பனிகளாக கூட்டிணைக்கப் பட்டுள்ளன. அத்துடன், கொழும்பு 2 பார்க் வீதியில் இல. 67 இல் பதிவு அலுவலகத்தை கொண்டும் இலங்கையை வதிவு நாடாகக்கொண்டும் கூட்டிணைத்த பரிப்பு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனிகளான மட். LTL கல்வனைசர்ஸ் (தனி) கம்பனி, மட். LTL டிரான்ஸ்போமர்ஸ் (தனி) கம்பனி, மட் லக்தனாவி கம்பனி, மட். நிவிது (தனி) கம்பனி, மட். LTL எனர்ஜி (தனி) கம்பனி, மட். நிவிது அசுபினியல்ல (தனி) கம்பனி மற்றும் மட். லங்கா இன்டஸ்ரியல் புறடக்ற்ஸ் (தனி) கம்பனி ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மட். லக்தனாவி கம்பனியின் முழு உரிமைகொண்ட உபகம்பனியான மட். பிறைட் இன்ரனாஷனல் பவர் (தனி) கம்பனி இல. 8, பயனியர் பிரிவு 1, சிங்கப்பூர் 628420 எனும் முகவரியில் பதிவு அலுவலகத்தை கொண்டுளது. மட். லக்தனாவி கம்பனியும் மட். லங்கா இன்டஸ்ரியல் புறடக்ற்ஸ் (தனி) கம்பனியும் அவற்றின் பிரதான வியாபார இடத்தை சப்புகஸ்கந்த, லின்டெல் இன்டஸ்ரியல் எஸ்டேற்றிலும் மட் LTL எனர்ஜி (தனி) கம்பனியும் மட் நிவிது (தனி) கம்பனியும் பலாங்கொட, பெலிஹில் ஒயவிலும் மட். நிவிது அசுபினியல்ல (தனி) கம்பனி அரநாயக்கவிலும் கொண்டுள்ளன.

மட் ஹெலதனாவி கம்பனியானது மட் லக்தனாவி மற்றும் மட் ஹேமாஸ் பவர் (தனி) கம்பனிகளுக்கு இடையில் கூட்டுத் தொழில் முயற்சியாகும். இந்தக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 01, பிறிஸ்டல் வீதி இல 36 இலும், அதன் பிரதான வியாபார இடம் புத்தளம், ஹெல எஸ்டேற்றிலும் அமைந்துள்ளது.

மட். லங்கா மின்சார (தனி) கம்பனியின் (LECO) உபகம்பனிகள் மட். LECO புறஜக்ட்ஸ் (தனி) கம்பனியும் மட். அன்ரி LECO மீட்டரிங் (தனி) கம்பனியுமாகும். இக்கம்பனிகளின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 03, காலி வீதி, இல 411 இல் அமைந்துள்ள E.H குரே கட்டடத்தில் உள்ளது.

மட் லங்கா நிலக்கரி (தனி) கம்பனியின் பதிவு செய்த அலுவலகம் தெஹிவளை, துட்டுகெமுனு வீதி, இல 51/3 இல் அமைந்துள்ளது.

மட். இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் A காடினர் மாவத்தை, இல. 50 இலும், அதன் பிரதான வியாபார இடம் கொழும்பு 7, பௌத்தாலோக மாவத்தை, BMICH இல் கட்டம் 2 இன் 126 ஆம் மற்றும் 128 ஆம் அறைகளிலும் அமைந்துள்ளன.

மட் திருகோணமலை பவர் கம்பனியானது இலங்கை மின்சார சபைக்கும் மட் இந்தியா NTPC கம்பனிக்கும் இடையிலான கூட்டுத் தொழில் முயற்சியாகும். இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கை, கிருலப்பனை ஹைலெவல் வீதி 240 இலக்க கட்டடத்தின் 3ஆம் மாடியில் அமைந்துள்ளது.

இலங்கை மின்சார சபை, LECO, மட். லங்கா நிலக்கரி (தனி) கம்பனி மற்றும் மட். இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனி ஆகியவை 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும், மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி மற்றும் மட் திருகோணமலை பவர் கம்பனி 31 மார்ச்சில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும் கொண்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட கம்பனிகளின் கணக்காய்வார் சான்றுபடுத்திய நிதிக்கூற்றுக்கள் குழுமம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

உபகம்பனிகளின் மொத்த இலாப, நட்டம் ஒன்றித்த வருமானக் கூற்றில் உட்படுத்தப்பட்டு உள்ளதுடன், வெளிவாரி பங்குதாரர்கட்கு உரிய வரிக்குப் பிந்திய இலாப, நட்டமானது இலங்கை மின்சார சபையின் பங்குதாரர்கட்கு உரிய இலாப, நட்டத்தை கணித்தலில் “சிறுபான்மையினர் பாத்தியதை” தலைப்பின் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபை மற்றும் அதன் உபகம்பனிகளின் சகல சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் ஒன்றித்த ஐந்தொகையில் உட்படுத்தப்பட்டுள்ளன. உப கம்பனிகளின் நிகரச் சொத்துக்களில் வெளிவாரி பங்குதாரர்களின் நாட்டம் ஒன்றித்த ஐந்தொகையில் சிறுபான்மையினர் பாத்தியதையின் கீழ் வேறாக காட்டுப்பட்டுள்ளது. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழுமக் கம்பனிகளுக்கு இடையிலான ஊடுசெயல்கள் மற்றும் மீதிகளும் குழுமக் கம்பனிகளுக்கு இடையேயான ஊடு செயல்களினால் விளையும் தேறாத இலாபங்களும் நீக்கப்பட்டுள்ளன.

### 2.2 கணிசமான கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு

### 2.2.1 கூட்டாகக் கட்டுப்படுத்தும் உரிமம்

**மட் LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

மட் ஹேமாஸ் பவர் கம்பனிக்கும் மட் லக்தனாவி கம்பனிக்கும் இடையில் கூட்டுக் கட்டுப்பாட்டு உரிமமான மட் ஹெலதனாவி கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கூட்டாக கட்டுப்படுத்தப்படும் உரிமத்தின் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளில் மட் லக்தனாவி கம்பனி கொண்டுள்ள பங்குகள் அடிப்படையில் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ளன. (விகிதாசார ஒன்றித்தல்).

**இலங்கை மின்சார சபை**

இலங்கை மின்சார சபைக்கும் NTPC க்கும் இடையில் கூட்டுக் கட்டுப்பாட்டு உரிமமான மட் திருகோணமலை பவர் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

### 2.2.2 அந்நிய நாணய ஊடுசெயல்கள்

**a). தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்**

நிதிக்கூற்றுக்களுள் உட்படுத்தப்பட்டுள்ள உருப்படிகள் உரிமம் தொழிற்படும் முதன்மைப் பொருளியற் சூழலின் நாணத்தை (தொழிற்பாட்டு நாணயம்) உபயோகித்து அளவிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் உரிமத் தொழிற்பாட்டு, முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டன.

**b). ஊடுசெயல்களும் மீதிகளும்**

அந்நிய நாணய ஊடுசெயல்களை ஆரம்பத்தில் ஊடுசெயற் திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதங்களை உபயோகித்து சபை பதிவு செய்யும். அத்தகைய ஊடுசெயல்களின் தீர்ப்பனவினால் மற்றும் அந்நிய நாணயங்களில் குறிப்பிட்ட சொத்துக்கள், பரிப்புக்களை ஆண்டு இறுதி நாணயமாற்று விகிதங்களில் நாணயமாற்றம் செய்வதனால் விளையும் நயங்கள் அல்லது இழப்புக்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபையின் பிரிவு 42 உபபிரிவு 6 க்கு அமைவாக அந்நிய நாணய கடன் மற்றும் வட்டி தொடர்பு நாணயமாற்று ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் நயம் அல்லது இழப்புக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உரியதாகையினால் இலங்கை மின்சார சபையானது அவற்றை கணக்கிற் கொள்வதில்லை. சென்மதியாகவுள்ள கடன் நிலுவைகள் CEB யினால் கடன் பெறப்பட்டபோது இணங்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

**c). அந்நிய நாணய தொழிற்பாடுகள்**

அந்நிய தொழிற்பாடான வெளிநாட்டிலுள்ள உபகம்பனிகளின் நிதிநிலைக் கூற்று மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று ஆகியன குழும முன்னிலைப்படுத்தல் நாணயத்திற்கு கீழே கூறப்பட்டவாறு நாணயமாற்றம் செய்யப்படும்:

- சொத்துக்களும் பரிப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய நாணய மாற்று விகிதத்தில்;
- வருமானமும் செலவுகளும் அந்தக் காலத்தின் சராசரி நாணய மாற்று விகிதத்தில். இந்தச் சராசரி விகிதம் ஊடுசெயல் நடந்த திகதியில் நிலவிய விகிதத்திற்கு நியாயமான அண்ணளவாக்கமாக இல்லாதவிடத்து, வருமானமும் செலவுகளும் ஊடுசெயற் திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில்.
- நாணயமாற்றின் காரணமாக ஏற்படும் நாணயமாற்று வித்தியாசம் ஒன்றித்தலுக்காக பிற முற்றடக்க வருமான கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.2.3 வரியீடு

**a). நடப்பு வரிகள்**

காலத்திற்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளது. நடப்புக்கால அல்லது முந்தியகால தற்போதைய வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட அல்லது அவருக்கு செலுத்தவேண்டிய தொகைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. தொகைகளை கணிக்க உபயோகித்த வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் கம்பனி தொழிற்பட்டு வரிவிதி வருமானத்தை பிறப்பிக்கும் நாட்டில் அறிக்கையிடற் திகதியில் சட்டமாக்கியுள்ள அல்லது கிட்டத்தட்ட சட்டமாக்கிய சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

பிற முற்றடக்க வருமானமாக ஏற்பிசைவு செய்த வருமான அல்லது செலவு உருப்படியொன்று தொடர்புபட்ட மாற்றங்கள் நேரடியாக பிற முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதைத் தவிர, வரிகள் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

வருமான வரி ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமான மற்றும் செலவின மூலகங்களின் அடிப்படையில் அமைந்தும், 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய கணிப்பிடப்பட்டுள்ளன.

**இலங்கை மின்சார சபை**

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய இலங்கை மின்சார சபை அதன் சகல மூலங்களிலிருந்தும் பெறும் வருமானத்திற்கு 2011 ஏப்ரல் 1ந் திகதியில் ஆரம்பிக்கும் வரிமதிப்பாண்டிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு வருமான வரி விலக்குப் பெறும். அதன் பிரகாரம் வரி விலக்குக் காலம் வரி மதிப்பாண்டு 2015/16 உடன் முடிவடைவதுடன் அதன் பின்னர் இலாபம் 28% வருமான வரிக்கு உட்படும்.

**b). பிற்போடப்பட்ட வருமான வரி**

பிற்போட்ட வருமான வரி சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையில் ஏற்படும் சகல தற்காலிக வித்தியாசங்கள் மீதும் பரிப்பு முறையை உபயோகித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற்போடப்பட்ட வருமானவரிப் பரிப்புக்கள், வியாபார இணைப்பாக அமையாத ஊடுசெயலொன்றில் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காதபோது, சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் ஆரம்ப ஏற்பிசைவின்போது ஏற்படும் பிற்போட்ட வருமான வரிப் பரிப்பு நீங்கலாக சகல தற்காலிக வரிவிதி வித்தியாசங்களுக்கும் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.
வியாபார இணைப்பாக இல்லாததும் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காததுமான ஊடு செயலில் சொத்து அல்லது பரிப்பின் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து ஏற்படாத வரை, பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தா வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

வருமானவரிச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துகளின் முன்கொணரற் தொகைகள் மீளாய்வு செய்யப் படுவதுடன், பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களை முழுமையாக அல்லது பகுதியாக பயன்படுத்துவதற்கு போதிய வரிவிதி இலாபம் தொடர்ந்து கிடைக்காது போகும் அளவுக்கு அவை குறைக்கப்படும்.

ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் ஏற்பிசைவு செய்யாத பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துகளும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களை மீட்பதற்கு போதிய வரிவிதி இலாபம் கிடைக்கும் அளவுக்கு அவை ஏற்பிசைவு செய்யப்படும்.

பிற்போட்ட வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் அறிக்கைத் திகதியில் சட்டமாக்கப்பட்டு அல்லது கணிசமாக சட்டமாக்கப்பட்டு இருந்த வரி விகிதங்களின் (மற்றும் வரிச் சட்டங்களின்) அடிப்படையில் சொத்து தேறப்பட்ட அல்லது பரிப்பு தீர்க்கப்பட்ட ஆண்டில் பிரயோகிக்க எதிர்பார்க்கும் வரிவிகிதங்களில் அளவிடப்பட்டன. ஊடுசெயல் தொடர்பாக ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படிகளின் பிற்போடப்பட்ட வரி பிற முற்றடக்க வருமானத்தில் அல்லது உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும். நடப்புக்கால வரிச் சொத்துக்களை நடப்பு வரிப் பரிப்புக்களுக்கு எதிராக எதிரீடு செய்ய சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் உரிமை இருந்து பிற்போடப்படும் வரிகள் ஒரே வரிவிதி உரிமத்திற்கும் ஒரே வரியீட்டு அதிகார அமைப்பிற்கும் தொடர்புபட்டதாயின், பிற் போட்ட வரிச் சொத்துக்களும் பிற்போட்ட வரிப் பரிப்புகளும் எதிரீடு செய்யப்படும்.

### 2.2.4 கடன்படு கிரயங்கள்

கடன்படு கிரயங்கள் நிதியின் கடன்பாடு தொடர்பில் சபை இறுக்கும் வட்டி மற்றும் கிரயங்களை கொண்டிருக்கும். கருதப்படும் உபயோகம் அல்லது விற்பனைக்கு தயாராக்க கணிசமான காலம் தேவைப்படும் சொத்துக்களான தகைமை பெறும் சொத்துக்களின் கொள்வனவு, நிருமானம் அல்லது உற்பத்தியுடன் தொடர்புபட்ட பொதுவான மற்றும் குறிப்பான கடன்படுகைக் கிரயங்கள் அந்தச் சொத்துக்கள் கருதும் உபயோகம் அல்லது விற்பனைக்காக கணிசமான அளவில் தயார் படுத்தப்படும் வரையில் அந்தச் சொத்துக்களின் கிரயத்துடன் கூட்டப்படும். ஏனைய சகல கடன்படுகைக் கிரயங்களும் இறுக்கப்படும் காலத்திலேயே செலவாகக் கொள்ளப்படும்

### 2.2.5 தொக்குகள்

தொக்குகள் வழக்கிழப்பு மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் தொக்குகளுக்காக உரிய கழிவுகள் மேற்கொண்ட பின்னர் கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதி இரண்டிலும் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். நிகர தேறுகைப் பெறுமதி வழமையான வியாபார நடவடிக்கையின்போது விறகப்படக்கூடிய பெறுமதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் விற்பனை செய்யவதற்கு அவசிய கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும். தொக்கினை தற்போதைய அமைவிடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு இறுக்கப்படும் கிரயங்கள் கீழ்வருமாறு கணக்கிடப்படும்:

**மட். இலங்கை மின்சாரக் கம்பனி**
**தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் -** நிறையேற்று சராசரி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில்
செல்வழித் தொக்கும் ஏனையவையும் - உண்மைக் கிரயத்தில்.

**மட் LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**
மூலப் பொருட்கள் - முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில்.
முற்றுப்பெற்ற பொருட்களும் புத்துருவாகும் வேலையும் - நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான விகிதத்தை அடக்கிய கிரயத்தில்.

**இலங்கை மின்சார சபை**
அனேகமாக உபயோகிக்கப்படுவதுடன் வருடாந்த விலைப் பட்டியலில் நிரற்படுத்தப்படும் தொக்குகள் நியம விலைகளிலும் நுகர்வுப்பண்டம் மற்றும் உதிரிப் பாகங்கள் போன்ற ஏனைய தொக்குகள் கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியிலும் அளவிடப்படும். எனினும், ஊநுடீ நியம விலைகளில் மதிப்பிடப்பட்ட தொக்குகளை கிரயப் பெறுமதிக்கு குறைப்பதற்கு ஏதுவாக தேறாத இலாபங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

### 2.2.6 காசும் காசுச் சமானங்களும்

காசும் காசுச் சமானங்களும் காசுக் கையிருப்பு, கேள்வி வைப்புக்கள் மற்றும் பெறுமதி மாற்றத்திற்கு கணிசமான இடரை கொண்டிராததும் தெரிந்த காசுப் பெறுமதிக்கு தயார் நிலையில் மாற்றக்கூடியதுமான உயர்ந்த திரவ நிலையை கொண்ட குறுங்கால முதலீடுகள் என பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளது. குழுமத்தின் காசுப்பாய்வுத் தேவைகளுக்காக காசும் காசுப்பாய்வுகளும் காசுக்கையிருப்பு மற்றும் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றை கழித்த வங்கி வைப்புகள் ஆகியவற்றை கொண்டுள்ளது. குறுகிய முதிர்வு காலத்தை கொண்ட (அதாவது, 3 மாதம் அல்லது அதற்குக் குறைவான) முதலீடுகளும் காசுச் சமானங்களாக கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.7 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**a)** **கிரயமும் மதிப்பீடும்:** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரள் தேய்மானம் மற்றும் திரள் சேத இழப்பு (ஏதுமிருப்பின்) அவற்றை கழித்த தொகையில் காட்டப்பட்டு உள்ளன. அத்தகைய கிரயம் பிரதியீட்டுக் கூறுகளின் கிரயம், ஆதனம், பொறி மற்றும் உபகரண உதிரிப் பாகங்களின் கிரயம் மற்றும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்படும் பட்சத்தில், நீண்டகால நிருமான செயற்திட்டங்களின் கடன் படுகைக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒருதடவை ஆதனம்,பொறி மற்றும் உபகரண கணிசமான பகுதிகள் பிரதியீடு செய்யவேண்டி இருப்பின், குழுமம் பிரதியீடுசெய்யும்

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

பகுதியின் நிகர ஏட்டுப்பெறுமதியை ஏற்பிசைவு விலக்கல் செய்வதுடன், புதிய பகுதியை அதன் தொடர்புடைய பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்பிசைவு செய்யும். அவ்வாறே, பாரிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும்போது அதன் கிரயம், ஏற்பிசைவு நிபந்தனைகளை திருப்திசெய்தால் ஆதனம், பொறி மற்றும் உபகரண முன்கொணரற் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்படும்போது ஏற்படும் மீள்மதிப்பீட்டு மிகை, அந்தச் சொத்தின் முன்னர் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட வீழ்ச்சியை எதிர்ப்பதிவு செய்யும் அளவு நீங்கலாக பிற முற்றடக்க வருமானம் மற்றும் திரள் உரிமையாண்மையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், அச் சந்தர்ப்பத்தில், அந்த அதிகரிப்பானது வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியானது, அதே சொத்திற்காக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ள மிகையினை எதிரீடு செய்யும் அளவு நீங்கலாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

மீள்மதிப்பீட்டுத் திகதியில் திரள்தேய்மானம் சொத்தின் மொத்த முன்கொணரற் தொகைக்கு எதிராக நீக்கப்படுவதுடன், நிகரத் தொகை சொத்தின் மீள்மதிப்பீட்டுத் தொகையாக திருத்திக் கூறப்படும். விற்பனை செய்யப்படும்போது, குறித்த சொத்துடன் தொடர்புபட்ட மீள்மதிப்பு ஒதுக்கம் எதுவுமிருப்பின், அது கைக் கொள் இலாபத்திற்கு மாற்றப்படும்.

**b) மூலதன புத்துருவாகும் வேலைகள்**

மூலதன புத்துருவாகும் வேலை கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இது நீண்டகால மூலதன செயற்திட்டமொன்றின் நிருமானத்தில் நேரடியாக உட்படுத்தும் மூலதன தன்மைகொண்ட செலவுகள் ஆகும். மூலதனத் தன்மை கொண்ட செலவுகள் செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டு தொடர்பான சொத்துக்கள் பயன்பாட்டுக்கு கிடைக்கும் வரையில் மூலதன புத்துருவாகும் வேலையாக கணக்கிற் கொள்ளப்படும்.

**c) ஏற்பிசைவு விலக்கல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்று விற்பனை செய்யப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது விற்பனையிலிருந்து எதிர்கால பொருளியற் பயன்கள் எதிர்பார்க்கப்படாத போது அது ஏற்பிசைவு விலக்கப்படும். சொத்தின் ஏற்பிசைவு விலக்கலின்போது ஏற்படும் எந்தவொரு நயம் அல்லது இழப்பும் (சொத்தின் நிகர விற்பனைப் பெறுமதி மற்றும் முன்கொணரற் பெறுமதிக்கு இடையில் வித்தியாசம்) சொத்து ஏற்பிசைவு விலக்கிய காலத்தில் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

**d) புனர்நிர்மான கிரயம்**

ஆரம்பத்தில் மதிப்பிட்ட தொழிற்பாட்டு நியமத்திலிருந்து எதிர் பார்க்கும் எதிர்கால பொருளியற் பயன்களை புனர்நிர்மானம் செய்தலில் அல்லது பராமரிப்பதில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு இறுக்கப்படும் திருத்த அல்லது பராமரிப்பு செலவுகள் அவை இறுக்கப்படும்போதே செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**e) தேய்மானம்**

இறையிலி காணி தவிர, சொத்து பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது சொத்தின் ஆயுட்காலமீறாக நேர்கோட்டு முறையில் தேய்மானம் கணிக்கப்படும். குத்தகைக் காணியில் கட்டப்பட்ட கட்டடங்கள் அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் குத்தகைக் காலம் இரண்டிலும் குறைந்த காலமீறாக தேய்மானம் செய்யப்படும்.

சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கீழ்வருமாறு மதிப்பிடப்படும்:

| | |
|---|---|
| இலங்கை மின்சார சபை | |
| இறையிலி கட்டடம் மற்றும் குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| சிவில் வேலைகள்: | |
| வழிந்தோடும் கான்கள் மற்றும் அணைகள் | 100 ஆண்டுகள் |
| உருக்கு நீர்க்குழாய்கள் மற்றும் அது சார்ந்த தொக்குகள் | 40 ஆண்டுகள் |
| உபநிலையமும் ஆளித்தொகுதியும் | 35 ஆண்டுகள் |
| மின் பிறப்பாக்க பொறிகள்: | |
| பொறி (நீர்மின்) உட்பட மின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பொறி (அனல்மின்) உட்பட மின் நிலையம் | 25 ஆண்டுகள் |
| பொறி (டீசல்) உட்பட மின் நிலையம் | 15 ஆண்டுகள் |
| பொறி (வாயுஅமுக்கி) உட்பட மின் நிலையம் | 12 ஆண்டுகள் |
| மின்கடத்தி கம்பி வரிகள்: | |
| 220Kv, 132Kv மற்றும் 66Kv | 35 ஆண்டுகள் |
| வினியோகக் கம்பி வரிகள்: | |
| HT நிலக்கீழ் - 33 | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 132 | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 11 | 40 ஆண்டுகள் |
| HT தலைக்கு மேலாக | 35 ஆண்டுகள் |
| LT நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| LT தலைக்கு மேலாக | 35 ஆண்டுகள் |
| LT ஊட்டும் தூண்கள் | 35 ஆண்டுகள் |
| நுகர்வோர் உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| HT ஆளித்தொகுதி | 35 ஆண்டுகள் |
| முதன்மை, கட்டக உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பிரதான சேவை வழங்கி | 35 ஆண்டுகள் |
| SCADA மத்திய நிலையம் மற்றும் தொடர்பாடல் உபகரணம் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் | 07 ஆண்டுகள் |
| மோட்டார் வள்ளங்கள் | 07 ஆண்டுகள் |
| எந்திரங்களும் ஆயுதங்களும் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| தளபாட இணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| **மட் LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி** | |
| கட்டடங்கள் | 25 - 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் எந்திரம் | 08 - 15 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அகத் தொடர்பாடல் உபகரணம் | 10 ஆண்டுகள் |
| தீயணைப்பு உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 10 ஆண்டுகள் |

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 03 – 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள | 04 ஆண்டுகள் |
| வெப்ப மீள்பெறுகை அலகு | 06 ஆண்டுகள் |

தொழிற்பாட்டு, பராமரிப்பு உதிரிப்பாகம் உண்மைப் பாவனை

**மட் லங்கா மின்சார (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| குத்தகைக் காணி | குத்தகைக் காலம் வரை |
| உட்கட்டமைப்பு வழங்குதல்: | |
| உள்நாட்டு அதிகார சபை மற்றும் CEB இடமிருந்துபெற்றுக்கொண்ட உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வரிகள் மற்றும் சேவைக் கம்பி வரிகள் | 10 ஆண்டுகள் |
| LECO நிருமானித்த உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வரிகள் மற்றும் சேவைக் கம்பி வரிகள் | 20–25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 07 ஆண்டுகள் |
| கணனிகள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 07 ஆண்டுகள் |
| பொறியும் எந்திரமும் | 04 ஆண்டுகள் |

**மட் லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணங்கள் | 04 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| கணனிகள் | 04 ஆண்டுகள் |

**மட் திருகோணமலை பவர் கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணம் | 05 ஆண்டுகள் |

### 2.2.8 குத்தகைகள்

**a)** **நிதிக் குத்தகைகள்:** குத்தகைக்கு விடப்படுகின்ற உருப்படியின் சொத்துரிமை தொடர்புபட்ட சகல இடர் மற்றும் பயன்களின் கணிசமான அளவை குத்தகை பெறுனனுக்கு மாற்றுகின்ற நிதிக் குத்தகைகள், குத்தகைக் கால ஆரம்பத்தில் அந்த ஆதனத்தின் சீர்மதிப்பில், அல்லது குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் இற்றைப் பெறுமதி குறைவாயின் அந்த மதிப்பில் மூலதனப்படுத்தப் படும். குத்தகைக் கொடுப்பனவுகள், பரிப்பின் நிலுவையிலுள்ள மீதியில் மாறாத வட்டி விகிதத்தை அடைவதற்கு ஏதுவாக நிதிக் குத்தகை அறவீடுகள் மற்றும் குத்தகைப் பரிப்பில் குறைப்பு ஆகிய வற்றிற்கு இடையே பகிரப்படும். நிதி அறவீடு வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்படும். மூலதனப்படுத்திய குத்தகைச் சொத்தானது, குத்திகைக் கால முடிவில் உரிமம் அந்தச் சொத்தின் உரிமையை பெறுவதற்கான நியாயபூர்வ நிட்சயமான தன்மை இல்லாதபோது, அந்தச் சொத்தின் மதிப்பிட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் குத்தகைக் காலம் இரண்டிலும் எது குறுகியதோ அந்தக் காலம் ஈறாக தேய்மானம் செய்யும். தேய்மானத்தகு குத்தகைச் சொத்தின் தேய்மானக் கொள்கை 2.4.4 (e) யில் குறிப்பிட்ட உரிமை கொண்ட தேய்மானத்தகு சொத்துக்களின் கொள்கைக்கு இசைவானதாகும்.

**b)** **தொழிற்பாட்டு குத்தகைகள்:** தொழிற்பாட்டு குத்தகை கொடுப்பனவு குத்தகைக் காலமீறாக நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டுச் செலவொன்றாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.2.9** **அருவச் சொத்துக்கள்:** தனியாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப ஏற்பிசைவின்போது கிரயத்தில் அளவிடப்படும். வியாபார இணைப்பு ஒன்றின்போது கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயம் கொள்வனவுத் திகதியில் அவற்றின் சீர்மதிப்பு ஆகும். ஆரம்ப ஏற்பிசைவை தொடர்ந்து அருவச் சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரள் காலத்தேய்மானம் மற்றும் திரள் சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் முன்கொணரப்படும். அகத்தே உருவாக்கப்படும், மூலதனப்படுத்திய அபிவிருத்திச் செவுகள் தவிர்ந்த, அருவச் சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாது இறுக்கப்பட்ட ஆண்டில் செலவாகக் கொள்ளப்படும். அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முடிவுள்ளதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படும்.

முடிவுள்ள ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலமீறாக காலத்தேய்மானம் செய்யப்படுவதுடன் அவை சேத இழப்பிற்கு ஆளாகியமைக்கான காட்டிகள் இருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் சேத இழப்பிற்காக மதிப்பிடப்படும். அருவச் சொத்து ஒன்றிற்கான காலத்தேய்மானக் காலமும், முறையும் குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடற்கால முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் அடங்கிய எதிர்கால பொருளியற் பயன்களின் எதிர்பார்க்கும் நுகர்வு முறையில் மாற்றங்கள், ஏற்றவாறு காலத்தேய்மானக் காலம் அல்லது முறையை மாற்றி கணக்கில் கொள்ளப்படுவதடன், அவை கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகக் கொள்ளப்படும். முடிவுக் காலத்தை கொண்ட அருவச் சொத்துக்களின் காலத்தேய்மான செலவுகள் அருவச் சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இசைய வருமானக் கூற்றில் செலவாக வகைப்படுத்தப்படும்.

முடிவற்ற பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் காலத்தேய்மானம் செய்யப்படுவதில்லை. அவை தனியாகவோ அல்லது காசு பிறப்பாக்க அலகு மட்டத்திலோ ஆண்டுதோறும் சேதஇழப்புச் சோதனைக்கு ஆளாகும். முடிவற்ற ஆயுட்கால மதிப்பீடு முடிவற்ற ஆயுட்காலம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்பதனை உறுதி செய்துகொள்வதற்கு ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு உறுதிசெய்ய முடியாதபோது, பயன்தரு ஆயுட் காலத்தின் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலத்திற்கான மாற்றம் பொருத்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அருவச் சொத்தொன்றின் ஏற்பிசைவு விலக்கத்தால் ஏற்படும் நயம் அல்லது இழப்பு அதன் நிகர விற்பனைப் பெறுவனவுக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணித்து சொத்து ஏற்பிசைவு விலக்கப்படும்போது வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

### 2.2.10 நிதிச் சாதனங்கள் - ஆரம்ப ஏற்பிசைவும் பின்னைய அளவீடும்

#### 2.2.10.1 நிதிச் சொத்துக்கள்

**a)** **ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்:** LKAS-39 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதிச்சொத்துக்கள் பொருத்தமான வகையிலும் ஆரம்ப ஏற்பிசைவின்போது தீர்மானிக்கும் வகைப் படுத்தலின் கீழும் இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதான நிதிச் சொத்துக்களாகவோ, கடன் மற்றும் வருமதிகளாகவோ, முதிர்வு வரை வைத்திருக்கும் முதலீடுகளாகவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களாகவோ வகைப்படுத்தப்படும். இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதாக பதிவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த சகல நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் சீர்மதிப்புடன் ஊடுசெயற் கிரயம் கூட்டப்பட்ட தொகையில் அளவிடப்படும். நிதிச் சொத்துக்கள் காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள், வியாபார மற்றும் பிற வருமதிகள், கடன்கள் மற்றும் விலைகுறிப்பிட்ட மற்றும் விலை குறிப்பிடாத முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும்

**b)** **பின்னைய அளவீடு:** நிதிச் சொத்துக்களின் பின்னைய அளவீடு கீழ்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பு நிதிச் சொத்துக்கள் இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதான நிதிச் சொத்துக்கள் வியாபாரத்திற்காக வைத்திருக்கும் நிதிச் சொத்துக்களையும் ஆரம்ப வகைப்படுத்தலின்போது இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்களையும் அடக்கும். நிதிச் சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்படுவது, அவை கிட்டிய எதிர் காலத்தில் விற்பனை செய்யும் அல்லது விற்பனை செய்து பின் மீளக் கொள்வனவு செய்யும் நோக்கில் கொள்வனவு செய்யப்படும்போதாகும். இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பு நிதிச் சொத்துக்கள் நிதிநிலைக்கூற்றில் அவற்றின் சீர்மதிப்பில் முன்கொண்டு செல்லப்படுவதுடன், சீர்மதிப்பில் நிகர மாற்றம் முற்றடக்க வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதான நிதிச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் பங்கிலாப வருமானம் அதன் கொடுப்பனவை பெறுவதற்கான குழுமத்தின் உரிமை உறுதிப் படுத்தப்படும்போது முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**கடன்களும் வருமதிகளும்** கடன்கள் மற்றும் வருமதிகளாவன, செயற்திறனான சந்தை ஒன்றில் விலை குறிப்பிடப்படாததும், நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய கொடுப்பனவு களைக் கொண்டதுமான உய்தறிசாதனம் அல்லாத நிதிச்சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் விளைவு வட்டி விகித முறையை உபயோகித்து கணிக்கப்படும் காலத் தேய்மானம் செய்த கிரயத்திலிருந்து சேத இழப்பை கழித்த தொகையில் அளவிடப்படும். காலத்தேய்மானம் செய்த கிரயக் கணிப்பீட்டில் கொள்வனவின்போது கழிவு அல்லது வட்டமும் விளைவு வட்டி விகிதத்தின் ஒன்றித்த பகுதியான கட்டணங்கள் மற்றும் கிரயங்களும் கணக்கிற் கொள்ளப்படும். விளைவு வட்டி விகித காலத்தேய்மானம் வருமானக்கூற்றில் நிதிசார் வருமானமாக உட்படுத்தப்படும். காலத்தேய்மானத்தால் ஏழும் இழப்புக்கள் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிசார் முதலீடுகள்**

விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதிசார் முதலீடுகள் உரிமை யாண்மை மற்றும் கடன் காப்பாவணங்களை உள்ளடக்கும். விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிசார் முதலீடுகளாக வகைப்படுத்துபவை வியாபாரத்திற்காக வைத்திருப்பவையாக அல்லது இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பினதாக வகைப் படுத்தப்படாதவை ஆகும். இந்த வகைப்படுத்தலின் கீழ் கடன் காப்பாவணங்கள் வரையறையற்ற காலமீறாக வைத்திருக்கும் நோக்கமுடையவையும், திரவத்தன்மை தேவையின் அல்லது சந்தை நிலைவரத்தில் மாற்றங்களின் காரணமாக விற்பனை செய்யப்படக் கூடியவையுமாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் விற்பனைக்கு கிடைக்கப்பெறக் கூடிய நிதிசார் முதலீடுகள் சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், முதலீடு ஏற்பிசைவு விலக்கப்படும் வரையில் தேறாத நயம் இல்லது இழப்பு விற்பனைக்கு கிடைக்கப்பெறும் முதலீட்டு ஒதுக்க கணக்கில் பிற முற்றடக்க வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு விலக்கப்படும்போது, திரள் நட்டம் விற்பனைக்கு கிடைக்கும் முதலீட்டு ஒதுக்க கணக்கிலிருந்து நீக்கப்பட்டு, வருமானக் கூற்றில் நிதிக்கிரயத்தின் கீழ் மீள வகைப்படுத்தப்படும். விற்பனைக்கு கிடைக்கப்பெறும் கடன் காப்புப் பத்திரங்கள் மீதான வட்டி வருமானமானது விளைவு வட்டி முறையினை உபயோகித்து கணிக்கப்பட்டு இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

குழுமம் விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களை அண்மைக் காலத்தில் விற்பனை செய்வதற்கான இயலுமை மற்றும் எண்ணம் இன்னமும் உள்ளதா என்பதை தீர்மானிக்க அவற்றை மதிப்பாய்வு செய்யும். செயற்திறனற்ற சந்தை அல்லது அவ்வாறு செய்வதற்கான முகாமையின் எண்ணம் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் கணிசமாக மாற்றமடைதல் காரணமாக குழுமம் இவற்றை விற்கமுடியாதபோது, குழுமம் அரிதான சந்தர்ப்பங்களில் இவற்றை மீள்வகைப்படுத்த தேர்வு செய்யலாம். நிதிச் சொத்துக்கள் கடன் மற்றும் வருமதிகளின் வரைவிலக்கணத்தை நிறைவு செய்வதுடன் குழுமம் அவற்றை எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் அல்லது முதிர்வுகாலம் வரை வைத்திருப்பதற்கு இயலுமை மற்றும் நோக்கத்தை கொண்டு இருக்கும்போது கடன் மற்றும் வருமதிகளுக்கான மீள்வகைப் படுத்தல் அனுமதிக்கப்படும். முதிர்வு வரை வைத்திருக்கும் சொத்துக்களுக்கு மீள்வகைப்படுத்துதல், நிதிச்சொத்துக்களை அவ்வாறு வைத்திருக்கும் இயலுமை மற்றும் நோக்கத்தினை உரிமம் கொண்டுள்ளபோது மாத்திரம் அனுமதிக்கப்படும்.

நிதிச் சொத்தொன்றை விற்பனைக்கு கிடைக்கும் வகைக்கு வெளியாக மீள்வகைப்படுத்துவதற்கு அச் சொத்து தொடர்பாக முன்னர் உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்த எதாவது நயம் அல்லது இழப்பு இருப்பின் அவற்றை விளைவு வட்டி விகிதத்தை உபயோகித்து எஞ்சிய ஆயுட்காலமீறாக இலாப, நட்டத்தில் காலத்தேய்மானம் செய்யப்படும். புதிய காலத்

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

தேய்மான கிரயத்திற்கும் எதிர்பார்க்கும் காசுப்பாய்வுக்கும் இடையிலுள்ள எந்தவொரு வித்தியாசமும் விளைவு வட்டி விகிதத்தை உபயோகித்து எஞ்சிய ஆயுட்காலமீறாக காலத் தேய்மானம் செய்யப்படும். பின்னர் சொத்து சேதஇழப்பிற்கு ஆளானால், உரிமையாண்மையில் பதிவு செய்த தொகை வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படும்.

**முதிர்வுவரை வைத்திருக்கும் முதலீடுகள்**

நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வு காலத்தினை கொண்ட உய்த்தறி சாதனம் அல்லாத நிதிச் சொத்துக்கள் குழுமம் அவற்றை முதிர்வுவரை வைத்திருக்கும் எண்ணம் மற்றும் இயலுமையை கொண்டுள்ளபோது முதிர்வுவரை வைத்திருக்கும் முதலீடாக வகைப்படுத்தப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர் முதிர்வுவரை வைத்திருக்கும் முதலீடுகள் விளைவு வட்டி விகிதத்தை உபயோகித்து கணிப்பிடும் காலத்தேய்மானக் கிரயத்திலிருந்து சேதஇழப்பை கழிக்க வரும் தொகையில் அளவிடப்படும். காலத்தேய்மானம் செய்த கிரயக் கணிப்பீட்டில் கொள்வனவின் போது கழிவு அல்லது வட்டமும் விளைவு வட்டி விகிதத்தின் ஒன்றித்த பகுதியான கட்டணங்கள் மற்றும் கிரயங்களும் கணக்கிற் கொள்ளப்படும். விளைவு வட்டி விகித காலத்தேய்வு வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேத இழப்பினால் ஏற்படும் நட்டம் வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**c) ஏற்பிசைவு விலக்கல்**

நிதிச் சொத்தொன்று (அல்லது பொருத்தமான இடத்து நிதிச் சொத்தொன்றின் பகுதி அல்லது ஒத்த நிதிச்சொத்துக்களின் கூட்டத்தின் பகுதி) ஏற்பிசைவு விலக்கல் செய்யப்படுவது கீழ் வரும் சந்தர்ப்பங்களில் ஆகும்:

i) சொத்திலிருந்து காசுப்பாய்வை பெறுவதற்கான உரிமை காலாவதியான போது

ii) குழுமம் "கடத்துதல்" ஏற்பாட்டின் கீழ் மூன்றாம் தரப்பு ஒன்றிற்கு சொத்திலிருந்தான காசுப்பாய்வினை பெறும் அதன் உரிமையினை மாற்றியுள்ளபோது அல்லது பெற்ற காசுப் பாய்வினை காலதாமதமின்றி முற்றாக மூன்றாம் தரப்பிற்கு செலுத்துவதற்கான கடப்பாட்டினை ஏற்றுள்ள போது; அத்துடன்

(a) குழுமம் கிட்டத்தட்ட சொத்துத் தொடர்பான சகல இடர் மற்றும் பயன்களை மாற்றியிருத்தல், அல்லது

(b) குழுமம் கிட்டத்தட்ட சொத்துத் தொடர்பான சகல இடர் மற்றும் பயன்களை மாற்றாதபோதிலும் அந்தச் சொத்தின்மீதான கட்டுப்பாட்டை மாற்றியிருத்தல்.

குழுமம் சொத்திலிருந்து காசுப் பாய்வினை பெறுவதற்கான அதன் உரிமையை மாற்றியிருந்து அல்லது கடத்தல் ஏற்பாடு ஒன்றினை ஏற்படுத்தியிருந்து, அத்துடன் சொத்து தொடர்புபட்ட சகல இடர் மற்றும் பயனின் கணிசமான அளவை மாற்றாது அல்லது தொடர்ந்தும் வைத்திருக்காத போது அல்லது அதன் கட்டுப்பாட்டை மாற்றாதபோது கம்பனி அதன்மீது கொண்ட ஈடுபாட்டின் அளவுக்கு சொத்தை ஏற்பிசைவு செய்யும். அந்தச் சந்தர்ப்பத்தில், குழுமம் அதனுடன் தொடர்புபட்ட பரிப்பையும் ஏற்பிசைவு செய்யும். மாற்றப்படும் சொத்துக்களும் அதனுடன் தொடர்புபட்ட பரிப்பும் குழுமம் தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் அளவிடப்படும்.

மாற்றப்பட்ட சொத்துமீது உத்தரவாத வடிவிலான தொடரும் ஈடுபாடு, சொத்தின் ஆரம்ப முன்கொணரற் தொகை மற்றும் குழுமம் பதிலிறுக்கியாக மீளச்செலுத்துமாறு கேட்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச தொகை இரண்டிலும் குறைந்த தொகையில் அளவிடப்படும்.

**2.2.10.1.1 நிதிச்சொத்துக்களின் சேத இழப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் கூட்டமொன்று சேதஇழப்பு அடைந்தமைக்கு நேரடிச்சான்று உள்ளதா என்பதனை குழுமம் மதிப்பீடு செய்யும். ஒரு நிதிச்சொத்து அல்லது நிதிச்சொத்தின் கூட்டம் சேதஇழப்பு அடைந்துள்ளதாக கருதப்படுவது அதன் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது அதிக நிகழ்வுகளின் காரணமாக (ஏற்பட்ட 'இழப்பு நிகழ்வு') நேரடிச் சான்று உள்ளதுடன், அந்த இழப்பு நிகழ்வு நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக்கள் கூட்டத்தின் மதிப்பிட்ட எதிர்கால காசுப்பாய்வுகளில் தாக்கத்தை கொண்டிருந்து அது நம்பகமாக அளவிடக்கூடியதாக உள்ளபோது மாத்திரமே. சேதஇழப்புச் சான்றுகள் கடன்பட்டோர் அல்லது கடன்பட்டோரின் ஒரு பிரிவு பாரிய நிதிப்பிரச்சினைக்கு ஆளாதல், வட்டி அல்லது முதலை திருப்பிச் செலுத்துதலில் தவறுகை அல்லது ஒழுங்கின்மை, அவை வங்குரோத்து நிலை அடைதற்கான அல்லது நிதி மீள் கட்டமைப்பிற்கான சாத்தியக்கூறு மற்றும் அவதானிக்கக்கூடிய தரவுகள் தவறுகைகளுடன் இணைந்த நிலுவைகள் அல்லது பொருளியற் புறநிலைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிட்ட எதிர்காலக் காசுப்பாய்வுகளில் அளவிடக்கூடிய வீழ்ச்சி ஆகிய காட்டிகளை உள்ளடக்கும்.

**காலத் தேய்மானக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள்**

காலத்தேய்மானக் கிரயத்தில் முன்கொண்டு வரப்படும் நிதிச் சொத்துக்களை பொறுத்தமட்டில் தனியாக கணிசமானதாக உள்ள நிதிச் சொத்துக்களுக்கு தனியாக அல்லது தனியாக கணிசமானதாக அமையாத நிதிச்சொத்துக்களுக்கு கூட்டாக சேதஇழப்பிற்கான நேரடிச் சான்றுகள் உள்ளதா என்பதனை குழுமம் முதலில் மதிப்பிடும். கணிசமானதோ இல்லையோ தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்திற்கு சேதஇழப்பிற்கான நேரடிச்சான்று இல்லை என குழுமம் தீர்மானிக்குமேயாகில், அது அந்த நிதிச்சொத்தை ஒத்த நாணயத்தன்மை இடருடைய நிதிச் சொத்துக் கூட்டத்தில் உட்படுத்தி அவற்றை கூட்டாக சேதஇழப்புச் சோதனைக்கு உட்படுத்தும். சேதஇழப்பிற்காக தனியாக மதிப்பிடப்படும் சொத்திற்கு சேதஇழப்பு காணப்படின் அல்லது தொடர்ந்து ஏற்பிசைவு செய்யப்படின், கூட்டான சேத இழப்புச் சோதனைக்கு அது ஆளாக்கப்பட மாட்டாது.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

சேத இழப்பு ஏற்பட்டிருப்பதற்கான நேரடிச் சான்று இருக்கும் பட்சத்தில், இழப்புத் தொகையானது சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்வுகளின் இற்றைப் பெறுமதிக்கும் (இன்னும் இறுக்கப்படாத, எதிர்கால எதிர்பார்க்கும் கடன் இழப்புக்கள் நீங்கலாக) இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும். இற்றைப்பெறுமதியை அளவிட எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகள் நிதிச்சொத்தின் ஆரம்ப விளைவு வட்டி வீதத்தில் கழிவீடு செய்யப்படும். கடன் மாறும் வட்டி வீதத்தினை கொண்டிருப்பின், சேதஇழப்பினை அளவிடுவதற்கான கழிவு வீதமாக நடப்பு விளைவு வட்டி வீதம் பிரயோகிக்கப்படும்.

சொத்தின் முன்கொணரற் தொகை ஒரு கழிப்பீட்டுக் கணக்கு மூலம் குறைக்கப்படுவதுடன், இழப்புத் தொகை வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். வட்டி வருமானம் குறைந்து செல்லும் முன்கொணரற் தொகைமீது, சேதஇழப்பை அளவிட எதிர்கால காசுப்பாய்வுகளை கழிவீடு செய்ய உபயோகித்த கழிவு வீதத்தினை உபயோகித்து தொடர்ந்தும் அட்டுறு செய்யப்படும். வட்டி வருமானம் வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்யப்படும். எதிர்கால அறவீட்டுக்கான சாத்தியப்பாடு இல்லாதபோது மற்றும் கடன் பிணைகள் யாவும் தேறியிருந்து அல்லது குழுமத்திற்கு மாற்றி இருக்கும் பட்சத்தில் தொடர்புபட்ட கழிவீடுகளுடன் சேர்த்து கடன் பதிவழிக்கப்படும். அடுத்த ஆண்டில் சேதஇழப்பு ஏற்பிசைவு செய்யப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட நிகழ்வொன்றின் காரணமாக மதிப்பிட்ட சேதஇழப்புத் தொகை அதிகரித்தால் அல்லது குறைவடைந்தால், கழிவீட்டுக் கணக்கில் செம்மை யாக்கம் செய்வதன் மூலம் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேதஇழப்புத் தொகை அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப் படும். எதிர்கால பதிவழிப்புகள் பின்னர் அறவிடும் பட்சத்தில் அறவீடானது வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் செலவுப் பதிவு செய்யப்படும்.

**விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிசார் முதலீடுகள்**

விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதிசார் முதலீடுகளுக்கு ஒரு முதலீடு அல்லது முதலீடுகளின் கூட்டம் சேதஇழப்பு அடைந்தமைக்கு நேரடியான சான்று உள்ளதா என்பதனை அறிவதற்கு குழுமம் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மதிப்பீட்டை மேற்கொள்ளும். விற்பனைக்கு கிடைப்பவையாக வகைப்படுத்திய உரிமையாண்மை முதலீடுகளை பொறுத்த மட்டில், நேரடியான சான்றுகள் முதலீட்டின் சீர்மதிப்பு அதன் கிரயத்திலும் பார்க்க கணிசமாக அல்லது நீடித்த காலம் குறைந்து செல்வதனை உள்ளடக்கும். “கணிசத் தன்மை” முதலீட்டின் ஆரம்ப கிரயத்திற்கு எதிராகவும் “நீடித்த காலம்” சீர்மதிப்பு ஆரம்பக் கிரயத்தை விட குறைந்துள்ள காலத்திற்கு எதிராகவும் மதிப்பாய்வு செய்யப்படும். சேதஇழப்பிற்கு சான்று கிடைக்கப்படும்போது, முன்னர் வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டதும், முதலீட்டின் கொள்வனவுக் கிரயத்திற்கும் நடப்புச் சீர்மதிப்பிற்கும் இடையிலான வித்தியாசத்திலிருந்து சேதஇழப்பு ஏதுமிருப்பின் அதனை கழிக்க வரும் தொகையாக அளவிட்ட திரள் நட்டம் பிற முற்றடக்க வருமானத்திலிருந்து நீக்கப்பட்டு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். உரிமையாண்மை முதலீடுகள் மீதான சேதஇழப்பு வருமானக் கூற்றினூடாக எதிர்ப்பதிவு செய்யப்படுவதில்லை; சேதஇழப்பின் பின்னர் அவற்றின் சீர்மதிப்பில் அதிகரிப்புக்கள் பிற முற்றடக்க வருமானத்தில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.2.10.2 நிதிப் பரிப்புக்கள்

a) **ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்** LKAS 39 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதிப் பரிப்புக்கள் பொருத்தமானவாறு இலாப, நட்டத்தினூடான சீர்மதிப்பிலான நிதிப்பரிப்புக்கள், கடன்களும் கடன்படுகைகளும், ஏனைய நிதிப் பரிப்புக்கள் அல்லது விளைவுத் திறனான தளம்பற்காப்பில் தளம்பற்காப்பிடும் சாதனமாக வகைப்படுத்திய உய்த்தறிசாதனம் என வகைப்படுத்தப்படும். ஆரம்ப ஏற்பிசைவின்போதே குழுமம் நிதிப்பரிப்பின் வகைப்படுத்தலை தீர்மானிக்கும். ஆரம்பத்தில் சகல நிதிப்பரிப்புகளும் சீர்மதிப்பிலும் கடன்களும் கடன்படுகை களும் மற்றும் ஏனைய பரிப்புக்கள் காலத்தேய்மானக் கிரயத்திலும் ஏற்பிசைவு செய்யப்படும். காலத்தேய்மானக் கிரயம் நேரடியாக தொடர்புபடும் ஊடுசெயற் கிரயத்தை உள்ளடக்கும். குழும நிதிப்பரிப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய செய்மதிகள், வங்கி மேலதிகப்பற்று, கடன்களும் கடன்படுகைகளும் மற்றும் ஏனைய நிதிப்பரிப்புக்களை உள்ளடக்கும்.

b) **பின்னைய அளவீடு**

நிதிப்பரிப்புக்களின் அளவீடு கீழ்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலை சார்ந்திருக்கும்:

**கடன்களும் கடன்படுகைகளும்**

ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் வட்டிகொண்ட கடன்களும் கடன்படுகைகளும் விளைவு வட்டிவிகித முறையினை உபயோகித்து காலத்தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும். பரிப்பு ஏற்பிசைவு விலக்கல் செய்யப்படும் போதும், விளைவு வட்டி விகிதத்தை உபயோகிக்கும் காலத்தேய்மான முறையின்போதும் நயம் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். காலத்தேய்மானம் செய்த கிரயக் கணிப்பீட்டில் கொள்வனவின் போது கழிவு அல்லது வட்டமும் விளைவு வட்டி விகிதத்தின் ஒன்றித்த பகுதியான கட்டணங்கள் மற்றும் கிரயங்களும் கணக்கிற் கொள்ளப்படும். விளைவு வட்டி விகித காலத்தேய்மானம் வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

**ஏற்பிசைவு வில்கல்**

பரிப்பின் கீழான கடப்பாடு விடுவிக்கப்படும்போது, இல்லாமற் செய்யப்படும்போது அல்லது காலாவதியாகும்போது நிதிப் பரிப்பு ஏற்பிசைவு விலக்கப்படும். இருப்பிலுள்ள நிதிப்பரிப்பு அதே வழங்குனரால் கணிசமாக வேறுபட்ட கட்டுறுப்புக்களை கொண்ட அல்லது இருப்பிலுள்ள பரிப்பின் கட்டுறுப்புக்களில் இருந்து கணிசமாக மாற்றப்பட்ட வேறொரு பரிப்பினால் பிரதியீடு செய்யப்படும்போது, அத்தகைய பரிமாற்றம் அல்லது மாற்றம் ஆரம்பப் பரிப்பின் ஏற்பிசைவு விலக்கவாகவும் புதிய பரிப்பொன்றின் ஏற்பிசைவாகவும் கொள்ளப்படுவதுடன், உரிய முன்கொணரற் தொகைகளின் வித்தியாசம் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

### 2.2.10.3 நிதிச் சாதனங்களின் எதிரீடு

நிதிச் சொத்துக்களும் நிதிப் பரிப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு நிகரத் தொகை நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடுவது, ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதனை நடைமுறைப் படுத்துவதற்கு சட்டரீதியான உரிமை தற்போது உள்ளதுடன், நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது சொத்துக்களை தேறச்செய்து அதேநேரத்தில் பரிப்பினை தீர்ப்பதற்கான எண்ணம் உள்ளபோது மாத்திரமேயாகும்.

### 2.2.10.4 நிதிச் சாதனங்களின் சீர்மதிப்பு

ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் செயற்திறனான சந்தையில் கொடுக்கல், வாங்கல் செய்யப்படும் நிதிச்சாதனங்களின் சீர்மதிப்பு, ஊடுசெயற் கிரயங்களுக்காக கழிக்காது, விலை குறிக்கப்படும் சந்தை விலை தொடர்பாக அல்லது வாங்கி விற்போர் விலைக் குறிப்பீடு தொடர்பாக தீர்மானிக்கப்படும். (நீண்ட காலத்திற்கு ஏல விலையும் குறுங்காலத்திற்கு கோரல் விலையும்). செயற்திறனான சந்தையில் வாங்கி விற்கப்படாத நிதிச் சாதனங்களைப் பொறுத்த மட்டில், சீர்மதிப்பானது பொருத்தமான மதிப்பீட்டு நுட்பத்தை உபயோகித்து மதிப்பிடப்படும். அத்தகைய நுட்பங்கள் அண்மைக் கால தொடர்புமுறையற்ற சந்தை ஊடுசெயல்களை அல்லது கிட்டத்தட்ட அதே தன்மையைக் கொண்ட வேறொரு சாதனத்தின் சீர்மதிப்பினை உபயோகித்தல், கழிவீட்டு காசுப்பாய்வுப் பகுப்பாய்வு அல்லது பிற மதிப்பீட்டு முறைகளை பிரயோகித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### 2.2.10.5 நிதிசாரா சொத்துக்களின் சேதஇழப்பு

ஒவ்வொரு அளிக்கையிடற் திகதியிலும் சொத்தொன்று சேதஇழப்பு அடைந்தமைக்கான காட்டியொன்று உள்ளதா என்பதனை குழுமம் மதிப்பாய்வு செய்யும். அத்தகைய ஒரு காட்டி இருப்பின், அல்லது சொத்தொன்றிற்கு வருடாந்த சேதஇழப்புச் சோதனை தேவைப்படும் இடத்து குழுமம் அந்தச் சொத்தின் மீளப்பெறற்தகு தொகையை மதிப்பிடும். சொத்தின் மீளப்பெறற்தகு தொகையானது சொத்தின் அல்லது காசுபிறப்பாக்க அலகின் சீர்மதிப்பிலிருந்து விற்பனை செய்வதற்கான கிரயத்தை கழிக்க வரும் தொகை மற்றும் அதன் உபயோகப் பெறுமதி இரண்டிலும் உயர்ந்த தொகையாவதுடன், அச் சொத்து பிறப்பாக்கும் காசு உட்பாய்வு ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் குழுமத்தில் அதிக அளவில் தங்கி யிருந்தாலன்றி, தனியே அந்தச் சொத்திற்காக தீர்மானிக்கப்படும். சொத்தின் முன்கொணரற் தொகையானது அதன் மீளப்பெறற்தகு தொகையைவிட அதிகமாயின், சொத்து சேதஇழப்பு அடைந்ததாக கொண்டு அதன் மீளப்பெறற்தகு தொகைக்கு பதிவழிக்கப்படும். உபயோகப் பெறுமதியை மதிப்பிடுதலில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகள் பணப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடு மற்றும் அந்த சொத்துச் சார்ந்த இடர் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு விகிதத்தினை உபயோகித்து அவற்றின் இற்றைப் பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படும்.

தொடரும் தொழிற்பாடுகளின் சேதஇழப்பு நட்டங்கள், முன்னர் மீள் மதிப்பு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு பிற முற்றடக்க வருமானத்தில் கணக்கிற் கொள்ளப்பட்ட ஆதனத்தை தவிர்த்து, சேதஇழப்பு சொத்தின் தொழிற்பாட்டுக்கு இசைவான செலவு வகைப்படுத்தலில் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். இந்த ஆதனத்தினை பொறுத்தமட்டில், முன்னர் மீள்மதிப்பீட்டுத் தொகை ஏதுமிருப்பின், அத் தொகை வரை சேதஇழப்பும் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

சொத்துக்களுக்கு முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேதஇழப்பு இனியும் இல்லையா அல்லது குறைந்துவிட்டதா என்பதற்கான காட்டி எதுவும் உள்ளதா என்பதற்காக ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மதிப்பாய்வு மேற்கொள்ளப்படும். அத்தகைய காட்டி இருப்பின், குழுமம் மீளப்பெறற்தகு தொகையின் மதிப்பீட்டை மேற்கொள்ளும். முன்னர் ஏற்பிசைவு செய்த சேதஇழப்பு நட்டம் எதிர்ப்பதிவு செய்யக்கூடியதாக இருப்பது இறுதியாக சேதஇழப்பு ஏற்பிசைவு செய்த பின்னர் சொத்தின் மீளப்பெறற்தகு தொகையை தீர்மானிப்பதற்கு உபயோகித்த மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ள போது மாத்திரமே. எதிர்ப்பதிவு ஆனது சொத்தின் முன்கொணரற் தொகை அதன் மீளப்பெறற்தகு தொகையை அதிகரிக்காதவாறு, அல்லது முன்னைய ஆண்டுகளில் சொத்திற்கு சேதஇழப்பு எதுவும் ஏற்பிசைவு செய்யாதிருந்து தேய்மானத்தை கழித்து தீர்மானித்த முன்கொணரற் தொகையை அதிகரிக்காதவாறு மட்டுப்படுத்தப்படும். அத்தகைய எதிர்ப்பதிவானது சொத்து மீள்மதிப்பீட்டு முன்கொணரப் பட்டிருந்தாலன்றி வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். மீள் மதிப்பீட்டில் முன்கொணரப்பட்டிருப்பின், எதிர்ப்பதிவானது மீள் மதிப்பீட்டு அதிகரிப்பாக கொள்ளப்படும்.

### 2.2.11 ஏற்பாடுகள்

குழுமம் கடந்தகால நிகழ்வுகளின் காரணமாக ஒரு தற்காலக் கடப்பாட்டை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்து, கடப்பாட்டு தொகை பற்றி நம்பகரமான மதிப்பீடு மேற்கொள்ளப்படக் கூடியதாகவும், கடப்பாட்டை தீர்ப்பதற்கு பொருளியற் பயன்களை அடக்கிய வளங்களின் வெளிப்பாய்வு தேவைப்படுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதாகவும் காணப்பட்டால் ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை மீளளிக்க குழுமம் எதிர்பார்த்தால் (உதா: காப்புறுதி ஒப்பந்தத்தின்கீழ்) மீளளிப்பு தீர்க்கமானபோது மாத்திரம் அது வேறான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படும். எந்தவொரு ஏற்பாடு தொடர்புபட்ட செலவும் மீளளிப்பு ஏதும் இருப்பின் அவற்றை கழித்த தொகையில் வருமானக் கூற்றில் முன்னிலைப் படுத்தப்படும். பணத்தின் காலப்பெறுமதியின் தாக்கம் பொருண்மையானதாக இருப்பின், ஏற்பாடுகள் எதிர்பார்க்கும் எதிர்கால காசுப்பாய்வுகளை பணத்தின் காலப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீட்டை மற்றும் பொருத்தமான இடத்து பரிப்புச் சார்ந்த இடரை பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய விகிதத்தால் கழிவீடு செய்து தீர்மானிக்கப்படும். கழிவீடு உபயோகிக்கப்படம்போது, காலம் கடந்துபோதலின் காரணமாக ஏற்பாட்டில் ஏற்படும் அதிகரிப்பு நிதிக்கிரயமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

### 2.2.12 ஓய்வுப் பயன் கடப்பாடுகள்

**a) வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - பணிக்கொடை, ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் பயன் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற ஒன்று அல்லது மேற்பட்ட காரணிகளில் தங்கியிருக்கும். வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் 1983 ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தில் ஏற்பாடுசெய்துள்ள பணிக்கொடையை கொண்டுள்ளது.

குழுமம், வரையறுத்த பயன் திட்டமான பணிக்கொடையின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓய்வுப் பயன்களின் இற்றைப் பெறுமதியை எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவு (PUC) முறையின் அடிப்படையில் அமைந்த ஆயுட் காலமுறை மதிப்பீட்டினை உபயோகித்து அளவிடும். ஆயுட்காலமுறை கணிப்பீடு சார்ந்த நயங்களும் இழப்புக்களும் முற்றிலுமாக அவை நிகழும் காலத்திலேயே வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். பணிக்கொடைப் பரிப்புக்கு வெளியில் முதலீட்டு நிதியம் ஆக்கப்படவில்லை. இந்த உருப்படி ஐந்தொகையில் ஏனைய வரையறுக்கப்பட்ட பயன் பரிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**b) வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - ஓய்வூதிய கடப்பாடு**

வரையறுக்கப்பட்ட பயன் திட்டமானது ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் ஓய்வூதிய பயன் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற ஒன்று அல்லது மேற்பட்ட காரணிகளில் தங்கியிருக்கும்.

வரையறுக்கப்பட்ட பயன் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நிதிநிலைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் பரிப்பு, அறிக்கையிடற் கால இறுதியில் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்பை கழிக்க வரும் தொகையினை ஏற்பிசைவு செய்யப்படாத கடந்தகால சேவைக் கிரயங்களுக்காக செம்மையாக்கம் செய்ய வரும் தொகையாகும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடு எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவினை உபயோகித்து சுயாதீன ஆயுள்முறை கணிப்பீட்டாளர்களினால் ஆண்டுதோறும் கணிக்கப்படும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியானது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு வெளிப்பாய்வுகளை, இலங்கையில் உயர்ந்த தரத்திலான பாரிய கூட்டிணைவுப் பிணைமுறிச் சந்தை இல்லாத காரணத்தால், அரச பிணை முறிகளின் வட்டி விகிதத்தை உபயோகித்து கழிவீடு செய்வதன்மூலம் தீர்மானிக்கப்படும். அரச பிணைமுறிகள் பயன்கள் செலுத்தப்படவுள்ள நாணயத்தில் இருப்பதுடன், அதன் முதிர்வுகாலம் தொடர்புபட்ட ஓய்வூதிய கடப்பாட்டுக் காலத்தை அண்மித்ததாக இருக்கும்.

செம்மையாக்கத்தினால் ஏற்படும் ஆயுட்காலமுறைக் கணிப்பு நயங்கள் மற்றும் இழப்புக்கள் மற்றும் ஆயுட்காலமுறை எடுகோள்களின் அறவீடுகள் அவை ஏற்படும் காலத்தில் பிற முற்றடக்க வருமானத்தில் தாக்கல் செய்யப்படும் அல்லது செலவுப்பதிவு செய்யப்படும்.

ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற்றங்கள் ஊழியர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (ஒப்படைக் காலம்) சேவையில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை கொண்டிருந்தாலன்றி, கடந்தகால சேவைக்கிரயம் உடனடியாக முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். இச் சந்தர்ப்பத்தில் கடந்த கால சேவைக் கிரயம் ஒப்படைக் காலமீறாக நேர்கோட்டு அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

**c) வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உரிய சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக உரிமை உடையவராவர். குழுமம் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் மொத்த ஊதியத்தின் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு செய்கின்றபோதிலும், இலங்கை மின்சார சபையானது ஊழியரின் மொத்த ஊதியத்தின் 15% இலங்கை மின்சார சபை சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கின்றது.

### 2.2.13 சுய காப்புறுதி ஒதுக்கம்

CEB யானது ஆண்டின் இறுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமதியின் 0.1% இனை ஒவ்வொரு ஆண்டிலும் சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றுகின்றது. CEB யின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு ஏற்படும் இழப்புகளும் சேதங்களும் இந்த காப்புறுதி ஒதுக்கத்திற்கு தாக்கல் செய்யப்படும். இந்தத் தேவைகளுக்கான நிதியம் வேறான வங்கிக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்திலிருந்து பெறப்படும்.

### 2.2.14 பிற்போடப்பட்ட வருமானம்

**a) சபைக்கு நுகர்வோரின் பங்களிப்பு**

CEB யின் புதிய சேவை இணைப்புக்களுக்கு நுகர்வோரின் பங்களிப்பு 1996 ஆம் ஆண்டிலிருந்து மூலதன ஒதுக்கமாக கொள்ளப்படுகின்றது. CEB யின் பங்களிப்பு பிற்போடப்பட்டு தொடர்புபட்ட சொத்துக்களின் தேய்மானக் காலமான 35 ஆண்டுகளில் வருமானக் கூற்றில் காலத் தேய்மானம் செய்யப்படும்.

**மட். இலங்கை மின்சார (தனி) கம்பனி**

புதிய சேவை இணைப்பை ஏற்படுத்துவதற்கு நிறுவப்படும் சொத்துகளின் கிரயத்தை ஈடுசெய்யும்பொருட்டு நுகர்வோரிடமிருந்து பெறும் பங்களிப்பு பிற்போடப்பட்ட கடப்பாடுகளாக ஏற்பிசைவு செய்யப்படும். புதிய சேவை இணைப்புச் சொத்துகள் 20 ஆண்டுகளில் தேய்மானம் செய்யப்பட்டது. அவற்றுடன் தொடர்புபட்ட நுகர்வோர் பங்களிப்பும் 2008 டிசம்பர் 31ந் திகதி வரையில் அதே 20 ஆண்டுகளில் வருமானக் கூற்றில் காலத் தேய்மானம் செய்யப்பட்டது. 2009 ஜனவரி 1ந் திகதி முதல் நுகர்வோர் பங்களிப்பிலிருந்து பெறப்படும் தொகை 8 ஆண்டுகளிலும், 2008 டிசம்பர் 31ந் திகதி வரையில் பெறப்பட்ட தொகைகள் 20 ஆண்டுகளிலும் காலத் தேய்மானம் செய்யப்படுகின்றன.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

**b) அரச கொடைகள்**

பொறி மற்றும் எந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட அரச கொடைகள் பிற்போட்ட வருமானமாக கொள்ளப்பட்டன. குறிப்பு 21.2 இல் காட்டியுள்ள அரச கொடையானது கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட, சீதாவாக்கை கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள கட்டக உபநிலையம் மற்றும் மின்கடத்திக் கம்பிவரிகளின் பெறுமதியை பிரதிபலிப்பதுடன், வருமான அணுகுமுறை அடிப்படையில் இது 35 ஆண்டுகளில் காலத்தேய்மானம் செய்யப்பட உள்ளது.

**2.2.15 வருமான ஏற்பிசைவு**

குழுமத்திற்கு பொருளியற் பயன்கள் பாய்வது சாத்தியமான அளவுக்கும், வருமானமும் அதனுடன் சம்பந்தப்பட்ட இறுக்கப்பட்ட அல்லது இறுக்கப் படவுள்ள கிரயங்களும் நம்பகமாக அளவிடக்கூடிய அளவுக்கும் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும். வருமானம் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள பதிலிறுக்கியின் சீர்மதிப்பிலிருந்து வியாபாரக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் கழித்த தொகையில் அளவிடப்படும். மட் லக்தனாவி கம்பனி மற்றும் மட் ஹெலதனாவி கம்பனி ஆகியவற்றின் வருமானம் கலன்டர் ஆண்டின் இறுதியில் குறைந்தபட்ச உத்தரவாதம் அளித்த மின்வலுப் பெறுமதிக்காக இயல்வலு அறவீடுகளுக்காக செம்மையாக்கம் செய்யப்படும். வருமானத்தை ஏற்பிசைவு செய்தலில் கீழ்வரும் பிரமாணங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன:

**2.2.16**

**a) சேவைகள் வழங்குதல்**

சேவை தொடர்புபட்ட ஊடுசெயலின் வெளிப்பாடு நம்பகரமாக மதிப்பிடக் கூடியதாக உள்ளபோது அந்த ஊடுசெயல் தொடர்புபட்ட வருமானம் அறிக்கையிடற் கால இறுதியில் ஊடுசெயற் பூர்த்திமட்ட அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**b) பொருட்கள் விற்பனை**

பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் பொருளின் உரிமை தொடர்பான கணிசமான இடர் மற்றும் பயன் வாங்குனருக்கு கைமாறும் போது ஏற்பிசைவு செய்யப்படும். வழமையாக உரிமை தொடர்புபட்ட அளவுக்கு தொடரும் முகாமைரீதியான ஈடுபாட்டையோ அல்லது விற்ற பொருட்கள் மீது விளைதிறனான கட்டுப்பாட்டையோ குழுமம் தக்க வைப்பதில்லை.

**c) வட்டி**

சேகரிப்பு ஐயுறவானதாக இருந்தாற் தவிர, வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**d) பங்கிலாபம்**

பங்கிலாபத்தை பெறுவதற்கு பங்குதாரரின் உரிமை உறுதியாகும்போது அது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**e) ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும். முதலீடுகள் அடங்கலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் பிற நடைமுறையல்லா சொத்து விற்பனைமீது வருமான தன்மையுடைய நிகர நயங்கள் மற்றும் இழப்புக்கள், விற்பனைப் பெறுவனவிலிருந்து சொத்தின் முன்கொணரற் தொகை மற்றும் விற்பனையுடன் தொடர்பு பட்ட செலவுகளை கழிக்கவரும் தொகையினால் வருமானக் கூற்றில் கணக்கிற் கொள்ளப்படும். மீள்மதிப்புச் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் விற்பனை செய்யப்படும்போது அந்தச் சொத்துத் தொடர்பில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் எஞ்சியுள்ள தொகை நேரடியாக திரள் இலாபத்திற்கு மாற்றப்படும். பிரதான வருமானம் பிறப்பிக்கும் செயற்பாடுகளுக்கு பக்க விளைவாக ஏற்படும் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் மற்றும் பொருண்மையாக அமையாத ஒத்த ஊடுசெயல்களின் கூட்டத்திலிருந்து ஏற்படும் நயங்கள் மற்றும் இழப்புக்கள் ஒன்றுசேர்த்து நிகர அடிப்படையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**2.3 கணிசமான கணக்கீட்டு எடுகோள்கள், சுயதீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள்**

குழும கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும்போது, மதிப்பீடுகள் தொடர்புபட்டவற்றிற்கு மேலாக, சுயதீர்மானங் களை மேற்கொள்ள முகாமை தேவைப்பட்டுள்ளதுடன், இவை நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளில் மிகவும் கணிசமான தாக்கத்தை கொண்டிருக்கும். மேலும், எதிர்காலம் பற்றிய பிரதான எடுகோள்கள் மற்றும் மதிப்பீட்டு நிட்சயமற்ற தன்மையின் ஏனைய பிரதான மூலங்கள் ஆகியவற்றை ஐந்தொகைத் திகதியில் கவனத்திற் கொள்ளவும் முகாமை தேவைப்படுத்தப்பட்டுள்ளது. இவை அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் முன் கொணரற் தொகைக்கு மேற்கொள்ளவுள்ள பொருண்மையான செம்மை யாக்கம் தொடர்பில் கணிசமான இடரை கொண்டிருப்பதுடன், அவை கீழே ஆராயப்பட்டுள்ளன. சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தொடர்புபட்ட முன் கொணரற் தொகைகள் நிதிக்கூற்றுக்களின் உரிய குறிப்பில் தரப்பட்டுள்ளன. அவ்வாறான பிரதான உருப்படிகள்பற்றி கீழே தரப்பட்டுள்ளது:

**குத்தகைகள்**

ஏற்பாடொன்று ஒரு குத்தயைா அல்லது குத்தகையை கொண்டுள்ளதா என தீர்மானிப்பது ஆரம்பத் திகதியில் ஏற்பாட்டின் அடக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. ஏற்பாட்டை நிறைவு செய்தல் குறிப்பிட்ட சொத்து அல்லது சொத்துக்களின் உபயோகத்தில் தங்கியுள்ளதா அல்லது ஏற்பாட்டில் வெளிப் படையாக குறிப்பிடாவிடினும், சொத்தினை உபயோகிப்பதற்கு உரிமையை அளிக்கின்றதா என்பதனை பொறுத்ததாகும். அதன்படி, சொத்தின் உரிமை தொடர்புபட்ட கிட்டத்தட்ட சகல இடர் மற்றும் பயன்களை குழுமம் மாற்றாத அனல் மின் பிறப்பாக்க பொறிகள் தொழிற்பாட்டு குத்தகைகளாக வகைப் படுத்தப்பட்டன. ஒரு குத்தகை நிதிக்குத்தகையா அல்லது தொழிற்பாட்டுக் குத்தகையா என வகைப்படுத்துவதற்கு தனியான அல்லது

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

இணைந்த தேர்வு நிபந்தனைகளை தீர்மானித்தலில் குழுமம் கணிசமான சுயதீர்மானத்தை பிரயோகித்துள்ளது.

**நிதிச் சாதனங்களின் சீர்மதிப்பு**

நிதிக்கூற்றில் பதிவுசெய்யும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களின் சீர்மதிப்பு செயற்திறனான சந்தையிலிருந்து பெறமுடியாதபோது, அவற்றின் சீர்மதிப்பு காசுப்பாய்வு கழிவீட்டு முறை அடங்கலாக மதிப்பீட்டு நுட்பங்களை பாவித்து தீர்மானிக்கப்படும். இம் முறைகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடத்து அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்து பெறப்படுவதுடன் அவ்வாறு பெறுதல் சாத்தியமற்ற இடத்து சீர்மதிப்பை நிர்ணயித்தலில் ஓரளவு சுயதீர்ப்பு தேவைப்படும். இந்த சுயதீர்ப்பு திரவத்தன்மை இடர் மற்றும் மாறுபடற்தகவு போன்ற உள்ளீடுகளின் கவனத்திற் கொள்ளலை அடக்கும். இக் காரணிகள் பற்றிய எடுகோள்களில் மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் சீர்மதிப்பில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

**நிதிசாராத சொத்துக்களின் சேதஇழப்பு நட்டங்களின் மீளாய்வு**

சேதஇழப்பு மீளாய்வினை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்கள் சேதஇழப்பு அடைந்துள்ளனவா என்பதனை குழுமம் தீர்மானிக்கும். இது காசு பிறப்பாக்க அலகுகளின் 'உபயோகப் பெறுமதி'யினை மதிப்பிடுதலை தேவைப்படுத்தும். உபயோகப் பெறுமதியை மதிப்பிடுவதற்கு காசு பிறப்பாக்க அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளை முகாமை மதிப்பிடுவதுடன், அக் காசுப் பாய்வுகளின் இற்றைப் பெறுமதியை கணிப்பதற்கு பொருத்தமான கழிவுவிகிதத்தை தேர்ந்தெடுக்கவும் வேண்டும். இந்த மதிப்பீட்டிற்காக எதிர்பார்க்கும் எதிர்கால காசுப்பாய்வுகள் மற்றும் கழிவீட்டு விகிதங்களை குழுமம் மதிப்பிடவேண்டி உள்ளதனால், இவை நிட்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்றன.

**வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் சேதஇழப்பு நட்டங்கள்**

தனியாக மதிப்பிடப்பட்டு சேதஇழப்பு அடையாததாக காணப்படும் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை பொறுத்தமட்டில், தனியாக கணிசமற்றதான வருமதிகள் எல்லாம் நேரடியான சான்றுகள் இருந்து ஆனால் அவற்றின் தாக்கம் இன்னும் சரியாக தெளிவில்லாதபோது இறுக்கப்பட்ட இழப்பு நிகழ்வு தொடர்பில் ஏற்பாடு செய்யவேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காக ஒத்த இடர் இயல்புகளைக் கொண்ட சொத்துக்களின் கூட்டமாகச் சேர்க்கப்பட்டு பின்னர் மதிப்பிடப்படும். கூட்டமான மதிப்பீடு, வருமதித் தொகுதியிலுள்ள தரவுகள் (நிலுவைக் காலங்கள், கடன் பயன்பாடு ஆகியன) மற்றும் இடர்சார்ந்த மற்றும் பெருளியற் தரவுகளில் (வேலையற்றோர் மட்டம், விலைச் சுட்டிகள் நாடுசேர்ந்த இடர் மற்றும் வேறுபட்ட தனியார் குழுமங்களின் செயற்பாடு ஆகியன அடங்கலாக) அதிக அக்கறை கொள்வதன் தாக்கம் பற்றிய சுயதீர்மானங்கள் அகியவற்றை கணக்கிற் கொள்ளும்.

**வரிகள்**

குழுமம் வருமான வரி மற்றும் VAT அடங்கலாக ஏனைய வரிகளுக்கும் ஆளாகின்றது. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வரிவிதிப்பதற்கு வரிவிதி வருமானத்தை தீர்மானித்தல் ஆகியவற்றிற்கு SLFRS இனை கடைப்பிடிப்பது தொடர்பாக வரி வழிகாட்டிகள் இன்னும் கிடைக்காமையினால் நடப்பு, பிற் போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டை தீர்மானிப்பதில் கணிசமான சுயதீர்மானம் தேவைப்படுகின்றது. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தறுவாயில் வரிச் சட்டங்களின் பிரயோக விளக்கம் தொடர்பாக நிட்சயமற்ற நிலை காணப்படுகின்றது. நடப்பு, பிற்போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக சொத்துக்கள் மற்றும் பரிப்புபுக்களை குழுமம் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இந்த விடயங்களின் காரணமாக இறுதி வரிப்பரிப்பு ஆரம்பத்தில் பதிவு செய்த தொகைகளிலிருந்து வேறுபடுவதனால், அது வருமானம், பிற்போட்ட வரி மற்றும் ஏனைய வரிகளில் அந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் தாக்கத்தினை கொண்டிருக்கும்.

**ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்**

குழுமம் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சொத்துக்களின் ஈற்றுப் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைகளை மீளாய்வு செய்யும். இந்தப் பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளை மதிப்பிடுதலில் முகாமையால் சுயதீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் - பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களின் (பணிக்கொடை) கிரயம் ஆயுட்கால முறை மதிப்பீட்டு நுட்பத்தை உபயோகித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு நுட்பத்தில் கழிவு விகிதங்கள், சொத்திலிருந்து எதிர்பார்க்கும் வருவாய் விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்பு ஆகிய பற்றி எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த திட்டங்களின் நீண்டகால இயல்பு காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிட்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்றன.

**2.4 வழங்கப்பட்டு இன்னும் நடைமுறைக்கு வராத இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தாக்கம்**

2013 ஜனவரி 1ந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலங்களுக்கு நடைமுறைக்கு வரும் கீழ்வரும் நியமங்கள் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**SLFRS 9 – 'நிதிச் சாதனங்கள்'** இந்த நியமம் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களின் வகைப்படுத்தல், அளவீடு மற்றும் ஏற்பிசைவு பற்றி தெரிவிக்கின்றன. SLFRS 9 நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு தொடர்புபட்ட LKAS 39 இன் பகுதிகளை பிரதியீடு செய்கின்றது. நிதிச் சொத்துக்களை 'சீர்மதிப்பில் அளவிடுபவை' மற்றும் 'காலத்தேய்மான கிரயத்தில் அளவிடுபவை என இரு அளவீட்டு வகைப்படுத்தல்களின் கீழ் வகைப்படுத்த வேண்டுமென SLFRS 9 தேவைப்படுத்துகின்றது.

இந்தத் தீர்மானம் ஆரம்ப ஏற்பிசைவின்போது மேற்கொள்ளப்படும். இந்த வகைப்படுத்தல் நிதிச் சாதனங்களை முகாமை செய்வதில் உரிமத்தின் வியாபார மாதிரி மற்றும் சாதனத்தின் ஒப்பந்தரீதியான காசுப்பாய்வுகளின் இயல்பு ஆகியவற்றில் தங்கியுள்ளது. நிதிப் பரிப்புக்களை பொறுத்தமட்டில் LKAS 39 இன் தேவைப்பாடுகளில்

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

அதிக மாற்றமில்லை. பிரதான மாற்றம் LKAS 27 இன் தேவைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது மேன்னிலை உரிமம் இவற்றை ஒன்றிக்க வேண்டும் என்பதாகும். இந்த நியமம் 2014 ஜனவரி 1ந் திகதியில் அல்லது அதற்குப் பின் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு நடைமுறைக்கு வரும்.

**SLFRS 11 – 'கூட்டு ஏற்பாடுகள்'**
இந்த நியமம் LKAS 31 கூட்டு முயற்சிகளில் நாட்டம் மற்றும் SIC - 31 கூட்டாக கட்டுப்படுத்தும் உரிமங்கள், முயற்சியாளர்களால் கட்டாயமற்ற பங்களிப்புக்கள் ஆகியவற்றை பிரதியீடு செய்கின்றது. விகிதாசார ஒன்றித்தல் முறையை உபயோகித்து கூட்டாகக் கட்டுப்படுத்தும் உரிமங்களுக்கான கணக்கீட்டுத் தேர்வுரிமையை SLFRS 11 நீக்குகின்றது. அதற்குப் பதிலாக, கூட்டுத் தொழில்முயற்சியின் பொருள் வரையறையை நிறைவு செய்யும் கூட்டாகக் கட்டுப்படுத்தும் உரிமங்களை உரிமையாண்மை முறையை உபயோகித்து கணக்கிற் கொள்ளவேண்டும். இந்த நியமம் ஆரம்பத்தில் 2014 ஜனவரி 1ந் திகதி அல்லது அதற்குப்பின் ஆரம்பமாகும் ஆண்டுக் காலங்களுக்கு நடைமுறைக்கு வருவதுடன், ஆரம்ப பிரயோகத் திகதியில் உள்ள கூட்டு ஏற்பாடுகளுக்கு முன்னர் இருந்து நடை முறைக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

**SLFRS 12 - 'ஏனைய உரிமங்களில் நாட்டங்களை வெளிக்காட்டல்'**
இந்த நியமம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முன்னர் LKAS 27 இல் இருந்த சகல வெளிக்காட்டல்களையும் அத்துடன், முன்னர் LKAS 31 மற்றும் LKAS 28 இல் இருந்த வெளிக்காட்டற் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. இந்த வெளிக்காட்டல்கள் உபகம்பனிகள், கூட்டு உடன் படிக்கைகள், கூட்டுக் கம்பனிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட உரிமங்களில் உரிமம் ஒன்றின் நாட்டம் தொடர்புபட்டதாகும். சில புதிய வெளிக்காட்டல்களும் தேவைப்பட்டபோதிலும், அத்தகைய வெளிக்காட்டல்கள் குழுமத்தின் நிதிநிலை மற்றும் செயற்பாட்டில் தாக்கத்தை கொண்டிருக்கவில்லை. இந்த நியமம் ஆரம்பத்தில் 2014 ஜனவரி 1ந் திகதி அல்லது அதற்குப்பின் ஆரம்பமாகும் ஆண்டுக் காலங்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

**SLFRS 13 – 'சீர்மதிப்பு அளவீடு'** இந்த நியமம் சீர்மதிப்பிற்கு துல்லியமான பொருள் வரையறையையும், சகல SLFRSs களின் பயன்பாட்டில் தனியொரு சீர்மதிப்பு அளவீட்டு மூலம் மற்றும் வெளிக்காட்டற் தேவைப்பாடுகளை தருவதன் மூலம் கொள்கை மாறாத தன்மையை மேம்படுத்தி சிக்கலை குறைக்கும் நோக்கம் கொண்டதாகும். முகாமை இந்த நியமத்தின் முழுத் தாக்கத்தை இன்னும் மதிப்பிடவேண்டியுள்ளது. உரிமத்தில் பொருண்மையான தாக்கத்தை கொண்டிருக்க எதிர்பார்க்கும் ஆனால் இன்னும் நடைமுறைக்கு வராத ஏனைய நியமங்கள், திருத்தங்கள் அல்லது பொருள் விளக்கங்கள் இல்லை.

### 2.5 SLFRS களின் முதற்தடவையான கடைப்பிடிப்பு

2012 டிசம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இந்த நிதிக்கூற்றுக்கள் குழுமம் SLFRS களுக்கு இணங்க முதன்முறையாக தயாரித்துள்ள தொடை ஆகும். 2011 டிசம்பர் 31ந் திகதி வரையான காலத்திற்கு குழுமம் அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLAS) அமைய தயாரித்திருந்தது. அதன்படி, கணக்கீட்டுக் கொள்கைகளில் விபரித்தவாறு குழுமம் 2012 டிசம்பர் 31ந் திகதி அல்லது அதற்குப் பின்னர் முடிவடையும் காலங்களுக்கு பிரயோகிக்கும் SLFRSs க்கு இசைவாக நிதிக்கூற்றுக்களை 2011 டிசம்பர் 31ந் திகதி மற்றும் அந்த திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒப்பீட்டுத் தகவலுடன் தயாரித்துள்ளது. இந்நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழும ஆரம்ப நிதிநிலைக்கூற்று குழுமம் SLFRS க்கு மாறிய திகதியான 2011 ஜனவரி 1ந் திகதி தயாரிக்கப்பட்டது. இந்த குறிப்பானது 2011 ஜனவரி 1ந் திகதியிலும், முன்னர் பிரசுரித்த 2011 டிசம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான SLAS நிதிக்கூற்றுக்களினதும் திருத்திக் கூறுதலில் குழுமம் மேற்கொண்ட முக்கிய செய்மையாக்கங்களை விபரிக்கின்றது.

### 2.6 பிரயோகித்த விலக்களிப்புக்கள்

SLFRS 1 - இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களை முதற்தடவையாக கடைப்பிடித்தல் நியமம், சில SLFRS களில் குறிப்பிட்ட முன்னர் இருந்து நடைமுறைக்கு வரும் பிரயோகங்களிலிருந்து சில விலக்களிப்புக்கள் மற்றும் விதிவிலக்குகளை முதற்தடவையாக கடைப்பிடிப்போருக்கு அனுமதிக்கின்றது. SLFRS இன் கீழ் 2012 டிசம்பர் 31ந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரித்தலில் உரிமம் பிரயோகித்த, SLFRS 1 இன் கீழான விலக்களிப்புக்களும் விதிவிலக்குகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**சபை**

**முன்னர் இருந்தான முழுப் பிரயோகத்திலிருந்து விலக்களிப்புகளும் விதி விலக்குகளும்**

SLFRS க்கு மாறும்போது சபையினால் முதற் தடவையாக பிரயோகித்த SLFRS களின் கீழ் பிரயோக விலக்களிப்புகளும் விதி விலக்குகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**SLFRS விலக்களிப்பு தேர்வுரிமை**

கீழ்வரும் விலக்களிப்புக்கள் சபையால் பிரயோகிக்கப்பட்டன:

a) கருதப்படும் கிரயமாக சீர்மதிப்புக்கள் அல்லது மீள்மதிப்பீடுகள்

b) ஊழியர் பயன்கள்

c) கடன்படுகைக் கிரயம்

ஏனைய விருப்பத் தேர்வு விலக்களிப்புக்கள் சபைக்கு பிரயோகிக்க முடியாதவை ஆதலினால் சபையினால் பிரயோகிக்கப்படவில்லை.

**SLFRS கட்டாய விலக்களிப்புக்கள்**

SLFRS/LKAS களின் முன்பிருந்து நடைமுறைக்கு வரும் முழுப் பிரயோகங்களின் கட்டாயமான சகல விலக்களிப்புக்களும் சபைக்கு ஏற்புடையவை அல்ல.

## 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

**குழுமம் பிரயோகிக்க தேர்வு செய்த விருப்பத்தேர்வு விலக்களிப்புக்கள்**

**மட். இலங்கை மின்சார (தனி) கம்பனி – LECO**

**வியாபார இணைப்புக்கள்**

SLFRS இன் தேவைகட்கு 2011 ஜனவரி 1ந் திகதிக்கு முன்னர் நிகழ்ந்தவை வியாபாரங்களாக கருதப்படுவதனால், உபகம்பனிகளின் சுவீகரிப்பிற்கு SLFRS 3 வியாபார இணைப்புக்கள் நியமம் பிரயோகிக்கப்படவில்லை. இந்த விலக்களிப்பு உபயோகிக்கப்படுவதன் கருத்து, SLFRS இன் கீழ் ஏற்பிசைவு செய்யவேண்டிய சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் உள்நாட்டு SLAS இன் கீழான முன்கொணரற் தொகைகள் சுவீகரிப்புத் திகதியில் அவற்றின் கருதப்படும் கிரயமாக (deemed cost) இருப்பதனாலாகும். சுவீகரிப்புத் திகதிக்குப் பின்னர் அளவீடு SLFRS க்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. SLFRS இன் கீழ் ஏற்பிசைவுத் தகைமை பெற்ற சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் ஆரம்ப SLFRS நிதிநிலைக் கூற்றில் விலக்கப்பட்டுள்ளன. SLFRS ஏற்பிசைவு தேவைப்பாடு காரணமாக முன்னர் ஏற்பிசைவு செய்த தொகை எதனையும் குழுமம் ஏற்பிசைவு செய்யவோ அல்லது விலக்கவோ இல்லை.

**உபகம்பனிகளில் முதலீடுகள்**

உபகம்பனியின் வேறான SLFRS நிதிக்கூற்றுக்களில் உபகம்பனியில் முதலீட்டு அளவீட்டின் அடிப்படை அதன் கருதப்படும் கிரயமாகும். அத்தகைய முதலீடுகளின் கருதப்படும் கிரயமாக 2011 ஜனவரி 1 இல் SLAS கீழ் முந்திய முன்கொணரற் தொகையை குழுமம் பிரயோகித்துள்ளது.

**முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிச் சாதனங்களின் வகைப்படுத்தல்**

குழுமம் 2011 ஜனவரி 1 இல் கொண்டிருந்த விலை குறிப்பிடாத உரிமையாண்மைச் சாதனங்களை விற்பனைக்காக கிடைக்கப்பெறும் முதலீடுகளாக வகைப்படுத்தியது.

**குழுமம் முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பிரயோகிக்காத விதிவிலக்குகள்**

**மதிப்பீடுகள்**

2011 ஜனவரி 1 மற்றும் 2011 டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் மதிப்பீடுகள் SLAS க்கு அமைவாக அதே திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கு இசைவாக உள்ளன. (கணக்கீட்டுக் கொள்கைகளில் வேறுபாடுகள் ஏதுமிருப்பின் அவற்றிற்கு செம்மையாக்கம் செய்யப்பட்ட பின்னர்).

**நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களின் ஏற்பிசைவு விலக்கல**

குழுமமானது 2011 ஜனவரி 1ந் திகதிக்கு பின்னர் நிகழ்ந்த ஊடுசெயல்களுக்கு LKAS 39 இலுள்ள ஏற்பிசைவு விலக்கற் தேவைப்பாடுகளை பிரயோகித்துள்ளது. எனவே, SLAS இன் கீழ் 2011 ஜனவரி 1ந் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற ஊடு செயல்களாக முன்னர் ஏற்பிசைவு விலக்கப்பட்ட உய்த்தறி சாதனமல்லாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப்பரிப்புக்கள் SLFRS நிதிக் கூற்றுக்களில் மீள ஏற்பிசைவு செய்யப்படவில்லை.

**கட்டுப்பாடற்றோர் பாத்தியதைகள்**

SLFRS க்கு மாறிய திகதியிலிருந்து LKAS இன் கீழ்வரும் தேவைப்பாடுகள் எதிர் காலத்தில் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.
பற்றாக்குறை மீதியை விளைவிக்கின்றதா என்பதனை கவனத்திற் கொள்ளாது மொத்த முற்றடக்க வருமானத்தை கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக்கு ஒதுக்க.
மேன்னிலைக் கம்பனியின் சொத்துரிமை நாட்ட மாற்றங்களை உரிமையாண்மை ஊடுசெயல்களாகக் கட்டுப்பாட்டில் இழப்பை விளைவிக்காது எனக் கொள்ள.
உபகம்பனியில் கட்டுப்பாட்டு இழப்பிற்கு LKAS 27 இனை பிரயோகிக்க.

**மட். LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

**பிரயோகிக்கப்பட்ட விலக்களிப்புக்கள**

2009 ஆம் ஆண்டின் இலங்கை மின்சார சட்ட இல. 20 பிரிவு 9 (1) (சி) யின் பிரகாரம், 25 மொ.வா. உற்பத்தி வலுவுக்கு மேலாக மின்னுற்பத்தி செய்யும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் உற்பத்தி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் தகுதியைக் கொண்டுள்ளன. இதற்கு குறிப்பிட்ட கம்பனியில் அரசாங்கமோ, பொதுக் கூட்டுத்தாபனமொன்றோ, அரசாங்கம் 50% க்கு அதிகமான பங்குகளைக் கொண்டுள்ள கம்பனியோ அல்லது அதன் துணைக்கம்பனியோ நிதிக்குப் பொறுப்பான அமைச்சரின் சம்மதத்துடன் திறைசேரிச் செயலாளரால் தீர்மானிக்கப்படும் குறைந்தபட்ச பங்குகளை கொண்டிருக்க வேண்டும்.

2003 செப்டம்பர் 26ந் திகதி முறையாகப் பெறப்பட்ட பிறப்பாக்க அனுமதிப்பத்திரத்தின் கீழ் தற்போது தொழிற்படும் ஹெலதனவி கம்பனி உற்பத்தி அனுமதிப்பத்திரத்திற்காக இலங்கை மின்சார சட்ட இல. 20 ஆண்டு 2009 இன் கீழ் விண்ணப்பித்துள்ளது. இருந்தும் இலங்கை மின்சார சபைச் சட்ட இல. 20 இன் பிரகாரம் அது சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றியிருக்காத நிலையை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தது. அதே நேரத்தில் அரசாங்கம் புதிய மின்சார சட்டத்தை திருத்தும் நோக்கத்தை கொண்டிருப்பது தெரியவந்தது. அப்போது தற்போது சுயாதீனமாக மின் உற்பத்தி செய்வோர் (ஹெலதனவி உட்பட) இந்த தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்பு பெறுவர். சட்ட பரிகாரங்களை, நட்ட இழப்புகளை பெற்றுக்கொள்ள உரிமை உள்ளது.

எனினும், ஹெலதனாவி கம்பனி சட்ட ஆலோசனையை பெற்றுள்ளதுடன், அது சட்டரீதியான பரிகாரங்களை பெறவும், மின்கொள்வனவு உடன்படிக்கையின் “சட்ட மாற்ற” பிரிவு மற்றும் நடைமுறைப்படுத்தல் உடன்பாட்டின் கீழ் இழப்பீட்டினை பெறவும் உரித்துடையது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

## 30 மூலதனக் கடமைப்பாடுகள்

### 30.1 சபை

| | 2012 | 2011 |
|---|---|---|
| சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஆனால் ஒப்பந்தங்கள் இடம்பெறாதவை | 143,658 | 47,462 |
| ஒப்பந்தங்கள் இடம்பெற்றவை ஆனால் ஏற்பாடு செய்யப்படாதவை | 1,818,762 | - |
| **மொத்தம்** | 1,962,420 | 47,462 |

### 30.2 இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

இக்கம்பனியானது அதன் வழமையான தொழிற்பாட்டிற்காக ஆதனம், பொறி, உபகரண கணிசமான கொள்வனவுக்காக எந்தவொரு கடமைப்பாட்டையும் 31 டிசெம்பர் 2012 இல் கொண்டிருக்கவில்லை. (2011 இல் இல்லை)

### 30.3 எல்.ரி.எல். ஹோல்டிங் (தனியார்) கம்பனி

**நாணயக் கடிதங்கள்**

| சொந்த / துணை/ கூட்டுமுயற்சி/கம்பனி | வங்கி | 2012 | 2011 |
|---|---|---|---|
| எல்.ரி.எல். ஹோல்டிங் தனி.கம்பனி | ஹட்டன் நஷனல் வங்கி | 98,641 | - |
| லக்தனவி கம்பனி | மக்கள் வங்க | 37,464 | - |
| ஹெலதனவி கம்பனி | ஹட்டன் நஷனல் வங்கி | 20,989 | - |
| எல்.ரி.எல். கல்வனைஸ் தனி. கம்பனி | ஹட்டன் நஷனல் வங்கி | 18,290 | 112 |
| லங்கா இன்டஸ்றியல் புரொடெக் இன்சினியறிங் | ஹட்டன் நஷனல் வங்கி | 21,606 | 12,802 |
| எல்.ரி.எல். டிரான்ஸ்போமர்ஸ் கம்பனி | ஹட்டன் நஷனல் வங்கி | 124,484 | 22,666 |
| | | **321,476** | **35,580** |

**உத்தரவாதம்**

எல்.ரி.எல். ஹோல்டிங் தனியார் கம்பனி துணைக்கம்பனிகளால் பெறப்பட்ட கடன்களுக்காக ரூபா 400,000,000 பெறுமதியான கம்பனி உத்தரவாதத்தினை வங்கியொன்றிற்கு வழங்கியுள்ளது.

### 30.4 தொழிற்பாட்டு குத்தகை கடமைப்பாடுகள் - குழுமம் குத்தகை பெறுனராக தன்மை

கம்பனியானது லங்கா இன்டஸ்றியல் எஸ்டேட் லிமிட் உடன் 30 வருடகால குத்தகை ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது. 01 யூன் 1998 முதல் 31 மே 2028 வரை

| | 2012 | 2011 |
|---|---|---|
| ஓராண்டிற்குள | 4,447 | 8,894 |
| ஓராண்டிற்குப் பின் ஆனால் 5 ஆண்டுகளுக்கு மேற்படாமல் | - | 4,447 |
| | 4,447 | 13,341 |

குத்தகை வாடகைத் தொகைகள் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளும் புதுப்பிக்கப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குத்தகை வாடகைகளை தீர்மானிக்க முடியாத காரணத்தினால் தொழிற்பாட்டுக் குத்தகைக் கடமைப்பாடுகள் 30 யூன் 2013 வரை மாத்திரமே கூறப்பட்டுள்ளன.

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

## 30.5 லக்தனவி லிமிட்டெட்டும் அதன் கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும் உரிமமும்

**தொழிற்பாட்டுக் குத்தகை கடமைப்பாடுகள்**
**தன்மை**

கம்பனியானது 1996 பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் 2013 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையான 17 வருட காலப்பகுதிக்காக லங்கா இன்டஸ்ரியல் எஸ்டேட் லிமிட்டெட் உடன் ஒரு தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கையை செய்துள்ளது.

| | 2012 | 2011 |
|---|---|---|
| ஒரு வருடத்தினுள | 1,678 | 12,762 |
| ஒரு வருடத்தின் பின் ஆனால் 5 வருடங்களுக்கு மேற்படாதது | - | 1,678 |
| | 1,678 | 14,440 |

## 30.6 ஹலதனவி லிமிட்டெட் (கூட்டாகக் கட்டுப்படுத்தும் உரிமம்)

### (a) இலங்கை மின்சார சபையுடனான மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கை

ஹலதனவி லிமிட்டெட் ஆனது ஒரு வருடத்திற்கு 698,417,280 kWh எனும் குறைந்தபட்ச உத்தரவாதப்படுத்தப்பட்ட சக்தி அளவினை (MGEA) வழங்கல் செய்யத் தவறுமாயின், கீழ்வரும் இலக்குவிலகல் இழப்பீட்டினை செலுத்தவேண்டும்

| பற்றாக்குறை | இலக்கு விலகல் இழப்பீட்டுத் தொகை |
|---|---|
| (MGEA) 10% இலும் மேற்பட்டதும் 25% வரையானதும் | இயல்வலு அறவீட்டின்15% |
| (MGEA) 25% இலும் மேற்பட்டது | இயல்வலு அறவீட்டின் 25% |

### (b) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான எரிபொருள் வழங்கல் உடன்படிக்கை

வழங்கல் அட்டவணையின் (மாற்றத்திற்கு உட்படத்தக்க) கீழ் எரிபொருளை ஹலதனவி லிமிட்டெட் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் தனது கடப்பாடுடன் இணங்கி நடக்காவிட்டால் கிரயங்கள், செலவினங்கள், நேரடியான மற்றும் விலக்கியதாக முன்கொணரப்பட்ட சேதங்கள் மற்றும் நட்டங்களின் விளைவாக வரும் அத்தகைய தவறுகைகள் அல்லது இயலாமை என்பவற்றுக்கு 30 நாட்களுக்குள் கம்பனி கொடுப்பனவு செய்தல் வேண்டும். எனினும் இந்த உடன்படிக்கையின் கீழ் கம்பனியின் பரிப்புக்கள் வருடத்திற்கு உயர்ந்தபட்சம் US $ 500,000 அமெரிக்க டொலர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்கல் உடன்படிக்கையின் சரத்து 3.5 (C) இற்கிணங்க கம்பனியானது பின்வரும் வங்கிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் வங்கி உத்தரவாதங்களைத் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| தேசிய அபிவிருத்தி வங்கி | 300,000 |
| சம்பத் வங்கி | 300,000 |

### (c) லக்தனவி லிமிட்டெட் உடனான தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை

இந்த உடன்படிக்கையின்படி, இறுதி பூர்த்தியாக்கல் திகதிக்குப் பின் செலுத்தப்பட வேண்டிய நிலையான கட்டணம் வருடாந்தம் US $ 625,000 அமெரிக்க டொலர் சமனான மாதத் தவணைகளில் செலுத்தப்படவேண்டும்..

இந்த உடன்படிக்கையின் முன்கூட்டிய முடிவுறுத்துகையின் மீது, தவணையின் அல்லது தவணைப் பகுதியின் விகிதாசார வீதத்தில் ஒவ்வொரு எஞ்சியிருக்கும் வருடத்திற்காகவும் மேலதிக தொகையாக US $ 2,000,000 அமெரிக்க டொலர்களை கம்பனி லக்தனவி லிமிட்டெட் இற்கு செலுத்துவதற்கு சட்டக் கடப்பாட்டினை கொண்டுள்ளது..

### (d) LTL புரொஜெக்ட் (பிரை) லிமிட்டெட்டுடனான எரிபொருள் காவுகை உடன்படிக்கை

கம்பனியானது, எரிபொருள் காவுகைக்காக LTL புறொஜெக்ட் (பிரை) லிமிட். உடன் குறித்த காலப்பகுதியில் ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளது. ஏற்பாட்டிற்கு இணங்க, பொறியில் மின்பிறப்பாக்கம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மாதாந்தம் US $ 10,500 அமெரிக்க டொலர் எனும் ஒரு நிலையான கட்டணத்தைக் கம்பனி செலுத்த வேண்டும்.

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

## 31 உறவுமுறை சார்ந்தோர் வெளிக்காட்டல்கள்

### 31.1 சபை

### 30.1.1 ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நாட்டம்

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் இ.மி.ச. தலைவரின் அலுவலகதை பேராசிரியர். விமலதர்ம அபேவிக்கிரம கொண்டிருந்தார். அவர் இ.மி.ச. இன் துணைக் கம்பனிகளான லங்கா இலக்றிசிற்றி கம்பனி (பிரை) லிமிட் மற்றும் LTL ஹோல்டிங் (பிரை) லிமிட். ஆகியவற்றின் பணிப்பாளர் சபையின் ஒரு பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார்.

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் பொறியியலாளர். டபி.டி. அநுர சேனக விஜயபால அவர்கள் இ.மி.ச. இன் துணை தலைவராகவும் திரு. பி.பி. குணசேன அவர்கள் இ.மி.ச. இன் செயற்படு பணிப்பாளராகவும் இருந்தனர். மேலும் அவர்கள் லங்கா நிலக்கரி கம்பனி (பிரை) லிமிட்., ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (பிரை) லிமிட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி (பிரை) லிமிட். ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் பணிப்பாளர்களாகவும் சேவையாற்றியுள்ளனர்.

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக கலாநிதி. பி.எம்.எஸ். பட்டகொட மற்றும் திரு. ஜயசிங்க ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

2012.07.23 அன்று திரு. கே.டி. ரணசிங்க ராஜினாமா செய்ததுடன் 2012.07.16 அன்று கலாநிதி. வை.டி. நிஹால் ஜயதிலக ராஜினாமா செய்திருந்தார்.

2012.07.16 அன்று இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரான திரு. ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க நியமிக்கப்பட்டதுடன் 2012.08.13 அன்று இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்கு இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திரு. சி.ஜே.பி. சிறிவர்த்தன நியமிக்கப்பட்டார்.

### 31.1.2 கீழ்வரும் உறவுமுறை சார்ந்த கம்பனிகளுடன் சபையானது பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுத்திருந்தது.

| | 2012 | 2011 |
|---|---|---|
| a) பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனைகள் | | |
| மின்சார விற்பனைகள் - மொத்த வழங்கல் LECO | 19,076,160 | 14,968,050 |
| b) பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவுகள் | | |
| LTL டிரான்ஸ்போமர்ஸ் லிமிட். | 914,089 | |
| LTL ஹோல்டிங் (பிரை) லிமிட். | 432 | |
| LTL கல்வனைசர்ஸ் (பிரை) லிமிட். | 82,701 | |
| பவன் தனவி (பிரை) லிமிட் | 79,236 | |
| ANTE LECO மெட்டறிங் கம்பனி (பிரை) லிமிட். | 393,362 | 799,146 |
| ஹெலதனவி | 12,583,663 | 8,421,336 |
| லக்தனவி | 2,069,323 | 1,756,363 |
| நிவிது (பிரை) லிமிட். | 67,551 | 94,735 |
| நிவிது அசுபினெல்லா (பிரை) லிமிட். | 118,823 | 169,956 |
| லங்கா நிலக்கரி கம்பனி (பிரை) லிமிட். | 11,099,248 | 6,785,602 |

### 31.1.3 இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிமங்களுடனான ஊடுசெயல்கள்

இலங்கை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இ.மி.ச. இருப்பதன் காரணமாக, இ.மி.சபையானது இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கததின் கட்டப்பாடு, இணைந்த கட்டுப்பாடு அல்லது கணிசமான தலையிடற் தகவினை கொண்டுள்ள உரிமங்கள் ஆகியவற்றை LKAS 24 "உறவுமுறைத் தரப்பினர் வெளிகாட்டல்கள்" இற்கு இணங்க உறவுமுறைத் தரப்பினராக இலங்கை மிந்சார சபை கருதுகின்றது.

இ.மி.ச. ஆனது இலங்கை அரசாங்கத்துடனனும் அதன் உறவுமுறைத் தரப்பினருடனும் கொடுக்கல் வாங்கல்கள், ஏற்பாடுகள் மற்றும் உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளதுடன் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

| | கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2012 | 2011 |
|---|---|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | எரிபொருள் கொள்வனவு | 42,295,279 | 24,982,269 |
| பொதுத் தாளாண்மைகள் திணைக்களம் | செயற்றிட்டக் கடன்கள் பெறல் | 89,443,023 | 22,312,682 |
| மக்கள் வங்கி | வங்கிக் கடன்கள் பெறல | 19,455,145 | 4,170,411 |

### 31.1.4 பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்

பிரதான முகாமைத்துவ ஆளணியினர் சபையின் பணிப்பாளர்களில் உள்ளடங்குகின்றனர்.

**(i) பணிப்பாளர்களுக்கான கடன்கள**

சபையின் பணிப்பாளர்களுக்கு கடன்கள வழங்கப்படவில்லை.

**(ii) பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் ஊதியங்கள்**

மீளாய்வுக்கு உட்பட்ட இக் காலப்பகுதியில் கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் சார்பில் ரூ. 2,295,000/- (2011 - ரூ. 1,779,450 செலவுசெய்யப்பட்டது.

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

## 31.2 LTL ஹோல்டிங் (பிரை) லிமிட்.

**குறிப்பிடத்தக்க உறவுமுறை சார்ந்தோர் விபரங்கள் பின்வருமாறு**

### 31.2.1 மேன்னிலை கம்பனி மற்றும் தொடர்புடைய உரிமங்களுடனான கொடுக்கல் வாங்கல்

| | கம்பனியின் பெயரும் தொடர்புடைமையும் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.மி.ச மேன்னிலை கம்பனி | | LTL ESOT தொடர்புபட்ட ஏனையவை | | LTL ESOTLTD உரிமையாண்மை மீதான குறிப்பிடத் தக்க செல்வாக்கு | | மொத்தம் | |
| | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 |
| **கொடுக்கல் வாங்கல் வகை** | | | | | | | | |
| **சனவரி 01 இல் மீதி** | 1,293,349 | 898,307 | (376,959) | (285,893) | (26,984) | 168 | 889,406 | 612,582 |
| பொருட்கள்/சேவைகள் விற்பனை | 13,506,046 | 7,391,694 | - | - | - | - | 13,506,046 | 7,391,694 |
| பிரகடனப்படுத்திய பங்கிலாபம் | (2,035,248) | (188,962) | (679,522) | (91,066) | (872,249) | (80,984) | (3,587,019) | (361,012) |
| வட்டி வருமானம் | - | - | - | - | 252,687 | - | 252,687 | - |
| பெற்ற முற்பணங்கள் | (365,403) | - | - | - | - | - | (365,403) | - |
| முற்பண எதிரீடுகள் | 339,568 | - | - | - | - | - | 339,568 | - |
| செலுத்திய பங்கிலாபம் | 2,224,210 | 125,975 | 1,056,426 | - | 953,233 | 54,000 | 4,233,869 | 179,975 |
| அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பு | - | (49,707) | - | - | - | (168) | - | (49,875) |
| ஆண்டின்போது பெறுவனவுகள் | (11,638,152) | (6,883,958) | - | - | (252,687) | - | (11,890,839) | (6,883,958) |
| ஆண்டின்போது கொடுப்பனவுகள் | - | - | - | - | - | - | - | - |
| டிசெம்பர் 31 இல் மீதி | 3,324,370 | 1,293,349 | (55) | (376,959) | 54,000 | (26,984) | 3,378,315 | 889,406 |

**மேன்னிலைக் கம்பனி**

குழுமத்தின் சாதாரண பங்குகளில் 63% இனை (2011 - 63%) இலங்கை மின்சார சபை கொண்டுள்ளது.

**கம்பனி மீது குறிப்பிடத்தக்க செல்வாக்குடனான உரிமம்**

குழுமத்தின் சாதாரண பங்குகளில் 27% இனை (2011 - 27%) வரையறுக்கப்பட்ட LTL ஊழியர்களின் பங்கு உடைமை நம்பிக்கைப் பொறுப்பு கொண்டுள்ளது. அவர்கள் உரிமையாண்மையின் நிதி மற்றும் தொழிற்பாட்டுக் கொள்கை முடிவெடுத்தல்களில் பங்குபற்றுவதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்கள்.

**ஏனைய தொடர்புடைய உரிமையாண்மை**

LTL ஊழியர்களின் பங்கு உடைமை நம்பிக்கைப் பொறுப்பு ஆனது உரிமையாண்மையின் 10% (2011 - 10%) சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது.

### 31.2.2 இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிமங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இ.மி.ச. இருப்பதன் காரணமாக, இ.மி.சபையானது இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கததின் கட்டப்பாடு, .ணைந்த கட்டுப்பாடு அல்லது கணிசமான தலையிடற் தகவினை கொண்டுள்ள உரிமங்கள் ஆகியவற்றை LKAS 24 "உறவுமுறைத் தரப்பினர் வெளிக்காட்டல்கள்" இற்கு இணங்க உறவுமுறைத் தரப்பினராக இலங்கை மின்சார சபை கருதுகின்றது.

குழுமமானது இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உரமங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள், ஏற்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி இருந்நதுடன் அறிக்கையிடப்பட்ட குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,

| | கொடுக்கல் வாங்கல் தன்மை | 2012 | 2011 |
|---|---|---|---|
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | எரிபொருள் கொள்வனவு | 5,694,150 | 3,942,381 |

மேலும், வியாபாரத்தின் சாதாரண நடைமுறையுடன் தொடர்புபட்ட, இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிமங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறு.

நியதிச்சட்ட விகிதங்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகியவற்றுக்கான வரிகள் மற்றும் சுங்க வரிகள்.

பிரதானமாக தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர் போன்றவற்றுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட பயன்பாட்டுக் கொடுப்பனவுகள்.

பதவியிலிருந்து ஓய்வுபெறுபவர்களுக்கான EPF, ETF நன்மைக் கொடுப்பனவு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவு

# 2012.12.31 இல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி

**31.2.3 கம்பனி அல்லது மேன்னிலைக் கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்**

மேன்னிலைக் கம்பனி மற்றும் தலைமை நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களாகிய பிரதான முகாமைத்துவ ஆளணியினர் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாவர்.

a) பிரதான முகாமைத்துவ ஆளணியினர் இழப்பீடு

| | 2012 | 2011 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் பயன்கள் | 25,605 | 24,915 |
| சேவையின் பின்னரான பயன்கள் | 4,775 | 4,775 |
| | 30,380 | 29,690 |

மேலுள்ள இழப்பீடுகளுக்கு மேலதிகமாக, கம்பனியானது பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் செய்துகொள்ளப்படும் தொழில் ஒப்பந்தங்களுக்கு அமைய காசு அல்லாத நன்மைகளைக்கூட அவர்களுக்கு வழங்குகிறது.

**31.3 இலங்கை மின்சார கம்பனி (பிரை) லிமிட்.**

தொடர்புடைய தரப்பினரால் வெளிப்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க தகவல்கள் பின்வருமாறு,

**31.3.1 கம்பனியானது பின்வரும் தொடர்புடைய கம்பனிகளுடன் முன்னெடுத்த கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,**

| | மேன்னிலைக் கம்பனி இலங்கை மின்சார சபை | | ஏனைய பெரிய பங்குதாரர்கள் திறைசேரி | | உப நிறுவனம் மற்றும் ஏனைய தொடர்புடைய கம்பனிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 |
| சனவரி 01 இல் மீதி | (1,728,338) | (1,672,132) | 210,015 | 287,437 | 136,585 | 131,862 |
| மின்சாரக் கொள்வனவு | (15,148,014) | (14,913,616) | - | - | - | - |
| மின்சாரத்திற்கான கொடுப்பனவு | 16,414,904 | 14,865,987 | - | - | - | - |
| ADB கடன் மீள்கொடுப்பனவு | - | - | (77,422) | (77,422) | - | - |
| கடன்கள் மீதான வட்டி | - | - | 24,229 | 33,190 | - | - |
| அட்டுறுச் செலவுகள் | - | (515) | - | - | - | - |
| வட்டிக் கொடுப்பனவு | - | - | (24,229) | (33,190) | - | - |
| மூலப்பொருள் மாற்றம் | - | (8,062) | - | - | - | 8,062 |
| மூலப்பொருளின் பெறுகை | - | - | - | - | - | |
| பொருட்கள் கொள்வனவு | - | - | - | - | - | (136,681) |
| கொடுப்பனவுகள் | - | - | - | - | (266,474) | 147,663 |
| இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 3,100,000 | - | - | - | 251,185 | (14,321) |
| டிசெம்பர் 31 இல் மீதி | (1,791,922) | (1,728,338) | 132,593 | 210,015 | 121,296 | 136,585 |

**31.3.2 அரசாங்கத்துடன் தொடர்புபட்ட உரிமங்களுடனான கொடுக்கல் வாங்கல்**

வெளிக்காட்டற் தேவைப்பாடுகளுக்காக பிரதான முகாமையானது கம்பனியைக் கொண்டுள்ள வரிசைநிலை அமைச்சுக்கு தொடர்புடைய உரிமங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள், அரசாங்கம், திறைசேரி என்பவற்றுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக வேறு எந்த கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டினுள் நடைபெறவில்லை (2011 - இல்லை) என்பதை வெளிக்காட்டத் தீர்மானித்தது.

**கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணி அல்லது அதன் மேன்னிலை கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் உள்ளதோடு பொது முகாமையாளர் உட்பட அதன் மேன்னிலைக் கம்பனி மற்றும் பிரதேச தலைமைகளாகவும் இருப்பார்கள் என கம்பனி வரையறுத்திருக்கிறது.

| | 2012 | 2011 |
|---|---|---|
| **பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஊதியம்** | | |
| பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் குறுகிய கால நன்மைகள் | 419 | 326 |
| ஏனைய பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஊதியங்கள் | 19,948 | 11,995 |
| **பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான மொத்த இழப்பீட்டுக் கொடுப்பனவு** | 20,367 | 12,321 |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது<br>My No. — ஈஎச்/ஏ/சீஈபPP/எப்ஏ/2012 | ඔබේ අංකය<br>உமது இல<br>No. | දිනය<br>திகதி<br>Date — ................/2014 |

**தலைவர்,**
**இலங்கை மின்சார சபை**

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை மின்சார சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கள், விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றக் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் (சீஈபீ) ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2014 ஜனவரி 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. — 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. — 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. — oaggov@sltnet.lk

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, சபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 தொகுதியினது நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் துணைக் கம்பனிகளில் சீஈபீ இற்குள்ள உரித்துடைமை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

| கம்பனியின் பெயா | நேரடியான ஆர்வம் வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி | நேரடியான ஆர்வம் வரையறுத்த எல்ஈசீஓ (தனியார்) கம்பனி | சீஈபீ இற்கான தொகுதியின் ஆர்வம் |
|---|---|---|---|
| (i) வரையறுத்த பவான் தனவி (தனியார்) கம்பனி | 51 | - | 32 |
| (ii) வரையறுத்த நிவுது (தனியார்) கம்பனி | 48 | - | 30 |
| (iii) வரையறுத்த நிவுது அசுபினில்லா (தனியார்) கம்பனி | 48 | - | 48 |
| (iv) வரையறுத்த அன்டி எல்ஈசீஓ மீற்றரிங் (தனியார்) கம்பனி | - | 70 | 38.5 |

## 2.3 இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) எல்கேஏஎஸ் 2 – பதிவேட்டுப்பொருட்கள்: நியமத்தின்படி, பதிவேட்டுப் பொருட்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் அளவிடப்படவேண்டியதுடன் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் முதல் வந்தது முதல் வெளியேற்றல் (எவ்ஐஎவ்ஓ) அல்லது நிறையளித்த சராசரிக் கிரய வாய்ப்பாட்டினை பயன்படுத்துதவதன் மூலம் ஒப்படைத்தல் வேண்டும். ஆனால் நியமத்திற்கு முரணாக, சபையானது விநியோக வலயங்களில் அதனது பதிவேட்டுப்பொருள் மதிப்பீட்டிற்காக நியம விலைகளைப் பயன்படுத்தியிருந்தது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புக்களின் படி, விலைத் தளம்பலுக்கு உட்பட்ட பதிவேட்டுப்பொருட்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரயங்கள் அனுமதிக்கப்படலாம் ஏனைய நிலைமைகளில் பதிவேட்டுப்பொருட்களின் பெறுமதி கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் பெறுமதியிடப்பட வேண்டும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நடப்பு நிலமைகளின் படி, விலைகள் அதிகரித்துச் சென்றனவே தவிர தளம்பலுக்குட்பட்டிருக்கவில்லை. அனேக சந்தர்ப்பங்களில் சபை அதனது நியம விலைகளை உள்ளபடியான விலைகளிலும் பார்க்க அதிகரித்துக் காட்டியிருந்தமை தெளிவாகின்றது. உதாரணமாக: 2012 இல் பொருளின் விலைகள் மற்றும் ஊழிய கூலிகளை மிகையாக மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேறிய வருமானம் முறையே ரூபா 1,647 மில்லியன் (2011 - ரூபா 2,920 மில்லியன்) மற்றும் ரூபா 1,034 மில்லியன் (2011 - ரூபா 803 மில்லியன்) ஆக இருந்தது. அத்துடன் வருமானக் கூற்றில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட மேந்தலைகளாக ரூபா 1,574மில்லியன் தொகையொன்று (2011 - ரூபா 1,255 மில்லியன்) வேலைகள் கிரயத்திற்குச் சாட்டப்பட்டிருந்தது. (உள்ளபடியாக பயன்படுத்திய ஊழிய மணித்தியாலங்களிற்காக நியம வீதங்களை பிரயோகித்து கணிக்கப்பட்டது)

அதன் விளைவாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள், பேணுதல்கள் மற்றும் முடிவடைந்த வேலைகளின் நியாயமான பெறுமதிகள் அவதானிக்கப்படவில்லை.

(ii) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களை விலை மதிப்பிடுவதற்காக சீரான கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் வழிகள் மற்றும் சில விநியோக வழிகள் உள்ளபடியான கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை சேவை பிரதான இணைப்பு (எஸ்எம்சீ), முறைமை உருவாக்கல் (எஸ்வைஏ), ஈரான் நிதியளிப்புச் செயற்திட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொழில்கள், கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு (டீசீபீ) போன்ற ஏனைய தொழில்கள் நியமக் கிரயத்தில் விலை மதிக்கப்பட்டிருந்தன.

(b) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியத்திற்கான கணக்கீடு மற்றும் அரசாங்க உதவிகளை வெளிப்படுத்தல் :** கிராமிய மின்சாரம் வழங்கல் செயற்திட்டங்கள் உள்ளடங்கலான மின்சாரத்தை பிறப்பித்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவிகள் மற்றும் மூலதன மானியங்கள் என்பவற்றில் சில திறைசேரியினால் மூலதன பங்களிப்பாக கருதப்படாதிருந்த போதிலும் அவை நீண்டகாலமாக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாகக் கருதப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி, சபைக்கான மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 96 பில்லியன் ஆனதுடன் சபையின் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 110 பில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 14 பில்லியன் அரசாங்க மானிய வேறுபாட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்கீட்டுப் பரிகாரம் நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை.

(c) **எஸ்எல்எவ்ஆர்எஸ் 1 – எஸ்எல்எவ்ஆர்எஸ் இனை முதற்தடவையாக கடைப்பிடித்தல்:** மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்களில் பின்வரும் விடயங்களிற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) பதிவேட்டுப்பொருட்கள் மற்றும் ஏனையவைகள்

(ஆ) பதவியினர் கடன்பட்டோர்

(இ) குத்தகைகள்/பொறி ஆதனம் உபகரணம்

(ஈ) காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு

(உ) வியாபாரச் செலுத்தவேண்டியவை

(ஊ) தொடர்புடைய தரப்பினர்களிற்கு செலுத்தவேண்டிய தொகை

(d) எல்கேஏஎஸ் 24 – தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் : எல்கேஏஎஸ் 24 இனால் வேண்டப்பட்டவாறு தொடர்புடைய தரப்பினர்களுடனான உறவின் தன்மை அவ்வாறே கொடுக்கல்வாங்கல் குறித்த தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான தொடர்பின் எதிர்காலத் தாக்கங்களை புரிந்துகொள்வதற்குத் தேவையான நிலுவை மீதிகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்களை சபை வெளிப்படுத்தியிருக்கவில்லை. சபையுடன் உறவினைக் கொண்டுள்ள கம்பனிகளுடனான பின்வரும் ஒப்பந்தங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) வவுனியா கிளிநொச்சி பறிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஜேபீஐசீ நிதியளித்தல் செயற்திட்டம்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

(ii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் பறிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம்.

(iii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் கிழக்கு மாகாணச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,345 மில்லியன் ஆகும்)

(iv) வட கிழக்கு வலு பரிமாற்றல் அபிவிருத்திச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 425 மில்லியன் ஆகும்)

(v) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் II ஆம் கட்டம் - ஏடீபீ நிதியளித்தல் செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,815 மில்லியன் ஆகும்)

(vi) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் I ஆம் கட்டம் - ஜீஓஎஸ்எல் நிதியளித்தல் செயற்திட்டம்.

(vii) காலி மின் உபநிலையம், உருவாக்கல் மற்றும் புனரமைத்தல் செயற்திட்டம்

(viii) மீள புதுப்பிக்கத்தக்க சக்திவளச் செயற்திட்ட உறிஞ்சலுக்கான மின் உபநிலைய உருவாக்கம் - சீதாவக, பலாங்கொடை, பதுளை, நுவரெலியா, உகுவல மின் உபநிலையங்களின் உருவாக்கம் மற்றும் மஹியங்கன புதிய மின் உப நிலையத்தினை நிர்மாணித்தல் (ஒப்பந்தத் தொகை ரூபா 2,336 மில்லியன் ஆகும்)

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறி ஆதனம் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்கள் தவிர்ந்த ஏனைய சேதங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைக்கு முரணாக காப்புறுதி எஸ்க்ரோ நிதியத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படாதிருந்ததுடன் அந்த இழப்புக்களும் சேதங்களும் சீஈபீ நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறித்துரைக்கப்பட்டிருந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான ரூபா 71 மில்லியன் செலவினம் காப்புறுதி எஸ்க்ரோ நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படாது 2012 ஆம் ஆண்டில் சபை நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் அச் சேதங்களிலிருந்து சபைக்கு ஏற்பட்ட நட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாதிருந்ததுடன் அவைகளை நேரடியாக வருமானத்திற்கு சாட்டுதல் செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்ததனால் சபையின் ஆதனங்களிற்கு ஏற்பட்ட இழப்பினை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான பதிவேடுகள் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) காப்புறுதி எஸ்க்ரோ நிதிய முதலீட்டிலிருந்து கிடைத்திருந்த வட்டி வருமானம் எஸ்க்ரோ நிதியத்தின் வருமானமாக கொள்ளப்படாது நிதியத்தை தோற்றுவித்த காலம் முதல் சபையின் வருமானமாகக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வில் இத்தவறு சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டிலிருந்து தவறு திருத்தப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளில் செய்யப்பட்ட தவறுகளுக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் காப்புறுதி எஸ்க்ரோ நிதிய மீதியும் அதன் முதலீட்டு மீதியும் சமப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக கடந்த அண்மித்த 2005 முதல் 2010 வரை ஆறு ஆண்டுகளிற்கான சீராக்கப்படாத மீதிகள் ரூபா 3,082 மில்லியனாக காணப்பட்டது.

(இ) 2010/2011 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 119 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் வரி பொருத்தமற்ற முறையில் அறவிடப்பட வேண்டியதாக காட்டப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஏனைய பெறவேண்டியவைகளும் நட்டமும் அத்தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) விசேட நிகழ்வுகளிற்கு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலு மற்றும் சக்திவள அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 62 மில்லியன் தொகை செலவு மீதியொன்றாக காணப்பட்டது. ஆனால், தொடர்புடைய கோவையிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் கணக்காய்வில் கணிக்கப்பட்ட உள்ளபடியான பெறப்பட வேண்டிய தொகை ரூபா 14 மில்லியனாகும். ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா 76 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு பாதுகாப்பு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலு மற்றும் சக்திவள அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 8 மில்லியன் ஆகக் காணப்பட்டது. ஆனால், அமைச்சினால் பேணப்பட்ட பதிவேடுகளின் படி பெறப்பட வேண்டிய உள்ளபடியான தொகை ரூபா 6 மில்லியனாகும். ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா 2 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) 2011 சனவரி 01, 2011 திசெம்பர் 31 மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் வாகனங்களின் நியாயமான பெறுமதியை மதிப்பிடுதல் மற்றும் அவற்றின் கணக்கீடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

(i) பொருத்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்புடைய குழுக்களிற்கு வழங்கப்பட்டிருக்காமை காரணமாக சந்தைப் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்காக ஒரேசீரான முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, தலைமையகம், சொத்து முகாமைத்துவம், மையப்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் வினியோக வலயம் 1 இன் குழுக்கள் 2011 சனவரி 01 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதியினை அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் கிரயத்தினை சேர்ப்பதன் மூலம் மதிப்பிட்டிருந்தன. எவ்வாறாயினும், ஏனைய பிரிவுகளின் விலை மதிப்பீட்டுக் குழுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதிகளை முதலில் கணிப்பிட்டு அதன் பின்னர், அந்த சந்தைப் பெறுமதிகளை முறையே 6.7 சதவீத மற்றும் 7.6 சதவீத கழிவுக் காரணிகளைக் கொண்டு 2011 திசெம்பர் 31 மற்றும் 2011 சனவரி 01 இல் உள்ளவாறான வகனங்களின் சந்தைப் பெறுமதியினைக் கணிப்பிட்டிருந்தன.

(ii) மேற்படி தவறு காரணமாக (2012 ஆம் ஆண்டின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகனங்களின் நியாயப் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டிருத்தல்) குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சந்தைப் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மோட்டார் வாகன கணக்கு மீதி ரூபா 396 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) வீதியில் ஓட முடியாமை காரணமாக விலை மதிப்பீட்டுக் குழுக்களினால் 63 வாகனங்கள் பாவனைக்குதவாதவை என பிரகடனப்படுத்தப்பட்டு அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த வாகனங்களின் அகற்றல் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை 2012 ஆம் ஆண்டில் முதற் தடவையாக அதன் நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வரிச் சீராக்கத்தினை கைக் கொண்டிருந்ததுடன் 2012 சனவரி 01 மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னைய நிதிக்கூற்றுக்களை எஸ்எல்எப்ஆர்எஸ் உடன் இணக்கமுறும் வகையில் மீளமைத்திருந்தது.

1982 முதல் வரித் திரட்டுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 43,894 மில்லியனாகும். அக்குறைபாடு காரணமாக, வரிப் பொறுப்பினை மதிப்பிடுகையில் வரி வருமானத்திலிருந்து அச் சொத்துக்களுடன் தொடர்புடைய மூலதனப் படியின் பங்கை சபைக்கு கழிக்க முடியாதிருந்தது. ஆகையால், பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டில் அந்த ரூபா 43,894 மில்லியன் சொத்துக்களின் பெறுமதியை நிரந்தர வேறுபாடாக சபை கருத்திற் கொண்டடிருந்தமையின் விளைவாக அண்ணளவாக ரூபா 12 பில்லயனால் குறைத்துக் காட்டப்பட்டு முன்கொண்டுவரப்பட்டிருந்த வரி நட்டத்தினை எதிர்கால வரிப்பொறுப்பிலிருந்து அறவிட முடியவில்லை.

(ஏ) 2012 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பொறி ஆதன மற்றும் உபகரணங்களின் அகற்றல்களிலிருந்தான முறையே ரூபா 55 மில்லியன் மற்றும் ரூபா 57 மில்லியன் இலாபம் புதிய எஸ்எல்எப்ஆர்எஸ் பிரயோகத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மீளச் சீராக்கப்பட்டிருக்கவில்லை. அகற்றப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறாமையால் இத்தவறின் தாக்கத்தினை மதிப்பிட முடியாதிருந்தது.

(ஐ) 2011 இல் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இருப்பு மெய்மைய்வில் சேதமடைந்த இருப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 30 மில்லியன் தொகையான இருப்பு விடயங்கள் 2012 இன் மெய்மையாய்வுச் சபையால் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்காதமையின் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதி மற்றும் அசைவுறாத இருப்பு, மெதுவாக நகரும் மற்றும் சேதமடைந்த இருப்பு ஆகியனவற்றிற்கான நிதிஏற்பாடு இரண்டும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஒ) 2012 இல் மேல் மாகாண தெற்கு (டபிள்யூபீஎஸ்) II அலுவலகத்தினால் வழங்குனர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 18 மில்லியன் தொகையான 7 கொடுப்பனவுகளின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்கள் பொருட்களை வழங்கியிருந்த போதிலும் பொருத்தமற்ற விதத்தில் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) ஹம்பாந்தோட்டை பிரதேச அலுவலகத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,505 மில்லியன் தேறிய புத்தகப் பெறுமதியுடைய உயர் அழுத்த (எச்ரீ) மற்றும் தாழ் அழுத்த (எல்ரீ) வலயமைப்புக்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி காரணமாக அகற்றப்பட்டிருந்தன. ஆனால் 2009 முதல் வருடாந்த பௌதீக மெய்மையாய்வினால் அவை புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும் வலய அலுவலகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் எவ்விதச் சீராக்கங்களும் மேற்கொள்ளப்படாது காணப்பட்டன. அக்குறைபாடு காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பொறி, ஆதன மற்றும் உபகரணங்கள் அத்தொகையால் முறையே அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

அத்துடன், மீள் மதிப்பீட்டுத தொகைகள், அகற்றப்பட்ட திகதிகள், இழிவுப் பெறுமதிகள் போன்ற தொடர்புடைய தகவல்கள் இன்மை காரணமாக பேரேட்டுக் கணக்குகளிலுள்ள அசைவுறாத அந்த எச்ரீ மற்றும் எல்ரீ வலயமைப்புக் கிரயங்களிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான தாக்கத்தினை கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

(ஔ) முன்னைய ஆண்டுகளில் மூலதனமாக்கப்பட்டிருந்த விநியோக வலயம் 4 இல் எஸ்ஐடீஏ செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் மற்றும் விநியோக வழிகளுடன் தொடர்புடைய விலை முரண் ரூபா 121 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனவே விலை முரண் தொடர்புடைய சொத்துக் கணக்கிற்கு சேர்த்துக் கொள்ளப்படாது பரிமாற்றல் மற்றும் வினியோக வழிகளின் கீழ் (குறிப்பிட்ட பரிமாற்றல் மற்றும் வினியோக வழி) புறம்பான விடயமொன்றாக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட திருத்தின் காரணமாக சேதத்தின் தாக்கம் மதிப்பிடப்பட்டு அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்ஈசீஓ இடமிருந்து பெறவேண்டிய தொகை எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இவ்விரண்டு நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 19 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைமை அலுவலகத்திற்கும் சபையின் உப பிரிவுகளிற்குமிடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் இணங்காதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 269 மில்லியன் தேறிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், அந்த மீதிகள் முறையற்ற விதத்தில் வியாபார மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சொத்துக்கள் பட்டோலைகளின் படி, முடிவுறா வேலைகளிலிருந்து பூரணப்படுத்தப்பட்ட தொழில்களை 2012 இல் பொறி ஆதன உபகரணங்களிற்கு மாற்றுதலுக்கும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முடிவுறா வேலைகள் பட்டோலைகளிற்குமிடையே ரூபா 307 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) முடிவுறா வேலைகள் கணக்கிலிருந்து 2012 இல் மாற்றப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட தொழில்களின் பெறுமதிக்கும் வினியோக வலயம் 3 இல் முடிவுறா வேலைகள் கணக்கிலிருந்து பொறி ஆதன உபகரணங்களிற்கு மாற்றப்பட்ட தொழில்களின் பெறுமதிக்குமிடையே ரூபா 39 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச தொங்கல் மீதி மற்றும் பிரதான தொங்கல் மீதி என்பன முறையே ரூபா 16 மில்லியன் மற்றும் ரூபா 8 மில்லியனாக காணப்பட்டன. அந்த தொங்கல் மீதிகளிற்கான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு அத் தொங்கல் மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2008 சனவரி 24 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு ரூபா 38 மில்லியன் பொருட்கள் சேவைகள் வரி மேலதிகக் கொடுப்பனவை தொடர்ந்து வரும் ஆண்டுகளில் எழுகின்ற சபைக்கான ஏதேனும் வரிப்பொறுப்பிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்படாது 2002 சனவரி முதல் பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) மேல் மாகாண தெற்கு II (டபிள்யூபீஎஸ் - II) இலுள்ள எல்ஈசீஓ இன் பின்வரும் வரவு மற்றும் செலவு மீதிகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாகத் தீர்க்கப்படாது காணப்பட்டன.

| கிளை | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | |
|---|---|---|---|
| | | ரூபா மில். | ரூபா மில். |
| நுகேகொட | 9742661/8 | (11) | |
| | 9742662/8 | 5 | |
| | 9742009/8 | (7) | (13) |
| கோட்டே | 9742663/8 | (9) | |
| | 9742008/8 | 14 | |
| | FAC | 19 | 24 |
| மொத்தம் | | | 11 |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

(ஈ) 2003 திசெம்பர் 17 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, எஸ்எல்-சீ15 இன் கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் வங்கியிடமிருந்தான (ஜேஏபீஜசீ) ரூபா 3,047 மில்லியன் நிகழ்ச்சித்திட்டக் கடன் திறைசேரியூடாகப் பெறப்பட வேண்டியது என சபையால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, குறித்த தொகை திறைசேரிக்குக் கிடைத்திருந்த நிகழ்ச்சித்திட்டக் கடனாக இருந்தமையால் அதனை எதிரீடு செய்வதற்குக் கருதப்படலாகாது என திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் தனது 2006 திசெம்பர் 02 ஆந் திகதிய ரீஓ/ஆர்ஈவீ/எஸ்எல்/2/96 ஆம் இலக்க கடிதத்தினால் சபைக்கு அறிவித்திருந்தார். அதன்படி அத்தொகை 2003 இல் பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டு அது முதல் அறவிடக்கூடிய தன்மையினை மதிப்பீடு செய்யாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

2013 இல் சபையின் கணக்குகளிலிருந்து அந்தப் பெறவேண்டிய மீதியினை பதிவழிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எல்கேஏஎஸ் 10 – அறிக்கையிடல் காலத்தின் பின்னரான நிகழ்வுகள் இன் பிரகாரம் அது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 38 மில்லியன் பெறுமதியான 12 காணிகளிற்கான காணி உறுதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) டபிள்யூபீஎஸ் - II உடன் தொடர்புடைய பின்வரும் தொழில்களை ஒரு வருடத்திற்கும் மேலாக முடிவுறுத்தாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

| காலப் பகுப்பாய்வு | தொழில்களின் எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 இல உள்ளவாறான முடிவுறா வேலைகளின் பெறுமதி ரூபா மில்லியன் |
|---|---|---|
| 1 -2 ஆண்டுகள் | 2,344 | 450 |
| 2 - 3 ஆண்டுகள் | 1,016 | 268 |
| 3 - 4 ஆண்டுகள் | 317 | 124 |
| 4 - 5 ஆண்டுகள் | 121 | 58 |
| 5 ஆண்டுகளிற்கு மேல் | 350 | 64 |
| **மொத்தம்** | **4,148** | **964** |

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு மாதங்களுக்கு முன்னர் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 14 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதிகொண்ட ஏழு இருப்பு விடயங்கள் ஆண்டின் இறுதி இருப்புக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஈ) திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 128,240 மில்லியன் பெறுமதியான நான்கு கடன்கள் தொடர்பில் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்காததுடன் அதன் காரணமாக மீளளித்தல் பட்டியல் மற்றும் அக்கடன்களிற்கான வட்டிகள் என்பன கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

### 2.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(a) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம்

(i) 47 (1) (ஆ) ஆம் பிரிவு – சபையினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பாக சபை பொதுத் திறைசேரியுடன் ஆழ் நிதியமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். கடன் மீட்டல் ஒதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அது 2000 முதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

(ii) 47 (2) (அ) ஆம் பிரிவு – சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வினை மேவுவதற்காக சபை பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோரும் ரூபா 1 மில்லன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(iii) 47 (2) (ஆ) ஆம் பிரிவு – சபையின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்குடனும் சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சபை அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 165.46 மில்லியனாகும்.

(ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள அதன் மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீதமான பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி எஸ்கரோ நிதியத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,433 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சபை முதலீடு செய்திருந்தது.

(இ) 2009 முதல் அமுலுக்கு வருகின்ற அடுத்த சம்பளத் திருத்தத்லிருந்து உழைக்கும்போதே செலுத்தும் வரிப்பொறுப்பினை ஊழியர்களிற்கு நகர்த்துதல் வேண்டும் என்ற 2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ஊழியர்களால் தாங்கிக் கொள்ளப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினை சபை செலுத்தியிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் செலுத்தப்பட்டிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 981 மில்லியன் ஆகும்.

| ஆண்டு | தொகை<br>ரூபா |
|---|---|
| 2009 | 215,052,824 |
| 2010 | 362,275,677 |
| 2011 | 194,306,233 |
| 2012 | 269,762,012 |
| **மொத்தம்** | **981,396,746** |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட சீஈபீ இன் நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 61,447 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்திற்கெதிராக முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 20,185 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தினை ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவில் ரூபா 41,262 மில்லியன் மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் படி, 2012 ஆம் ஆண்டில் நீர்மின்சார உற்பத்தியானது நீரேந்துப் பகுதிகளில் காணப்பட்ட குறைவான நீர் மட்டம் காரணமாக 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட 4,619 ஜீடபிள்யூஎச் உடன் ஒப்பிடுகையில் 1,327 ஜீடபிள்யூஎச் இனால் அல்லது 29 சதவீத குறைவை காட்டியது. அதன் விளைவாக 2012 இல் அதிகரித்த 451 ஜீடபிள்யூஎச் கேள்வியினை சமாளிப்பதற்காக அனல் மின்சார உற்பத்தி 1,552 ஜீடபிள்யூஎச் (நிலக்கரியினைப் பயன்படுத்தி 1,404 ஜீடபிள்யூஎச் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது) அல்லது 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

**உற்பத்தி விபரங்கள்**

| மூலம் | 2012<br>ஜிடபிள்யூஎச் | 2011<br>ஜிடபிள்யூஎச் | வேறுபாடு<br>ஜிடபிள்யூஎச் | % |
|---|---|---|---|---|
| நீர்மின் | 3,292 | 4,619 | -1,327 | 29 |
| அனல்மின் | 8,338 | 6,786 | 1,552 | 23 |
| மாற்றீடு செய்யப்படாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 171 | 125 | 46 | 37 |
| **மொத்தம்** | **1,801** | **11,530** | **271** | **02** |

தொடர்ச்சியான இந்நிலமை காரணமாக எரிபொருள் மற்றும் சுதந்திர மின்சார வழங்குனர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு செலவினத்தை சபை மேற்கொண்டிருந்தது. இவ்விரண்டு காரணிகளிற்காகவும் 2012 இல் ஏற்பட்டிருந்த செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 21,622 மில்லியன் மற்றும் ரூபா 36,120 மில்லியனாக காணப்பட்டது. அது மொத்த நட்டத்தினை முறையே 52 சதவீதத்தினாலும் 87 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்குப் பங்களித்திருந்தது.

(ஆ) கேள்வியில் ஏற்பட்டிருந்த ஓரளவு அதிகரிப்புக் காரணமாக ரூபா 31,052 மில்லியன் மேலதிக வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்த போதிலும், பிரதானமாக நிலவுகின்ற கட்டண கட்டமைப்பின் காரணத்தால் சபை 2012 இல் நட்ட நிலையினை எதிர்நோக்கியிருந்தது. எவ்வாறாயினும், சபையால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த தேசியப் பங்களிப்பு விலை மதிக்கப்பட முடியாததாகும்.

**நட்ட தொகுப்பு - 2012**

| வகை | லாபம்/(நட்டம்)<br>ரூபா மில்லியன் | % |
|---|---|---|
| உள்நாடு | (32,716) | (54) |
| மதத்தலங்கள | (795) | (01) |
| பொது நோக்கம் | 8,413 | 14 |
| கைத்தொழில் | (24,528) | (40) |
| ஹோட்டேல்கள் | (771) | (01) |
| வீதி விளக்குகள | (2,346) | (04) |
| எல்ஈசீஓ விற்பனைகள் | (8,420) | (14) |
| **மொத்தம்** | **(61,164)** | **100** |

அதன்படி, பொது நோக்கம் தவிர்ந்த ஏனைய எல்லா நுகர்வோரும் சீஈபீ இன் நட்டத்திற்காக வித்தியாசமான வீதங்களில் பங்களித்திருந்தனர். உள்நாட்டு மற்றும் கைத்தொழில் நுகர்வோர்கள் நட்டத்திற்கு பெருமளவில் பங்களித்திருந்ததுடன் அவர்களது மொத்தப் பங்களிப்பு 94 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் முடிவிலுள்ளவாறான நிதி நிலைமையின் முக்கிய விடயங்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| விடயம் | நடப்பாண்டு<br>ரூபா மில்லியன் | முன்னைய ஆண்டு (மீளமைக்கப்பட்டது)<br>ரூபா மில்லியன் | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 627,685 | 550,521 | 14 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 110,486 | 110,813 | (40) |
| மொத்தச் சொத்துக்கள் | 738,171 | 661,334 | 12 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 137,356 | 122,026 | 13 |
| **தொழிற்படு மூலதனம்** | **(26,870)** | **(11,214)** | **140** |
| ஈடுபடுத்திய மொத்த மூலதனம் | 600,815 | 539,307 | 11 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 407,585 | 281,843 | 45 |
| **உரிமைத்துவம்** | **193,230** | **257,464** | **(25)** |

இதன்படி, நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 77 பில்லியன் அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை காரணமாக மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 11 பில்லியன் எதிர்மறைப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2012 இல் ரூபா 27 பில்லியன் எதிர்மறையாக மாற்றமடைந்து 140 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவம் செய்தது. இவ்வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் நீண்ட காலக் கடன்களின் நடப்புப் பங்கு ரூபா 30 பில்லியனாலும் முன்னைய ஆணடின் 15 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சுதந்திர மின் வழங்குனர்களிற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 14 பில்லியனால் அல்லது 93 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமையாகும்.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ரூபா 600 பில்லியன் தொகையான ஈடுபடுத்திய மொத்த மூலதனத்தில் 68 சதவீதம் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதியங்களால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் கடன் பங்கு 52 சதவீதமாகும்.

மேற்படி பகுப்பாய்வின் படி, முன்னைய ஆண்டுகளைப் போலவே 2012 ஆம் ஆண்டிலும் சபை பாரிய திரவத்தன்மை பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டமையால் பலவீனமான நிதி முகாமைத்துவத்தினை வெளிக்காட்டியது.

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 மின்வலு உற்பத்தி

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி விபரங்களின் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| மூலம் | 2012 | | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|
| | ஜிடப்ளியூஎச் | % | ஜிடப்ளியூஎச் | % | ஜிடப்ளியூஎச் | % |
| நீர்மின | 3292 | 28 | 4619 | 40 | 5634 | 53 |
| அனல்மின | 8338 | 71 | 6786 | 59 | 4994 | 47 |
| மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 171 | 1 | 125 | 1 | 86 | 1 |
| **மொத்தம்** | **11,801** | **100** | **11,530** | **100** | **10,714** | **100** |

இதன் படி, முன்னைய மூன்று ஆண்டுகளில் நீர்மின்சார உற்பத்தியானது தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தமை வெளிப்பட்டதுடன் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடின்றி தனது செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு அனல் மின்சாரத்திற்கு மாறுவதனைத் தவிர சபைக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. எவ்வாறாயினும், பொது மக்களிற்கு குறைந்த கிரயத்தில் மின்சார அலகை வழங்கும் தனது பிரதான குறிக்கோளை மீளாய்வாண்டிலும் கூட சபை அடைந்து கொண்டிருக்கவில்லை.

### 3.3.2 நேர்க் கிரய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சபையின் விற்பனைக் கிரயத்தின் பொழிப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம் | ரூபா மில்லியன் | மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம் |
| எரிபொருள் | 53,614 | 24 | 31,992 | 21 |
| மின்வலு கொள்வனவு | 120,264 | 54 | 84,144 | 56 |
| செயற்பாடு மற்றும பேணல் | 27,530 | 12 | 18,629 | 12 |
| பெறுமானத்தேய்வு | 21,011 | 10 | 16,684 | 11 |
| **மொத்தம்** | **222,419** | **100** | **151,449** | **100** |

மேற்படி தகவல்களின் படி, மொத்தக் கிரயத்தில் 70 சதவீதத்திற்கும் மேல் மின்வலு கொள்வனவு மற்றும் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை வெளிப்பட்டது.

### 3.3.3 விலை பகுப்பாய்வு

2010 இல் ஈட்டப்பட்ட ஒரு சிறிய இலாபத்தைத் தவிர்த்து முன்னைய ஐந்து ஆண்டுகளில் ஒரு அலகு மின்சார விற்பனையிலிருந்தான சராசரி நட்டத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. அதன் படி, ஒரு அலகுக்கான அதிகூடிய நட்டம் 2012 இல் பதிவுசெய்யப்பட்டது.

அலகு விலை பகுப்பாய்வு

| ஆண்டு | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி விற்பனை விலை | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி கிரயம் | அலகொன்றிற்கான இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2008 | 13.22 | 18.15 | (4.93) |
| 2009 | 13.13 | 14.71 | (1.58) |
| 2010 | 13.16 | 13.02 | 0.14 |
| 2011 | 13.22 | 15.59 | (2.37) |
| 2012 | 15.66 | 21.50 | (5.84) |

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிருவாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சாரசபைக்கான நிருவாக ஒழுங்கு விதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்காதுவிட்டால் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்ததப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அமைச்சரவையின் அல்லது பொது நிர்வாக அமைச்சின் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சபையினால் 39 பல்வேறு பதவியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2012 இல் அவ்வாறான படிகளாக ரூபா 612 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமையினை மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனை வெளிப்படுத்தியது.

(ii) 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக செய்திப்பத்திரிகை விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்றன ஊடாக தகைமைகொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து நாடுதளுவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோராது எழுதுவினைஞர்கள், காசாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற திறன்கள் அற்ற மற்றும் பகுதியளவில் திறன்கள் கொண்ட பதவியினரை சபை வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. அதன் விளைவாக மிகப் பொருத்தமான நபர்களை தொடர்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை சபை இழந்திருந்தது.

(iii) சபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 1,000 தற்காலிக மாதாந்தப் படி தொடர்பில் முன்னைய ஆண்டுகளிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயம் மீளாய்வாண்டிலேனும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் - 14 சதவீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீதத்தில் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சபை பாரிய திரவத்தன்மை பிரச்சினையை எதிர்கொண்டிருப்பினும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஊழியர்களிற்கு கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தரப்பட்ட தகவல்களின்படி, சபையின் நிதி முகாமையாளருக்கு முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்படாதிருந்த போதிலும், 1990 ஆம் ஆண்டிலிருந்து அதாவது நிதியம் கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து காப்புறுதி ஒதுக்கத்தின் முதலீடு தொடர்பாக அவர் தீர்மானம் எடுத்திருந்தார். வேண்டப்பட்ட அங்கீகாரமின்றி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 4,433 மில்லியனாகும்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

(இ) இலங்கை மின்சார சபைக்கு பிரதியொன்றின்றி 2004 இல் வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைக்கு எழுதப்பட்டிருந்த திறைசேரியின் கோவையிலுள்ள கடிதமொன்றை அடிப்படையாகக் கொண்டு 2003 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,200 மில்லியன் திறைசேரிக் கடன் மீதியினை 2013 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியின் செயலாளருடன் தொடர்புகொள்ளாது அவ்வாறான தீர்மானமொன்றை எடுத்தல் கேள்விக்குரியதாகும்.

(ஈ) 2008 மார்ச் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி சபையின் 10 சதவீத புதுப்பிக்கத்தக்க சக்திக் கிரயம் நிலைபேறான சக்தி அதிகார சபையால் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், மேலே காட்டப்பட்ட ஒழுங்கின்படி, சபைக்கு கிடைக்கவேண்டிய அத்தகைய புதுப்பிக்கத்தக் சக்திக் கிரயம் 2008 முதல் நிலைபேறான சக்தி அதிகாரசபையால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மீளளிக்கத்தக்க தொகை ரூபா 897 மில்லியனாகும். எனினும், நிலைபேறான சக்தி அதிகாரசபை நிதிக் கூற்றுக்களில் அதனை ஒரு பொறுப்பாக பதிவு செய்திருக்கவில்லை.

(உ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 3,724 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் சபையின் சுய காப்புறுதிக் கொள்கையின் படி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கு சபையில் பொருத்தமான நிதி முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) லெகோ மின்சாரக் கம்பனிக்கு பல ஆண்டுகளாக சபை மின்சாரத்தை விற்பனை செய்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்துமிருந்த போதிலும், அந்த இரு தரப்பினர்களுடன் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32 மில்லியன் சந்தைப் பெறுமதிகொண்ட சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களிற்காக வினியோக வலயம் 3 இன் விலை மதிப்புக் குழுவால் அறிவிக்கப்பட்ட பின்வரும் நிலமைகளை அவ்வாறு செய்வதற்கான தொடர்புடைய அதிகாரம் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறாமையால் திருப்திகரமாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

- ஒத்த பகுதியைக் கொண்டு முன்பக்க மூடி பதிலீடு செய்யப்பட்டது. (24 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட ஏ 2ரீ பாரந்தூக்கி உள்நாட்டில் பொருத்தப்பட்டது (2 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட மூடியைக் கொண்டு அசல் மூடி பதிலீடு செய்யப்பட்டது. (2 வாகனங்கள்)
- பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட ரக மூடி மற்றும் தட்டினைக் கொண்டு அசல் முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- பயன்படுத்தப்பட்ட பகுதிகளைக் கொண்டு முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- ஒரு பாரந்தூக்கி உள்நாட்டில் பொருத்தப்பட்டது (1 வாகனம்)

(ஏ) அளவிடக்கூடிய (சகல நிர்வாகக் கிரயங்கள், நிலையான செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கட்டணங்கள், மற்றும் தொடர்புடைய செலவினங்களை உள்ளடக்கிய) மற்றும் அளவிட முடியாத (கம்பனியின் கடன் சேவைக் கடப்பாடுகள்) என்ற இரண்டு உப கூறுகளைக் கொண்ட இயலளவுக் கட்டணங்கள் சுதந்திர மின்வலு உற்பத்தியாளர்களுக்கு (ஐபீபீஎஸ்) செலுத்தப்பட்டிருந்தன. அளவிடப்பட முடியாத கூறினை (கடன் மீள்நிரப்பல்) மீளளிக்கப்படுவதற்கான காலம் காலாவதியாகியிருந்த போதிலும், சபை அக்கூறினை மீளளிப்புச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2012 இல் அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த தொகை யூஎஸ்டொலர் 15 மில்லியன் மற்றும் யப்பானிய யென் 183 மில்லியனாகும்.

(ஐ) ஐபீபீஎஸ் களிற்கு உரித்தான மின்வலுப் பொறியின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் இயலளவுக் கட்டண அளவிடக்கூடிய கிரயக் கூறில் உள்ளடங்கியிருந்ததுடன் அக்கிரயங்கள் ஏற்பட்டதா அல்லது இல்லையா என்பதனைக் கருத்திற்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தன. மேலும், அப் பேணுகைக்கான பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகள் சபையால் தனியாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அச்செலவினங்களை மீளளிப்பதற்கு வரையறையொன்று காணப்படவில்லை. சில ஐபீபீஎஸ் ஏனைய சில ஐபீபீஎஸ் களின் பேணுகை ஒப்பந்தங்களை பொறுப்பேற்றிருந்ததுடன் ஐபீபீஎஸ் களிற்கிடையே தொடர்புடைய தரப்பு மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் காணப்பட்டன. அதன் காரணமாக மின்வலுப் பொறிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினது உள்ளபடியான பயன்படுத்தலை மெய்மையாய்வு செய்யாது வரிகள் அடங்கலான செலவின மீளளிப்பின் புத்திசாதுரியத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. 2012 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு மீளளிக்கப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா 1,261 மில்லியனாக காணப்பட்டது.

### 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடக்கு மின்வலு இல்லம் 30 ஜீடபிள்யூஎச் பொறி இயலளவுடன் வட மாகாணத்திலுள்ள தனியார் மின்வலு உற்பத்தியாளராகும். இருப்பினும், பரிசோதனைத் தவறு காரணமாக மின்வலுப் பொறியின் ஆரம்பம் முதல் இணங்கப்பட்ட ஜீடபிள்யூஎச் மின்சாரத்தினை கம்பனியால் வழங்க முடியாது போயிருந்ததுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த சராசரி ஜீடபிள்யூஎச் 15 ஜீடபிள்யூஎச் களிற்கும் குறைவானதாகும். மேலும், ஏனைய ஐபீபீஎஸ் களின் விலையுடன் ஒப்பிடுகையில் அவர்களது அலகு விலை அதிகமாக காணப்பட்டதுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் அக் கம்பனியிடமிருந்து மின்வலுவைக் கொள்வனவு செய்தமையால் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் வருமாறு.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

| ஆண்டு | சராசரி அலகுக் கிரயம் கேடபிள்யூஎச்/ரூபா | சராசரி விற்பனை விலை கேடபிள்யூஎச்/ரூபா | அலகு ஒன்றுக்கான நட்டம் கேடபிள்யூஎச்/ரூபா | மொத்த நட்டம் ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| 2010 | 17 | 13 | 4 | 223 |
| 2011 | 18 | 13 | 5 | 429 |
| 2012 | 24 | 16 | 8 | 407 |

(ஆ) பிராந்தியம் - 1 அலுவலகத்தினால் கல்வனைஸ்ட் செய்வதற்காக தொடர்புடைய தரப்புக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் பெறுமதியான கல்வனைஸ்ட் அல்லாத விடயங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருக்காததுடன் இந்த நட்டத்தினை தொடர்புடைய தரப்புக் கம்பனியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிராந்தியம் 3 இன் மதிப்பீட்டுக் குழுவினால் ரூபா 76 மில்லியனாக பெறுமதியிடப்பட்டிருந்த 79 வாகனங்கள் வீதியில் ஓடப்பட முடியாதவையாக காணப்பட்டன. ஆனால், அவை தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 இல் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட ரூபா 30 மில்லியன் கிரயத்திலான சேதமடைந்த இருப்பு விடயங்கள் 2013 யூலை 31 வரையிலும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாது தற்போதும் டபிள்யூபீஎஸ் II பிராந்திய களஞ்சிய வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் பேணிவரப்பட வேண்டிய தேவைப்படுத்தப்பட்ட ரூபா 86 மில்லியன் பாதுகாப்பு வைப்பிற்கும் குறைவாக ரூபா 61 மில்லியனை மேல்மாகாணம் தெற்கு II அலுவலகத்தின் 172 நுகர்வோர்கள் பேணியிருந்தனர். அதன் காரணமாக சபை அந்த நுகர்வோருடன் அதிக கடன் ஆபத்துடன் கருமமாற்றி வருகின்றது.

(ஊ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் படி சகல பொது முயற்சிகளும் எல்லாப் பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கி தமக்கென உரித்தான முறைமைகள்/கையேடுகளை வைத்திருப்பதுடன் காலத்திற்கேற்ப திருத்தப்பட்டு நாளதுவைரயாக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 1987 அளவில் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கையேடுகளை சபை திருத்தி நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் நிலவிய பாரிய நிதி நெருக்கடியை கருத்திற்கொள்ளாது எவ்வித வரையறையுமின்றி 12,880 ஊழியர்களிற்கு சபை ரூபா 2,472 மில்லியன் பதவியணியினர் கடன்களை வழங்கியிருந்தது.

(i) வெளிவாரி கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கடன்களிற்காக ஊழியர்களிற்கு 2/3 வட்டியினை மீளளித்தல் தொடர்பில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. 2012 இல் அவ்வாறு மீளளிப்பு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 892 மில்லியனாகும்.

- உரித்துடைய கடன் எல்லையினை விஞ்சிய ஊழியர்களிற்கு கடன் வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- நிலையான வைப்புக்கள், தனிப்பட்ட உத்தரவாதங்கள் போன்ற ஆதனங்களை அடகு வைத்து எடுக்கப்பட்ட தனிப்பட்ட கடன்களிற்காக வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- வாழ்க்கைத் துணையல்லாத ஏனைய தரப்பினர்களுடன் இணைந்து உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட கடன்களிற்காக வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- நிதி நிறுவனங்களின் முறைசாராத கடிதங்களின் அடிப்படையில் வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- ஏனைய கடன்களை தீர்ப்பதற்காக பெறப்பட்ட கடன்களிற்கான வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்
- வாழ்க்கைத் துணையின் அல்லது உத்தியோகத்தரின் பெயரிலல்லாத ஆதனங்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களிற்கான வட்டி மீளளிக்கப்பட்டிருத்தல்

(ii) மோட்டார் சைக்கிள் கடன்கள் அல்லாத ரூபா 332 மில்லியன் வாகனக் கடன்கள் சபையின் 172 ஊழியர்களிற்கு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- கடன்கள் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையின் விளைவாக குறித்த நோக்கத்திற்காக கடன் தொகை பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்த முடியவில்லை.
- கடன்கள் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையின் விளைவாக குறித்த நோக்கத்திற்காக கடன் தொகை பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்த முடியவில்லை.
- அநேக சந்தர்ப்பங்களில் கடனின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் சபையில் ஈடாக வைக்கப்பட்டிருக்கவில்லை.
- உயர் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் (முகாமையாளர்கள்) எடுக்கப்பட்ட கடன்களிற்கு கீழ் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் (உதவியாளர்கள்) உத்தரவாதம் வழங்கியிருந்தனர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

- கடன் பெறுனரினதும் பிணைதாரரினதும் நாற்பது சதவீத அல்லது அறுபது சதவீத சம்பள எல்லை தகுதி விதியினைக் கருத்திற்கொள்ளாது கடன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- தகுதியுடைய எல்லைக்கும் மேலாக கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் வழங்கப்பட்ட கடனிற்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாக முன்னரே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் பெறப்பட்ட கடனில் நிலுவையாக உள்ள மீதிகள் முழுமையாகச் தீர்க்கப்படாமலேயே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- பூரணத்துவமற்ற கடன் உடன்படிக்கைகள் அவதானிக்கப்பட்டன.
- சுங்கத் தீர்வை சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடனொன்றுடன் தொடர்புடைய காசோலை சபை பொது முகாமையாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் பெறுபவரால் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வங்கியின் பெயரிலல்லாது சபையிடமிருந்து கடனைப் பெறும் உத்தியோகத்தரின் பெருக்கு எழுதப்பட்டிருந்தது.
- குறிப்பிட்ட பிரிவுகளால் வழங்கப்பட்ட கடன்கள் தீர்ப்பனவு செய்யப்படும் வரைக்கும் தொடர்ச்சியான அடிப்படையில் வருடாந்த வருமான உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் பூரணமான காப்புறுதிச் சான்றுகளின் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு செவ்வை பார்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

  அநேக சந்தர்ப்பங்களில் கடனின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் சபையில் ஈடாக வைக்கப்பட்டிருக்கவில்லை.
- உயர் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் (முகாமையாளர்கள்) எடுக்கப்பட்ட கடன்களிற்கு கீழ் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் (உதவியாளர்கள்) உத்தரவாதம் வழங்கியிருந்தனர்.


- கடன் பெறுனரினதும் பிணைதாரரினதும் நாற்பது சதவீத அல்லது அறுபது சதவீத சம்பள எல்லை தகுதி விதியினைக் கருத்திற்கொள்ளாது கடன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- தகுதியுடைய எல்லைக்கும் மேலாக கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் வழங்கப்பட்ட கடனிற்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாக முன்னரே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் பெறப்பட்ட கடனில் நிலுவையாக உள்ள மீதிகள் முழுமையாகச் தீர்க்கப்படாமலேயே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- பூரணத்துவமற்ற கடன் உடன்படிக்கைகள் அவதானிக்கப்பட்டன.
- சுங்கத் தீர்வை சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடனொன்றுடன் தொடர்புடைய காசோலை சபை பொது முகாமையாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் பெறுபவரால் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வங்கியின் பெயரிலல்லாது சபையிடமிருந்து கடனைப் பெறும் உத்தியோகத்தரின் பெருக்கு எழுதப்பட்டிருந்தது.
- குறிப்பிட்ட பிரிவுகளால் வழங்கப்பட்ட கடன்கள் தீர்ப்பனவு செய்யப்படும் வரைக்கும் தொடர்ச்சியான அடிப்படையில் வருடாந்த வருமான உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் பூரணமான காப்புறுதிச் சான்றுகளின் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு செவ்வை பார்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.


### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின்றி மனித உழைப்பு கம்பனிகளிடமிருந்து ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தினை மிகைத்து 946 ஊழியர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியிலிருந்து பெறப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,045 ஆக இருந்ததுடன் அது சபையின் மொத்த பதவியினர் பலத்தில் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிலுள்ள பின்வரும் பிரதான பதவிகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்தன.

| வகை | வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிறைவேற்றுனர் | 186 |
| மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவை | 177 |
| திறன் தொழில்நுட்பச் சேவை | 579 |
| அரை - திறன் தொழில்நுட்பச் சேவை | 1,599 |
| ஏனைய திறன்கள் பதவியணி | 34 |
| **மொத்தம்** | **2,575** |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்ச்சி

(உ) திறன்களற்ற வெளிக்களச் சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,716 ஆல் மிகைத்துக் காணப்பட்டது.

(ஊ) பதவியுர்வுக்காக சிரேஷ்ட அடிப்படையினை மாத்திரம் கருத்திற்கொள்வதனைத் தவிர வெற்றிகரமான திட்டமொன்று காணப்படவில்லை. ஆகையால் பதவியுர்த்தப்படுவதனால் ஊழியர்கள் நன்மை அடைந்தனரேயன்றி நிறுவனமல்ல. சபை வழமையாக பிரதான பதிவிகளுக்கு அரையாண்டிலும் பார்க்க குறைவான காலத்திற்கே பதவியுயர்வுகளை வழங்கியிருந்தது.

(எ) பொருத்தமான இடமாற்றக் கொள்கையொன்று அமுல்படுத்தப்படுதல் அவதானிக்கப்படவில்லை. விசேடமாக பிரதான பதவிகளிலுள்ள சில ஊழியர்கள் ஒத்த பதிவியில் அதே இடத்தில் பத்து ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகளிற்கும் மேலாக கடமையாற்றியிருந்தனர். அத்துடன் ஊழியர்கள் பதியுயர்விற்கு தகுதிபெறுகையில் சகல துறையிலுமான அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த சூழலை இந்நடைமுறை வழங்குவதில்லை. உதாரணமாக விநியோக ஒருங்கிணைப்புச் சபைகளில் அங்கத்தவர்களாக இருந்து தற்போது பிரிவுகள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களிற்குப் பிரதானிகளாக காணப்படுகின்ற சகல நான்கு பிராந்தியங்களிலுள்ள உதவிப் பொது முகாமையாளர்கள் வினியோகத் துறையில் அனுபவமற்றவர்களாக உள்ளனர்.

(ஏ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவி பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகும். ஆனால், விசேடமாக மின்னியல் பொறியியலாளர் போன்ற ஏனைய சேவையிலுள்ளோருக்கும் இப் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் தேவையான மனித வளத் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் முழுமையானதும் சரியானதுமானதும் எனக் கருதப்பட முடியவில்லை.

(ஐ) சபையில் ஆளணி முகாமைத்துவப் பிரிவிலுள்ள பிரதான பொறியியலாளர் என்ற பதவி (மனிதவள கொள்கை) தனித்தனியான இரண்டு உயர்திறன்தொழிலாளர் களுக்கிடையே பொருந்தாமை வெளிப்பாட்டைக் காட்டும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

(ஒ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி, மனித வள உத்தியோகத்தர் சேவையின் மொத்தப் பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் சரித்திரத்தில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படாததுடன் அப்பிரிவிலுள்ள 4 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பதவிகள் மனித வளத் துறையிலல்லாத ஏனைய சேவைகளிற்கு திறந்து விடப்பட்டிருந்தது.

(ஓ) மனித வள முகாமையாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்குத் தேவையான அனுபவம் 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ள போதிலும் இந்த நிறுவனத்தில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

### 3.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் ஊடாக சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(இ) பதிவேட்டுப் பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்
(ஊ) முதலீடுகள் மற்றும் துணைக் கம்பனிகள் மீதான கட்டுப்பாடு
(எ) நடைபெறும் வேலை
(ஏ) செயற்திட்ட முகாமைத்துவமும் கட்டுப்பாடும்



**ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதில்கள்

**இலங்கை மின்சாரசபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திரண்ட நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சி பிரிவின் படியான கணக்காய்வாளர் தலைம அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதில்கள்**

**1.2** **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமையின் பொறுப்பு**

தகவலுக்கானது

**1.3** **கணக்காய்வாளரின் பொறுப்பு**

தகவலுக்கானது

**1.4** **முனைப்பழி அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

தகவலுக்கானது

**2.** **நிதிக்கூற்றுக்கள்**

**2.1** **முனைப்பழி அபிப்பிராயம் சபையும் குழுமமும்**

**2.2** **குழும நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

இலங்கை மின்சார சபை குழுமத்தின் (இமிச) துணைக்கம்பனிகளின் உரித்து (நேரடி மற்றும் மறைமுக உரித்து) நிதிக்கூற்றுக்களின் 10.1 ஆம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், ஐயவினாவிற் குறிப்பிடப்பட்ட கம்பனிகள் இமிச வின் மறைமுக அசோசியேற்களின் கீழ் வருவதுடன், கட்டுப்படுத்தும் அதிகாரத்தின் அடிப்படையில் (இமிசவின் பிரதிநிதிகளே எல்ரிஎல் பணிப்பாளர் சபையின் பெரும்பான்மையினராக இருப்பதால்) அத்தகைய கம்பனிகள் ஒன்றித்தல் தேவைகளுக்காக துணைக்கம்பனிகளாகக் கருதப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களின் பாவனையாளர்களுக்கு யாதாயினும் தவறான கருத்துக்களைத் தவிர்ப்பதே மறைமுக அசோசியேற்களின் உரித்து % ஐ வெளிப்படுத்தாமைக்கான காரணமாகும்.

**2.3** **இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1** **இலங்கை கணக்கீட்டு நியமங்களும் (இகநி) கணக்கீட்டுக் கொள்கைகளும்**

**2.3.1. (அ)** **இ.க.நி. 5 பொருளிருப்புக்கள்**

**2.3.1 (அ)(i)** **உண்மையானதை விட நியம விலையைக் கூட்டி மதிப்பிடல்**

இப் பிரச்சினை 2013 மார்ச் 21 இல் கணக்காய்வாளர் தலைம அதிபதியுடனும், இமிச வின் உயர் உத்தியோகத்தர்களுடனும் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அதன் தீர்மானங்கள் பின்வருமாறாகும்.

**கூறப்பட்டது :**

“உண்மையானதற்கும், நியமக் கிரயத்திற்குமிடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு பதில் பொது முகாமையாளர் இணங்கியதுடன், நடைமுறைக் கஷ்டங்கள் காரணமாகவும், நிறையிட்ட சராசரி முறையைப் பிரயோகிப்பதனை விட அம்முறையின் நன்மை பெரிது என்பதாலும் விநியோகப் பிராந்தியங்களில் பொருளிருப்புக்களை நியமவிகிதத்தில் விலை மதிப்பிடலைத் தொடர அனுமதிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியைக் கேட்டுக் கொண்டார்”

நியமக் கிரயத்தில் விலைமதித்தவை உத்தியோகத்தர்கள் பலமாக விவாதித்ததால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி எதிர்க்கவில்லையாயினும் உயர் நியமக் கிரய விலை மதித்தலின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்கமாயின் நிதிக்கூற்றக்கள் முனைப்பழிகளில் செல்லப்படும் என வலியுறுத்தினார்.”

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதில்கள் தொடர்ச்சி

**கூறப்படாதது:**
கலந்துரையாடலில் இணங்கிக் கொண்டவாறு, நிமக் கிரயத்திற்கும் உண்மையான கிரயத்திற்குமிடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு இமிச முயற்சியெடுத்ததுடன் இதன் பலனாக பொருள்விலை முரணை 2011 ஆம் ஆண்டின் ரூபா 2,920 இலிருந்து 2012 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,273 ஆகக் குறைப்பதற்கு இயலுமாக இருந்தது.

**2.3.1 (அ) (ii) சபையால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களை விலை மதித்தலுக்கு சீரான கொள்கை**

இமிச ஒரு நிறுவனம் என்ற வகையில் சக்தி பிறப்பாக்கம், பரிமாற்றம், விநியோகம் என்பவற்றைப் பொறுப்பேற்கின்றது.

மறுபுறத்தில், பரிமாற்றம் பிரிவின் பரிமாற்ற வழிகள் சொத்தின் நியாயமான பெறுமதியை, பிரதிபலிப்பதற்கான மிகச் சரியான முறையான உண்மையான கிரயத்தின் அடிப்படையில் பெறுமதி மதிக்கக் கூடிய ஒப்படைத்தல், அடிப்படையில் வெளிநாட்டு நிதியச் செயற்திட்டங்களின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், கொடுக்கல் வாங்கல்களின் சிக்கலான தன்மை காரணமாக பொருளிருப்புக்கள் நியமவிலையில் விநியோகப் பிரிவில் வழங்கப்படுகின்றன.

**2.3.1 (ஆ) இகநி 20 – அரசாங்க மானியங்களுக்கான கணக்கீடும், அரசாங்க உதவியின் வெளிப்படுத்துகையும்**

பொது முயற்சிகள் திணைக்களத்தால் (பொமுதி) இணங்கப்பட்டவாறு வெளிநாட்டு உதவி மற்றும் மூலதனமானியம் என்பவற்றுக்கான கணக்கீடு தொடர்பாக, இமிச மின்சார செயற்திட்டங்களுக்காக திறைசேரியிலிருந்து பெறப்பட்ட அரசாங்க நிதிகள் உரிமையாண்மை முதலீடு என மூலதனமாக்கப்பட்டன. இதனை பின்னர், திறைசேரியால் வழங்கிய நிதியின் 31.12.2012 இல் உள்ளவாறான நிலுவைத் தொகை இமிச ஆல் ரூபா 109,567,865,042.06 என உறுதிப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 13,477,460,864 மொத்தத் தொகையான புத்தகங்களின் பங்களிப்பு மூலதனத்தை 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இமிச இல் செய்யப்பட்ட முதலீடு என இற்றைப்படுத்த பொமுதி ஆல் இயலாதிருந்தது.

மேற்கண்ட காரணத்தினால், இமிச இனதும் பொமுதி இனதும் ஏடுகளிடையே பங்களிப்ப மூலதனத்திலுள்ள வேறுபாடு ரூபா 13,477,460,864 ஆக இருக்கலாம். இமிச பத்தகங்களின் படி, ரூபா 121,603,239,853.22 மொத்தமான மூலதன உதவுதொகை (2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,035,374,811.16 உட்பட) 31.12.2013 வரை மூலதனமாக்கப்பட்டிருந்தது. பொமுதி (PED) இன் ஏடுகளை செம்மையாக்குவதற்காக இது பொமுதி இற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.3.1. (இ) இ.நி.கூ.அ.நி.1 - இ.நி.கூ.அ.நி.யினை முதற் தடவையாக ஏற்றுக் கடைப்பிடித்தல்**

இமிச இன் பதிவேடுகளையும் கொடுக்கல் வாங்கல்கயைும் பரிசீலித்ததன் பின் IFRS தேவைப்பாடுகளால் பாதிக்கப்படும் பகுதிகளைக் குறிப்பிட்டு ஓர் இடைவெளி அறிக்கை ஆலோசகரால் தயாரிக்கப்பட்டு இ.மி.ச இற்கு வழங்கப்பட்டது. இந்த இடைவெளி அறிக்கையின்படி, இ.மி.ச இற்கு அத்தகைய கடப்பாடுகள் இல்லாமையால், அகற்றுதல் கடப்பாடுகள் எனும் விடயம் பொருத்தமற்றதாக இருந்தது. எவ்வாறாயினும், வெளிப்படுத்துகை தேவைப்பாட்டின் கீழ் கடைப்பிடிக்கப்படாப் பகுதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படத் தேவைப்படவில்லை. என்பது கவனிக்கத் தக்கது.

**2.3.1. (ஈ) இ.க.நி.24 - தொடர்புபட்ட தரப்பார் கொடுக்கல் வாங்கல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தாமை**

அறிக்கையிற் குறிப்பிடப்பட்ட பட்டியற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கும் இமிச தொடர்பான கம்பனிகளுக்குமிடையே தொடர்புபட்ட தரப்பார் கொடுக்கல் வாங்கல்கள் எதுவுமில்லை. சில செயற்திட்ட ஒப்பந்தங்கள் எல்ரிஎல் (செயற்திட்டங்கள்) இற்கு வழங்கப்பட்டிருந்தமை கவனிக்கப்பட்டது. எவ்வாறாயினும், எல்ரிஎல் (செயற்திட்டங்கள்) எல்ரிஎல் குழுமத்தின் கீழ் வராததுடன் தனியான கம்பனியாகவும் இயங்குகின்றது. எனவே, நிதிக்கூற்றக்களில் அவை தொடர்பான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் எதுவும் செய்ய வேண்டியிருக்கவில்லை.

**2.3.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**2.3.2. (அ) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைக்கு முரணாக, ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றிற்கான பாரிய சேதங்கள் தவிர்ந்த சேதங்கள் காப்புறுதி எஸ்குறோ நிதியத்திற்கெதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருக்காததுடன் அந்த நட்டங்களும், சேதங்களும் இமிச இன் நிதியில் ஈடுசெய்யப்பட்டிருந்தன.**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்கு ஏற்படும் நட்டங்கள் அல்லது சேதங்களை எதிர்கொள்வதற்காக காப்புறுதி எஸ்குறோ நிதியம் ஏற்படுத்தப்பட்டது. பொது முகாமையாளர் சுற்றறிக்கை இல. 287 இன் பிரகாரம் பின்வரும் தகுதிவிதிகளின் அடிப்படையில் நட்டங்கள் காப்புறுதி எஸ்குறோ நிதியத்திற்கெதிராக அடையாளம் காணப்படுகின்றன.

I. ரூபா 10,000 கு மேற்பட்ட பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு ஏற்படும் நட்டங்கள் மாத்திரமே காப்புறுதி ஒதுக்கத்திற்கு சாட்டுதல் செய்யப்படுகின்றதுடன் ஏனையவை திருத்தங்கள், பராமரிப்புச் செலவாக கருதப்படுகின்றன.

II. தொழில்நுட்பக் காரணங்களால் ஏற்படும் நட்டங்கள் இந்த ஒதுக்கத்திற்கு சாட்டுதல் செய்யப்படுவதில்லை.

III. வெளித்தரப்பாரிடம் அல்லது ஊழியர்களிடம் அறவிடப்படக் காத்திருக்கும் நிலையான சொத்துக்கள் சேதங்கள் சாட்டுதல் செய்யப்படமாட்டா.

IV. இழக்கப்பட்ட அல்லது முற்றாகச் சேதமடைந்த வாகனங்கள், தொடர்பாடல் உபகரணங்கள், நானாவித உபகரணங்கள், மின்மாற்றிகள் மற்றும் கட்டிடங்கள் என்பன இந்த ஒதுக்கத்திற்கு சாட்டுதல் செய்யப்படும்.

கணக்காய்வு ஐயவினாவின்படி, ஆதனம், பொறிகள், உபகரணங்கள் என்பவற்றிற்கு ஏற்பட்ட ரூபா 71 மில்லியன் செலவுகள் காப்புறுதி எஸ்குறோ நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்படுவதற்குப் பதிலாக சபை நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், எமது பதிவுகளின் படி தென் மாகாணத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 56 மில்லியன் காப்புறுதி எஸ்குறோ நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் ச.நி.அ.நி (IFRS) தேவைப்பாடுகளுக்கமைவாக ரூபா 71 மில்லயனும் காப்புறுதி எஸ்குறோ நிதியத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

வருட இறுதியிலுள்ள தேறிய தாக்கத்தில் மீள் முதலீடு செய்தல், முதலீடு மீளப்பெறுதல் ஆகிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 26.11.1986 இன் 88 ஆம் இலக்க சபைத் தீர்மானததின்படி காப்புறுதி ஒதுக்கம் தொடர்பான சகல முதலீடுகளும் மக்கள் வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டன. இதன்படி, நிலையான வைப்பின் முதிர்வுக்கு முன்னரான மீளெடுப்புடன் முதலீடுகளின் வட்டி உழைத்தலில் பாதகமான பாதிப்பை விளைவிக்கின்றன.

### 2.3.2. (ஆ) <u>காப்புறுதி எஸ்குறோ நிதியத்தின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம்</u>

முன்னைய கணக்காய்வு ஐயவினாவின் படி, காப்புறுதி எஸ்குறோ நிதியத்தின் வட்டி வருமானம் 2011 தொடக்கம் நிதியத்தின் வருமானமாக மதிக்கப்பட்டது.

### 2.3.2. (இ) <u>2010/2011 மதிப்பீட்டு ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 119 மில்லியன் மொத்தமான நிறுத்திவைத்தல் வரி அறவிடவேண்டியதாக பொருத்தமற்ற முறையில் காட்டப்பட்டிருந்தது</u>

2012 ஆம் ஆண்டின் போது 2010/2011 வருமான வரி கணிப்பீட்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் முடிவு செய்யாததன் காரணமாக 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறவேண்டிய நிறுத்திவைத்தல் வரி கணக்கிலிருந்த முழுத்தொகையும் 2013 ஆம் ஆண்டில் முடிவுசெய்யப்பட்ட 2010/2011 மதிப்பீட்டு ஆண்டின் வருமானவரிப் பொறுப்பிற்கெதிராக தீர்க்கப்பட்டிருந்தன. இதன்படி கணக்குகள் 2013 ஆம் ஆண்டின் சீராக்கப்பட்டன.

### 2.3.2. (ஈ) <u>2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட நிகழ்வுகளின் போது ஒளியூட்டல் தொடர்பாக சக்தி மற்றும் வலு அமைச்சிடமிருந்து பெறவேண்டிய தொகை</u>

விசேட நிகழ்வுகளுக்கான செலவுகளை மீளெடுக்கும் வழக்கம் தொடர்புபட்ட பகுதி பொறியியலாளர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையிலானவையாகும். சக்தி மற்றும் வலு அமைச்சு அத்தகைய மதிப்பிடப்பட்ட கிரயத்தை தலைமை அலுவலகத்திற்கு மீளச் செலுத்துவதுடன் உண்மையான கிரயத்தை மாற்றுவதற்கு தொடர்பான கணக்காளருக்கு (செலவினம்) அறிவிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் வருமானத்தை வேலைக்கிரயத்துடன் இணைத்தல் மூலம் செலவு மீதியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 2.3.2. (உ) <u>பாதுகாப்பு ஒளியூட்டல் தொடர்பாக சக்தி மற்றும் வலு அமைச்சிடமிருந்து (MOPE) பெறவேண்டிய தொகை</u>

இமிச இன் பதிவுகளின் படி MOPE இடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 8.2 மில்லியனாகும். தற்பொழுது நாங்கள் இத்தொகைகளை MOPE உடன் இணக்கம் செய்தலில் ஈடுபட்டுள்ளோம்.

**2.3.2. (ஊ) மோட்டார் வாகனங்களின் நியாயமான பெறுமதியை நிர்ணயித்தல் தொடர்பாக அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

**2.3.2. (f).(i) சந்தைப் பெறுமதியை தீர்மானிப்பதில் சீரான முறை கடைப்பிடிக்கப்படவில்லை**

சகல மோட்டார் வாகனங்களுக்கும் சந்தைப் பெறுமதியைப் பெறுவதற்கான இறுதி முடிவை எடுப்பதற்காக விபரமான ஆய்வு மூலமும் 2011 இன் ஆரம்பத்திலிருந்து SLFRS ஆலோசகருடனும் இறுதியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடனும் பல கலந்துரையாடல்கள் மூலமும் சநிகூஅநி நடைமுறைப்படுத்தலுக்கான வாகனங்களின் நியாயமான விலை மதித்தல் செய்யப்பட்டது.

சில வழிமுறைகள் IFRS மூலமாக முறையாக அனுகப்படாமை காரணமாக, நடைமுறைப்படுத்தலின் போது ச.நி.கூ.அ.நி.களை கடைப்பிடிக்கும் செயன்முறையில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டன. ஆகையால், இறுதிமுடிவை எடுக்கும் போது சில பகுதிகள் 01.01.2011 இல் உள்ளவாறு விலை மதிப்பைப் பூர்த்தி செய்திருந்ததுடன் சில பகுதிகள் 31.12.2012 இல் உள்ளவாறு பூர்த்தி செய்திருந்தன. ஆகையால், சகல செயன்முறைகளையும் மீளச்செய்தலில் ஏற்படும் நேரம், மேலதிகக் கிரயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு 01.01.2011 இல் உள்ளவாறு ஒரே சீரான கிரயப் பெறுமதியைப் பெறுவற்காக கழிவீட்டு வீதத்தைப் பிரயோகிக்குமாறு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டன.

**2.3.2. (ஊ) (ii) ரூபா 396 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டது – பரிமாற்றல் ரூபா 100 மில்லியன், DD2 - ரூபா 216 மில்லியன். DD2 இல் தெரிவிக்கப்பட்ட வேறுபாடு**

மேற்கண்ட 1.6.2.0(ii) பதிலில் விளக்கப்பட்டவாறு, பொருத்தமான திகதியாகிய 01.01.2011 ஐக் கருத்திலெடுப்பதற்கு விலை மதிப்பதற்காக கடைப்பிடிக்கப்பட்ட நுட்பத்தில் மிகச் சிறியதான தாக்கமே இருந்தது.

எவ்வாறாயினும் ரூபா 396 மில்லியன் வேறுபாடு இந்தத் தவறினால் மட்டுமல்ல. ஆனால் 01.01.2011 தொடக்கம் 31.12.2012 வரையிலான இரண்டு காலப்பகுதிகளுன் வேறு கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்ந்திருந்தன

- இக்காலப் பகுதியின் போதான சேர்த்தல்கள
- இக்காலப் பகுதியின் போதான அகற்றுகை
- கருதப்பட்ட கிரயத்தின் மீது செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு
- பகுதிகளுக்கிடையிலான மாற்றல்கள்

**2.3.2. (ஊ) (ii) கழிக்கப்பட்ட வாகனங்களின் அகற்றுதல் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை**

இ.மி.ச மோட்டார் வாகனங்களின் மெய்மையாய்வு, விலைமதித்தல் நோக்கங்களுக்காக விலைமதித்தல் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒரு தனியான அளவீட்டுச் சபையை (அச) நியமிப்பதன் மூலம் மோட்டார் வாகனங்களை அகற்றுதலுக்கான தனியான நடைமுறை ஒன்றை இமிச கொண்டுள்ளது.

இந் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சபையினது கடமை நிபந்தனை அளவீட்டுச் சபையின் கடமைகளை உள்ளடக்கவில்லை. இவ்வாகனங்கள் பாவனைக்குத் தகுதியற்றவையாகையால் ரூபா 1.00 பெறுமதியே இவற்றின் கிரயமாகக் கொள்ளப்பட்டது.

**2.3.2. (எ) 1982 ஆம் ஆண்டிலிருந்து வரி அறிக்கைகளில் உள்ளடக்கப்படாதிருந்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 43,894 மில்லியனாகும்**

பிற்போடப்பட்ட வரியை முதற் தடவையாகக் கணப்பீடு செய்வதில் ஏற்பட்ட சிக்கலான தன்மை காரணமாகவும், விசேடமாக ஆதனங்கள், பொறி உபகரணங்கள் வரலாற்றுத் தகவல்கள் இன்மையாலும் தேவையான இடங்களில் சிறந்த மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எவ்வாறானியும், வரிக் கணிப்பீட்டில் மூலதன விடுகைகளைக் கோருவதற்கு எடுக்கப்பட்ட சேர்த்தலுடன் ஆதனம், பொறி, உபகரணங்களுக்கான குறிப்பிலுள்ள சேர்த்தலை இணக்கம் செய்வதற்குக் குறித்துக்கொள்ளப்படுகின்றது.

**2.3.2. (ஏ) 2012 இலும், 2011 இலும் ஆதனங்கள், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் அகற்றுகையால் பெறப்பட்ட முறையே ரூபா 55 மில்லியன் மற்றும் ரூபா 57 மில்லியன் ஆன இலாபம் IFRS படி மீளச் சீராக்கப்படவில்லை.**

ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றுக்கான IFRS நடைமுறையுடன் தொடர்பான அறிவுறுத்தல் வழிகாட்டியாக 25.03.2013 திகதியிட்ட 444 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் இரண்டு விசேட குறியீடுகள் வழங்கப்பட்டன. அதன்படி 2011 ஆம் 2012 ஆம் நிதியாண்டுகளுக்கான IFRS சீராக்கங்கள் மீதான தாக்கம் அடையாளம் காணப்பட்டது. ஆதனம், பொறி, உபகரணங்களின் அகற்றுகை இலாபம்/ (நட்டம்), பெறுமானத் தேய்வு என்பவற்றின் மீதான தாக்கம் தொடர்புபட்ட குறியீடுகளுக்கு நேரடியாகத் தாக்கல் செய்யப்படாமல் பின்வரும் கிரயக் குறியீடுகளின் கீழ் கணக்குவைக்கப்பட்டது.

E 7852 – 2012 இற்கான IFRS சீராக்கங்கள் மட்டும்
E 7853 – 2012 இற்கு முன்னரான IFRS சீராக்கங்கள்

எவ்வாறாயினும், தனியான குறியீடுகளின் கீழ் அடையாளம் காணப்பட்டதால் இரண்டு வருடங்களுக்குமான (அதாவது 2011 மற்றும் 2012) திரண்ட வருமானத்தில் தாக்கம் எதுவும் இல்லை.

**2.3.2. (ஐ) 2011 ஆம் ஆண்டில் வருடாந்த பொருளிருப்பு மெய்மையாய்வின் போது சேதமடைந்த பொருளிருப்பு என அடையாளம் காணப்பட்ட ரூபா 30 மில்லியன் பொருளிருப்புக்கள் இன்னும் களஞ்சியங்களில் இருக்கவிடப்பட்டுள்ளன**

ஐ2011 ஆம் ஆண்டின் போது ரூபா 30 மில்லியன் பெறுமதியான பொருளிருப்புக்கள் சேதமடைந்தவையாக அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் பின்வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வரவு – சேதமடைந்த பொருளிருப்பு இ.ந. கணக்கு
செலவு – சேதமடைந்த மற்றும் வழக்கிழந்த பொருட்களுக்கான ஏற்பாட்டு கணக்கு

எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டில் அதே ஆண்டின் பொருளிருப்பு பௌதீக மெய்மையாய்வின் போது இந்த சேதமடைந்த பொருளிருப்புக்கள் தவறவிடப்பட்டு பொருட் குறைவு ஏற்பட்டு பின்வருமாறு கணக்கு வைக்கப்பட்டது.

வரவு – பொருளிருப்பு சீராக்கங்கள் - (பொருட்குறைவுகள்) கணக்கு
செலவு – பொருளிருப்பு கணக்கு

31.21.2012 இல் உள்ளவாறான சேதமடைந்த மற்றும் பாவனைக்குதவாத பொருட்களுக்கான ஏற்பாடு மெய்மையாய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. சேதமடைந்த பொருட்கள் எடுக்கப்படாமையால், 2012 ஆம் ஆண்டில் இந்த ரூபா 30 மில்லியன் சேதமடைந்த பொருட்கள் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்கண்டவாறு பொருட் குறைவுகளைப் பதிவு செய்ததாலும், பின்னர் அதே தொகையால் ஏற்பாட்டுக் கணக்கை மாற்றியமைத்தாலும் ஐந்தொகையில் பிரதிபலிக்கும் பொருளிருப்பு மீதிகளில் தாக்கம் எதுவும் இல்லை.

**2.3.2. (ஒ) WPS II அலுவல்கத்தால் வழங்குநர்களுக்கு ரூபா 18 மில்லியன் மொத்தமான ஏழு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன**

ரூபா 15.3 மில்லியனுக்கு சமமான தொகை 2013 ஆம் ஆண்டின் போது சீர் செய்யப்பட்டதுடன் எதிர்காலத்தில் மீதியையும் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**2.3.2. (ஓ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1505 மில்லியன் தேறிய புத்தகப் பெறுமதியைக் கொண்ட உயர் அழுத்த (HT) மற்றும் தாழ் அழுத்த (LT) கம்பிகள் நிலையான சொத்துக்கள் பதிசேட்டிலும் பேரேட்டுக் கணக்குகளிலும் இன்னும் உள்ளன**

ஐயவினாவிற் கூறப்பட்ட 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான HT மற்றும் LT கம்பிகளின் ரூபா 1,505,012,113 தேறிய புத்தகப் பெறுமதி அம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகத்திற்கு உறுதிப்படுத்தலுக்காக அனுப்பப்பட்ட 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மெய்மையாய்வு தாள்களின் அடிப்படையிலானதேயன்றி 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்த பதிவேட்டில் தோன்றும் பெறுமதியல்ல.

அப்பகுதியில் சில கம்பி வழிகள் இல்லை என அம்பாந்தோட்டை மின்பொறியியலாளர் உறுதிப்படுத்தியிருந்தார். இது கம்பி வழிகளுக்கு எப்போதும் செய்து கொண்டிருக்கம் அதிகரிப்பு, நீடிப்பு என்பவற்றின் காரணமாக கம்பி வழிகளுக்குச் செய்யப்படும் மாற்றத்தினால் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ள கம்பி வழிகளின் விவரணம் அவற்றின் ஆதனம், உபகரணங்களின் பதிவேட்டிலுள்ள கம்பி வழி விவரணத்துடன் ஒத்திராமையினால் இருக்கலாம்.

விதிக்கப்பட்ட இமிச நடைமுறைகளின்படி, கணக்கேடுகளிலிருந்து ஒரு சொத்தின் பதிவு நீக்கப்படுவதற்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட கம்பிவழியின் குறிப்பான இனங்காணலும், அவற்றினது பௌதீக இருப்பு அல்லது வேறு வகையானதும் தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவதால் பிராந்திய அலுவலகம் உறுதிப்படுத்தல் அறிக்கைகள் கிடைத்தலின் அடிப்படையில் மாத்திரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்துவதில்லை.

எனவே, ஐயவினாவிற் குறிப்பிட்டவாறு 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி கூட்டிக் கூறப்பட்டிருக்கவில்லை. மேற்கண்டவற்றின் அடிப்படையில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மீதான தாக்கம் எழாது.

**2.3.2 .(ஔ) SIDA செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் மற்றும் விநியோக கம்பி வழிகள் தொடர்பான விலை முரண்**

2010 இலிருந்து 2012 இறுதிவரை பூர்த்திசெய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்ட வேலைகள் தொடர்பாக, 2012 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை முடிவுசெய்யும் போது ரூபா 121 மில்லியன் மொத்தமான பொருள் விலை முரண் செயற்திட்டங்கள் கிளையால் ஒரு TV மூலம் DD4 இற்கு மாற்றப்பட்டிருந்தது. மாகாணங்களிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்ற பின்னர் (விதியோக வழிகளும் உப நிலையங்களும்) தொடர்பான சொத்துக்களுடன் இத்தொகை சேர்க்கப்பட்டதுடன் 2012 கணக்குகளை முடிவுறுத்துவதற்காக இறுதிக் கணக்குகளில் உள்ள மீளஅமைக்கப்பட்ட சொத்தக்களின் பெறுமானத் தேய்வுக்கு சீராக்கங்களும் செய்யப்பட்டன. மாகாணங்களிலிருந்து விபரங்கள் கிடைக்கும் வரை வுஏ இன் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் (FAR) ஒரு தனியான விடயமாக கணக்கிடப்பட்டிருந்தது.

இப் பெறுமதி பின்னர் FAR இல் சீராக்கப்பட்டிருந்தது. ச.நி.கூ.அ.நி கடைப்பிடிக்கப்பட்ட பின், விநியோகச் சொத்துக்கள் 2012 இன் இறுதியில் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தில் காட்டப்படத் தீர்மானிக்கப்பட்டதால் நட்டத்தின் தாக்கம் எழாது.

**2.3.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு**

**2.3.3. (அ) இமிச இன் நிதிக்கூற்றுக்களின் படி 2012.12.31 இல் உள்ளவாறு LECO இடமிருந்து கிடைக்கவேண்டிய தொகை LECO இன் நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை**

LECO இன் நிதிக்கூற்றுக்களின் 15.1 இலக்க குறிப்பின் படி இமிச இற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 1,788,390 ஆகும். இம்மீதி LECO பரிமாற்றல் பகுதியில் பெறவேண்டிய தொகையுடன் இணங்கியது. எவ்வாறாயினும் LECO ஆல் தீர்க்கப்படாத சிட்டை மீளாய்வு பிணக்கு மீதி இமிச நிதிக்கூற்றுக்களில் தோற்றுகின்றது. இம் மீதிகளைச் சீர் செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்படும்.

**2.3.3. (ஆ) சபையின் தலைமையலுவலகத்தினதும், உப பிரிவுகளினதும் இடை-நடைமுறைக் கணக்குகள் இணங்கியிருக்காததுடன் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய வேறுபாடுகள் ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 269 மில்லியன் ஆகும்**

இம்மீதி பன்முகப்படுத்தல் செயற்பாட்டின் போது எழுந்த மிகவும் பழைய இணக்கம் செய்யப்படாத மீதியைப் பிரதிபலித்தது. இம்மீதி வரவுத் தொகையை பிரதிபலித்ததால் வருமானக் கூற்றிற்கு தாக்கல் செய்தல் பொருத்தமற்றதாகையால் பெறவேண்டியவையின் கீழ் வகைப்படுத்தப்பட்டது. இம் மீதிகளைக் கணக்குகளிலிருந்து கழித்தெழுத நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**2.3.3 (இ) இம்மீதி பன்முகப்படுத்தல் செயற்பாட்டின் போது எழுந்த மிகவும் பழைய இணக்கம் செய்யப்படாத மீதியைப் பிரதிபலித்தது. இம்மீதி வரவுத் தொகையை பிரதிபலித்ததால் வருமானக் கூற்றிற்கு தாக்கல் செய்தல் பொருத்தமற்றதாகையால் பெறவேண்டியவையின் கீழ் வகைப்படுத்தப்பட்டது. இம் மீதிகளைக் கணக்குகளிலிருந்து கழித்தெழுது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்**

நடைமுறை வேலைத் (WIP) தொகையிலிருந்து மாற்றுதலுடன் சரிசெய்வதற்கு WIP குறிப்பின் கீழ் காட்டப்பட்ட ந.முவே இலிருந்தான மாற்றுதல் PPE பட்டியலின் சேர்த்தல் நிரலின் கீழ் தோற்றுவது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

எவ்வாறாயினும், பழுதுக்கான மாற்றீட்டைத் தவிர வேறு விசேட வேலை இன்மையால் பழுதடைந்தவற்றை பிரதியீடு செய்தலில் மின்மாற்றிகள் PPE க்கு நேரடியாகச் சேர்க்கப்படுகின்றன. PPE பட்டியலில் சேர்க்கப்பட்ட நேரடி மின்மாற்றிகளை பிரதிபலிப்பதற்கு விசேட நிரல் இன்மையால் மாற்றீடு செய்யப்பட்ட மின்மாற்றிகளின் கிரயம் நமுவே இலிருந்து மாற்றல்கள் மீதியுடன் சேர்க்கப்படுவதால் நமுவே குறிப்பின்படி நமுவே மாற்றல்களுடனான வேறுபாடு தோற்றுகின்றது.

எவ்வாறாயினும் இது 2013 நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யப்பட்டது.

**2.3.3. (ஈ) WIP கணக்கிலிருந்து 2012 இல் மாற்றப்பட்ட பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கும் PPE க்கு மாற்றப்பட்ட வேலைகளின் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு ரூபா 39,501,290**

வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டது.

**2.3.4** **பெறவேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள்**

**2.3.4 (அ)** **2012.12.31 இல் உள்ளவாறான பிராந்திய தொங்கல் மீதி மற்றும் பிரதான தொங்கல் மீதி என்பவற்றின் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமிக்கை**

இத் தொங்கல் கணக்குகள் நுகர்வோரின் தவறான கணக்குகளுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளைக் கொண்டுள்ளன. ஆகவே, தற்போதைய முறைமையில் நுகர்வாளர் முறைப்பாடு செய்யும் வரைக்கும் நுகர்வோர் அடையாளத்தை கண்டுபிடிக்க முடியாது. நுகர்வோர் முறைப்பாடுகள் கிடைத்ததும் தொங்கல் கணக்கை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3.4 (ஆ)** **ரூபா 38 மில்லியனான ஒரு GST மேலதிகக் கொடுப்பனவு நிதிக்கூற்றுக்களில் அறவிடவேண்டியதாக 2002 ஜனவரியிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது**

சபையின் வருமான வரிப் பொறுப்புக்கு எதிராக தீர்வு செய்வதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சாதகமாக ஒத்துழைக்கவில்லை. இது 29.01.2014 திகதியிட்ட சமீபத்திய கடிதத்தின் பிரதியை சக்தி மற்றும் வலு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியதன் மூலம் மேலும் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட சமீபத்தில் கடிதங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

**2.3.4** **(இ) WPS – II இல் LECO இன் வரவு மற்றும் செலவு மீதிகள் நீண்டகாலமாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்தன**

LECO இல் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை எதிரீடு செய்ததன் பின்னுள்ள தேறிய தொகை ரூபா 11 மில்லியன் ஆகும். ரூபா 18 மில்லியன் ஆன FAC தொகை பரிமாற்றல் பிரிவுக்கு LECO ஆல் 2012 இல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**2.3.4. (ஈ)** **JBIC இடமிருந்து நிகழ்ச்சித் திட்டக் கடன் ரூபா 3,047 மில்லியன்**

கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை, சபையின் அனுமதி என்பவற்றின் படி, 2003 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுக்கான சீராக்கம் எனச் செய்யப்பட்ட பதிவுகளைச் செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்திற்கு திறைசேரியிலிருந்து நீண்டகாலமாக வருமதியாக இருந்த ரூபா 3,047 மில்லியன் சாட்டுதல் செய்யப்பட்டது.

கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையுடனும், சபையின் அனுமதியுடனும் முன்னைய ஆண்டு சீராக்கம் என 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**2.3.5** **கணக்காய்விற்கான சான்றின்மை**

**2.3.5 (அ)** **ஊவா மாகாண அலுவலகத்திற்கு சொந்தமான ரூபா 38 மில்லியன் பெறுமதியான 12 காணிகளது உரித்து உறுதிகள் கணக்காய்வுக்கு கிடைக்கச் செய்யல் பெறவில்லை**

ஆவணங்களைக் கண்டுபிடிப்பதற்கும் இமிச வுக்குச் சொந்தமான காணிகளின் உரித்தினை சீர் செய்வதற்கும் இமிச வின் சொத்து முகாமைத்துவப் பிரிவால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**2.3.5 (ஆ)** **WPS II தொடர்பான சில வேலைகளை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு முடிவுறுத்தாமலிருப்பதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கச் செய்யப்பெறவில்லை**

2013 ஆம் ஆண்டின் போது ரூபா 616 மில்லியன் பெறுமதியான வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் WIP இலுள்ள நீண்டகால நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கும் ஏற்கெனவே ஒரு செயன்முறை ஆரம்பித்துவைக்கப்பட்டது. தற்போதைய காலப் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| காலப் பகுப்பாய்வு | 31.12.2012 இல் உள்ளவாறு WIP | 31.12.2013 இல் உள்ளவாறு WIP | 2013 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்டவை |
|---|---|---|---|
| 1 – 2 வருடங்கள் | 449,955,947 | 357,628,062.84 | 92,327,884.16 |
| 2 – 3 வருடங்கள் | 268,359,156 | 172,699,582.73 | 95,659,573.27 |
| 3 – 4 வருடங்கள் | 123,574,788 | 99,089,011.80 | 24,485,776.20 |
| 4 – 5 வருடங்கள் | 58,049,812 | 98,928,094.05 | 23,617,902.95 |
| 5 வருடங்களுக்கு மேல் | 64,496,185 | | |
| **மொத்தம்** | **964,435,888** | **728,344,751.42** | **236,091,136.58** |

**2.3.5 (இ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறுமாதங்களுக்க முன்னர் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 14 மில்லியன் மொத்தமான ஏழு இருப்பு களை வருட இறுதி பொருளிருப்பிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை**

கணக்காய்வு அறிக்கையிற் கூறப்பட்ட கேள்வித் தொகைகளில் பின்வரும் கேள்விகளுக்குரிய தொகைகள் 2013 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்தன. எனவே அவை இடைவழிப் பொருளிருப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| DGM (CC)/EE(MM)/PPC/2011/173 | ரூபா 6,396,620/- |
| R1/P&D/T/2012/18 | ரூபா 2,343,552/- |
| | ரூபா 8,740,172/- |

அறிக்கையிற் தோன்றிய எஞ்சிய மீதி கொழும்பு நகர் மாகாண பொருளிருப்புகளில் பதியப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது சீர்செய்யப்பட்டது.

**2.3.5 (ஈ) திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 128,240 மில்லியன் பெறுமதியான நான்கு கடன்கள் தொடர்பாக உப-கடன் உடன்படிக்கைகள் இருக்கவில்லை**

ஹபறண-வெயாங்கொட பரிமாற்றல் கம்பிவழி செயற்திட்டம் மற்றும் மேல் கொத்மலை நீர்வலு செயற்திட்டம்- கட்டம் II என்பவற்றின் உப-கடன் உடன்படிக்கைகள் தலைவராலும் ஏனைய சபை உறுப்பினராலும் கையொப்பமிடப்பட்டு திறைசேரிப் பிரதி செயலாளரின் கையொப்பத்திற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. பழைய லக்ஸபான புனரமைப்பு வலுப் பொறி மற்றும் புதிய லக்ஸபான மறறும் விமசுந்தர புனரமைப்பு செயற்திட்டம் என்பவை தொடர்பான ஏனைய இரு விரைவு உப கடன் உடன்படிக்கைகள் வெளிநாட்டு வளத் திணைக்கள்தத்திற்கு அவர்களது ஒத்திசைவிற்காக சமர்ப்பிக்கப்பட்டன. சட்ட ஓப்புதலுக்காக அவற்றை சட்ட மா அதிபருக்கு அனுப்பிதாக ERD தெரிவித்தது.

கடன் உடன்படிக்கைகள் முடிவு செய்யப்பட்டதும் வட்டி மற்றும் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்படும்.

**2.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

**2.3.6 (அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டம்**

**2.3.6 (அ) (i) பிரிவு 47(i)(ஆ) – சபையால் பெறப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான ஆழ் நிதி – 2000 ஆம் ஆண்டிலிருந்து இற்றைப்படுத்தப்பட வில்லை - ரூபா 17,447 மில்லியன்**

அக்காலப் பகுதியில் இமிச ஆல் உறப்பட்ட தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டங்கள் காரணமாக 2000 ஆம் ஆண்டிலிருந்து கடன்மீட்டு ஒதுக்கிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. காசுப் பாய்ச்சல் நிலையைப் பொறுத்து இந்த ஒதுக்கத்திற்கு பொருத்தமான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானத்தை பணிப்பாளர் சபை மேற்கொள்ளும்.

எவ்வாறாயினும், பிரிவு 47(i) (ஆ) ஏதாவது வருடாந்த உதவு தொகையைக் குறித்துரைக்கவில்லை என்பதுடன் வருடாந்த உதவு தொகையை நிர்ணயிப்பதற்கு பணிப்பாளர் சபை அனுமதிக்கப்பட்டுள்ளது.

**2.3.6. (அ) (ii) பிரிவு 47(2)(அ) – சபையின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வை ஈடுசெய்வதற்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் 2000 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித அசைவும் இருக்கவில்லை**

இந்த ஒதுக்கும் இமிச ஆல் பெறப்பட்ட தொடர்ச்சியான நட்டங்கள் காரணமாக இற்றைப்படுத்தப்படவில்லை.

பிரிவு 47(2)(அ) இன்படி 2000 ஆம் ஆண்டுவரை உழைக்கப்பட்ட இலாபங்களிலிருந்து நிதிகளை ஒதுக்குவதன் மூலும் பெறுமானத் தேய்வு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இது வெளியில் முதலீடு செய்யப்படவில்லை.

**2.3.6. (அ (iii) பிரிவு 47(2)(ஆ) நிதிசார் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, வருமானப் பணத்திலிருந்து மூலதன வேலைகளுக்கு நிதியளிப்பதற்கான பொது ஒதுக்கு 2000 ஆம் ஆண்டிலிருந்து இற்றைப்படுத்தப்படவில்லை - ரூபா 165.446 மில்லியன்**

பாதகமான காசோட்ட நிலை காரணமாகவும், இமிச ஆல் பெறப்பட்ட தொடர்ச்சியான நட்டங்கள் காரணமாகவும் இந்த ஒதுக்கிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3.6. (ஆ) 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலுள்ள மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 வீதமான உதவுதொகையின் அடிப்படையில் காப்புறுதி எஸ்குறோ நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,433 மில்லியன்**

இதே நடைமுறையைத் தொடர்ந்து மேற்கொள்ளல் அல்லது திறைசேரியுடன் தனியான ஒரு கணக்கைப் பேணுதல் தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடப்படும். எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் நிகழக்கூடிய ஒரு நட்டத்தை ஈடு செய்யும் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படும் நிதியுடன் காப்புறுதி எங்குறோ நிதியம் உருவாக்கப்பட்டது.

**2.3.6 (இ) சபை அதனது ஊழியர்களால் செலுத்தப்பட வேண்டிய PAYE வரியைத் தானே ஏற்றுக் கொள்கின்றது.**

இமிச அதனது ஊழியர்கள் PAYE வரிப் பொறுப்பானதிலிருந்து இமிச ஊழியர்களது PAYE வரிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றது. இதுபற்றி சக்தி மற்றும் வலு அமைச்சிற்கும் சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கும் பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டதுடன் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. எவ்வாறாயினும் சபை இவ்விடயத்தைப் பற்றி உத்தேச கூட்டு உடன்படிக்கையின் முன்னர் ஊழியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடும்.

## 3. நிதிசார், தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

தகவலுக்கானது

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

தகவலுக்கானது

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.3.1. சக்தி பிறப்பாக்கம்

தகவலுக்கானது

#### 3.3.2. நேர்க் கிரயம் பகுப்பாய்வு

தகவலுக்கானது

#### 3.3.3. அலகு விலைப் பகுப்பாய்வு

தகவலுக்கானது

### 3.4 விவாதத்திற்குரிய தன்மையான விடயங்கள்

**3.4 (அ) 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தில் திருத்தப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம், அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட திறைசேரிச் சுற்றறிக்கைகளும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளும்**

இலங்கை மின்சார சபையானது 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தில் திருத்தப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இ.மி.ச அதிகாரச் சட்டமாகிய தனது சொந்த நியதிச் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்டச் சபையாகும்.

கொள்கை ரீதியாக இ.மி.ச பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கும் சபைகளுக்கும் வழங்கப்பட்ட பெரும்பாலான திறைசேரி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளைப் பின்பற்றுகின்றது. சில சந்தர்ப்பங்களில், பொருத்தமான விதத்தில் இ.மி.ச நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் (பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று) திறைசேரி சுற்றறிக்கைகளிலும், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளிலும் விதிக்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகின்றது.

**3.4. (i) <u>சபை பல்வேறு படிகளைக் கொடுப்பனவு செய்திருந்தது</u>**

சம்பள ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி இ.மி.ச ஊழியர்களுக்கு படிகள் கொடுப்பனவிற்கு 09.04.2008 இல் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொழிற் சங்கங்களுடன் செய்யப்படவிருக்கும் கூட்டு உடன்படிக்கையில் படிகள் கொடுப்பனவு செய்தலும், செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்பு முறைமையும் உள்ளடக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது

**3.4. (ii) <u>சபை 1990 மார்ச் 09 இன் 15/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை, 2003 ஜூன் 02 இன் PED/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாகவும், நாடளாவிய விண்ணப்பங்களைக் கோராமலும் எழுதுநர்களாக, காசாளர்களாக களஞ்சியக் காப்பாளர்களாக, தட்டெழுத்தாளர்களாக, சாரதிகளாக அலுவலக உதவியாளர்களாக, தொழிலாளர்களாக பயிற்றப்படா மற்றும் பகுதிபயிற்றப்பட்ட தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது</u>**

இ.மி.ச வின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுத் திட்டத்தின் படி நிறைவேற்றுநர் மற்றும் மத்திய தர தொழில்நுட்பத் தரங்களின் வெற்றிடங்கள் வெளி வாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களைக் கொண்டு நூற்றுவீத அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மின்சார அத்தியட்சகர்கள் போன்ற ம.த.தொ தரங்களுக்குரிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் தேசிய செய்தித் தாள்களில் விளம்பரம் செய்ததன் மூலம் கோரப்பட்டன.

ஏனைய எல்லா வகைகளுக்குமான விண்ணப்பங்கள் சக்தி, வலு அமைச்சினால் வழங்கப்பட்டு இ.மி.ச வின் சபையால் அனுமதிக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து பெறப்பட்டன. ஏனைய எல்லா வகைகளுக்குமான விண்ணப்பங்கள் சக்தி, வலு அமைச்சினால் வழங்கப்பட்டு இ.மி.ச வின் சபையால் அனுமதிக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து பெறப்பட்டன. சில குறிப்பிட்ட நிறைவேற்றுநர் அல்லா தரங்களுக்கான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்திலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இ.மி.ச சார்பில் ஓர் அரசாங்க நிறுவனத்தால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்படுகின்றனர். போட்டிப் பரீட்சைகளில் உயர் நிலையைப் பெற்றவர்கள் அவர்களது தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டு, வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தெரிவு செய்யப்படுகின்றனா. இந்த முழு ஆட்சேர்ப்பு நடைமுறையும் 151/90 பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட தகுதி விதிகளுக்கு ஒத்தவையாகும்.

**3.4. (iii) <u>ஊழியர்களுக்கு ரூபா 1,000 தற்காலிக மாதாந்தக் கொடுப்பனவு செய்தல்</u>**

இந்த நிலை சபைக்குத் தெரிவிக்கப்பட்டதும், 200 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்ட தற்காலிகக் கொடுப்பனவை நிறுத்துவதிலுள்ள கஷ்டத்தை விளக்கியும், கூட்டு உடன்படிக்கையின் மூலம் இதனைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதாகக் கூறியும் கணக்காள்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்புவதற்கு 06.06.2012 இல் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன் படி இது தொழிற்சங்கங்களுடன் செய்து கொள்ளப்படும் கூட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படும்.

**3.4. (iv) <u>08.03.1998 இன் 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி 10% -14% இல் வாகனக் கடன்கள் வழங்குவதற்கும் பதிலாக சபை 4.2% இல் வழங்குகின்றது</u>**

இ.மி.ச ஊழியர்களுக்கான வாகனக் கடன்கள் சபையின் அனுமதியுடன் தாபனக் கோவையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் சலுகை அடிப்படை வட்டியிடல் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், இ.மி.ச இன் தற்போதைய நிதி நிலையைக் கருத்திற் கொண்டு, வாகனக் கடன்கள் உள்ளிட்ட பணியாளர் கடன்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றன.

**3.4. (ஆ) <u>1990 இலிருந்து காப்புறுதி ஒதுக்கத்தின் முதலீட்டின் மட்டில் இ.மி.ச இன் நிதி முகாமையாளர் தீர்மானங்களை மேற்கொண்டிருந்தார்</u>**

உலக வங்கியுடனான ஒப்பந்தப்படி சீராக்கங்களைக் கழித்து காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றப்படும் தொகை முதலீடு செய்யப்பட வேண்டும். காப்புறுதி எஸ்குறோ நிதியம் தொடர்பான முதலீட்டுத் தீர்மானங்கள் இ.மி.ச பொது முகாமையாளரின் ஒத்திசைவுடன் நிதி முகாமையாளரால் மேற்கொள்ளப்படுதல். கடந்த பல வருடங்களாக இ.மி.ச இன் வழமையாகும்.

**3.4. (இ) திறைசேரி கடன் மீதி ரூபா 1,200 மில்லியனை மாற்றல் செய்து 2013 ஆம் ஆண்டிற்கான வருமானமாகக் காட்டுதல்**

கணக்காய்வு ஐயவினாவின் படி ரூபா 1,200 மில்லியன் குறுகிய காலக் கடனாக இ.மி.ச வுக்கு பொதுத் திறைசேரியிலிருந்து நிதிகள் வழங்கப்பட்டதாயினும், இ.மி.ச ஆல் கடனாகக் காட்டப்பட்ட தேயன்றி திறைசேரி ஏடுகளிலல்ல. 2013 ஆம் ஆணடில், திறசேரிப் புத்தகங்ளைப் பரிசீலித்ததன் பின்னர் 2003 ஆம் ஆண்டில் இக் கடன் இ.மி.ச வுக்கு மானியமான வழங்கப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகவே, சபையின் அனுமதியுடன் ரூபா 1,200 மில்லியன் திறைசேரி தொடர்பான பங்களிப்பு மூலதன கணக்கில் சரி செய்யப்பட்டது.

**3.4. (ஈ) நிலைத்து நிற்கக் கூடிய வலு அதிகார சபையிடமிருந்து (SEA) பெறவேண்டியவை 2011 டிசெம்பர் உள்ளவாறு ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை - ரூபா 897 மில்லியன்**

புதுப்பிக்கக்கூடிய வலுவுக்கான கிரய அடிப்படையிலான வரியை உருவாக்கும் போது, தவிர்க்கப்பட்ட கிரயத்தில் 90% இற்கு சமமான ஒரு தொகையையே இ.மி.ச பொறுப்பேற்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இ.மி.ச ஆல் வரியின் முழுத் தொகையும் செலுத்தப்பட்ட வேண்டுமெனவும் தவிர்க்கப்பட்ட கிரயத்தின் 90% இற்கு மேற்பட்ட தொகை நிலைத்து நிற்கக் கூடிய வலு அதிகார சபையினால் (SEA) இ.மி.ச இற்கு மீளளிக்கப்பட வேண்டுமெனவும் மேலும் இணங்கப்பட்டது. மீளளிக்கப்பட வேண்டிய தொகையை இ.மி.ச மாதாந்தம் SEA இற்கு தெரிவிக்கின்றது. 2010.12.31 வரை பெறப்பட வேண்டிய தொகை ரூபா 897 மில்லியனாகும். இதன் படி இ.மி.ச இதனை SEA இடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்துள்ளது. இ.மி.ச தமது தீர்மானத்தைத் தெரிவிப்பதற்கு பல தடவைகள் அவர்களுக்கு 2013 ஒக்தோபர் 01 மற்றும் 2012 ஜனவரி 16 ஆகிய திகதிகளிட்ட கடிதங்கள் மூலம் தெரிவித்திருந்தது. ஆயினும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

**3.4. (உ) காப்புறுதி ஒதுக்கு நிதிய மீதிக்கும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீட்டிற்குமிடையே அவதானிக்கப்பட்ட ரூபா 3,124 மில்லியன் குறைவு**

இ.மி.ச வின் பாதகமான திரவத் தன்மை காரணமாக இக்குறைவு சீர்செய்யப்பட முடியாதிருந்தது.

**3.4. (ஊ) பல ஆண்டுகளாக LECU உடன் விற்பனை உடன்படிக்கைகளும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துடன் கொள்வனவு உடன்படிக்கையும் இல்லை**

LECO இற்கும் மின்சார சபைக்குமிடையிலான விற்பனை உடன்படிக்கை வரையப்பட்டு, உடன்படிக்கையின் சட்ட வடிவத்தை உறுதி செய்வதற்காக இ.மி.ச வின் பிரதம சட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டதுடன் உடன்படிக்கையை முடிவு செய்வதற்காக காத்திருக்கப்படுகின்றது.

CPC யும் ஒரு பொதுக் கூட்டுத்தாபனம் என்பதுடன் பல காலங்களாக இ.மி.ச வுக்கு எரிபொருளை வழங்குகிள்றது. வழங்கல் நிபந்தனைகள் அரசாங்கக் கொள்கையால் நிர்ணயிக்கப்படுவதால் எரிபொருள் கொள்வனவிற்கு புறம்பான உடன்படிக்கை தேவையில்லை.

**3.4. (v) 31 வாகனங்களை ரூபா 32 மில்லியனான சந்தைப்பெறுமதிக்கு விலைமதித்தல்**

கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்ட வாகனங்களில் மாற்றங்கள் செய்வதற்கு தொடர்பான அனுமதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**3.4. (V) தனிப்பட்ட வலு உற்பத்தியாளர்களுக்கு (IPP) செலுத்தப்பட்ட இயலுமைக் கட்டணங்கள்**

இந்த சகல IPP களுக்கும், இணங்கப்பட்ட வரிப் பட்டியலின் படியும் ஒவ்வொரு PPA யின் நிதி ஒழுங்கின் படியும் விஸ்தரிக்க முடியாக் கூற்றுகளுக்கு (Non – ESCALABLE COMPONENTS) கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன. எனவே, கடன் சேவைக் காலத்தின் முடிவின் பின்னர் கூட விஸ்தரிக்க முடியாக் கூறுகள் பூச்சியமாவதில்லை.

**3.4. (I) IPP களுக்குச் சொந்தமான வலுப் பொறிகளது இயக்க மற்றும் பராமரிப்புக் கிரயங்கள்**

PPA யின் படி சகல மீளளிக்கக்கூடிய வரிகளும் செலுத்தப்படுகினறன. இதன் படி விருத்தியாளர் (Developer) வலுப் பொறியின் பராமரிப்பு வேலைகள் தொடர்பான கொள்வனவுகளின் வரிகளின் மீளளிப்பிற்கு உரித்துடையவர். எவ்வாறாயினும், வலுப் பொறியின் ஒவ்வொரு பராமரிப்பு வேலையையும் கண்காணிப் பதில் இ.மி.ச வுக்கு நடைமுறைப் பிரச்சினை உள்ளது.

**3.5 முகாமைத்துவ வினைத் திறனின்மை**

**3.5. (அ) நொதர் பவர் ஹவுஸ் இணங்கப்பட்ட GWH மின்சாரத்தை வழங்கியிருக்கவில்லை**

2013 செப்தெம்பர் 30 இல் நொதர்ள் வலுப் பொறி (power peant) நிறுப்படும் வரை, உத்தரவாதமளிக்கப்பட்ட 30 ஆறு இயலளவு பொறி இயலுமையின் அடிப்படையில்லாது வலுப் பொறியின் உண்மையான கிடைக்கத்தக்க இயலுமையினைக் கருத்திற் கொண்டு நிலையான கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.

இணங்கப்பட்ட வலுக் கொள்வனவு உடன்படிக்கையின் படி இ.மி.ச இன் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த வலுப் பொறிகளிலிருந்து சக்தி கொள்வனவு செய்யப்படும் போது சகல IPP களினதும் சராசரி அலகு விலையானது சராசரி விற்பனை விலையை விட உயர்வாக உள்ளது.

**3.5. (ஆ) தொடர்புபட்ட தரப்பு கம்பனிக்கு ரூபா 9 மில்லியன் பெறுமதியான கல்வனேஸ் செய்யப்படாத பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன**

வரையறுக்கப்பட்ட LTL கல்வனைஸர்ஸ் (தனியார்) நிறுவன அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் மேற்கண்ட பொருட்கள் கல்வனைஸ் செய்ததன் பின்னர் மாகாணங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், அனுப்புதற் குறிப்பு பரிசீலிக்கப்படும் வரை இப் பொருட்கள் சரியாக எந்த மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்டன எனக் கண்டறிய முடியாது. எனவே, இப் பொருட்கள் எங்கு விநியோகிக்கப்பட்டன என்பதை நிர்ணயிப்பதற்கு LTL அல் வழங்கப்பட்ட அனுப்புதற் குறிப்புகளைப் பரிசீலித்தல் செயற்படுத்தப்படுகின்றது. LTL இடமிருந்து அனுப்புதற் குறிப்புகள் பற்றிய பதில் கிடைத்ததும் 2014 ஆம் ஆண்டின் போது மீதி சீர் செய்யப்படும்.

**3.5. (இ) விலைமதிப்புக் குழுவினரால் ரூபா 76 மில்லியனாக பெறுமதியிடப்பட்ட எழுபத்தொன்பது வாகனங்கள் சேவைக்குத் தகுதியற்றவை என அடையாளம் காணப்பட்டன**

சேவைக்குத் தகுதியற்றவை என அடையாளம் காணப்பட்ட வாகனங்களை அகற்றுதவற்கான குழுக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**3.5. (ஈ) ரூபா 30 மில்லயன் பெறுமதியான பொருளிருப்பக்கள் சேதமடைந்த பொருளிருப்பாக அடையாளம் காணப்பட்டன**

WPS II இல் உள்ள சேதமடைந்த பொருட்களை அகற்றும் செயன்முறை 2013 ஆம் ஆண்டின் இறுதியின் போது ஆரம்பிக்கப்பட்டது. முழுமையான செயன்முறை இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

**3.5. (உ) WPS II இன் நூற்று எழுபத்திரெண்டு (172) வாடிக்கையாளர்கள் தேவையான பாதுகாப்பு வைப்பான ரூபா 86 மில்லியனை விட ரூபா 61 மில்லியன் குறைவான தொகையை வைத்திருந்தனர்**

ஒப்பந்தத் தேவையின் படி முன்னைய வைப்புகள் பெறப்பட்டன. தற்போதைய KVA பயன்பாட்டிணை பரிசீலளிப்பதற்கும், மேலதிக வைப்புக்களைக் கோருவதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது.

**3.5. (ஊ) 2003 ஜுன் 02 இன் PED/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தி (கிரமமாக மீளமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட, சகல பிரதான செயற்பாடுகளையும் அடக்கிய சொந்த முறைமை / கைநூல்கள் கிடைக்கத் தக்கதாக இருத்தல்)**

1985 - 1987 இன் போது ஒரு முதல் முயற்சியாக இ.மி.ச தனது சகல முக்கிய பதவிகளுக்கும் செயற்பாட்டு மற்றும் தொழிற்பாட்டு கைநூல்களைத் தயாரித்தது. இ.மி.ச பெரும்பாலான செயற்பாடுகள்/முறைமைகளில் திறைசேரி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளைப் பின்பற்றுகின்றதுடன் சிலவற்றை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெறுவதன் மூலம் தனது சொந்த சுற்றறிக்கைகளையும் வெளியிடுகின்றது. நடைமுறைக் கைநூல்களை இற்றைப்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் இற்றைப்படுத்தப்பட்ட கைநூல்கள் காலக் கிரமத்தில் வெளியிடப்படும்.

**3.5. (எ) வீடமைப்புக் கடன்களுக்காக ஊழியர்களுக்கு 2/3 பங்கு வட்டியை மீளளித்தல் தொடர்பான பொதுவான குறைபாடுகள்**

(i) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவாலும் ஒரு பிரத்தியேகமான கணக்காய்வு நிகழத்தப்பட்டு முறைமையில் பொதுவான குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை கிடைத்ததும் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**3.5. (ii) 2012 இன் போது சபையின் 1,765 ஊழியர்களுக்கு ரூபா 446 மில்லியன் வாகனக் கடன்கள் வழங்கப்பட்டன**

பொதுவான குறைபாடுகளை சீர் செய்வதற்காக வாகனக் கடன் நடைமுறை தொடர்பாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டை பலப்படுத்துவதற்காக 2014.02.11 திகதியிட்ட 2014/GM/03/FM இலக்க புதிய GM சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. மேலும், இந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனை அதிகரிக்கவும், கிரயத்தைக் குறைக்கவும் மனிதவலு முகவர்கள் மூலம் வெளியிலிருந்து பெறுதல் மேற்கொள்ளப்பட்டது.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

**3.6. (அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) நீண்டகாலமாக இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை**

ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்ட ஆவணத்தை (SORP) மீளாய்வு செய்யவும் இவ்வாண்டின் போது சபைக்குச் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**3.6. (ஆ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிப்பட்டியலின்றி மனிதவலுக் கம்பனிகளிடமிருந்து ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன**

இ.மி.ச இன் விநியோகத் துறையின் சேவைகளை வெளியிலிருந்து பெறுவதைக் கருத்திற்கொண்டு 2012 ஆம் ஆண்டிற்கான சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டம் தயாரிக்கப்பட்டது.
2012 இன் ஆளணித்திட்டத்தின் படி பின்வரும் சேவைகள் வெளியிலிருந்து பெறப்பட வேண்டும்.

சேவை இணைப்பு வேலை (சேவை ஒப்பந்தம்)
விநியோக நிர்மாண வேலை (சேவை ஒப்பந்தம்)
வழிவிடுகை சீராக்குதல்கள் வேலை (WAY LEAVE CLEARANCES) (சேவை ஒப்பந்தம்)
சுத்தமாக்கல் சேவை (சேவை ஒப்பந்தம்)
சிட்டையிடுபவர் சேவை (துண்டு வீதம்)
தரவுபதிதற் சேவை (துண்டு வீதம்)
வாடகை ஒப்பந்தங்களாக வாகனங்களுடன் சாரதி பயிற்றப்படாத வெளிக்கள சேவை
அலுவலக ஊழியர்
கா.கா.ச. தட்டெழுத்து வேலை (சிங்களம்/ ஆங்கிளம்/ தமிழ்/
வரவேற்பாளர்/ தொலைபேசி இயக்குனர்/ நுகர்வோர் சேவை உதவியாளர்/
அழைப்பு நிலைய பணிப்பாளர்

} மனித வலு

இந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனை அதிகரிக்கவும், கிரயத்தைக் குறைக்கவும் மனிதவலு முகவர்கள் மூலம் வெளியிலிருந்து பெறுதல் மேற்கொள்ளப்பட்டது.

**3.6. (இ) 2012 ஆம் ஆண்டிற்கான சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தை மீறி தொளாயிரத்து நாற்பத்தாறு மனிதவலு வெளியிலிருந்து பெறப்பட்டது**

2012.12.31 இல் உள்ளவாறு வெளியிலிருந்து பெறப்பட்ட மொத்த மனிதவலு 4,045 ஆகும். மேலே விளக்கப்பட்டவாறு நிதிச் சுமையைத் தளர்த்துவதற்கு கிரயத்தைக் குறைப்பதற்காக மனிதவலுவை வெளியிலிருந்து பெறுதல் மேற்கொள்ளப்பட்டது.

**3.6. (ஈ) அங்கிகரிக்கப்பட்ட ஆளணியிலுள்ள அத்தியாவசியமான பதவிகள் வெற்றிடமாக இருந்தன**

2012.12.31 இல் உள்ளவாறு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 16,709 ஆக இருந்ததுடன் 761 வெற்றிடங்களும் இருந்தன. கணக்காய்வு அறிக்கையிற் காட்டப்பட்ட நிலை 2013.09.30 இல் உள்ளவாறான பந்திய நிலைமையாகும்.

எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டின் போது 66 பொறியியலாளர்கள், 13 கணக்காளர்கள் 53 மத்தியதர தொழில்நுட்ப சேவை ஆளணியினர், உள்ளிட்ட 85 நிறைவேற்று வகை ஆளணியினரும் ஏனைய வகைகளுக்கான 324 ஆளணியினரும் வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

**3.6. (உ) பயிற்றப்படாத வெளிக்கள சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 1702 ஆல் மீறப்பட்டிருந்தது**

ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தின் படி, ஆட்சேர்ப்புகள் பயிற்றப்படா வெளிக்கள சேவைக்கு மட்டுமே என்பதுடன், பகுதி பயிற்றப்பட்டவையும், பயிற்றப்பட்டவையும் பயிற்றப்படா ஊழியர்களுக்கான பதவியுயர்வுக்கான வழிகளாகும். ஆகவே இ.மி.ச வயது செல்லும் ஊழியர்களைக் கொண்டிருப்பதால், அதன் செயற்பாட்டுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, இளைப்பாறுகை பதவிவிலகல் போன்றவற்றால் பயிற்றப்பட்ட மற்றும் பகுதி பயிற்றப்பட்ட வகைகளில் ஏற்பட்ட வெற்றிடங்கள் பயிற்றப்படா ஊழியர்களைக் கொண்டு நிரப்பட்டன. இதன் படி 2012.12.31 இல் உள்ளவாறு மேற்கொண்ட வகைகளின் ஒன்றிணைக்கப்பட்ட ஆளணியில் மேலதிக ஆளணியினர் இல்லை.

**3.6. (ஊ) பதவியுயர்வுக்காக சேவை மூப்பு மட்டுமே காரணியாகக் கொள்ளப்படுவதுடன் தொடர்ச்சியான திட்டம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை**

இமிச வின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தகுதிவிதிகளின் படி, பதவி வெற்றிடங்கள் ஏற்படும் போது பதவி உயர்வுகளும் ஆட்சேர்ப்புகளும் செய்யப்பட்டன.

**3.6. (எ) பொருத்தமான இடமாற்றக் கொள்கை அமுல்நடத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை**

சேவை நிபந்தனையின்படி, சகல இமிச ஊழியர்களும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்ற எதிர்பார்க்கப்படுகின்றனர். எவ்வாறாயினும், இடமாற்றங்கள் ஒரு வழமையான பெசயற்பாடாக நடைமுறைப்படுத்தப்படாமல் பின்வரும் சூழ்நிலைகளாற் தேவைப்படுத்தப்படும் போது கட்டளையிடப்படும்.

(1) சேவையின் அவசியம்

(2) நிர்வாகக் காரணங்களுக்காக

(3) ஒழுக்காற்று அடிப்படையில்

(4) சுகவீனம், பிள்ளைகளின் கல்விக்கான உதவி, பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து விடுபடல், கணவனையும் மனைவியையும் ஒரே நிலையத்தில் இருக்கவிடல் மற்றும் ஏனைய நியாயமான காரணங்களுக்காக ஊழியர்களின் வேண்டுகோளை நிறைவேற்றல்.

(5) ஊழியர்களுக்கு அவர்களது சொந்த இடங்களில் சேவையாற்ற சந்தர்ப்பமளித்தல்

மாற்றங்கள் பொதுவாக வருடாந்தம் கருத்திற்கொள்ளப்படுவதோடு, இடமாற்றத் தேவைக்காக நிலையங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட நிலையத்தில் ஆகக்குறைந்த காலம் சேவையாற்றாமல் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட்டமாட்டார்கள்.

ஐ ஆம் வகுப்பு அலுவலர்களுக்கும் அதற்கு மேற்பட்டோருக்குமுரிய இடமாற்றங்கள் சபையின் தேவைக்கேற்ப காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன.

**3.6. (ஏ) மனிதவளப் பிரிவிலுள்ள முக்கியமான பதவி DGM (ஆளணி) ஆகும். எனினும், அப்பதவி மற்றைய சேவைகளுக்கும், விசேடமாக மின்சாரப் பொறியியலாளர்களுக்கு கிடைக்க கூடியதாக அப் பதவிக்குரிய மனிதவள தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் (SOR) குறித்துரைக்கப்படவில்லை**

கருத்துரைகள் Sorp / மீளாய்வுக் குழுவிற்கு அவர்கள் கருத்திலெடுப்பதற்காக அனுப்பிவைக்கப்படும்.

**3.6. (ஐ) சபையின் ஆளணி முகாமைத்துவப் பிரிவில் உள்ள பிரதம பொறியியலாளர் (மனிதவளக் கொள்கை) பதவி இரண்டு தனிப்பட்ட உயர், தொழில்களுக்கிடையே இணக்கமின்மையைப் பிரதிபலிக்கத் தக்கவாறு உருவாக்கப்பட்டிருந்தது**

கருத்துரைகள் Sorp / மீளாய்வுக் குழுவிற்கு அவர்கள் கருத்திலெடுப்பதற்காக அனுப்பிவைக்கப்படும்.

**3.6. (ஒ) HRO சேவையின் மொத்த ஆளணியின் 50 வீதம் வெளிவாரியாக நிரப்படுவதுடன் இந்த வீதாசாரம் பதவியுயர்வுத் திட்டத்தில் தெளிவான பதவியுயர்வு வழியில்லாமல் ஆண்டுதோறும் அதிகரிக்கின்றது.**

கருத்துரைகள் Sorp / மீளாய்வுக் குழுவிற்கு அவர்கள் கருத்திலெடுப்பதற்காக அனுப்பிவைக்கப்படும்.

**3.6. (ஓ) HRM மற்றும் HRO என்பவர்களின் நேரடி ஆட்சேர்ப்பு தொடர்பாக தேவையான அனுபவமின்மை**

கருத்துரைகள் Sorp / மீளாய்வுக் குழுவிற்கு அவர்கள் கருத்திலெடுப்பதற்காக அனுப்பிவைக்கப்படும்.

**3.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**பாதீட்டிற்கும் உண்மையானவற்றிற்குமிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன**

இ.மி.ச பாதீட்டை ஒரு வினைத்திறன்வாய்ந்த முகாமைக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துகின்றது. எவ்வாறாயினும் பிரதானமாக நேரடிப்பிறப்பாக்கக் கிரயத்திலுள்ள கட்டுப்படுத்த முடியாத நிகழ்வுகளாலும், செயற்பாட்டு, பராமரிப்புக் கிரயத்திலுள்ள கட்டுப்படுத்தக்கூடிய முயற்சியினாலும் பாதீடானது உண்மையான விளைவுகளிலிருந்து வேறுபடுகின்றது.

**வருமான முரண்**

2012 இல் பாதீடு செய்யப்பட்ட விற்பனை ரூபா 161,524 மில்லியனாகவும் உண்மையான விற்பனை ரூபா 163,998 மில்லியனாகவும் இருந்ததுடன் இ.மி.ச 2% சாதகமான விற்பனை முரணைப் பெற்றிருந்தது. இம் முரணின் மேலதிக ஆய்வு, விற்பனை செய்யப்பட்ட அலுகுகளில் 189 மில்லியன் அலகுகள் அதிகரிப்பைக் காட்டியதால் ரூபா 2,962 மில்லியன் சாதகமான கனவளவு முரணைப் பிரதிபலித்தது. எவ்வாறாயினும் பாதீடு செய்யப்பட்ட ஓர் அலகு விற்பனை விலையாகிய ரூபா 15.70 ஐ விட அலகுக்கு ரூபா 0.05 குறைந்த ரூபா 15.65 விற்பனை விலையின் காரணமாக ரூபா 488 மில்லியன் பாதகமான விகித முரண் அறிக்கையிடப்பட்டது.

**செலவின் முரண்**

2012 ஆம் ஆண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவினமான ரூபா 236,969 மில்லியனுக்கெதிராக வரியின்றிய உண்மையான மொத்தச் செலவினம் ரூபா 231,614 மில்லியனாகும். இதன்படி சாதகமான முரண் ரூபா 5,355 மில்லியன் ஆகும்.

பாதீடு செய்யப்பட்ட மொத்த நேரடிப் பிறப்பாக்க கிரயம் ரூபா 181,685 மில்லியனாகவும், உண்மையானது 173,878 மில்லியனாகவும் இருந்து சாதகமான முரணான ரூபா 7,807 மில்லியனை ஏற்படுத்தின. இது பிரதானமாக நீர் மற்றும் புதுபிக்கத்தக்க சக்தி அலகு பிறப்பாக்கத்தின் அதிகரிப்பு மற்றும் முறையே, IPP மற்றும் கீரிப் பிறப்பாக்கம் என்பவற்றின் மூலம் அதிகரிப்பை ஈடு செய்தல் என்பவற்றினலாகும்.

வகை ரீதியான மற்றும் பிரிவு ரீதியான / பாதீடு செய்யப்பட்ட செயற்பாட்டு, பராமரிப்புக் கிரயம் (OEM Cost) உண்மையான தரவு என்பன கீழே தரப்படுவதுடன் இது பெறுமானத் தேய்விற்கு முன்னரான சாதக முரணைக் காட்டுகின்றது.

**செயற்பாட்டு, பராமரிப்புக் கிரயம்**
**வகைரீதியான OCM கிரயம்**

| | உண்மையானது ரூபா மில் | பாதீடு ரூபா மில் | முரண் | | | 2011 உண்மையான ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா (மில்) | % | | |
| ஆளணி | 15,751 | 18,786 | 3,035 | 16% | F | 12,259 |
| மூலப்பொருள் | 6,362 | 8,255 | 1,893 | 23% | F | 3,084 |
| தங்குமிடம் | 1,067 | 1,232 | 165 | 13% | F | 940 |
| போக்குவரத்தும், தொடர்பாடலும் | 2,781 | 2,759 | (22) | -1% | A | 2,373 |
| ஏனைய கிரயம் | 6,020 | 3,039 | (2,981) | -98% | A | 2,488 |
| மேந்தலை அறவீடுகள் | (1,574) | - | 1,574 | - | - | (1,255) |
| **நிதிக் கிரயத்திற்கு முன்னரான உப மொத்தம்** | **30,407** | **34,071** | **3,664** | **11%** | F | **19,890** |
| நிதிக்கிரயம் | 6,197 | 3,234 | (2,963) | -92% | A | 1,828 |
| **பெறுமானத் தேய்விற்கு முன்னரான உப மொத்தம்** | **36,604** | **37,305** | **701** | **2%** | F | **21,717** |
| பெறுமானத் தேய்வு | 21,131 | 17,979 | (3,152) | -18% | A | 18,416 |
| **மொத்தம்** | **57,735** | **55,284** | **(2,451)** | **-4%** | A | **40,133** |

**பிரிவு ரீதியான OCM கிரயம் (பெறுமானத் தேய்வு இல்லாமல்)**

| | உண்மையானது ரூபா மில் | பாதீடு ரூபா மில் | முரண் | | | 2011 உண்மையான ரூபா மில் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா (மில்) | % | | |
| பிறப்பாக்கம் | 7,922 | 8,653 | 732 | 8% | F | 5,228 |
| கடத்துகை | 2,105 | 2,391 | 286 | 12% | F | 1,402 |
| விநியோகம் - பிராந்தியம் 01 | 3,515 | 5,597 | 2,085 | 37% | F | 3,158 |
| விநியோகம் - பிராந்தியம் 02 | 5,408 | 6,281 | 873 | 14% | F | 3,930 |
| விநியோகம் - பிராந்தியம் 03 | 3,525 | 3,840 | 315 | 8% | F | 2,194 |
| விநியோகம் - பிராந்தியம் 04 | 3,009 | 3,658 | 649 | 18% | F | 2,423 |
| கூட்டாண்மை | 2,877 | 4,010 | 1,132 | 28% | F | 1,826 |
| வங்கி மேலதிகப் பற்றிற்கும் கடன்களுக்குமான வட்டி | 6,198 | 2,674 | (3,524) | -132% | A | 1,226 |
| IPP தாமதக் கொடுப்பனவுகளுக்கான வட்டி | 2,049 | 200 | (1,849) | -924% | A | 332 |
| **மொத்தம்** | **36,604** | **37,305** | **701** | **2%** | **F** | **21,717** |

**4.** **முறைமைகளும், கட்டுப்பாடுகளும்**
குறித்துக் கொள்ளப்பட்டது.

..........................................
தலைவர்
**இலங்கை மின்சார சபை**
26 மார்ச்சு 2014

..........................................
பொதுமுகாமையாளர்
**இலங்கை மின்சார சபை**

Design by: Ceylon Printers PLC

**இலங்கை மின்சார சபை**

முகவரி : இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02
தொடர்பு தொலைபேசி இல: (011) 232 4471 (8 இணைப்புக்கள்) / தொலை நகல் (011) 244 9572
web site: www.ceb.lk